31.12.84

மொழியியல்

தொகுதி 7 ஜனவரி - ஜுன் எண் 3 & 4

பதிப்பாசிரியர்கள்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் ந. குமாரசாமி ராஜா

டாக்டர் இரா கோதண்டராமன்

டாக்டர் க. சாந்தி

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1984

T13393
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர் : டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்)

துணைத் தலைவர் : டாக்டர் பொன். கோதண்டராமன் (சென்னை)

செயலாளர் : டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)

பொருளாளர் : டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்)

உறுப்பினர்கள் : டாக்டர் கே. மீனாட்சி (டில்லி)

டாக்டர் இராம. சுந்தரம் (தஞ்சை)

டாக்டர் சி. ஏசுதாசன் (அல்ஜீரியா)

டாக்டர் தேவசங்கீதம் (திருப்பதி)

டாக்டர் ஜீன் லாரன்ஸ் (அண்ணாமலைநகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 300-00	US $ 75-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 450-00	US $ 112-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 30-00	US $ 7-50
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 45-00	US $ 10-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 15-00	

மொழியியல் 7.3 & 4 (1984)

இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள்

முத்துச் சண்முகன்
தாமஸ் லெய்மன்
அனைத்துலகத் திராவிட மொழியியல் கழகம்
புதுவை மையம்

(முன்தொடர்ச்சி)

2.2 சொல்லுருபு வாசகம் (Post-positional clause)

தொழிற்பெயர் வாசகங்களைத் தொடர்ந்து சொல்லுருபுகள் வந்து, சொல்லுருபு வாசகங்கள் உருவாகின்றன. ஆங்கிலத்தில் வருகின்ற வினையடை வாசகங்களுக்கு நேராக இவை பயன்படுகின்றன. பெரும்பான்மையான சொல்லுருபுகள் பெயர்களே. இதனால், பெரும்பாலும் சொல்லுருபு வாசகங்கள், பெயரும் பெயரும் வேற்றுமைத் தொடர்பால் இயைந்த கலப்புத் தொடர்களே. ஆங்கிலத்தில் வினையடை வாசகங்கள் பணிநிலை வாசகங்களோடு தொடர்பு கொள்ளும். இத்தகைய தொடர்புகளைத் தமிழில் சொல்லுருபுகள் செய்கின்றன. இதற்குப் பயன்படுகின்ற

சொல்லுருபுகள் முன், முன்னால் (முன்னாடி, முந்தி, முன்ன - இவை பேச்சுத்தமிழில்) பின், பின்னால் (பின்னாடி, பிந்தி, பின்ன - இவை பேச்சுத்தமிழில்) பிறகு, அப்புறம், உள், உள்ளே, தவிர, மாதிரி, போல (கணக்கா – பேச்சுத்தமிழில்) பதில், பற்றி என்பன.

2.2.1.0 காலங்காட்டும் சொல்லுருபு வாசகங்கள்

2.2.1.1 முன்

நான்காம் வேற்றுமை உருபேற்ற எதிர்காலத் தொழிற்பெயர் வாசகம் முன், முன்னால் என்ற சொல்லுருபுகளால் தலைமை வாக்கியத்தில் புகுத்தப்படுகின்றது. இது ஆங்கிலத்தில் before என்பதற்கு நேரான பொருளில் வரும். தலைமை வாசகத்தில் குறிக்கப்பெறும் நிகழ்ச்சி, இவ்வாசக நிகழ்ச்சிக்கு முன்பு நிகழுதல் வேண்டும். தலைமை வாக்கிய முற்றுவினை மூன்று காலத்திலும் வரும்.

பேச்சுத்தமிழில் நிகழ்காலத் தொழிற்பெயர் பயன்படுகின்றது.

80. தூங்குவதற்கு முன் அவன் கடவுளைக் கும்பிட்டான் (கும்பிடுகிறான்) (கும்பிடுவான்).

81. அவன் சாயங்காலம் வீட்டிற்குப் போவதற்கு முன் நான் அவனைச் சென்று பார்ப்பேன் (பார்க்கிறேன்) (பார்த்தேன்).

2.2.1.2 உன்

நான்காம் வேற்றுமை உருபேற்ற எதிர்காலத் தொழிற்பெயர் வாசகம் உள் என்ற சொல்லுருபினைப் பெற்றுப் புகுத்தப்படும். உள் வாசகத்தால் குறிக்கப் பெறும் நிகழ்ச்சி முற்றுப் பெறுவதற்கு முன்பு தலைமை வாசக நிகழ்ச்சி நடைபெறுகிறது. முன் வாசகத்தில் ஒன்று முடிந்து மற்றையது நிகழ்கிறது. அன்றியும் உள் வாசகம், அண்மையில் அடுத்தடுத்து நிகழும் விரும்பாத ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும். முன் வாசகத்தில் இக்குறிப்பு இன்றி யமையாததன்று. தலைமை வாசக வினைமுற்று மூன்று காலத் திலும் வரும்.

82. அவள் பதில் சொல்வதற்குள் அப்பா திட்ட ஆரம்பித்து விட்டார், (ஆரம்பித்து விடுவார்) (ஆரம்பித்து விடுகிறார்).

83. இந்த ஊரைவிட்டுப் போவதற்குள் உன் கடனைக் கொடுத்து விடுவேன் (கொடுத்து விடுகிறேன்) (கொடுத்து விட்டேன்).

பேச்சுத் தமிழில் நிகழ்காலத் தொழிற்பெயர் வரும்.

2.2.1.3 பின் முதலியன

நான்காம் வேற்றுமை உருபேற்ற இறந்தகாலத் தொழிற் பெயருக்குப்பின், பின், பின்னால், பிறகு, அப்புறம் என்ற சொல் லுருபுகள் வந்து இப்பணிநிலை வாசகம் புகுத்தப்படுகிறது. இது ஆங்கிலத்தில் after என்பதற்கு நேரான பொருளைத் தருகிறது. தலைமை வாசக நிகழ்ச்சி, புகுந்த வாசக நிகழ்ச்சிக்குப் பின் நிகழ் கிறது. தலைமை வாசகத்தின் வினைமுற்று மூன்று காலத்திலும் வரலாம்.

84. பலகாரம் சாப்பிட்டதற்குப் பின் (பிறகு முதலியன வரலாம்) வீட்டிற்குப் போவோம் (போனோம்) (போகி றோம்).

85. மழை பெய்ததற்குப் பின் (பிறகு முதலியன வரலாம்) பயிர் நன்றாக இருக்கிறது (இருந்தது) (இருக்கும்).

இவ்வாக்கியங்களில் பெயரெச்சத்தை அடுத்து (எ.டு. சாப்பிட்டபிறகு), இச்சொல்லுருபுகள் வருவதே பெரும்பான்மை. ஆனால் இவ்வாறு தொழிற்பெயரை அடுத்தும் சிலர் பயன் படுத்துகின்றனர்.

2.2.2 முறை வினையடை வாசகங்கள் (Adverb of manner)

2.2.2.1 போல, மாதிரி — ஒப்பீட்டுச் சொல்லுருபு

இறந்தகால, எதிர்காலத் தொழிற் பெயரை அடுத்து போல, மாதிரி என்ற சொல்லுருபுகள் வந்து வினையடை வாசகங்களாகப் புகுத்தப்படும். ஆங்கிலத்தில் 'The way' 'as' எனத் தொடங்கும்,

பணிவினையடை வாசகத்தைப் போன்றது இது. தலைமை வாசகத்தின் வினை முற்று மூன்று காலத்திலும் வரும். பேச்சுத் தமிழில், எதிர் காலத்திற்குப் பதில் நிகழ்காலத் தொழிற்பெயர் வரும்.

86. நான் நினைத்தது (நினைப்பது) மாதிரி எல்லாம் நடந்தது (நடக்கிறது) (நடக்கும்).

87. அவன் என்னிடம் பேசினது (பேசுவது) போல் நானும் அவனிடம் பேசுவேன் (பேசுகிறேன்) (பேசினேன்)

இல்லாத ஒன்றைப் படைத்து ஒப்பிடுவதற்கும் இத்தகைய வாசங்களைச் சிலசமயம் பயன்படுத்துகிறோம் ஆங்கிலத்தில் as if என்பதற்கு நேராக.

88. வீட்டில் இருப்பது போல் ஆபீசிலும் நடந்து கொள் கிறான்.

2.2.2.2 தவிர - தவிர்க்கும் தேற்றப்பொருள்

மூன்று காலத் தொழிற் பெயர்களும் இரண்டாம் வேற்றுமை உருபேற்றுத் தவிர என்ற சொல்லுருபினைப் பெற்றுப் புகுத்தப் படும். இது தவிர்க்கும் தேற்றப் பொருளைத் தரும். ஆங்கிலத்தில் besides, except என்பவற்றிற்கு நேரான பொருளில் வரும். தலைமை வாசகம் எதிர் மறையாகவும் வினாவாகவும் இருக்கலாம். தலைமை வாக்கிய முற்றுவினை மூன்று காலத்திலும் வரும்.

89. பகல் முழுவதும் அவன் படிப்பதைத் (படிக்கிறதை) (படித்ததை) தவிர வேறொன்றும் செய்யவில்லை.

90. அவன் படித்ததைத் தவிர வேறு என்ன செய்தான்?

91. அவன் படித்ததைத் தவிர படமும் போட்டான்.

இம்முக்காலத் தொழிற்பெயரும் உம் உருபேற்று, இல்லாமல் என்ற சொல்லுருபோடு வரும்பொழுதும் இப்பொருள் கிடைக்கும்.

92. இரவு முழுவதும் படித்ததும் இல்லாமல் இப்பொழுது தூங்கவும் இல்லையே (இல்லை).

93. நீ செலவு செய்ததும் இல்லாமல் மேலும் பணம், கேட்கிறாயே (கேட்கிறாய்)

முக்கால வினைமுற்று வாசகம் ஏ உருபேற்று தவிர என்பதனோடு வரும் பொழுதும் இப்பொருள் பெறப்படும். இங்கு ஏ என்பது (என், ஓ என்பன போன்று) புகுத்தும் உருபு – அதாவது வினைமுற்று புகுவதற்குக் குறியீடாக வருகிறது.

94. அவன் சொன்னானே தவிர செயலில் ஒன்றையும் காட்டவில்லை.

2.2.2.3 பதில் - விலக்கல் சொல்லுருபு வாசகம் (Rejective)

நான்காம் வேற்றுமை உருபேற்ற முக்காலத் தொழிற்பெயர் வாசகம், பதில் என்ற சொல்லுருபினோடு புகுத்தப்படும். இது ஒரு நிகழ்ச்சியை விலக்கும். விலக்கப்பட்ட நிகழ்ச்சி, தலைமை வாசக நிகழ்ச்சியோடு ஒப்பிடப்படும்பொழுது விரும்பத்தக்க ஒன்று, ஆனால் விலக்கப்பட்டது என்ற பொருளைத் தரும். தலைமை வாக்கிய வினைமுற்று முக்காலத்திலும் வரும். பேச்சுத்தமிழில் எதிர்காலத்தில் வராது.

95. கொஞ்சம் பணம் சேர்த்து வைப்பதற்குப் பதில் அவன் எல்லாவற்றையும் செலவு செய்துவிட்டான்.

96. பணத்தைப் பாங்கில் போட்டதற்குப் பதில் ஒரு வீடு வாங்கி இருக்கலாம்.

97. அவன் சேலத்திற்குப் போவதற்குப் பதில் சோயம் புத்தூருக்குப் போகிறான்.

2.2.2.4 பற்றி - விவாதச் (topic) சொல்லுருபு வாசகம்

இரண்டாம் வேற்றுமை உருபேற்ற முக்காலத் தொழிற்பெயர் வாசகம் பற்றி என்ற சொல்லுருபினைப் பெறும் பொழுது, அது

ஒன்றைப் பற்றிய சிந்தனை, பேச்சு, விவாதம் இவற்றைக் குறிக்கும். ஆங்கிலத்தில் 'about' என்பதற்கு நேரான பொருளைத் தரும். தலைமை வாக்கிய வினைமுற்று முக்காலத்திலும் வரும்.

98. அவன் வெளி நாட்டிற்குப் போகிறதைப் (போனது) (போவது) பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறான் (இருந்தான் (இருப்பான்).

2.3.0 எச்ச வாசகங்கள்

தமிழில் எச்ச வாசகங்கள் மூன்றாவது வகையான பணிநிலை வாசகங்கள். இவை செயப்படு பொருளாகவோ, பெயரடையாகவோ வாக்கியத்தில் செயற்படுகின்றன. வாசகத்தின் இறுதியில் வரும் இந்த எச்சங்கள், இவ்வாசகங்களுக்கும் தலைமை வாசகங்களுக்குமுள்ள தொடர்பினை விளக்கி நிற்கும். எச்சங்கள் மற்றொன்றை அணைந்து நிற்கும். தமிழில் நான்கு வகையான எச்சங்கள் காணப்படுகின்றன. (1) செய்தென் எச்சம் (2) செயவென் எச்சம் (3) பெயரெச்சம் (4) நிபந்தனை (conditional). இவற்றில் பெயரெச்சமும், நிபந்தனையும் குறிப்பிட்ட தொடரியலிலேயே வரும். மற்றைய இரண்டும் மிகவும் பரந்துபட்ட தொடரியலில் வரும்.

2.3.1 செய்தென் எச்சம்

ஒரே எழுவாய் அல்லது வேறுபட்ட எழுவாய்களையுடைய, தொடர்ந்து வரும் நிகழ்ச்சி, காரண காரியம், முறை (manner) இவற்றால் ஒன்றற்கொன்று தொடர்புடைய தனிநிலைத் தொடர்களில், இறுதி வாசகம் ஒழிந்த மற்ற வாசகங்களை இறுதி வாசகத்தினுள் புகுத்தும் பொழுது அவ்வாசகங்களின் முற்று வினைகளை எச்சவினைகளாக மாற்றுகிறோம். இறுதி வாசக முற்றுவினை மாறாமலே இருக்கும்.

2.3.1.1 தொடர் (sequence) செய்தென் எச்ச வாசகம்

தமிழில் ஆங்கிலத்தைப் போல இணைத்தொடர்களை உருவாக்கும் and போன்ற இணைப்பான்கள் இல்லை. உம் ... உம்

என்ற இணைப்புருபுகளால் கலப்புத் தொடர்கள் உருவாவதை முன்பே கண்டோம். தொடர்ந்து நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை செய்தென் எச்சவினைகளால் இணைக்கிறோம். இறுதி வாசகத்தைத் தவிர, மற்ற எல்லா வாசகங்களிலுமுள்ள வினைமுற்றுக்களை செய்தென் வினைஎச்சமாக மாற்றி, இத்தொடர்களை இணைக்கிறோம். இவை அனைத்தும் தலைமை வாசகத்திலுள்ள வினைமுற்றால் முடியும். எழுவாய் ஒன்றாகவும், பலவாகவும் இருக்கலாம்.

99. அவன் இங்கே வந்து என்னைக் கூப்பிட்டான்.

என்ற இக்கலப்பு வாக்கியம்

100. அவன் இங்கே வந்தான்.

101. அவன் என்னைக் கூப்பிட்டான்.

என்ற இரண்டு தனிநிலை வாக்கியங்களால் உருவாகியது, இதில் வருதல் தொழிலைத் தொடர்ந்து கூப்பிடும் தொழில் நடைபெறுகிறது. இவ்வாறு பல நிகழ்ச்சிகள் தொடரலாம்.

102. அவன் நேற்று என் வீட்டிற்கு வந்து என்னைக் கண்டு, நேராகச் செய்தியைச் சொல்லித் திரும்பிப் போகும் பொழுது இரவு மணி பதினொன்று ஆயிற்று.

செய்தென் எச்சங்கள் வாக்கியத்தில் வருகின்ற முற்று வினைக்கு தடையாக வருகின்றன. செய்தென் எச்சங்கள் திணை, பால், எண், இடம் உருபேற்கா. வினைமுற்றின் காலமே இவற்றிற்கும் கொள்ள வேண்டும். செய்தென் வாய்பாட்டு இவ்வினை எச்சங்கள் இறந்தகால உருபுடையதாக இருந்தாலும், இவற்றின் காலம் வினைமுற்றின் காலமே. வினைமுற்றுக்கள் முக்காலத்திலும், வினைப் பாங்கிலும் வரும். வினைமுற்றுக்கள் எக்காலத்தில் வந்தாலும், எச்சங்களால் உணர்த்தப்படும் நிகழ்ச்சிகள் வினைமுற்றின் செயல் நிகழ்வதற்கு முன்பு நிகழுதல் வேண்டும். எனவே வினை எச்சங்களெல்லாம் வினைமுற்றின் அடையாக வரும் பொழுது, எச்சங்களுக்கும் வினைமுற்றிற்கும்

உரிய எழுவாய் ஒன்றாகவே இருக்கும். ஆனால் வினைமுற்று எதிர்மறையாக இருக்கும் பொழுது, அவ்வெதிர்மறைப் பொருள் எச்சங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதில்லை. தன்னாட்சி வினை எச்ச வாசகங்கள் வெவ்வேறு எழுவாயைப் பெற்று வரும்.

வினைமுற்று வெவ்வேறு காலங்களிலும் வினைப்பாங்கிலும் வருவதைக் காண்க.

103. வீட்டிற்குப் போய்ப் பாடத்தைப் படி.

104. நாளை அவனைக் கூப்பிட்டுக் கேட்கலாம்.

105. அவன் வீட்டில் தங்கிப் பகல் முழுவதும் தூங்குகிறான்.

106. என் மகன் எம். எஸ்ஸி வகுப்பில் சேர்ந்து படித்தான்.

107. அடுத்த வாரம் அதைச் செய்து முடித்து விடுவேன்.

செய்தென் எச்சங்களெல்லாம் முற்றுவினைக்கே பணிநிலை வாசகங்களாக வரும் என்பதில்லை. மேல் வருகின்ற எச்சத்திற்கோ, தொழிற்பெயருக்கோ பணிநிலை வாசகங்களாக வந்து, அது முற்றுவினையைக் கொண்டும் முடியலாம். செய்தென் எச்சம், செயவென் எச்சம், தொழிற்பெயர், நிபந்தனை, பெயரெச்சம், வினையாலணையும் பெயர் இவைகளுக்கெல்லாம் அடையாகவும் வரும்.

108. உங்களைப் பார்த்து ஒரு விஷயத்தைப் பேச வந்தேன்.

பார்த்து என்பது, பேச என்பதற்கு அடையாக வந்தது.

109. அவன் இங்கே வந்து ரூபாய் கேட்டால் ஒன்றும் கொடுக்காதே.

வந்து என்பது கேட்டால் என்ற நிபந்தனைக்கு அடையாக வந்தது.

110. நான் உனக்கு வாங்கிக் கொடுத்த புடவை நன்றாக இருக்கிறதா?

வாங்கி என்ற செய்தென் எச்சம், கொடுத்த என்ற பெயரெச்சத்திற்கு அடையாக வருகிறது.

111. அவள் நன்றாக ஆடிப்பாடினதினால் முதல் பரிசு பெற்றாள்.

ஆடி என்ற வினை எச்சம் பாடினதினால் என்ற மூன்றாம் வேற்றுமைத் தொழிற்பெயரோடு இணைகிறது.

112. நேற்று இங்கே வந்து என்னை விசாரித்தவன் இன்றைக்கு வந்தானா?

வந்து என்ற செய்தென் எச்சம் விசாரித்தவன் என்ற வினையாலணையும் பெயருக்கு அடையாக வருகிறது.

இவ்வாறு, ஒவ்வொரு செய்தென் எச்சமும் அடுத்து வருகின்ற தொடருடன் இணைந்து, இறுதித் தொடர் முற்றுவினையோடு முடியலாம்.

ஒரு வாக்கியத்தில் எத்தனை செய்தென் எச்சங்கள் வரலாம் என்ற வரையறை இல்லை. எத்தனையும் வரலாம். 113 – வது வாக்கியத்தில் பதினைந்து செய்தென் எச்சங்கள் தொடர் நிகழ்ச்சியாக வந்திருப்பதைக் காண்க.

113. அவன் ஏழு மணிக்கு விழித்து (1) எழுந்திருந்து (2) வெளிக்குப் போய் (3) பின்பு குளியலறைக்குச் சென்று (4) பல் விளக்கி (5) குளித்து (6) உடம்பைத் துடைத்து (7) தலையில் எண்ணெய் தேய்த்து (8) முடியைச்சீவி (9) சிங்காரித்து (10) பவுடர் போட்டு (11) பொட்டு வைத்து (12) டிரெஸ் பண்ணிக் கொண்டு (13) கீழே வந்து (14) நாற்காலியில் உட்கார்ந்து (15) பேப்பர் படித்தான்.

இவ்வாறு வரும் தொடர் எச்சங்கள் பொருண்மைப் பொருத்தமுடையதாக இருக்க வேண்டும். கண்டபடி செய்தென் எச்சங்களைப் பயன்படுத்த முடியாது.

114. அவன் கட்டிலில் தூங்கிக் கடலில் நீந்தினான்.

என்று கூற முடியாது; இது இலக்கணப் பொருத்தமுடையதாக இருந்தாலும், பொருட் பொருத்தமுடையதன்று. 113 - வது வாக்கியத்தில் பதினைந்து எச்சங்கள் வந்தாலும் அவை ஒன்றற் கொன்று தொடர்புடையதாய் ஒன்றை அடுத்து ஒன்று நிகழ்வ தாய் வருகின்றன. 114 - வது வாக்கியத்தில் கட்டிலில தூங்குவது கடலில் நீந்துவதற்குக் காரணமாக முடியாது. ஒன்றைத் தொடர்ந்து மற்றையது நிகழ்வதும் இல்லை.

இரண்டாவதாக இப்பொருள் தொடர்பு, செயற்பாட்டில் ஒருமை உடையதாக (unity of action) இருக்க வேண்டும்.

115. அவன் கதை சொல்லி, பம்பரம் விளையாடி, காற்றாடி செய்து அதை அவர்களில் சின்ன பையனுக்குக் கொடுத்தான்.

இதில் கதை சொல்வதற்கும், பம்பரம் விளையாடுவதற்கும், காற்றாடி செய்வதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஒன்றற் கொன்று காரணமோ, தொடர்ச்சியோ ஆகாது. எனினும் இவை அனைத்தும் சிறுவர்களுக்காக விளையாட்டுக் காட்டுவதைச் சுற்றி நிகழ்வதால் தொடர்புடையனவாயின.

எச்சங்கள், உம் அல்லது ஓ உருபேற்றும் இணைக்கப்படும்.

116. அவன் பணம் திருடியோ அல்லது எவனையாவது ஏமாற்றியோ பணம் சேர்த்து இந்தக் காரை வாங்கி னான்.

117. அவன் திருடியும் ஏமாற்றியும் வாழ்கிறான்.

2.3.1.2 வினை முடி செய்தென் எச்ச வாசகம் (completive)

விடு என்பதன் செய்தென் எச்ச வடிவமாகிய விட்டு என்பதைச் செய்தென் எச்சத்தோடு இணைக்கும் பொழுது, அவ்வினை முடிவு பெற்று வேறொரு வினை தொடங்கும் நிலையை உணர்த்தும்.

இவ்விரு வினைகளுக்கும் ஒன்றினொன்று தொடர்ந்து வருகின்ற இயற்கைத் தொடர்பு வேண்டியதில்லை. 114 – வது வாக்கியத்தில் தூங்கி என்ற எச்சத்தோடு விட்டு என்பதை இணைத்ததும் அவ் வாக்கியம் பொருத்தமுடையதாக மாறி விடுகிறது. வினைமுற்று மூன்று காலத்திலும் வரும்.

118. அவன் கட்டிலில் தூங்கிவிட்டுக் கடலில் நீந்தினான்.

இங்குத் தூங்கும் செயல் முடிந்தபின் நீந்தும் செயல் நிகழ்கிறது. விட்டு, வினையிடையே இயற்கைத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதை நீக்கிவிடுகிறது.

இதன் மற்றொரு செயல், விட்டு பெறும் வினையின் செயல் முடிவு. அது முடிந்த பின்பே அடுத்த செயல் தொடங்குகிறது. விடு என்ற வினை இம்முடிக்கும் பொருளையும் தருகிறது. செய்தென் எச்சம்+விட்டு என்பதைச் சொற் பொருளால் விளக்க வேண்டுமாயின், செயலைச் செய்து ஒதுக்கி விட்டு, என்று கூற வேண்டும்.

119. புத்தகத்தைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான்,

படித்தல் தொழில் முடிந்தபின்பு கொடுத்தல் தொழில் நிகழ்கிறது. இரண்டு நிகழ்ச்சிக்கும் எத்தகைய இயற்கைத் தொடர்பும், தொடர்ச்சியும் இல்லை என்றாலும் முதல் வினையை முடித்து விட்டு அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டும். அப்பொழுது விட்டு என்பது கட்டாயம் வருதல் வேண்டும்.

120. மேலும் ஒரு டீ சாப்பிட்டுவிட்டு வீட்டிற்குப் போனேன்.

121. என் படிப்பை முடித்துவிட்டு வெளிநாட்டிற்குப் போகிறேன் (போவேன்).

2.3.1.3 உடன் நிகழ் (Simultaneous) செய்தென் எச்சவாசகம்

இயல்பான நிகழ்ச்சியில் தொடர்போ, பொருளில் தொடர்போ இல்லாத நிகழ்ச்சிகளில், செய்தென் எச்சத்தோடு, கொண்டே

(கொண்டு) என்பது இணையும் பொழுது, உடனிகழும் பொருளைத் தரும். வினைமுற்று மூன்று காலத்திலும் வரும்.

122. அவன் பாடிக் கொண்டே குளிக்கிறான் (குளிப்பான்) (குளித்தான்).

பாடி என்ற செய்தென் எச்சத்தோடு, கொண்டே என்பதைச் சேர்க்கிறோம். பாடுவதற்கும் குளிப்பதற்கும் நிகழ்ச்சித் தொடர்போ பொருள் தொடர்போ இல்லை. ஆனால் இரண்டும் உடன் நிகழ் கிறது; ஒரே சமயத்தில் நிகழ்கிறது. வினை எச்சத்தோடு இணைந்து கொண்டே இப்பொருளைத் தருகிறது; கொண்டு என்பது கொள் என்பதன் செய்தென் எச்சம். மேலும் சில எடுத்துக் காட்டுகள்.

123. அவன் கட்டிலில் படுத்துக் கொண்டே தன் வாழ்க்கையைப் பற்றி நினைத்தான்.

124. ஜன்னல் பக்கத்தில் நின்று கொண்டே கீழே பார்த்தான்.

2.3.1.4 தற்சுட்டு (reflexive) செய்தென் எச்சவாசகம்

கொண்டே என்பது உடன் நிகழ் பொருளிலும், கொண்டு என்பது தற்சுட்டுப் பொருளிலும் (reflexive) வரும். தற்சுட்டுப் பொருளில் கொள் என்பதன் சொற் பொருளே பயன்படுகிறது. வினை முற்று மூன்று காலத்திலும் வரும்.

125. அவன் கட்டிலில் படுத்துக் கொண்டு தன் வாழ்க்கையை நினைத்தான் (நினைக்கிறான்) (நினைப்பான்).

இதனை after lying in the cot என்று மொழி பெயர்க்க வேண்டும். இங்கே இருவினையும் உடன் நிகழ்ந்தாலும், சொல்பவன் கருத்து அதுவன்று. ஒன்றன்பின் மற்றது நிகழ்கிறது என்பதே அவன் கருத்து. ஆனால் 123-வது வாக்கியத்தில், படுத்திருக்கும் தொழிலும் நினைக்கும் தொழிலும் ஒரே சமயத்தில்

நிகழ்கிறது. சொல்பவன் சொல்ல நினைக்கும் கருத்தும் அதுவே.

தற்சுட்டுப் பொருளில் வரும்பொழுது ஒரு நிகழ்ச்சியை அதன் பல்வேறு கூறுகளாகப் பகுத்து விளக்குகிறோம்.

126. ஒரு கிலோ அரிசி வாங்கிக் கொண்டு வா.

இதில் வாங்குதல், கொள்ளுதல், வருதல் என்ற மூன்று தொழில்கள் அடங்கி இருக்கின்றன. ஆங்கில மொழிக் கோட்பாட்டின்படி இது bring, buy என்ற ஒரே தொழில். இதைப் போல,

127. அவன் மூட்டையைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான்.

என்னும் பொழுது, தூக்குதல், கொள்ளுதல், போதல் என்ற மூன்று கூறுகள் அடங்கிய இத்தொழில் ஆங்கிலத்தில் carried away என்ற ஒரே தொழில்.

128. வாங்கிக் கொண்டு வா - buy

129. எடுத்துக் கொண்டு வா/போ- bring, take away

130. தூக்கிக் கொண்டு வா/போ - bring here, carry away

131. கூட்டிக்கொண்டு வா/போ- bring with / take away

132. கேட்டுக் கொண்டு வா - listen and come, ask and come

இவற்றில் எல்லாம் கொள் என்பது அதன் சொற் பொருளில் (கொள்ளுதல்) வருகின்றது. பெரும்பாலும் வாங்கு, எடு, தூக்கு, கூட்டு போன்ற வினைகளோடு கொள் தற்சுட்டுப் பொருளில் வருகிறது.

கீழே உள்ள மூன்று வாக்கியங்களிலும் கொண்டு, கொண்டே என்பதன் வேறுபாட்டைக் காண்க.

133. அவன் கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

134. அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். (கதவைத் திறந்து விட்டு அதன் பின் உள்ளே வந்தான்)

135. அவன் கதவைத் திறந்து கொண்டே உள்ளே வந்தான். (கதவைத் திறத்தலும் உள்ளே வருதலும் ஒரே சமயத்தில் நிகழுகின்றன).

இவற்றின் வேறுபாட்டை opened the door and came, opened the door himself and came, opening the door he came என்ற மொழிபெயர்ப்பால் காண்க. 136-வது வாக்கியமே உடன் நிகழ்ச்சிப் பொருளில் வருகிறது. 135 தற்சுட்டுப் பொருளில் வருகிறது.

2.3.1.5 காரண செய்தென் எச்ச வாசகம்

வினை எச்சம் காரணமாய் வினைமுற்றுக் குறிக்கும் தொழில் நடைபெறும். இதனை ஆங்கிலத்தில் by, in என்று மொழி பெயர்க்கலாம். வினை முற்று மூன்று காலத்தும் வரும்.

136. குழந்தையை ஏதோ சொல்லிச் சமாதானப் படுத்தி விட்டான்.

குழந்தையின் சமாதானத்திற்கு அவன் செய்தது காரணம். மேலும் சில எடுத்துக் காட்டுக்கள்.

137. வேதங்களைப் படித்து ஆத்மா சாந்தி அடைய முடியாது.

138. அவன் சின்ன வயதில் அம்மாவை இழந்து தாய்ப் பாசம் அனுபவிக்கவில்லை.

139. சினிமாவில் நடித்துப் புகழுடன் இருக்கிறான்.

2.3.1.6 விளக்க செய்தென் எச்ச வாசகம்

வினைமுற்றின் போக்கை, இயல்பைச் செய்தென் எச்சம் விளக்கி நிற்கும். வினைமுற்று முக்காலத்தும் வரும்.

140. அவன் ஓடிப் போனான் (போவான்) (போகிறான்).

141. அவள் குனிந்து உட்கார்ந்தாள்.

142. அந்த மோட்டார் தொடர்ந்து ஓடாது.

143. அவள் என்னைக் கெஞ்சிக் கேட்டு அழுதாள்.

போன முறையை ஓடி விளக்குகிறது; உட்கார்ந்த முறையைக் குனிந்து விளக்குகிறது; இவ்வாறே மற்றவைகளையும் காண்க.

பார்த்து என்ற செய்தென் எச்சம், மரபு வழக்கமாக கவனமாக இருத்தலைக் குறிக்கும்.

144. ஏணியிலிருந்து பார்த்து இறங்கு.

145. பெட்டியைப் பார்த்துத் தூக்கு.

2.3.1.7 தன்னாட்சி (absolute) செய்தென் எச்ச வாசகம்

இது வரையிலும் நாம் பார்த்து வந்த செய்தென் எச்ச வாசகங்கள், வினைமுற்றுக்கும் எச்சத்திற்கும் ஒரே எழுவாய் உடையனவாக இருக்கக் கண்டோம். இரண்டிற்கும் வெவ்வேறு எழுவாயும் வரலாம். இவ்வாறு வினைமுற்றின் எழுவாயைப் பெறாது, தனக்கெனத் தனி எழுவாய் பெற்று வரும் செய்தென் எச்ச வாசகங்களையே தன்னாட்சி செய்தென் எச்ச வாசகம் என்கிறோம். சாதாரணமாக இவ்வாசகங்கள் காலம் அல்லது காரணத் தொடர்புடையனவாக இருக்கின்றன.

146. இவன் சண்டை போட்டுப் போலீஸ் வந்தது.

147. அப்பா வந்து சாப்பிடுவோம்.

148. ஐந்து நாள் கழித்து என்னைக் கூப்பிட்டான்

இத்தகைய் தன்னாட்சி செய்தென் எச்ச வாசகம், பெயர் வாசகம் போல வினைமுற்றின் செயப்படுபொருளாகவும், பெயர் கோப்புத் தொடராகவும் வரும்.

149. அவன் சொல்லிக் கேட்டான்.

அவள் சொல்லி என்பது கேட்டான் என்பதற்குச் செயப்படு பொருள்.

ஆகின்றது என்ற வினைமுற்று, செய்தென் எச்சம் + காலப் பெயர் + ஆகின்றது என வந்து மரபுத்தொடராகப் பொருள் தருகிறது.

150. சென்னைக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன.

151. அவனைப் பார்த்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன.

2.3.1.8 இரட்டிக்கும் செய்தென் எச்ச வாசகம்

நிகழ்ச்சியின் தொடர்ச்சியை, அதிகரிப்பைக் காட்டுவதற்குச் செய்தென் எச்சத்தை இரட்டித்துக் கூறுகிறோம். தொடர்நிலை, காரணம், தன்னாட்சி, உடன் நிகழ்ச்சி-இப்பொருளில் இது வரும்.

வினைமுற்று மூன்று காலத்திலும் வரும்.

152. பேசிப்பேசி என் தொண்டை வரண்டு விட்டது.

இது காரணப்பொருளிலும், தன்னாட்சியிலும் வந்தது.

153. அவள் படித்துப் படித்துப் பார்த்தாள்.

இது உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. படித்தலும் முயற் சித்தலும் (பார்த்தல்) உடன் நிகழ்கின்றன.

154. புடவைகளை எடுத்து எடுத்துப் போட்டான்.

இது தொடர்ச்சிப் பொருளில் வந்தது. எடுத்தலும் போடலும் அடுத்தடுத்து நிகழ்கின்றன.

உம் உருபேற்ற செய்தென் எச்சமும், அதன் உம் உருபேற்ற எதிர்மறை வினை எச்சமும் அடுத்தடுத்து வந்து இரட்டிக்கும் பொழுது, அங்கும் இங்கும் இல்லாத இரண்டுங்கெட்டான் நிலையைக் குறிக்கும்.

155. அவள் என்னைப் பார்த்தும் பார்க்காமலும் போகிறாள்.

156. மீன் கொத்தி தண்ணீரைத் தொட்டும் தொடாமலும் பறக்கிறது.

157. அவன் தூங்கியும் தூங்காமலும் இருக்கிறான்.

2.3.1.9 மறுப்புச் செய்தென் எச்ச வாசகம்

போ, பார், போடு என்ற வினைகளின் செய்தென் எச்சங்கள், அவற்றின் சொற்பொருளைத் தவிர்த்து மரபுச் சொல்லாக மறுப்புப் பொருளைத் தருகிறது. இது பேசுபவனுடைய வெறுப்பு, ஒத்துக் கொள்ளா இயல்பு இவைகளைக் குறிக்கும். இவ்வெச்சங்களின் முன் நிற்கும் செய்தி மறுக்கப்படும். வினைமுற்று இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் வரும்.

158. நீ இன்றைக்குப் போய் வந்தாய் (வருகிறாய்).

இன்றைக்கு என்பதை ஒத்துக் கொள்ளவில்லை. போய் என்பது உம் உருபேற்று இரட்டித்தும் இப்பொருளில் வரும். இதற்குப் பின்வரும் செயலை இது ஒத்துக் கொள்ளாமையைக் குறிக்கும்.

159. அவன் போயும் போயும் இந்தத் துணியை வாங்கினான்.

போய் என்பதே பெருவழக்காயினும், பார்த்து என்பதும் இப் பொருளில் வருகிறது.

160. மழை பெய்த அன்றைக்குப் பார்த்துப் போனான்.

போட்டு என்பதும் இப்பொருளில் சில சமயம் வருகிறது. இது செயப்படு பொருளோடு வந்து அதை மறுக்கும்.

161. அவன் என்னைப் போட்டு அடித்தான்.

அடிபடுவதற்குரியவன் நான் இல்லை என்பது இதன் கருத்து.

2.3.1.10 சலுகை (concessive) வாசகம்

வேறுபட்ட இருவினைகள் அடுத்தடுத்து வந்து, முதல் வினையின் செய்தென் எச்சம் உம் உருபு பெற்று வரும் பொழுது, அது சலுகைப் பொருளைத் தருகிறது. ஆங்கிலத்தில் 'although' என்பதற்கு நேரான பொருளுடையது இது. வினைமுற்று முக்காலத்திலும் வரும்.

162. அவன் கூப்பிட்டும் நான் போகவில்லை.

163. அவன் ரூபாய் பத்து வாங்கியும் மேலும் கேட்கிறான்.

2.3.1.11 எதிர்மறை செய்தென் எச்ச வாசகம்

எதிர்மறை உருபு ஆமல் என்பது. இதனைச் செயவென் வினை எச்சத்தோடு சேர்க்கிறோம். இவ்வாறு சேரும் பொழுது அது செய்தென் எச்சமாக மாறுகிறது. வினைமுற்றுக்கும், எதிர்மறை வினை எச்சத்திற்கும் உரிய எழுவாய் ஒன்றாகவோ வேறாகவோ இருக்கலாம். எதிர்மறை நிகழ்ச்சியும், வினைமுற்று நிகழ்ச்சியும், தொடர் நிலையாகவும், உடனிகழ்ச்சியாகவும் அமையலாம். வினைமுற்று முக்காலத்திலும் வரும்.

164. என்னைப் பார்க்காமல் அவன் போகிறான்.

இதில் பார்க்காத செயலும், போதல் செயலும், அடுத்தடுத்து நிகழ் தொடர்நிலை.

165. அவள் ஒரு வார்த்தை சொல்லாமல் நின்றாள்.

இது உடனிகழ்ச்சிப் பொருளில் வந்திருக்கின்றது. பெரும் பாலும் வினைமுற்று நிலைகொள் (static) பொருளில் வரும் பொழுது உடனிகழ்ச்சிப் பொருளில் வருகிறது.

எதிர்மறை முன்பு வருகின்ற வினையை மறுப்பதாகவும் அமையலாம்.

166. பணம் கேட்டு வாங்காமல் ஊருக்குப் போய் விட்டாள்.

இங்கு வாங்காமல் என்பது கேட்டலின் எதிர்மறை நிகழ்ச்சி.

தடு, பார் என்பன வினைமுற்றாக வரும்பொழுது எதிர்மறையின் எழுவாய் வேறாக இருக்கும். இது ஒரு நிகழ்ச்சி நடைபெறாமல் தடுப்பதைக் குறிக்கும். ஆங்கிலத்தில் இதனை so that not, in order that not என்று மொழிபெயர்க்க வேண்டும்.

167. அவர்கள் பக்கத்தில் வராமல் தடுக்கிறாள்.

168. குழந்தை அழாமல் பார்த்துக் கொள்கிறாள்.

2.3.2 செயவென் எச்ச வாசகம்

எச்சங்களிலெல்லாம் செயவென் எச்சமே பல்வேறு தொடர் அமைப்புகளில் வருகின்றது. அனேக துணைவர்களோடும் (auxiliary), எதிர்மறை உருபுகளோடும், நிரம்ப, மெல்ல என்பன போன்ற வினையடைகளோடும், சொல்லுருபுகளோடும் (போன்ற, தவிர, விட என்பன போன்ற உருபுகள்) வருகின்றது. இது புகுதல் வாசகமாக வந்து தலைமை வாசகத்தோடு நோக்கம் (purpose), காரணம் (causal), காலம் (temporal), உடனிகழ்ச்சி (simultaneous), பயன், அடுத்துத் தொடர் நிகழ்ச்சி (sequence) எனப் பல பொருளைத் தருகிறது. அன்றியும் பெயரின் கோப்புத் தொடராக எழுவாய், செயப்படுபொருள் இவற்றின் இடத்திலேயும், வினைப்பாங்காகவும் (modals) வருகின்றது. தலைமை வாசகப் பயனிலை வினை முற்றாக இருப்பின் அது மூன்று காலத்திலும் வரும்.

2.3.2.1 நோக்க செயவென் எச்சம்

செயவென் எச்ச வாசகம், வினைமுற்றின் - தலைமை வாசகத்தின் நோக்கத்தைக் குறிக்கலாம். இரண்டு வாசகங்களின் எழுவாயும் ஒன்றாகவோ, வேறாகவோ இருக்கலாம்.

169. நான் உங்களைப் பார்க்க வந்தேன்.

வருதலின் நோக்கம் பார்த்தல். இரண்டு வாசகங்களுக்கும் ஒரே எழுவாய்.

170. என் பையன் கல்லூரியில் படிக்க ஏற்பாடு செய்கிறேன்.

இவ் வாசகங்கள் வெவ்வேறு எழுவாய் பெற்று வந்தன.

2.3.2.2 காரண செயவென எச்சம்

தலைமை வாசக முற்றுவினை நிகழ்ச்சிக்குக் காரணமாய் இவ்வெச்ச வாசகம் அமையலாம்.

171. கால் ஒடியக் கீழே விழுந்தான்.

172. கல்லால் அடிக்க மண்டை உடைந்தது.

விழுவதற்குக் கால் ஒடிந்தது காரணம். மண்டை உடைந்ததற்குக் கல்லால் அடித்தது காரணம்.

2.3.2.3 காலச் செயவென் எச்சம்

தலைமை வாசக நிகழ்ச்சி நிகழும் காலத்தை இவ்வெச்ச வாசகம் உணர்த்தலாம்.

173. மணி ஆறு அடிக்க எழுந்து போய்விட்டான்.

எழுந்துபோன நேரத்தைக் குறிப்பது ஆறு மணி அடிப்பது.

2.3.2.4 உடன் நிகழ் செயவென் எச்சம் (simultaneous)

தலைமை வாசக வினைமுற்று நிகழ்ச்சியோடு உடன் நிகழ் ஒன்றை இவ்வெச்ச வாசகம் உணர்த்தலாம். எழுவாய் இரண்டிற்கும் வெவ்வேறாகவே இருக்கும்.

174. நான் பாட அவன் பதிவு செய்தான்.

இரண்டிற்கும் எழுவாய் ஒன்றாயின் செய்தென் எச்சம் வரும்.

175. அவள் பாடி அவன் பதிவு செய்தான்.

சரியாக இருந்தது என்பது தலைமை வாசகமாக வர, இரண்டு செயவென் எச்ச வாசகங்கள் ஒவ்வொன்றும் உருபேற்று, இரண்டும் உடன் நிகழ் காலத்தைத் தரலாம்.

176. அப்பா வரவும் நான் புறப்படவும் சரியாக இருந்தது.

.3.2.5 பயன் செயவென் எச்ச வாசகம்

தலைமை வாசக நிகழ்ச்சியின் பயனை எச்ச வாசகம் கூறலாம். இரண்டு வாசகங்களின் எழுவாயும் வெவ்வேறாக இருக்கும்.

177. இரத்தம் வர அவன் என்னை அடித்தான்,

அடித்ததன் பயன் இரத்தம் வருதல்.

178. பஸ் ஸ்டாண்டிற்குப் போக எவ்வளவு நேரம் ஆகும்,

நேரம் ஆதலின் பயன் பஸ் ஸ்டாண்டிற்குப் போதல்.

2 3. 2. 6 அடுத்து உடன் நிகழ் வாசகம் (sequence)

இதில் செயவென் எச்ச வாசகத்தைத் தொடர்ந்து, உடன் தலைமை வாசக நிகழ்ச்சி நிகழும். செயவென் எச்சம் உம் உருபேற்று வரும், எழுவாய் ஒன்றாகவும் வேறாகவும் இருக்கலாம்

179. அவன் வரவும் நான் கிளம்பி விட்டேன்.

180. அவன் சாப்பிட்டு முடிக்கவும் தூங்கப்போய்விட்டான்.

2. 3. 2. 7 இரட்டிக்கும் செயவென் எச்சம்

செயவென் எச்சம் இரட்டித்துத் திரும்ப நிகழுகின்ற ஒன்றையோ, தொடர்ந்து நிகழுகின்ற ஒன்றையோ உணர்த்தலாம்; இதில் நோக்கம், அடுத்து உடன் நிகழ்வு இவை வாரா. மற்றவை எல்லாம் வரும்.

181. நான் கேட்க கேட்க அவன் பதில் சொன்னான்.

இங்குக் காரணப்பொருளில் இரட்டித்து வந்தது. பதில் சொல்வதற்குக் காரணம், கேட்டல். திரும்பத் திரும்பக் கேட்டலை இரட்டித்துக் கூறுகிறோம்.

182, ஓட ஓட அவனை விரட்டினான்.

பயன் பொருளில் வந்தது. விரட்டுதலின் பயன் ஓடல்.

183. நேரம் ஆக ஆக எனக்குப் பயமாக இருந்தது. இங்குக் காலப் பொருளில் வந்தது.

2. 3. 2. 8 செயவென் எச்ச எழுவாய்

செயவென் எச்சம் எழுவாயாக வாசகத்தில் வரலாம்.

184. இதைச் செய்ய மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

கஷ்டமாக இருப்பதன் எழுவாய் செய்ய என்பது. பழந்தமிழில் இது தொழிற்பெயராக (செய்தல்) வரும். இக்காலத்தும் சிலர் இவ்வாறு எழுதுவர். அவர் சிறுபான்மையினர்.

2. 3. 2. 9 செயவென் எச்சம் செயப்படுபொருள்

செயவென் எச்ச வாசகம் செயப்படு பொருளாக வரும்.

185. அவன் வரச் செய்தேன்.

வருதல், செய்தலின் செயப்படு பொருள்.

186. சண்டையில் மக்கள் இறக்கப் பார்த்தேன்.

இறத்தல், பார்த்தலின் செயப்படுபொருள். இங்கும் எச்சத்திற்குப் பதில் வருதலை, இறத்தலை எனத் தொழிற் பெயர் இட்டு எழுதுவாரும் உளர். அத்தகையோர் சிறுபான்மையினர்.

2. 3. 2 10 செயவென் ஏச்சவாசகம் பெயர் கோப்புத் தொடராக வரல் (*Nouns Complementation*)

செயவென் எச்ச வாசகம் பெயரின் கோப்புத் தொடராக வரலாம்.

187. குடி இருக்க வீடு அங்கே கிடைக்காது.

188. என்னைக் கேட்க இவள் யார்?

189. இங்கே தூங்க இடம் கிடைக்காது.

இருக்க என்பது வீட்டிற்கும், கேட்க என்பது இவளுக்கும், தூங்க என்பது இடத்திற்கும் கோப்புத் தொடர்.

2. 3. 2. 11 செயவென் எச்சத்தின் வினைப்பாங்கு

செயவென் எச்சம் ஆகார வினாவொடு வரும்பொழுது, முன் திட்டம் போன்ற வினைப்பாங்குகளைக் கொடுக்கும். ஆங்கிலத்தில் "shall I, am I supposed to", என்பதற்கிணையான பொருளில் வரும். ஆகார வினாவுருபு ஏற்ற செயவென் எச்சமே பயனிலையாகச் செயற்படும்.

190. அம்மா வந்தால் உன்னைக் கூப்பிடவா?

அம்மா வந்தால் கூப்பிட வேண்டும், வேண்டாம் என்பதை முன்பே திட்டம் இட்டுச் செயற்படுகின்றனர். இங்குக் கூப்பிடவும் செய்யலாம், கூப்பிடாமலும் இருக்கலாம்.

இதே வினைப்பாங்கு, தொழிற்பெயர் ஆகார வினாவுருபு ஏற்று வரும்பொழுதும் பெறப்படும்.

191. அம்மா வந்தால் உன்னைக் கூப்பிடுவதா?

இது 190 – இல் இருப்பதைவிட அதிகமான உறுதியைக் குறிக்கும். இரண்டிலொன்று கட்டாயம் முடிவு பெறும். பெரும்பாலும் கூப்பிடுவது முடிவாக்கப்படும்.

முன் திட்டம், ஒழுங்கு இவைகளைக் குறிக்கத் தமிழில் வினைப் பாங்குகள் பயன்படுகின்றன. வேண்டும் என்பது 'supposed to do' என்பதற்கு நேரான வினைப் பாங்கினைக் கொடுக்கிறது. கீழே கொடுக்கப் பட்டிருக்கும் தொடர்களில், ஆகார வினாவுருபு, வேறுபட்ட வினைப்பாங்கில் வருவதைக் காண்க. பொருள் வேறுபாட்டை ஆங்கில மொழிபெயர்ப்பு விளக்கும்.

192. நான் போகவா? — Shall I go? Am I supposed to go?

இது இயல்பான வினா. போவதில் எத்தகைய குறிப்பும் இல்லை. போக அனுமதி கேட்கப் படுகிறது.

193. நான் போகட்டா? Shall I really go?

நான் கட்டாயம் போகப் போவது உறுதி. நீ என்ன சொல்கிறாய், என்பது போன்ற பொருளைத் தருகிறது.

194. நான் போகலாமா? May I go?

போகவும் செய்யலாம், போகாமலும் இருக்கலாம், போவதும் போகாததும் மற்றவன் விருப்பத்தை – அனுமதியைப் பொறுத்தது. இக்கேள்வியில் பணிவும் அடக்கமும் தொனிக்கும்.

195. நான் போகட்டுமா? Do you agree that I go?

போவது உறுதி. மற்றவன் உடன்பாடு ஒரு சடங்குதான்.

செயவென் எச்சம், வினைமுற்று வரவேண்டிய இடத்தில் ஏ என்வினாச் சொல் பெற்று வரும். இது எப்பொழுதும் நிகழ்கால, எதிர்கால நிகழ்ச்சியைக் குறிக்கும். செய்வது என்னது என்று புரியாத ஒரு நிலையில் இவ்வாக்கியம் வரும்.

196. நான் இப்பொழுது என்ன செய்ய?

197. நான் இப்பொழுது எங்குப் போக?

என்ன செய்வது, எங்கே போவது என்று தெரியாத நிலையில் இவை வருகின்றன.

196, 197 - வாக்கியங்களில், செய்ய என்பதற்குப் பதில் செய்வது, போவது என்று தொழிற் பெயரும் வரும் இது அவரவர் நடையைப் பொறுத்தது.

2.3.2.12 வான், பான் செயவென் எச்சத்தோடு ஏன்

செய்வான் கொடுப்பான் என்பன பழந்தமிழில் செயவென் எச்சங்களாகவும் வரும். இவை முற்றாகவும் வருவதால் இவைகளை முற்றெச்சம் என்பர். வான் மெல் வினைகளோடும் (weak verbs), ப்பான் வல் வினைகளோடும் (strong verbs,) பான் இடை வினைகளோடும் (middle verbs) வரும். இவைகளைச் செய்வ்+ ஆன், கொடுப்ப் + ஆன் என எதிர்கால உருபுகளோடு எண், பால் விகுதிகள் பெற்றன எனவும் கூறலாம். செயவென் எச்சங்கள் காலங்காட்டா. செய்தென் எச்சம் இறந்தகால அடியோடு எச்ச உருபு பெற்றது என்றாற் போல இதுவும் எதிர்கால அடியோடு விகுதி பெற்றது எனலாம்.

இவ்வெச்சங்கள் ஏன் என்ற உருபேற்று வரும்பொழுது, செய்திருக்கக் கூடாததைச் செய்துவிட்டதை வினாவும் பொருளைத் தரும்.

198. செய்வானேன்

199. தின்பானேன்

200. கொடுப்பானேன்

மொழியியல் 7.3 & 4 (1984)

நேமிநாதம் - ஓர் ஒப்பாய்வு (எழுத்து)

பி. பெ. சுயம்பு
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

0. அறிமுகம்

தமிழ் இலக்கணத்தினை அதன் மரபினைப் பற்றித் தொல்காப்பியம் அறிவியல் நோக்கினையொட்டி விரிவாக விளக்குகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய இலக்கண நூலான வீரசோழியம் வடமொழிமரபினைப் பெரிதும் பற்றித் தமிழ்மொழியினை விளக்குகின்றது. வீரசோழியத்திற்குப் பின் தோன்றியது நேமிநாதம். இந்நூல் 97 நேரிசை வெண்பாக்களில் தமிழ்மொழியின் அமைப்பிலக்கணத்தினைச் சுருக்கமாக மீண்டும் தமிழ்மரபினைப் பற்றி விளக்குகின்றது. வீரசோழியக் காலத்தில் பின்தள்ளப்பட்ட தமிழ்மரபினை மீண்டும் நிலை நாட்டுவதும் தொல்காப்பியத்தில் விரித்துக் கூறப்பட்ட எழுத்து, சொல் ஆகியவற்றின் விளக்கங்களைச் சுருக்கி விளக்குதலும் நேமிநாதம் எழுதற்கான தலையாய நோக்கமெனக் கருதவியலும்.

எழுத்ததிகாரம் என்னும் ஒரே தலைப்பின் கீழ் எழுத்துக்களை நேமிநாதம் விளக்குகின்றது. முதல் இரு நூற்பாக்கள் பாயிரமாக, அமைகின்றன; தொடரும் இருபத்து நான்கும் எழுத்துக்களை விளக்குகின்றன: அவற்றுள், ஒலிப்பியல் (phonetics) பற்றியது ஒன்று (6); ஒலியனியல் பற்றியவை ஆறு (1-5,9); ஒலியன்களின் வருதல் (phonotactics) பற்றியவை இரண்டு (7,8); வடசொற்களைத் தமிழ் மரபிற்கேற்ப ஆளும் நெறிகளை உரைப்பவை இரண்டு (10,11); எஞ்சிய பதின்மூன்று நூற்பாக்களும் (12-24) உருபொலியனியல் (Morphophonemics) பற்றி விளக்குகின்றன. நேமிநாதத்தில் ஒலியனியல், ஒலிப்பியல், ஒலியன்களின் வருதல், ஒலியன்களின் உறழ்ந்த வருகையும் வரிவடிவமும், வடமொழிச் சொற்கள் தமிழில் ஆக்கம், உருபொலியனியல் என்னும் முறையில் (order) எழுத்துக்கள் பற்றிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

தமிழ்மொழியினை - அதன் மரபினைப் பற்றி விளக்கவந்த நேமிநாதம், வடமொழிச் சொற்களும் தமிழில் வந்து வழங்கியமை பற்றி, அவற்றையும் தமிழ்மரபு சிதையாவண்ணம் தமிழ்மொழி ஏற்பதில் தவறில்லை எனக்கருதி, வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கப்படுதலை மிகச் சுருக்கமாக விளக்கியிருப்பது, நேமிநாதத்தின் தனிச்சிறப்புக்களுள் ஒன்றெனலாம்.

வடமொழி மரபினைத் தமிழில் புகுத்திய வீரசோழியத்தின் அணுகுநெறியினை மாறுபட்டபோதிலும் எழுத்ததிகாரத்தை விளக்கும் நெறிகளில் வீரசோழியத்தையே பெரிதும் நேமிநாதம் பின்பற்றியிருத்தலை அறிஞர், செ. வை. சண்முகம் (1980: 30, 274-277) தெளிவாக விளக்குகின்றார்.

நேமிநாதம் விளக்கும் எழுத்துக்களின் இலக்கணத்தினை அதன் நூற்பாமொழியினோடு ஒப்பிட்டு இக்கட்டுரை ஆராய்கின்றது. இவ்வாய்வு, ஒலியனியல், ஒலியன்களின் வருதல் என்னும் முறையினைப் பற்றியது.

1. ஒலியனியல்

1. 1 முதல்வைப்பும் இரண்டாம் வைப்பும்

பன்னீருயிர்கள், ஆய்தம், பதினெண்மெய்கள் ஆகிய முப்பத்தொன்றும் 'முதல்வைப்பாகும்' என நேமிநாதம் (1) கூறுகின்றது.

அடுத்து வரும் நூற்பா (2) பன்னீருயிர்களுள் ஐந்தனைக் குறில் எனவும் ஏழனை நெடில் எனவும் பகுத்து, 'வன்மை', 'மென்மை', 'இடைமை' எனப் பதினெண்மெய்களையும் பகுக்கின்றது; இதனைத் தொடர்ந்து (3) இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்கள், 'வல்லொற்று மெல்லொற்று வர்க்கம்', 'அளபெடைகள்' ஆகியவற்றை நேமிநாதம் கூறுகின்றது. அதன் உரையாசிரியர் (நேமி. 3) "இரண்டாம் வைப்பாகிய உயிர்மெய் எழுத்தும், அவற்றுள், குற்றெழுத்தும் நெட்டெழுத்தும், வருக்கத்தொற்றுக்கள் ஆமாறும், ஒற்றளபெடைகள் உயிரளபெடைகள் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று" என விளக்கம் தருகின்றார். நான்காவது நூற்பாவில் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் என்பனவற்றை நேமிநாதம் விளக்குகின்றது. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் பற்றிய செய்தி புணர்ச்சி விதியிலும் எழுத்துக்கட்கு மாத்திரை கூறுமிடத்தும் (18,5) குறிப்பிடப் படுகின்றது.

உயிர், மெய், ஆய்தம் ஆகிய முப்பத்தொன்றனையும் முதல் வைப்பு எனக் கூறும் நேமிநாதம் இரண்டாம் வைப்பு என்னும் சொல்லையோ அதன்கண் இன்னின்ன அடங்கும் என்பதனையோ கூறவில்லை. உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடைகளை இரண்டாம் வைப்பினைச் சேர்ந்தவை எனக் கூறும் அதனுரையாசிரியரும் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகியவற்றைப் பற்றி யாதும் குறிப்பிடவில்லை. ஆயினும், இவை ஒன்பதனையும் இரண்டாம் வைப்பினவாக நேமிநாதம் கொள்கின்றது என அறிஞர்கள் (பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, 1934: 13; ச. வே. சுப்பிரமணியன், 1967:22; கோ. விஜயவேணுகோபால், 1968:102; செ. வை. சண்முகம், 1980:109) கருதுகின்றனர்.

முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்னும் பகுப்பு நன்னூல், இலக்கணவிளக்கம் முதலிய பின்னூல்கள் முதலெழுத்து, சார்பு எழுத்து எனப்பகுத்துக் கூறும் கலைச் சொற்களோடு முறையே தொடர்புடையன. நேமிநாதம், தனி வரிவடிவு உடைய எழுத்துக்களை முதல் வைப்பாகக் கருதியிருக்கலாம். உயிர்மெய்க்கு வரிவடிவு இருந்தும் அவை கூட்டெழுத்தாக இருந்தால் சார்பெழுத்தாகக் கொண்டிருக்கலாம்.

மாத்திரை அடிப்படையிலும் முதல்-சார்பு வேறுபாட்டை விளக்கலாம். முதல் எழுத்துகளாக உள்ளவை இயல்பான மாத்திரை உடையன; சார்பு எழுத்துகளோ முதலெழுத்துகளிலிருந்து வேறுபட்டு அதாவது குறுக்கமாகவோ பெருக்கமாகவோ வருவன என்று விளக்கலாம் என செ. வை. சண்முகம் (1980:1 0) முதலெழுத்து, சார்பெழுத்து என்பனவற்றை விளக்குகின்றார். இக்கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றுகின்றது.

'ஆய்தம்' என்பது ஒலிப்பில் தன்மையுடைய வெடிப்பொலிகளைச் (voiceless plosives) சார்ந்து அவற்றின் கடினத்தன்மையை நுணுக்கி உரசொலியாக வருகின்ற தன்மைத்து என்பதனை 'ஆய்தல் ...... உள்ளதன் நுணுக்கம்' எனத்தொல்காப்பியம் (813) கூறுகின்றது; அதன் வழக்கும் (எக்கு>எஃகு), தொல்காப்பியக் கருத்தினை வலிதாக்குகின்றது. இதனாலேயே, நன்னூல் முதலான பின்னூல்கள் ஆய்த்தினைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகச் சேர்த்திருத்தல் கூடும். மேலும், மொழியின் அடிப்படை எழுத்துக்களாக முதலெழுத்துக்களும் செய்யுட்கண் யாப்பமைதிக்கேற்பக் குறுகியும் பெருகியும் வருவனவாகச் சார்பெழுத்துக்களும் இருத்தல் இவண் குறிக்கத்தக்கது. என்வே, இலக்கணநூற்கள் கூறும் முதலெழுத்துக்கள் மொழியின் மூலக் கூறுகளான ஒலியன்கள் எனவும் சார்பெழுத்துக்கள் என்பன செய்யுள் வழக்கு நோக்கிக் கூறப்படுவன எனவும் கூறினால் தவறாகாது.

வீரசோழியத்தைப் (1) போன்று நேமிநாதமும் ஆய்தத்தினை உயிர்கட்கும் மெய்கட்கும் நடுவில் வைத்துக் கூறுகின்றது. இந் நெடுங்கணக்கு வரிசை முறையே இக்காலத்தும் வழங்குகின்றது. தொல்காப்பியமும் நன்னூல் உள்ளிட்ட பின்னூல்களும் சார்பெழுத்தெனக் கருதும் ஆய்தத்தினை முதலெழுத்தென நேமிநாதம் கருதுகின்றது. தனித்த மூலஒலிக்கூறு ஆய்தத்திற்குளது என்னும் கருத்தும் நெடுங்கணக்கின் செல்வாக்கும் இதற்குக்காரணமாகலாம்.[1]

1. 1. 1 முதல்வைப்பு

'முதல்வைப்பாகும்' என நேமிநாதம் கூறுவனவற்றுள் 'ஔ', ஆய்தம் என்பன ஒழிந்த இருபத்தொன்பதும் ஒலியன்களாக நேமி

நாத மொழியில் வருகின்றன (சான்றுகள் தெளிவுக்காக மாற்றெழுத்துக்களில் தரப்படுகின்றன).

1.1.1.1 உயிர்கள்

/அ/	[acai]	(75.2)	/ஆ/	[āṉṟa]	(2.1)
	[icai]	(80.1)		[eṉṟa]	(90.1)
/இ/	[icai]	(80.1)	/ஈ/	[īṟṟu]	(8.3)
	[acai]	(75.2)		[ēṟṟu]	(80.3)
/உ/	[uṟṟu]	(54 3)	/ஊ/	[ūrnta]	(56.1)
	[oṟṟu]	(3.1)		[ōrntu]	(37.4)
/எ/	[eṉṟa]	(90.1)	/ஏ/	[ēṟṟu]	(80 3)
	[āṉṟa]	(2.1)		[īṟṟu]	(8.3)
/ஐ/	[aintu]	(24.1)	/ஒ/	[oṟṟu]	(3.1)
	[ēntu]	(74.4)		[uṟṟu]	(54.3)
/ஓ/	[ōrntu	(37.4)			
	[ūrnta]	(56.1)			

1.1.1.2 மெய்கள்

/க்/	[karitu]	(72.1)	/ங்/	[ṟaṅku]	(3.2)
	[paritu]	(72.2)		[pākku]	(68.3)
/ச்/	[vacai]	(74 2)	/ஞ்/	[ñālam]	(8.3)
	[vakai]	(12.2)		[kālam]	(30.2)
/ட்/	[kūṭum]	(20.2)	/ண்/	[māṇ]	(17.1)
	[kūṟum]	(48.2)		[māṉ]	(50.4)
/த்/	[tiṟam]	(10.4)	/ந்/	[nampu]	(81 2)
	[niṟam]	(81.3)		[vampu]	(81.2)

/ப்/	[pari u] (72.2)		/ம்/	[nalar]	(25 1)
	[karitu] (72.1)			[palar]	(28 1)
/ய்/	[vayam] (83 4)		/ர்/	[vari]	(7.1)
	[vaḷamai] 83.4)			[vali]	(83.4)
/ல்/	[vali]	(83.4)	/வ்/	[vampu]	(81.2)
	[vaḷi]	(6.1)		[nampu]	(81.2)
/ழ்/	[viḷaivu] (77.3)		/ள்/	[viḷi]	(40.1)
	[viraivu] (82.1)			[vili]	(50 4)
/ற்/	[niṟam] (81.3)		/ன்/	[vāṉ]	(II 1)
	[nilam] (44 3)			[vāḷ]	(81 4)

1.1.1.3 ஆய்தம்

ஆய்தத்தினை நேமிநாதம் (1) ஒலியன் என்னும் நிலையில் கூறுகின்றது. ஆனால் அதன் மொழியில் ஆய்தம் ஓரொலிமாற்றி யாக (ஒலிப்பில் வெடிப்பொலியை உரசு வெடிப்பொலியாக மாற்ற) வருகின்றதைக் காணலாம்.

K] atu (41.1) aḵtu (9.1)

1.1.2 இரண்டாம் வைப்பு

நேமிநாதம் கூறும் உயிர்மெய்கள், ஒற்று வருக்கங்கள், அளபெடைகள் (3); குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம் (4); மகரக்குறுக்கம் (5, 18), ஆய்தக்குறுக்கம் (5) ஆகியன இரண்டாம் வைப்பினவாகக் கருதப்படுகின்றன.

1.1.2.1 உயிர்மெய்

பதினெண் மெய்களோடு பன்னீருயிர்களும் சேர்ந்து வருதலின்வழி உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு (18 × 12 = 216) ஆகுமென நேமிநாதம் (3) கூறுகின்றது. ஔகாரம் எம்மெய்யோடும் சேர்ந்து உயிர்மெய்யாக வருதல் நேமிநாத மொழியில் காணப்பட

வில்லை; ஞகரத்தோடு அகரமும் (இளைஞன் (71.1) ஆகாரமும் (ஞாலம் 8.3) மட்டும் ஒவ்வொரு சொல்லில் வருகின்றன; ஙகரம் எவ்வுயிரோடும் சேர்ந்து உயிர்மெய்யாக வருதல் காணப்பட வில்லை.

1.1.2.2 ஒற்றுவருக்கங்கள்

'வல்லொற்று மெல்லொற்று வர்க்கம்' என நேமிநாதம் (3) கூறுகின்றது. 'கவ்வுக்கு ஙவ்வும், சவ்வுக்கு ஞவ்வும், டவ்வுக்கு ணவ்வும், தவ்வுக்கு நவ்வும், பவ்வுக்கு மவ்வும், றவ்வுக்கு னவ்வும் இவை வருக்கத் தொற்றாம்' என உரையாசிரியர் கூறுகின்றார். இவை நேமிநாத மொழியில் இடம் பெறுகின்றன.

tiṅkaḷ (33.2) tañcam (78.3) iṇṭu (32.2)
tantai (59.1) nampu (81.2) cāṉṟōr (94.3)

1.1.2.3 அளபெடைகள்

'அளபெடைகள்' என நேமிநாதம் (3) கூற, அதனுரையாசிரியர் உயிரளபெடைகள், ஒற்றளபெடைகள் எனப் பகுக்கின்றார். அளபெடை வடிவங்கள் நேமிநாத மொழியில் காணப்படவில்லை.

'ஆடூஉ' (55.4), 'மகடூஉ' (55.3) என்னும் இருவடிவங்கள் நேமிநாத மொழியில் வருகின்றன. இவற்றில் வரும் உகரம் அலகிடப் பெறவில்லை. இவற்றை ஊகார ஈற்றுச் சொற்களாகத் தொல்காப்பியம் (271) கருதுகின்றது. இவை அளபெடை வடிவிலமைந்த சொற்களின் இயல்பான வடிவங்களேயன்றி அளபெடைகள் அல்ல.

1.1.2.4 குற்றியலுகரம்

'தொடர்நெடிற் கீழ்வன்மை மேலுகரம் ... குன்றும்' என நேமிநாதம் (4) கூறுகின்றது. 1. வல்லொற்றுத் தொடர்மொழி, 2. மெல்லொற்றுத் தொடர்மொழி, 3. இடையொற்றுத் தொடர் மொழி, 4. ஆய்தத் தொடர்மொழி, 5. உயிர்த் தொடர்மொழி, 6. நெடிற்கீழ் என அறுவகையாக நேமிநாத உரையாசிரியர்

பகுக்கின்றார். இவ்வறுவகையும் நேமிநாத மொழியில் அலகு பெற்றும் பெறாதும் வருகின்றன.

1. mūkku (6.3) 2. āṇṭu (77.2) 3. iyalpu (35.4)
4. a*k*tu (43.1) 5. eyiṟu (6.3) 6. āṟu (6 3)

1.1.2.5 குற்றியலிகரம்

குற்றியலுகரத்தோடு யகரம் வருங்கால் இடையில் இகரம். வருமெனவும் அவ்விகரம் குன்றும் எனவும் நேமிநாதம் (4) கூறு கின்றது. குற்றியலிகரம் நேமிநாத மொழியில் வருகின்றது.

a*k*tiyāti ṭattum (43.1,2)
இங்குக் குற்றியலிகரம் அலகு பெறவில்லை.

1.1.2 6&7 ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும்

சொற்களில் முதல், இடை, கடை என்னும் மூவிடத்தும் வரும் ஐகாரமும் ஔகாரமும் குன்றும் என நேமிநாதம் (4) கூறுகின்றது. மூவிடத்தும் வரும் நிலையில் ஐகாரம் நேமிநாத மொழியில் வருகின்றது; ஆனால் ஔகாரத்திற்கான சான்றேதும் இல்லை
vaippu (1.4) viḷaivu (77.3) vilai (81.4)

1.1.2.8 மகரக்குறுக்கம்

சொற்புணர்ச்சியில் நிலை மொழியீற்றில் வரும் மகரம் வரு மொழி முதலில் வகரம் வருங்கால் குறுகுமெனவும் (18) குறுகுங் கால் கால் மாத்திரை பெறுமெனவும் (5) நேமிநாதம் கூறுகின்றது. மகரக்குறுக்கத்திற்கான சான்றுகள் நேமிநாத மொழியில் காணப் படுகின்றன

naṇṇum vinaikkuṟippu nāṭṭu (71.4)

1.1.2.9 ஆய்தக்குறுக்கம்

ஆய்தம் குறுகுதலையும் குறுகுங்கால் கால் மாத்திரை பெறு தலையும் கூறும் நேமிநாதம் (5) அதன் வருகையினை வரை யறுக்கவில்லை.

2. ஒலியன்களின் வருதல்

2.1 முதனிலை (Initials)

2.1.1 உயிர்கள்

பன்னீருயிர்களும் சொற்களின் முதலில் வருதலை நேமிநாதம் (7) கூறுகின்றது; 'ஔ' ஒழிந்த பதினொன்றும் நேமிநாத மொழியில் வருகின்றன.

/அ-/	akalam	(83.1)	/ஆ-/	ākkam	(76.1)
/இ-/	itaḷ	(6.3)	/ஈ-/	īṉṟaṇimai	(84.1)
/உ-/	uṭal	(11.2)	/ஊ-/	ūrnta	(56.1)
/எ-/	eccam	(63.3)	/ஏ-/	ēval	(31.2)
/ஐ-/	aiyam	(32.1)	/ஒ-/	oli	(84.2)
/ஓ-/	ōṟār	(38.4)			

2.1.2 மெய்கள்

'க்', 'ச்', 'த்', 'ந்', 'ப்', 'ம்' என்னும் ஆறும் பன்னீருயிர்களோடும் சேர்ந்து சொற்களின் முதலில் வருதலை நேமிநாதம் (7) கூறுகின்றது. இவற்றுள் 'கே-',' கௌ-'; 'சூ-', 'சை-', 'சோ-', 'சௌ-'; 'தௌ-'; 'நு-', 'நை-'; 'நோ-', 'நௌ-'; 'பீ-', 'பௌ-'; 'மை-', 'மோ-' 'மௌ-' ஆகியன ஒழிந்த ஏனையவை நேமிநாத மொழியில் சொற்களின் முதலில் வருகின்றன.

/க-/	kaṟṟōr	(91.4)	/கா-/	kālam	(30.2)
/கி-/	kiḷamai	(44.2)	/கீ-/	kīḻ	(4.1)
/கு-/	kuḷavi	(33.1)	/கூ-/	kūntalāy	(51.4)
/கெ-/	keṭutal	(12.3)	/கை-/	kaikkoḷvar	(II.4)
/கொ/	kommai	(83.2)	/கோ-/	kōtu	(43.2)
/ச-/	canti	(12.4)	/சா-/	cāṉṟōr	(94.3)
/சி-/	ciṉai	(30.3)	/சீ-/	cīr	(22.2)
/சு-/	cummai	(81.1)	/செ-/	ceyyuḷ	(39.1)
/சே-/	cēṟal	(69.4)	/சொ-/	col	(3.4)

/த-/ tantai (59.1)	/தா-/ tāy (59.1)
/தி-/ tiṅkaḷ (33.2)	/தீ-/ tītu (57.2)
/து-/ tuṇivu (68.4)	/தூ-/ tūmoḻiyāy (12.3)
/தெ-/ terital (91.4)	/தே-/ tēṅkuḻalāy (65.2)
/தை-/ taiyalāy (42.2)	/தொ-/ tokai (26.2)
/தோ-/ tōṟṟam (82.3)	
/ந-/ naḷi (83.3)	/நா-/ nāḷi (19.1)
/நி-/ nilam (44.3)	/நீ-/ nīyir (59.3)
/நூ-/ nūlkaḷ (25.3)	/நெ-/ neñcu (6.2)
/நே-/ nērnta (11.1)	/நொ-/ noṭai (81.4)
/ப-/ pakuti (95.3)	/பா-/ pāṅku (3.2)
/பி-/ piṟappu (6.4)	/பு-/ purai (82.2)
/பூ-/ pū (I.1) /பெ-/	peṇ (36.1) /பே/ pēr (40.1)
/பை-/ paintoṭiyāy (94.2)	/பொ-/ poṉmai (81.3)
/போ-/ pōrvēṟkaṭ pētāy (25.2)	
/ம-/ makaṉ (59.2)	/மா-/ māṉviḻi (50.4)
/மி-/ mikuti (82.1)	/மீ-/ mīṭṭum (7.2)
/மு-/ muṉpu (21.2)	/மூ-/ mūkku (6.3)
/மெ-/ meṉmai (2.3)	/மே-/ mēlaiyōr (88.4)
/மொ-/ moḻi (34.3)	

"வவ்வரியின் எட்டெழுத்து-மீட்டு / ஞயவின்கண் மும்மூன்று நன்மொழிக்கு முன்" என நேமிநாதம் (7) கூறுகின்றது. அதனுரையாசிரியர் 'வ'-, 'வா'-, 'வி-; 'வீ'-, 'வெ'-, 'வே'-, வை-', 'வௌ'-; 'ஞா-', 'ஞெ-', 'ஞொ-,; 'யா'-, 'யூ-', 'யோ-' என்பன சொற்களின் முதலில் வருமெனக் கூறுகின்றார். 'வீ-', 'வௌ-'; 'ஞெ-', 'ஞொ-'; 'யூ-', 'யோ-' ஒழிந்த ஏனைய நேமிநாத மொழியில் சொற்களின் முதலில் வருகின்றன.

/வ-/ vacai (74.2)	/வா-/ vāṉ (II.1)
/வி-/ vilai (81.4)	/வெ-/ vemmai (83,1)
/வே-/ vēntu (33.1)	/வை-/ vaippu (1.4)
/ஞா-/ ñālam (8.3)	யா-/ yār (65.3)

2.2 ஈற்றுநிலை

2.2.1 உயிர்கள்

'உயிரின்கண் ஒன்பான்' சொற்களின் ஈற்றில் வருமென நேமிநாதம் (8) கூறுகின்றது. அதனுரையாசிரியர்–'அ', -'ஆ', –'இ', -'ஈ', -'உ', -'ஊ', –'ஏ',–'ஐ', -'ஓ' என்னும் உயிரொன்பதும் சொற்களின் ஈற்றில் வருதலைக் கூறுகின்றார். -'அ', –'ஆ', –'இ', –'ஈ', -'உ', –'ஊ' -'ஏ', –'ஐ' ஆகிய எட்டும் நேமிநாத மொழியில் சொற்களின் ஈற்றில் வருகின்றன.

/–அ/ vaikka (32.3)		–/ஆ/ viṉā (30.1)	
/-இ/ vali (83.4)		/-ஈ/ nī (23.2)	
/உ/ varaivu (82.2)		/-ஊ/ pū (I.1)	

/-ஏ/ aṭaivē = respectively (86.1)

/-ஐ/ vilai (81.4)

–'ஓ' என்பது கட்டுருபனில் ஈற்றில் வருகின்றது.

/-ஓ/ orō (orōviṭattu) (51.2)

2.2.2 மெய்கள்

"... மென்மை யின்மூன் / றயர்வில் இடையினங்கள் ஆறு - நயனுணர்ந்து / நன்மொழிகட் கீற்றெழுத்தாம் என்றுரைப்பர் ஞாலத்துச் / சொன்முடிவு கண்டோர் துணிந்து" என நேமிநாதம் (8) கூறுகின்றது. அதனுரையாசிரியர் -'ண்', -'ம்', -'ன்', -'ய்', –'ர்', -'ல்', -'வ்', -'ழ்', –'ள்' ஆகியனவற்றைக் கூறுகின்றார். இவையனைத்தும் நேமிநாத மொழியில் சொற்களின் ஈற்றில் வருகின்றன.

/-ண்/	āṇ (36.1)	/-ம்/	ñālam (8.3)
/-ன்/	iḷaiñaṉ (71.1)	/-ய்/	tāy (59.1)
/-ர்/	malar (25.1)	/-ல்/	mallal (83.3)
/-வ்/	av (32.1)	/-ழ்/	kīḻ (4.1)
/-ள்/	makkaḷ (56.3)		

2.3. 'ஐ', 'ஔ'

'ஐ' என்பது அய்' எனவும் 'ஔ' என்பது 'அவ்' எனவும் உறழ்ந்து வழங்குதலை நேமிநாதம் (9) கூறுகின்றது. இத்தகைய வடிவங்கள் நேமிநாத மொழியில் காணப்படவில்லை.

'ஔ' தனித்தும் மெய்களோடு சேர்ந்தும் சொற்களின் முதலில் வருதலை நேமிநாதம் கூறுகின்றது. ஆனால், இதற்கான சான்றேதும் நேமிநாத மொழியில் காணப்படவில்லை (1.1.1, 2.1.1.). 'ஔ' என்பது சொற்களில் வருதல் இலக்கிய வழக்கில் (தி. நடராசன், 1977:6,11) மிக அருகியே காணப்படுகின்றது. மேலும், இலக்கணநூற்கள் இவ்வெழுத்து 'அவ்' என உறழ்ந்து வருதலையும் கூறுகின்றன. எனவே, 'ஔ' என்பது தமிழில் தனி ஒலியன் என்னும் நிலையினைத் தெளிவாகப் பெறவில்லை எனலாம். ஐ, ஔ என்னும் இரண்டனையும் கூட்டொலிகளாகத் திராவிடமொழியறிஞர் அனைவரும் கருதுவர். தொல்காப்பியம் (54-56) இவற்றை ஈருயிரிணைகளாகவும் (அ+இ>ஐ; அ+உ>ஔ) உயிரும் அரையுயிரும் இணைந்த வடிவமாகவும் (அ+ய்>ஐ) கருதுகின்றது. இவ்விணை வடிவங்கள் வழக்கில் ஒலி குறைந்த நிலையில் (அ+இ, அ+ய்; அ+உ, அ+வ் என்பவற்றைவிட) விரைவு, முயற்சி எளிமை காரணமாக வழங்கியமைபற்றி இவற்றையும் தனி நெடிலுயிர்களெனத் தமிழிலக்கணத்தார் கொண்டிருக்கலாம். இவை வழக்கில் குறிலுக்கும் நெடிலுக்கும் இடைப்பட்ட ஒலித்திறனைக் கொண்டுள்ளன. இலக்கண நூற்கள் ஐ ஔ என்பவற்றுக்கும் ஏனைய நெடில்களைப் போன்று இரு மாத்திரைகளை வரையறுத்துக் கூறியபோதிலும் மொழிவழக்கில் வருகையில் ஒன்றரைமாத்திரை அல்லது ஒருமாத்திரை பெறுதலையே கூறுகின்றன.

குறிப்பு

1. ஆய்தத்தினை நடுவில் வைத்து எண்ணும் நூற்பா ஒன்றனையே உரையாசிரியர் (1) குறிப்பிடுகின்றார்.

   "என்னை?

   அகர முதலாக ஆய்தம் இடையா
   னகரமீ றாகுமுதல் வைப்பு
   என்றாராலின்."

துணைநூல்கள்

கோவிந்தராச முதலியார், கா.ர. (பதி), 1964, நேமிநாதம், கழகவெளியீடு, சென்னை.

நச்சினார்க்கினியர், 1965, தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்), கழகவெளியீடு, சென்னை.

சேனாவரையர், 1966, தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) கழகவெளியீடு, சென்னை.

சிவஞானமுனிவர், 1967, நன்னூல் விருத்தியுரை, கழக வெளியீடு

சேயொளி (பதி), 1973, இலக்கண விளக்கம் (எழுத்தும் சொல்லும்), கழகவெளியீடு, சென்னை.

சுப்பிரமணியன், ச.வே, 1967, இலக்கணத்தொகை -எழுத்து நாகர்கோவில்.

சண்முகம், செ.வை., 1980, எழுத்திலக்கணக் கோட்பாடு. அண்ணாமலைநகர்.

Subrahmanya Sastri, P.S., 1934, *History of Grammatical Theories in Tamil and Their Relation to the Grammatical Literature in Sanskrit* JOR, Madras

Vijaya VenuGopal, G, 1968 *A modern evaluation of Nannūl* (eluttu), Annamalai University.

Natarajan, T, 1977, *The Language of Sangam Literature and Tolkappiyam*, Madurai.

தமிழில் துணைவினைகள்

வீ. ரேணுகாதேவி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

1.0 தமிழ்மொழியின்கண் காணப்படும் துணைவினைகளையும் அவை உணர்த்தும் பொருள்களையும் கண்டறிந்து அவற்றை அவை உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் பாகுபாடு செய்து துணைவினையின் கோட்பாட்டினை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1.1 துணை.வினைகள்

துணைவினைகள் என்பன தம் அகராதிப் பொருளை இழந்து இலக்கணப்பொருளை உணர்த்தும் வினை வடிவங்களாகும்.

கண்ணன் பட்டம் விட்டான் – முதல் வினை

இராமன் கப்பல் செய்து விட்டான் – துணை வினை

பெரும்பான்மை மொழிகளில் துணைவினைகள் காணப்பெறி

னும் அவை ஒவ்வொரு மொழிக்கேற்ப சில தனிப் பண்புகளைக் கொண்டுள்ளன.

தமிழில் துணைவினைகள் எப்போதும் முதல்வினையைப் பொருள்நிலையிலும் வடிவநிலையிலும் சார்ந்து முதல்வினைக்குப் பின்னிடத்தனவாக அமைகின்றன.

கீதா சிரித்து விட்டாள்

ஈண்டு 'விட்டாள்' என்னும் துணைவினைக்குத் தனியாக அகராதிப்பொருள் இல்லை. முதல் வினையின் இலக்கணப் பொருளையே இது சுட்டும் வகையில் அமைந்துள்ளது. வடிவ நிலையில் 'சிரித்து' எனவும் 'விட்டாள்' எனவும் பிரித்தால் கூட்டு வினை உணர்த்தும் பொருளைப் பெறமுடியாது. எனவே துணை வினை பொருள்நிலையிலும் வடிவநிலையிலும் முதல்வினையைச் சார்ந்து வரும் என்பது தெளிவாகின்றது.

இலக்கண ஆசிரியர்கள் துணைவினைகளைத் தத்தம் மொழியில் கையாண்டிருந்த போதிலும் துணைவினை எனும் பாகுபாட்டினைச் சுட்டவில்லை.

ஆயினும் 'இது செயல் வேண்டும்' (தொ. சொ. 243) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் 'வேண்டும்' என்னும் வடிவம் இரு வயின் நிலையும் பொருட்டாகும் பான்மையினைத் துணைவினையைப் பற்றிய செய்தியாகக் கருதும் நிலையும் உண்டு. (S. Agesthialingom, 1974: 331 – 356).

தொல்காப்பியர் தம் மொழியில் 'ஆகும்', 'இரு', 'கூட', 'கொள்', 'தரும்', 'படு' 'பெறு', 'வேண்டும்' போன்ற துணை வினைகளைப் பயன்படுத்தியிருந்த போதும் துணைவினை என்னும் பாகுபாட்டினைச் சுட்டவில்லை.

தொல்காப்பிய நூற்பாக்களில் சுட்டப்பெறும் சில அசைநிலை வடிவங்களைப் பொருள் நிலையிலும் வடிவ நிலையிலும் துணை வினைகளின் திரிந்த வடிவங்களாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். (தெ. பொ. மீனாட்சி சுந்தரன், 1975:77; மோ. இசரயேல், 1976: 91-92)

ஜி. யு. போப் (1911:68), கால்டுவெல் (1956:456,447, 449), ஆர்டன் (1969:240) போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் தமிழ்மொழியில் காணப்பெறும் துணைவினை வடிவங்கள் சில வற்றையும் அவைதம் பொருள் வழக்காறுகளையும் சுட்டியுள்ளனர்.

இக்கால மொழியியல் அறிஞர்கள் தெ. பொ. மீனாட்சி சுந்தரன் (1975:77), மோ. இசரயேல் (1976:91-98), ச. அகத்தியலிங்கம் (1980:1-32), பொன். கோதண்டராமன் (1980:59-78), இரா. கோதண்டராமன் (1980:97-108), க.ம. இருளப்பன் (1980:167-186), க. இராமசாமி (1980:187-200), இரா. சீனிவாசன் (1980:231-260), சுப. திண்ணப்பன் (1989) 45-58), பி. புஷ்பவல்லி (1980:109-118), கோ. விசயவேணு கோபால் (1980:99-108), இ. அண்ணாமலை (1982:22-169) ஆகியோர் தமிழிலுள்ள துணைவினைகளையும், துணைவினைகளின் வரலாற்றினையும் தனிநிலைகளில் ஆராய்ந்துள்ளனர்.

இக்கட்டுரை தமிழ்மொழியின்கண் காணப்பெறும் அனைத்துத் துணைவினைகளையும் ஒருமித்துக் காணும் ஒரு சிறு முயற்சியாக அமைந்துள்ளது.

1. 2 துணைவினையின் இயல்புகள்

தமிழ்மொழியின்கண் 'அடி', 'அருள்', 'ஆம்', 'ஆச்சு' 'இயலும்', 'இரு', 'இல்', 'உள்', 'எடு', 'ஒழி', 'காட்டு', 'கூடும்', 'கொண்டிரு', 'கொள்', 'செய்', 'தகும்', 'தள்ளு', 'தெரி' 'தொலை', 'நேர்', 'படு', 'பண்ணு', 'பார்', 'பெறு', 'போ' 'போடு', 'மாட்டு', 'முடியும்', 'வரு', 'விடு', 'வேண்டும்', 'வை' என்னும் வடிவங்கள் துணைவினைகளாகச் செயல்படுகின்றன

துணைவினைகள் அனைத்தும், முதல்வினையைப் பொருள் நிலையிலும் வடிவநிலையிலும் சார்ந்து முதல்வினையின் பின்னிடத் தனவாக அமைகின்றன.

இறைவன் செய்ய வைத்தான்
நான் பயந்து போனேன்

பெரும்பான்மையான துணைவினைகள் பால், எண், இடம், காலம், எதிர்மறை உருபுகளை ஏற்றுவருதல் உண்டு.

முருகன் செய்து காட்டினான்

காட்டினான் – காட்டு + இன் + ஆ + ன்
காட்டு - அடி
இன் - இறந்தகாலம்
ஆ – படர்க்கை
ன் - ஆண்பால்-ஒருமை

இன்று மழை வரக்கூடாது

கூடாது – கூடு + ஆ + து
- கூடு – அடி
- ஆ – எதிர்மறை
து - அஃறிணை–ஒருமை

துணைவினைகளால் சாரப்பெறும் முதல்வினைகள் வடிவ நிலையில் அடிச்சொல்லாகவோ, செயவெனெச்சமாகவோ, செய்து வாய்பாட்டு வினையெச்சமாகவோ, வினைமுற்றாகவோ காணப் படுகின்றன; இன்னமும் முதல்வினையடியிலிருந்து ஆக்கம் பெற்ற தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றைத் தொடர்ந்தும் துணைவினைகள் வரப்பெறுகின்றன.

புறா விடு பட்டது
– அடிச்சொல்

இராமன் சொல்ல வைத்தான்
- செயவெனெச்சம்

கண்ணன் வந்து இருக்கிறான்
– செய்து வாய்பாட்டு வினையெச்சம்.

கலா வந்தாள் இல்லை
– வினைமுற்று

நீ வரலாம்
- தொழிற்பெயர்

இராமன்தான் பார்த்தவனாம்
-வினையாலணையும் பெயர்

துணைவினைகள் தமிழ்மொழியில் செயவெனெச்ச வடிவிலும் செய்து வாய்பாட்டு வினையெச்ச வடிவிலும், நிபந்தனை வினை யெச்சவடிவிலும், பெயரெச்சவடிவிலும், முற்று வடிவிலும், தொழிற்பெயர் வடிவிலும், வினையாலணையும் பெயர் வடிவிலும் அமையப் பெற்றுள்ளன.

நீ வந்து இருக்க வேண்டாம்
- செயவெனெச்சம்

அவன் இழுத்துக்கொண்டு வந்தான்
- செய்து வாய்பாட்டு வினையெச்சம்

கீதா பாடிப் பார்த்தால் தெரியும்
- நிபந்தனை வினையெச்சம்

கடைக்கு வந்திருந்த ராமன்
- பெயரெச்சம்

சீதா பார்த்து விட்டாள்
- முற்று

உனக்குச் சொல்லத் தெரிதல் வேண்டும்
- தொழிற்பெயர்

நான் எழுதிக்கொண்டது என்னவென்றால்
- வினையாலணையும்பெயர்

துணைவினைகள் முற்றாகச் செயல்படாத நிலையில் இவை களைத் தொடர்ந்து வேறு வடிவங்கள் வரப்பெறுதல் உண்டு.

துணைவினைகள் வினையெச்சமாகச் செயல்படும் நிலையிலும், வினையடியிலிருந்து தோற்றம் பெற்ற தொழிற்பெயராகவோ அன்றி வினையாலணையும்பெயராகவோ செயல்படும் நிலை யிலும் இவற்றைத் தொடர்ந்து வினைமுற்றுகள் அண்மை உறுப்புக் களாக அமைகின்றன. இவ்வினைமுற்றுகள் துணைவினை அல்லது முதல்வினை வகையினவாக அமைகின்றன.

நீ செய்து காட்ட வேண்டும்
- துணைவினை

இராமன் பார்த்துக் கொண்டு வந்தான்
- முதல்வினை

துணைவினைகள் பெயரெச்சமாக அமையும் நிலையில் இவற்றைத் தொடர்ந்து பெயர்கள் அண்மை உறுப்புக்களாக அமைந்துள்ளன.

அன்புடன் பழகிவரும் தங்கை

சில துணைவினைகள் கூட்டு வாக்கியங்கள் அமையும் நிலையில் வாக்கியத்தினின்றும் நீக்கம் பெறுகின்றன.

நான் பார்த்து இருக்கிறேன் + நான் கேட்டு இருக்கிறேன் >
நான் பார்த்தும் கேட்டும் இருக்கிறேன்.

இங்கு 'இருக்கிறேன்' என்னும் இரு துணைவினைகளில் ஒன்று கூட்டு வாக்கியம் அமையும் நிலையில் நீக்கம் பெற்று விட்டது.

சில துணைவினைகள் வெவ்வேறு பேச்சு வழக்கில் வெவ்வேறு வடிவங்களைத் திரிபு நிலையால் பெற்றுள்ளன.

நீ வரவேண்டும்
நீ வரணும் (வேண்டும் > ணும்)
இராமன் பார்த்து விட்டான்
இராமன் பார்த்துட்டான் (விடு > ட்)
அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்
அவள் சொல்வதைக் கேட்டுகிட்டு இருக்கிறோம் (கொண்டு > கிட்டு)

சில துணைவினைகள் வேறுபட்ட இலக்கணப் பொருளை உணர்த்துவதன் பொருட்டு அடுக்கி வருகின்றன.

லதா வருகிறாள்
– நிகழ்கால செயல்முற்று (Present perfect)
சீதை வந்துகொண்டிருக்கின்றாள்
– நிகழ்கால செயல்தொடர் முற்று (Present progressive)
நீ சிரித்துக் கொண்டிருக்க வேண்டாம்
– எதிர்மறை நிகழ்கால செயல்தொடர்முற்று (Negative present progressive)

முதல்வினைக்கும் துணைவினைக்கும் இடையே அகராதிப் பொருள் உடைய சொற்கள் வர இயலாது எனவும் (S. Agesthia lingom 1980; 1-32 P. Kothandaraman 1980:59-78) அவ்வாறு வருங்கால் வாக்கியம் இலக்கணப் பிழையுடையதாக மாறிவிடும் எனவும் அறிஞர் கூறுவர்.

ஆசிரியர் படித்துவிட்டார்
*ஆசிரியர் படித்து இப்போது விட்டார்

எனினும் சில துணைவினைகளுக்கும் முதல்வினைகளுக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதனைத் தமிழ்மொழியின்கண் காணமுடிகின்றது.

உன்னால் படிக்க முடியாது
உன்னால் படிக்க இப்போது முடியாது
உன்னால் செய்ய இயலும்
உன்னால் செய்ய இன்று இயலும்

1.3 துணைவினை வகைகள்

தமிழின்கண் காணப்பெறும் துணைவினைகள் முப்பத்திரண்டனையும் மூன்று வகையினவாகப் பாகுபாடு செய்யமுடியும். அவையாவன-

1. வினைமைத் துணைவினைகள் (Aspectual Auxiliary verbs)
2. வினைப்பொருட் துணைவினைகள் (Model Auxiliary verbs)
3. வினைச்செய்கைத் துணைவினைகள் (Voice Auxiliary verbs)

1. 3. 1 வினைமைத் துணைவினைகள்

வினையின் வேறுபட்ட செய்கைகளைக் குறிக்கும் துணைவினைகள் வினைமைத் துணைவினைகள் எனப்படும்.

தமிழ்மொழியில் 'அடி', 'அருள்' 'ஆச்சு', 'இரு', 'உள்', 'எடு', 'ஒழி', 'காட்டு', 'கொண்டிரு', 'தள்ளு', 'தொலை', 'நேர்', 'பார்', 'போ', போடு', 'வரு', 'விடு' என்பன வினைமைத் துணைவினைகளாகச் செயல்படுகின்றன.

வினைமைத் துணைவினைகளில் 'அடி', 'ஆச்சு' தவிர்ந்த ஏனைய துணைவினைகள் அனைத்தும் காலம், எண், இடம், பால் காட்டும் உருபுகளை ஏற்று வருகின்றன.

இத் துணைவினைகள் துரிதநிலை (speedness), மரியாதை (reverential), முழுமை (completive), செயல்முற்று (perfect), உச்சநிலை (excess) நிந்தனை (contemptive), செய்துகாட்டுதல் (demonstrative) செயல்தொடர் (progressive), பொறுமையின்மை (impatience), நீக்கம் (riddance), தற்செயல் (accidental), முயற்சி (trial), திடம் (defenitive), வழக்கம் (habitual), உறுதிப்பாடு (confirmation) ஆகிய வினைமைகளைச் சுட்டுகின்றன.

முத்து விழுந்தடிச்சு ஓடினான்
-துரிதநிலை

அமைச்சர் வந்தருளினார்
-மரியாதை

நான் சாப்பிட்டாச்சு
ராஜா செத்துப்போனான்
-முழுமை

கண்ணன் வந்திருந்தான்
ராமன் வந்துள்ளான்
-செயல்முற்று

குமார் உடம்பைப் பிழிந்தெடுத்தான்
-உச்சநிலை

ராதை நடந்து காட்டினாள்
-செய்துகாட்டுதல்

மாலா வந்து கொண்டிருக்கிறாள்
-செயல்தொடர்

அண்ணன் அடிச்சித் தள்ளிட்டான்
பொறுமையின்மை

இராமன் வீட்டை விட்டுப் போய்த் தொலைந்தான்
-நீக்கம்
சேகரைப் பார்க்க நேர்ந்தது
-தற்செயல்
உமா எடுத்துப் பார்த்தாள்
-முயற்சி
குமரன் உழுது பாட்டான்
-திடம்
நாங்கள் கேட்டு வருகிறோம்
-வழக்கம்
தம்பி பார்த்து விட்டான்
-உறுதிப்பாடு.

1. 3. 2 வினைப்பொருட் துணைவினைகள்

பேசுபவரின் மனநிலையின் அடிப்படையில் வினையின் வெவ்வேறு பொருண்மைகளைச் சுட்டும் துணைவினைகள் வினைப்பொருட் துணைவினைகள் எனப்படும்.

தமிழில் 'ஆம்', 'இயலும்', 'இல்', 'கூடும்', 'தகும்', 'தெரியும்', 'மாட்டு', 'முடியும்', 'வேண்டும்' என்பன வினைப் பொருட் துணைவினைகளாகச் செயல்படுகின்றன.

வினைப்பொருட் துணைவினைகளில் 'மாட்டு', 'முடியும்' தவிர்ந்த ஏனைய வினைப்பொருட் துணைவினைகள் அனைத்தும் காலம், எண், இடம், பால் காட்டும் உருபுகளை ஏற்பதில்லை.

இவை அமைதி (permission), சாத்தியம் (possibility), எதிர் மறை (negative), வாய்ப்பு (probability). பொருத்தம் (appropri ation), உண்மைநிலை (fact), வேண்டுதல் (obligation) ஆகிய வினைப்பொருட்களைச் சுட்டப் பயன்படுகின்றன.

பாமா வரலாம்
-அனுமதி
என்னால் சாப்பிட இயலும்
என்னால் பார்க்க முடியும்
-சாத்தியம்
அவன் செய்யவில்லை
இரவி பார்க்க மாட்டான்
-எதிர்மறை

இன்று மழை வரக்கூடும்

- வாய்ப்பு

இது சொல்லத் தகும்

- பொருத்தம்

எனக்கு ஆடத் தெரியும்

- உண்மைநிலை

நீ பாட வேண்டும்

- வேண்டுதல்

வினைப்பொருட் துணைவினைகளுள் 'மாட்டு' என்னும் துணைவினை தவிர்ந்த ஏனைய துணைவினைகளுக்கும் அவை வரப்பெறும் வாக்கியத்தின் எழுவாய்களுக்குமிடையே எவ்வித இயைபும் காணப்பெறுவதில்லை.

நீ வரவேண்டும்

நீங்கள் வரவேண்டும்

வினைப்பொருட் துணைவினைகள் பெரும்பான்மையும் கால இடைநிலைகளை ஏற்றுவருவதில்லையெனினும் எதிர்மறையினை ஏற்றுவருதல் உண்டு.

என்னால் பாட இயலும்

என்னால் பாட இயலாது

நான் பார்க்க முடியும்

நான் பார்க்க முடியாது

வினைப்பொருட் துணைவினைகள் பெரும்பாலும் செயவெனெச்சம் அல்லது தொழிற்பெயரைத் தொடர்ந்து வரப்பெறுகின்றன.

நான் பேச வேண்டும்

- செயவெனெச்சம்

நீ வரலாம்

- தொழிற்பெயர்

வினைப்பொருட் துணைவினைகளை சில இலக்கண மொழியியல் அறிஞர்கள் குறிப்பு வினைகளாகக் கருதுகின்றனர்.

1.3.3 வினைச்செய்கைத் துணைவினைகள்

வினையில வெவ்வேறு செயல்வகைகளைப் புலப்படுத்தும் துணைவினைகள் வினைச் செய்கைத் துணைவினைகள் எனப்படும்.

தமிழ்மொழியில் 'அடி', 'செய்', 'கொள்', 'படு', 'பண்ணு', 'பெறு', 'வை' என்பன வினைச்செய்கைத் துணைவினைகளாகச் செயல்படுகின்றன.

வினைச்செய்கைத் துணைவினைகள் அனைத்தும் எண், இடம், பால், காலம் காட்டும் உருபுகளை ஏற்று வருகின்றன.

இவ்வினைச்செய்கைத் துணைவினைகளில் 'படு', 'பெறு', என்பன செயப்பாட்டு வினைச்செய்கைத் (passive voice) துணைவினைகளாகவும் 'அடி', 'செய்' 'பண்ணு' 'வை' என்பன இயக்குவினைச் வினைச்செய்கைத் (causative voice) துணைவினைகளாகவும் 'கொள்' என்பது பிரதிபலிப்பு வினைச்செய்கைத் (reflexive voice) துணைவினையாகவும் செயல்படுகின்றன.

கண்ணன் கொலை செய்யப்படுவான்

பாலு கடிதம் வரப்பெற்றான்

- செயப்பாட்டுத் துணைவினை

ராதையை கண்ணன் இளைப்பாற வைத்தான்

பாடத்தை ஆசிரியர் மறக்கடித்தார்

தம்பி வேடிக்கை பார்க்கச் செய்தான்

கீதா கோயிலிலிருந்து பிரசாதம் வரப் பண்ணினாள்

- இயக்குவினைத் துணைவினைகள்

அண்ணனும் தங்கையும் அடித்துக்கொண்டார்கள்

- பிரதிபலிப்புத் துணைவினை

1.4 துணைவினைகள் அடுக்கி வருதல்

தமிழ்மொழியில் இரண்டு, மூன்று அல்லது நான்கு துணை வினைகள் அடுக்கி வருவதைக் காணமுடிகின்றது.

1.4.1 இரண்டு துணைவினைகள் அடுக்கி வருதல்

தமிழ்மொழியில் இரு துணைவினைகள் அடுக்கிவரும் பான்மையில் ஒரு வினைமைத் துணைவினையைத் தொடர்ந்து இன்னொரு வினைமைத் துணைவினை அல்லது ஒரு வினைப்பொருட் துணைவினை அல்லது ஒரு வினைச்செய்கைத் துணைவினை வரப்பெறுகின்றது.

சேகர் வந்து கொண்டிருக்கிறான்

- வினைமை + வினைமை

பழத்தைப் பறித்துப் பார்க்க வேண்டும்

- வினைமை + வினைப்பொருண்மை

அவன் சாமியை வந்தருள வைத்தான்

- வினைமை + வினைச்செய்கை

வினைப்பொருட் துணைவினையைத் தொடர்ந்து எப்போதும் இன்னொரு வினைப் பொருட் துணைவினையே வருகின்றது.

நான் வரவேண்டியது இலலை

ஒரு வினைச்செய்கைத் துணைவினையைத் தொடர்ந்து மற்றொரு வினைச்செய்கைத் துணைவினை அல்லது வினைமைத் துணைவினை அல்லது வினைப்பொருட் துணைவினை வருகின்றது.

பாலா சட்டை போட்டுக் கொள்ளச் செய்தாள்

- வினைச்செய்கை + வினைச்செய்கை

பீடா போட்டுக் கொள்ள நேர்ந்தது

- வினைச்செய்கை + வினைமை

அவன் கொலை செய்யப்படவேண்டும்

- வினைச்செய்கை + வினைப்பொருண்மை

1.4.2 மூன்று துணைவினைகள் அடுக்கி வருதல்

ஒரு வாக்கியத்தில் மூன்று துணைவினைகள் அடுக்கி வருதலும் உண்டு. மூன்று துணைவினைகள் அடுக்கி வரும்பொழுது இறுதியில் வரும் துணைவினை எப்போதும் வினைப் பொருட் துணைவினையாக அமைந்துள்ளது.

நீ சட்டை போட்டுக் கொள்ளச் செய்யவேண்டும்
– வினைச்செய்கை + வினைச்செய்கை + வினைப் பொருண்மை

மாலதி பீடா போட்டுக் கொள்ள நேரவில்லை
– வினைச்செய்கை + வினைமை + வினைப்பொருண்மை

சாப்பாட்டுக்கு இடம் போட்டுவைக்க வேண்டியதில்லை
– வினைச்செய்கை + வினைப்பொருண்மை + வினைப் பொருண்மை

ராஜா இப்போது பார்க்க நேர்ந்து இருக்க வேண்டும்
– வினைமை + வினைமை + வினைப்பொருண்மை

அதை நீ செய்து பார்க்க வேண்டியது இல்லை
– வினைமை + வினைப்பொருண்மை + வினைப் பொருண்மை

1.4.3 நான்கு துணைவினைகள் அடுக்கி வருதல்

மிக அரிதாக ஒரு வாக்கியத்தில் நான்கு துணைவினைகள் அடுக்கி வருதலைக் காணமுடிகின்றது.

நீ பார்க்க நேர்ந்து இருக்க வேண்டியது இல்லை
- வினைமை + வினைமை + வினைப்பொருண்மை + வினைப்பொருண்மை

நீ சட்டை போட்டுக் கொள்ளச் செய்ய வேண்டியதில்லை
- வினைச்செய்கை + வினைச்செய்கை + வினைப் பொருண்மை + வினைப்பொருண்மை

1.5 முடிவு

மேற்கூறப்பெற்ற செய்திகளினின்றும் சிலவற்றை முடிபுகளாகக் கொடுக்கப் படுகின்றன.

தம் அகராதிப் பொருளை இழந்து இலக்கணப்பொருளை உணர்த்தும் வினைவடிவங்களே துணைவினைகளாகும்.

இத்துணைவினைகள் எப்போதும் முதல் வினைகளுக்குப் பின்னிடத்தனவாக அமைந்துள்ளன.

துணைவினைகள் எப்போதும் முதல்வினையை வடிவநிலையிலும் பொருள் நிலையிலும் சார்ந்து அமைகின்றன. பெரும்பான்மையான துணைவினைகளுக்கும் முதல்வினைகளுக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதில்லை. எனினும் இவை முதல்வினைகளுக்கும் சில வினைப்பொருள் துணைவினைகளுக்குமிடையே வரப்பெறுகின்றன.

துணைவினைகளை அவை உணர்த்தும் இலக்கணப் பொருட்களின் அடிப்படையில 1. வினைமைத் துணைவினைகள், 2. வினைப்பொருட் துணைவினைகள், 3. வினைச்செய்கைத் துணைவினைகள் என மூன்று வகையினவாகப் பாகுபாடு செய்யலாம்.

துணைவினைகளில் வினைமைத் துணைவினைகள் துரிதநிலை, மரியாதை, முழுமை, செயல்முற்று, உச்சநிலை, நிந்தனை, செய்துகாட்டுதல், செயல்தொடர், பொறுமையின்மை, நீக்கம், தற்செயல், முயற்சி, திடம், வழக்கம், உறுதிப்பாடு என்னும் வினைமை வகைகளையும், வினைப்பொருட் துணைவினைகள் அனுமதி, சேவை, எதிர்மறை, சாத்தியம், வாய்ப்பு, பொருத்தம், வேண்டுதல், விருப்பு என்னும் வினைப்பொருட்களையும், வினைச்செய்கைத் துணைவினைகள் செயப்பாட்டு வினைச்செய்கை, இயக்குவினை வினைச்செய்கை, பிரதிபலிப்பு வினைச்செய்கை என்னும் வினைச்செயல்வகைப் பொருட்களையும் சுட்டுகின்றன.

துணைவினையின் முன்னிடத்தனவாக அமையும் முதல் வினைகள் வடிவநிலையில் அடிச்சொல்லாகவோ, செயவெனெச்சமாகவோ, செய்துவாய்பாட்டு வினையெச்சமாகவோ, வினைமுற்றாகவோ, தொழிற்பெயராகவோ, வினையாலணையும் பெயராகவோ காணப்படுகின்றன.

முதல்வினைக்குப் பின்னிடத்தனவாக அமையும் துணைவினைகள் செயவெனெச்ச வடிவிலும், செய்துவாய்பாட்டு வினையெச்ச வடிவிலும், நிபந்தனை வினையெச்ச வடிவிலும், பெயரெச்ச வடிவிலும், முற்று வடிவிலும், தொழிற்பெயர் வடிவிலும், வினையாலணையும் பெயர் வடிவிலும் அமையப் பெற்றுள்ளன.

துணைவினைகள் வினையெச்சமாகச் செயல்படும் நிலையில் அவற்றைத் தொடர்ந்து வினைமுற்றுகள் அண்மைஉறுப்புகளாக அமைகின்றன. துணைவினைகள் பெயரெச்சமாக அமையும் நிலையில் அவற்றைத் தொடர்ந்து பெயர்கள் அண்மைஉறுப்புகளாக அமைந்துள்ளன.

இரண்டு, மூன்று அல்லது நான்கு துணைவினைகள் அடுக்கி வருதலையும் தமிழ் மொழியின்கண் காணமுடிகின்றது.

துணைவினைகளில் காணப்பெறும் சில பிரச்சினைகளும் இவண் முடிவுகளாகத் தரப்படுகின்றன.

தமிழ்மொழியின்கண் காணப்பெறும் வினைப்பொருட் துணைவினைகள் பெரும்பான்மையும் முதல்வினைகளாகச் செயல்படும் பொழுதும் துணைவினைகளாகச் செயல்படும்பொழுதும் அவற்றிடையே பொருள்நிலையில் எவ்வித வேறுபாடும் காணப்பெறவில்லை.

இன்று வகுப்பு இல்லை

— முதல்வினை

நான் பார்க்கவில்லை

— துணைவினை

இன்று வேலை முடியும்

— முதல்வினை

நாளை பார்க்க முடியும்
— துணைவினை

எனக்குப் பணம் வேண்டும்
— முதல்வினை

நீ வரவேண்டும்
— துணைவினை

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் 'இல்லை' என்னும் வடிவம் எதிர்மறைப் பொருளையும் 'முடியும்' என்னும் வடிவம் வாய்ப்புப் பொருளையும், 'வேண்டும்' என்னும் வடிவம் வேண்டுதல் அல்லது விருப்பப் பொருளையும் குறிக்கின்றன. பொருள் நிலையில் இவை முதல்வினைகளாகவும் துணைவினைகளாகவும் செயல்படுங்கால் எவ்வித வேறுபாடும் காணப்படவில்லை.

ஈண்டுக் கொடுக்கப்பெற்ற சான்றுகளினின்றும் இவ்வினைகள் முதல்வினைகளிலிருந்து வேறுபட்டவைகளாக அமையவில்லை என்பது தெரிய வருகின்றது.

தமிழில் முதல்வினைக்கும் 'ஆம், 'மாட்டு', 'கூடும்', 'தகும்' என்னும் வினைப்பொருட் துணைவினைகளைத் தவிர்ந்த ஏனைய வினைப்பொருட் துணைவினைகளுக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதனைக் காணமுடிகின்றது.

என்னால் பாட இப்போது முடியாது
உன்னால் பார்க்க இப்போது இயலும்
ராமனால் வர இன்று இயலும்

இவ்வாறு துணைவினைகளுக்குரிய அடிப்படைப் பண்புகளினின்றும் முரண்பட்டு வரும் இவ்வினைகளைத் துணைவினைகள் என்று கொள்ளவியலாது.

துணைவினைகள் என்பன தத்தம் பொருளிலிருந்து வேறுபட்டு இலக்கணப்பொருளை உணர்த்தும் முதல் வினைகளாகும். இந்நிலையில் தமிழில் 'கொண்டு' 'இருந்து' என்னும் சொல்லுருபுகள் முதல்வினைகளாகச் செயல்படும் பொழுது

குறிக்கும் பொருளிலிருந்து வேறுபட்டு, வேற்றுமைப் பொரு ளெனும் இலக்கணப் பொருளைச் சுட்டுவதற்குப் பயன் படுத்தப் பட்டுள்ளன.

கத்தி கொண்டு வெட்டினான்

வீட்டிலிருந்து வந்தான்

இவ்வாறு அகராதிப் பொருளை இழந்து இலக்கணப் பொருளைச் சுட்டும் வடிவங்களையும் துணைவினைகள் என்று ஏன் கருதுதல் கூடாது?

இவ்வடிவங்கள் பெயர்களைத் தொடர்ந்து வருவதால் இவற்றைத் துணைவினைகளாக அறிஞர்கள் கருதுவதில்லை. ஆயினும் இவை துணைவினையின் அடிப்படைப் பண்பினை பெற்று வருவதால் துணைவினைகள் என்று கொள்வதே சிறப் புடைத்து. இது மேலும் ஆராய்தற்குரியது.

துணை நூல்கள்

Agesthialingom, S. 1974 "A Note on itu ceyal vēṇṭum" *Seminar an Grammatical Thories in Tamil*, Anna malai University, Annamalainagar.

Agesthialingom, S. & Srinivasa Varma, G. (Edrs) 1980 *Auxiliaries in Dravidian*, Annamalai University, Annamalainagar.

Andronov, N. 1969 *A Standard Grammar af Modern and Classical Tamil*, New Century Book House Ltd., Madras.

Annamalai,E. 1982 "Dynamics of Verbal Extension in Tamil" *IJDL*, Vol.11:1, pp.22-169.

Arden, A.N. 1942 *A Progressive Grammar of the Tamil Language*, Christian Literature Society, Madras.

Caldwell, 1959 *A Comparative Grammar of the Dravidian Language*, Reprinted by the University of Madras, Madras.

Israel, M. 1976 *Ilakkana Āyvu - Vinaiccol*, *Cintāmaṇi* Veliyīṭu, Madurai.

Joseph, N. 1981 "Perfect Aspect in Tamil" *Āyvukkōvai*, 13:2, pp. 339-342.

Meenakshi, K. 1978 "Auxiliary Verbs in Tamil and Marathi", *Āyvukkōvai* 10:2, pp.283-284.

MeenakshiSundaran, T. P. 1975 *History of Tamil Language*, Deccan College, Poona.

Pope, G.U. 1911 *A Hand Book of the Ordinary Dialect of the Tamil Language*, Oxford University Press, London.

Pushpavalli, K. 1976 "Tamiḻil tuṇai Viṉaikaḷ", *Āyvukkovai*, 8:2, pp.720-725.

Srinivasan, R, 1977 "Auxiliary Verbs in Sangam Literature", *Āyvukkovai*, 9:2. pp 136-141.

Tolkappiyar, 1981 *Tolkāppiyam - Eḻuttatikāram, Iḷampūraṇar Urai*, Kaḻakaveḷiyīṭu, Madras.

———1980 Tolk*āppiyam - collatikāram*, *Cēṉāvaraiyar urai*, Kalaka veḷiyīṭu, Madras.

———1977 *Tolkāppiyam - Poruḷatikāram Iḷampūraṇar urai*, Kaḻaka veḷiyīṭu, Madras.

மொழியியல் 7.3 & 4 (1984)

சமுதாய வட்டார தமிழ்க் கிளைமொழிகள் ஆய்வின் அணுகுமுறைகளும் பிரச்சனைகளும்

க. மகாலிங்கம்
உசுமானியாப்பல்கலைக்கழகம்

1. அறிமுகம்

ஆரம்ப காலங்களில் மனிதன் ஓரளவிற்கு நாகரீகம் அடைந்த நிலையில் கூட்டமாகவும், குழுக்களாகவும் சேர்ந்து வாழத் தலைப்பட்டு தங்களுடைய தேவைகளை எடுத்துரைக்க மொழியைப் பயன்படுத்தினான். அவர்களே நாளாவட்டத்தில் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து தங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான சூழலில், வசதியான இடங்களில் வாழத் தலைப்பட்டனர். இப்படி இவர்கள் அங்கங்கே தங்கி தனித் தனியாக வாழும்போது மலைகளாலும், ஆறுகளாலும், காடுகளாலும் பிரிக்கப்பட்டு ஒரு குழுக்கும் மற்றொரு குழுக்குமிடையே செய்தித் தொடர்பு துண்டிக்கப்பட்டு வாழும்போது அவர்கள் பேசும் மொழியிலும்

வேறுபாடுகளும் மாறுபாடுகளும் ஏற்பட்டு காலப்போக்கில் கிளை மொழிகளாகி மீண்டும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தனித் தனி மொழிகளாகவும் மாறுகின்றன என்பவையெல்லாம் அனைவரும் அறிந்த செய்திகளே.

2. முன்னுரை

ஒரு மொழிப் பேசப்படுகின்ற அந்த நாட்டில் / பகுதியில் அம் மொழியில் பல்வேறு வகைப்பட்ட மொழிக்கூறுகளில் (Linguistic Features) வேறுபாடுகள் இருப்பது இயற்கையே. குறிப்பாக இனம், இயற்கைச்சூழல், நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம், அரசியல் சூழல். சமுதாய அமைப்பு ஆகியவற்றால் வேறுபட்டுக்கிடக்கின்ற இந்தியா போன்ற பெரிய நாடுகளில் அங்கு வாழும் மக்கள் பல்வேறு மொழிகள் பேசப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதேபோனறு ஒரே மொழிக்குள்ளும் அவர்கள் பேசுகின்ற பேச்சுக்களில் வேறுபாடுகளும் மாறுபாடுகளும் இல்லாமல் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே இப் பல்வகைப்பட்ட வேறுபாடுகளைக் கொண்ட பேச்சு வழக்குகளை பல்வேறு காரணிகளைக் கொண்டு கிளை மொழிகளாகப் பிரிக்கும் ஆய்வுகள் உலகெங்கிலும், நாடெங்கிலும் நடந்து கொண்டு இருக்கின்றன. தமிழ்மொழிச்சூழலில் இம்முயற்சி எத்தகைய அளவுக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை ஆராய் வதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

3. நோக்கம்

கிளைமொழியின் இலக்கணம், இக் கிளைமொழிகளையும், மொழிக் கூறுகளின் வேறுபாடுகளையும் விவரிக்க, விளக்க, இது வரை செய்த ஆய்வுகளின் முயற்சிகள், அவைகள் கூறுகின்ற காரணங்கள், மொழிக்கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை எதை அடிப்படையாகக் கொண்டு நிறுவுவது, சமுதாய, வட்டார அடிப்படையில் கிளைமொழிகளை விளக்கும் முறைகள், அவற்றில் ஏற்படும் சிக்கல்கள், குறைகள், கிளை மொழிகளை விவரிக்க என் னென்ன மொழிக்கூறுகளை எடுத்துக்கொள்வது, என்னென்ன மொழிக்கூறுகளை விட்டுவிடுவது, எடுத்துக் கொள்வதற்கும், விட்டு

விடுவதற்கும் கொள்கைகளை முடிவு செய்யும் விதம், தமிழில் கிளை மொழி ஆய்வும், மொழிக்கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை விவரிக்கும் முயற்சிகளும் வெற்றி அடைய புதிய பரிந்துரைகள் ஆகிய பல செய்திகளை இக்கட்டுரை விளக்கிச் செல்கின்றது.

4. கிளைமொழி இலக்கணம்

உருபனியல், ஒலியனியல், சொற்கள், சொற்றொடர்கள், உச்சரிப்பு விதம், தொடரழுத்தம் போன்றவைகளில் தரக்கிளை மொழியில் (Standard Dialect) இருந்து மாறுபட்டு விளங்குவது ஒரு கிளைமொழி எனக் கொள்ளலாம் என்று கே. எம். பெயத்து கூறுகிறார் (1980 .

ஒரு மொழியில் இருந்து ஒரு கிளைமொழியை அடையாளம் காணும்போது கீழ்க்கண்ட மொழி அளவுகளை (Liuguistic Levels) பயன்படுத்துகிறோம்.

1. ஒலியனியல் வேறுபாடுகள் (Phonological Difference)
2 உருபனியல் வேறுபாடுகள் (Morphological Difference)
3. சொல் வேறுபாடுகள் (Lexical Difference)
4. தொடரியல் வேறுபாடுகள் (Syntactical Difference)
5. உச்சரிப்பு வேறுபாடுகள் (Pronunciation Difference)
6. தொடரழுத்த வேறுபாடுகள் (Intonational Difference)

5. கிளைமொழிகளின் ஆய்வுகள்

உலக மொழிகள் (குறிப்பாக ஆங்கிலம்) பலவற்றிலும், தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிட மொழிகளிலும் கிளைமொழிகளையும், பேச்சு வழக்கில் காணப்படும் மொழிக்கூறுகளின் வேறுபாடுகளையும் விவரிக்க, கிளைமொழியியலார் பலரும், சமுதாய மொழியிலார் பலரும் முயற்சித்தனர். அதில் மேல்நாட்டு அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வில்லியம் பிரைட்டு (1960, 1968), ட்ரட்கில் (1974), லெபொவ் (1976), டெல்கைம்ஸ் (1962, 1964), காலிடே (1972), மேக்ரொமெக்

(1960, 1968), கம்பர்சு (1958, 1964), பிளாக்கு (1960), லெவின் (1959) போன்றோர்கள். இந்தியநாட்டு அறிஞர்களில் தெ. பொ. மீனாட்சிசுந்தரன், வ. ஐய். சுப்பிரமணியம் (1973), சண்முகம்பிள்ளை (1965, 1972,). பட்டநாயக்கு 1975), அகத்திய லிங்கம் (1977), அண்ணாமலை (197௦), கோபிநாதன் நாயர் 1975), சோமசேகரன் நாயர் (1975), கருணாகரன் (1975, 1980, 1981), சீனிவாசவர்மா (1977), பிரகாசம் 1980), பட் (1973), சிவராமமூர்த்தி (1973, 1977), பண்டிட் (1963), ஆப்தே (1962) நீதிவாணன் (1973, 1975), இராமானுஜம் (1962, 1964) போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் லெவின், கம்பர்சு போன்றவர்கள் ஒலியனியல் தகவல்களையும், சண்முகம்பிள்ளை, பண்டிட் போன்றவர்கள் சொல்தகவல்களையும், மெக்ரோமெக் இலக்கணத் தகவல்களையும், பிரைட்டு, பிளாக்கு, ஆப்தே போன்றவர்கள் எல்லாத்தகவல்களையும் கொண்டு கிளைமொழி வேறுபாடுகளை நிறுவினர்.

5.1 காரணிகள்

கிளைமொழியியலார் வட்டார அடிப்படையிலும், சமுதாய மொழியியலார் மொழி நிலவுகின்ற சமுதாயத்தின் அடிப்படையிலும் காரணிகளைத் தேட முயற்சித்தனர். அதனால் வட்டாரக் காரணங்களைக் கொண்டு வட்டாரக்கிளை மொழிகள் (Regional Dialects) என்றும் சமுதாயக் காரணிகளை வைத்து சமுதாயக் கிளைமொழிகள் (Social Dialects) என்றும் இரு பெரும் பிரிவாக பிரிந்தன. மொழியில் காணப்படும் வேறுபாடுகளை சமுதாய அடிப்படையில் விளக்குவதற்கு கீழ்க்கண்ட காரணிகளை (Factors) சமுதாய மொழியியலார் எடுத்துரைத்தனர். அவையாவன : சாதி (Caste), இனம் (Race), கல்வி (Education) பால் (Sex), வயது (Age), மதம் (Religion), தொழில் (Occupation), பொருளாதாரத் தகுதி (Economic Status), சமுதாயத்தகுதி (Social Status), இருப்பிடம் (Housing, சுற்றுப்புறப்பகுதி (Locality), இருமொழியம் (Bilingualism), நட்புறவு (Friendship), நகர்ப்புறவாக்கம் (Urbanization), குடும்பப் பின்னணி (Family backgronud), குணப்பாங்கு (Attitude), சமுதாயத்தில் மொழி பயன்படும் விதம்

(Functions of Language in Society), பேசுவோர் (Addresser) கேட்போர் (Addressee), பேசுவோர்-கேட்போர் பங்குறவு (Role Relationship of the Speaker-hearer), செய்தி அமைப்பு (Message Form), தலைப்பு (Topic), பரிமாறும்வழி (Channel), செய்திக்குறிப் (Code), பின்னணிச்சூழல் Scene of Setting), செய்தித் தொடர்புக் கருவிகள் (Mass Media of Communications), கௌரவம் (Prestige), அதிகாரம்/செல்வாக்கு (Power), பயில்வு (Acquisition) தொடர்பு / புணர்ச்சி (Contact), பண்பாட்டுப் பின்னணி, (Context of Culture), வகுப்புப் பின்னணி (Context of Class), பொருள் பின்னணி (Context o Subject, நோக்கப் பின்னணி (Context of Purpose), குறிக்கோள் பின்னணி (Context of Motive).

6. தமிழில் கிளைமொழி ஆய்வு

வட்டார அடிப்படையில் கிளை மொழிகளை அடையாளம் கண்டு கொள்வது எளிது. ஒருவனுடைய பேச்சைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர் சார்ந்து இருக்கும் பகுதியைக் கண்டு பிடித்து, இவர் கோயம்புத்தூர் பகுதிக்காரர், இவர் கன்னியாகுமரிப் பகுதிக்காரர், இவர் இராமநாதபுரம் பகுதிக்காரர் என்று அடையாளம் காணுகின்றோம். இவையெல்லாம் வட்டாரக்கிளை மொழிகள் உண்டு என்பதையே நிரூபிக்கின்றன.

6.1 வட்டார அடிப்படை

வ. ஐய். சுப்பிரமணியம் (1973) அவர்கள் தமிழ்க்கிளை; மொழிகளை வட்டார அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பிரிக்கின் றார்.

வட்டாரக்கிளைமொழி	பேசும் மாவட்டங்கள்
நாஞ்சில் நாட்டுக் கிளைமொழி	கன்னியாகுமரி
தென் பகுதிக் கிளைமொழி	திருநெல்வேலி, இராமநாதபுரம்
மத்தியப் பகுதிக் கிளைமொழி	மதுரை, திருச்சி
மேற்குப் பகுதிக் கிளைமொழி	கோவை

கிழக்குப் பகுதிக் கிளைமொழி	தஞ்சை, தென்னார்க்காடு
சென்னைப் பகுதிக் கிளைமொழி	செங்கல்பட்டு, சென்னை
வடக்குப் பகுதிக் கிளைமொழி	வடஆற்காடு

சேலம் தருமபுரி மாவட்டங்களை எந்தக் கிளைமொழியில் சேர்ப்பது என்று இதில் குறிப்பிடப்படவில்லை. கருணாகரன் மற்றும் சிவசண்முகம் (1981) நகரத்தில் பேசப்படும் தமிழைத் தனியாகப் பிரித்து நகரக்கிளைமொழிகளின் அடிப்படையில் சென்னைத்தமிழ், கோவைத்தமிழ், திருநெல்வேலித்தமிழ், தஞ்சைத் தமிழ் என்றும், மீதம் உள்ள பகுதிகளை வட்டார அடிப்படையில் பிரித்து, வடபகுதி, கிழக்குப்பகுதி, மேற்குப்பகுதி, தெற்குப்பகுதி, நாஞ்சில்நாடு என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாஞ்சில் நாட்டுப் பகுதியைத் தவிர மற்ற ஒவ்வொன்றுக்கும் அவைகள் பேசப்படும் பகுதிகள் குறிப்பிடப்படவில்லை நகரக்கிளைமொழி, நகரம் அல்லாத கிளைமொழி (கிராமியக் கிளைமொழி) என்று தனித்தனியாகப் பிரித்தாலும் நகரக்கிளைமொழிகளில் கிராமியக் கூறுகளும், கிராமியக் கிளைமொழிகளில் நகரக்கூறுகளும் இல்லாமல் இருக்க முடியாது. இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் கிராமங்களில் இருந்து நகரத்திற்கு குடியேறினாலும், தங்களுடைய பேச்சு வழக்கை மாற்றிக் கொள்வது மிகவும் கடினம் என்று ஆப்தே அவர்கள் 1962) கூறி இருக்கிறார்கள். நகரச் சூழலின் கட்டாயத்தினால் புதியமொழிக் கூறுகள் சிலவற்றைக் கற்றுக் கொண்டாலும் கிராமியக் கூறுகள் அவர்கள் பேச்சு வழக்கில் இருந்து மாறுவது இல்லை. எனவே நகரக்கிளைமொழி என்றோ, நகரம் அல்லாத பகுதிகளின் கிளைமொழிகள் என்றோ தனித்தனியாக பிரித்துக் கூறுவது அவ்வளவுப் பொருத்தமாகத் தெரியவில்லை.

தமிழ்நாடு முழுவதும் கிளைமொழி அளவை (Dialect survey) செய்து பார்த்தால் அநேகமாக கீழ்க்கண்டவாறு வட்டார அடிப்படையில் கிளைமொழிகளைப் பிரிக்கலாம். சென்னைநகரம், செங்கல்பட்டு, வடஆற்காடு மாவட்டத்தின் கீழ்ப்பகுதி, தென்ஆற்காடு மாவட்டத்தின் வடபகுதி இவற்றை ஒரு கிளைமொழிப் பகுதியாகவும், திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டத்தின்

கிழக்கு வடக்குப் பகுதி, தென்னாற்காடு மாவட்டத்தின் கிழக்கு தெற்குப் பகுதி ஆகியவற்றை ஒரு கிளைமொழிப் பகுதியாகவும் தென்னாற்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதி, சேலம், தரும புரி மாவட்டங்கள் அடங்கிய பகுதியை ஒரு கிளை மொழிப் பகுதி யாகவும் கோயம்புத்தூர் ஈரோடு மாவட்டங்களை ஒரு கிளை மொழிப் பகுதியாகவும், புதுக்கோட்டை மாவட்டத்தின் தெற்கு மேற்குப் பகுதி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட் டங்களை ஒரு கிளைமொழிப் பகுதியாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தை ஒரு கிளைமொழிப் பகுதியாகவும் பிரிக்கலாம்.

6.2 சமுதாய அடிப்படை

தமிழ்நாட்டில் வட்டார அடிப்படையில் நிகழ்ந்த கிளைமொழி களின் ஆய்வைக் காட்டிலும், சமுதாய அடிப்படையில் நிகழ்ந்த ஆய்வுகளே அதிகம். சமுதாயக் காரணி சளாக பலவற்றைக் காட்டினாலும் சாதி அடிப்படையில் நிகழ்ந்த ஆய்வுகளே அதிகம். கருணாகரன் மற்றும் சிவசண்முகம் (1981) ஆகியோர் மொழிக் கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை சாதியின் அடிப்படையில் நிறுவலாம் என்று கூறி. கீழ்க்கண்ட சாதிகளின் பெயர்களைக் கூறுகின்றார்கள். அவையாவன: அய்யர், அய்யங்கார், வேளாளர், முதலியார், செட்டியார், நாடார், வன்னியர் (படையாச்சி), யாதவர், பறையர் மற்றும் பள்ளர்.

6.3 சாதிக்கிளைமொழி உண்டா?

மேற்கத்திய நாடுகளில் பொருளாதாரத் தகுதி, தொழில் தகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமுதாய மக்களை பல்வேறு வகுப்புகளாகப் பிரித்து (Class based Society) அதற்குத் தகுந்தாற் போன்று இன்னின்ன வகுப்பைச் சார்ந்தவர் கள் இன்னின்னவாறு பேசுகின்றார்கள் என்று பிரித்துக் காட்டினர். அவர்கள் பேசும் மொழியில் காணப்படும் வேறுபாடு களை வகுப்பு (class) அடிப்படையில் நிறுவினார்கள். இது அவர்கள் நிலையைப் பொறுத்தவரையில் உண்மையே. நம்மைப் பொறுத்தவரை இந்தியாவில் நூற்றுக்கணக்கான கிளைமொழிகள் பேசப்படுகின்றன என்று நிறுவப்பட்ட ஒரு சூழலில் நமது நாடு மொழி ஆராய்ச்சிக்கு ஒரு பொற்களஞ்சியமாக விளங்குகிறது. எனவே மேற்கத்திய அறிஞர்கள் இந்தியாவின் பக்கம் தங்கள்

ஆய்வுக்கவனத்தைத் திருப்பினார்கள். ஒரு மொழிக்குள்ளே காணப்படும் வேறுபாடுகளைக் கண்டு அறிந்து, அது எதனால் ஏற்படுகிறது என்று அவர்கள் அறிய முயலும்போது முன்பே இந்தியாவில் மக்களை சாதி அடிப்படையில் பிரித்து வைத்து இருந்ததால் அவர்கள் உடனே மொழி வேறுபாட்டுக்குரிய காரணங்களை வேற்றுமையுடன் பொருத்தி 'இன்னின்ன சாதிக்காரர் இன்னின்னவாறு பேசுகிறார்' 'என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள். சாதி அடிப்படையில் கிளைமொழிகள் இல்லையென்றும் அப்படி இருப்பது ஒருவகையான கட்டுக்கதையே (Myth) என்றும் பட்டநாயக்கு (1975:97,-104) கூறிய போது அதை முழுவதும் எதிர்த்தும், சற்று ஆதரித்தும், நடுநிலைமை வகித்தும் பல்வேறு குறிப்புகள் (Comments) வந்ததை அறிஞர் உலகம் நன்கு அறியும். அறிவியல் ஆய்வு முறைப்படி புலனாய்வு முறையிலோ (Empirical Research), பரிசோதனை (Experimental Research), முறையிலோ ஆய்வு செய்து சொல்லாமல், தங்கள் மனத்திற்குப் பட்டவாறு ஊகத்தின் (Intuition) அடிப்படையில் சொன்னார்கள். பேராசிரியர் அண்ணாமலை கூறியவாறு புலனாய்வு முறையில் பரிசோதனை செய்து பார்த்தால் உண்மைகள் புலனாகும்.

பட்டநாயக்கு கட்டுரைக்கு குறிப்புரை எழுதிய வில்லியம் பிரைட்டு (1975) அவர்கள் மேலைநாட்டு வகுப்பு அடிப்படை சமுதாயத்தை (Class based Society) இந்திய நாட்டு சாதி அடிப்படை சமுதாயத்தோடு (Caste based Society) ஒப்பிடவில்லையென்றும் கள ஆய்வில் தன்னுடைய தகவலாளிகள் (Informants) சாதி அடிப்படையில் மொழி வேறுபாடு இருக்கிறது என்று கூறியதாகவும் எழுதி உள்ளார்கள். இக்கூற்றிலிருந்து இரண்டு விதமான உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம். ஒன்று: அந்த தகவலாளிகள் சாதி அடிப்படையிலேயே மொழிவேறுபாடுகள் இருக்கிறது என்று கூறியதாலேயே இவரும் அப்படிக் கூறி இருக்கலாம். அல்லது தகவலாளிகள் சாதி அடிப்படையில் கிளைமொழி உண்டு என்று கூறி தங்களுடைய பேச்சு வழக்கை மாற்ற விரும்பாமல் தங்களின் தனித்தன்மைகளை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணி அவற்றை சாதியின் பெயரால் செய்து கொள்ள விரும்பி சாதிப்பெயரைச் சொல்லி இருக்கலாம். தகவலா

ளிகள் சொன்னார்கள் என்பதாலேயே மட்டும் சாதி அடிப்படையில் மொழி வேறுபாட்டை நிறுவுவது என்பது சற்றுப் பொருந்தாத வாதமாக உள்ளது. மேலும் ஆப்தே, இராமானுஜம், பண்டிட் போன்றவர்கள் இந்தியாவிலேயே வாழ்ந்தவர்கள் என்றும் அவர்களும் இப்படியே கூறினார்கள் என்றும் கூறினார். இவர்கள் எல்லாம் இந்தியர்கள் என்பதாலேயே மட்டும் அவர்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் அவசியம் இல்லை. இரண்டு: அப்படியே சாதி அடிப்படையில் மொழிக் கூறுகளை நிறுவுவது உண்மை என்று ஒத்துக் கொண்டாலும் அவர்கள் சொல்லியது ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நிலவிய சூழல். அப்போது செய்தித் தொடர்பு, நாகரீக வளர்ச்சி, தொழில் நுட்பம், மக்கள் தொடர்பு புணர்ச்சி, கல்விப் பெருக்கம் முதலியன அதிகம் வளர்ச்சி அடையாமல் வாழ்ந்த மக்கள் அங்கங்கேயே தொடர்பு கொண்டு தங்களுக்கு அப்பால் வெளியே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள இயலாமல் போன சூழலில் வேண்டுமானால் உண்மையாக (ஒரு வேளை) இருந்து இருக்கலாம். ஆனால் இன்று சூழல் அப்படி இல்லை. மேலே கண்ட வளர்ச்சிகளின் மூலம் மக்களுக்கு இடையே இருக்கும் இடைவெளி குறைந்து கொண்டே வருகிற சூழலில் சாதி அடிப்படையில் மொழிக்கூறுகள் வேறுபடுகிறது என்பது சற்று பொருந்தாத வாதமாக உள்ளது. கீழ்க்கண்ட உதாரணங்களைக் காண்போம்.

திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் (அநேகமாக மற்ற பகுதிகளிலும்) உள்ள வன்னியர்கள் புதுசு என்றும், பாண்டிச்சேரி மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தின் வடக்குப் பகுதி, செங்கல்பட்டு மாவட்டத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள வன்னியர்கள் 'புச்சு' என்றும் கூறுகின்றனர். ஒரே சாதியைச் சேர்ந்த மக்கள் இரு வகைப்பட்ட பகுதியில் இரண்டு விதமாகப் பேசுகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் ஒரே மாவட்டத்தில் கூட ஒரே சாதியினர் ஒரே விதமாகப் பேசவில்லை. வட்டத்திற்கு வட்டம் மாறுபடுகிறது. திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்தில் உள்ள வன்னியர்களும், அரியலூர் வட்டத்தில் உள்ள வன்னியர்களும் இருவேறுவிதமாகக் கீழ்க்கண்டவாறு பேசுகின்

றனர். இதுவே சிதம்பரம் வட்டத்தில் இருக்கும் வன்னியர்களின் பேச்சுவழக்கில் இருந்து இன்னும் வேறுபட்டு நிற்கிறது. (நேரடி கருத்துபரிமாற்றம் (நடனசபாபதி) (Personnel Communications).

அரியலூர் வட்டம்	பெரம்பலூர் வட்டம்	சிதம்பரம் வட்டம்
நீ	நீனு	நீ
ஒப்பன் (உங்க அப்பா)	நொப்பன்	ஞொப்பன்
ஓயா (உங்க ஆயா)	நோயா	ஞோயா
ஓக்கா (உங்க அக்கா)	நொக்கா	ஞொக்கா

ஒரே வட்டத்திற்குள்ளேயும் ஒரே சாதியில் பேச்சுவழக்கு ஒன்றாக இருப்பது இல்லை. எடுத்துக்காட்டாக அரியலூர் வட்டத்திற்குள்ளேயே 4 (நான்கு) கல்தொலைவில் உள்ள இரண்டு ஊர்களில் (பொன்பரப்பி, குமிழியம்) இருக்கும் வன்னியர்கள் இரண்டு விதமாக பேசுகின்றனர்.

பொன்பரப்பி	குமிழியம்
ஆயா	'அம்மாயி
	அப்பாயி
வந்தியா	வந்தியெ

நீதிவாணன் (1975) அவர்கள் மதுரையில் நாடார் சமூகத்தில் மட்டுந்தான் அப்பாவுக்கு 'அய்யா' என்றும், மற்ற சமூகத்தினர் அப்படிச் சொல்வது இல்லை என்றும் கூறி 'அய்யா' என்ற சொல்லை நாடார் சமூகத்திற்கு மட்டும் உரியதாக்கினார். ஆனால் 'அய்யா' என்ற சொல் வன்னியர் சமுதாயத்திலும் 'அப்பா' என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பிரைட், ராமானுஜம் (1964) இருவரும் சேர்ந்து பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்று இருவகையாகப் பிரித்து அதற்கு எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட சொற்களை கையாண்டனர்.

பார்ப்பனர்	பார்ப்பனர் அல்லாதார்
ஜலம் தீர்த்தம்	தண்ணி
தண்ணி	
ஆம்படையான்	புருசன்
அலம்பு	கழுவு
தூங்கு	உறங்கு
போச்சு	போச்சு
ஆச்சு	ஆச்சு
வந்துது	வந்துச்சு
பண்றா(ன்)	பண்ணுகறா(ன்)

பார்ப்பனர் சமூகத்தில் காணப்படும் 'ஆம்படையான்', 'அலம்பு,' 'தூங்கு' என்ற சொற்கள் முழுவதும் பார்ப்பனர் அல்லாத சமூகத்திலேயும் நிலவுகின்றன. குறிப்பாக திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு மாவட்டத்தில் வாழும் (அநேகமாக பிற மாவட்டங்களிலும்) எல்லா வகை மக்களிடையேயும் இச் சொற்கள் நிலவுகின்றன. அவர்கள் சமூகத்தில் காணப்படும் 'பண்றா ன்)' என்ற சொல் பார்ப்பனர் அல்லாத சமூகத்திலும் நிலவுகின்றது. அத்துடன் பண்ணுகறா ன்) என்ற சொல் மேலே சொன்ன பகுதியில் பார்ப்பனர் அல்லாதார் பேச்சு வழக்கில் இல்லை. ஆப்தே (1962 : 8) என்பவர்கள் பாம்பே நகரத்தில் வாழும் பார்ப்பனர் பேச்சு வழக்கிற்கும் மகாராட்டிரத்தில் மற்ற வேறு பகுதியில் வாழும் பார்ப்பனர் பேச்சு வழக்கிற்கும் வேறுபாடு உண்டு என்று கூறி நிறுவுகின்றார். சுவராசியலட்சுமி (1977 : 57) என்பவர் தெலிங்கானா பகுதியில் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனர் அல்லாதார் இருவருமே ஒரே வகையான வினைச்சொற்களைப் பயன்படுத்துவதாகக் கூறி உள்ளார். எனவே சாதி அடிப்படையில் மொழிக் கூறுகளின் வேறுபாடுகளை விளக்கி சாதிக் கிளைமொழி உண்டு என்று கூறுவது முற்றிலும் பொருந்தாது.

6.4 சாதி வட்டாரப் பாகுபாடுகளில் குழப்பம்

சாதி அடிப்படையில் கிளை மொழிகள் இருக்கிறது என்ற

ஒரு மொழிபேசும் அந்நாட்டில் அச்சாதியைச் சேர்ந்தவர்கள் அந்நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் ஒரே மாதிரியாக பேச வேண்டும். உதாரணமாக தமிழ் நாட்டில் வன்னியர்களோ, முதலியாரோ, உடையாரோ, வேளாளரோ எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் ஒரே மாதிரியாக பேச வேண்டும். ஆனால் சூழல் அப்படி இல்லை. வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகிறது. ஒரு சாதியினிடையே காணப்படும் ஒருமொழிக்கூறு மற்றொரு சாதியினிடையே முழுவதும் காணப்படவில்லை என்றால்தான் அந்தந்த சாதிக்கிளை மொழி என்று கூறலாம். ஆனால் நடைமுறையில் அப்படி அமையவில்லை. இரண்டு மூன்று சாதிகளிடையே ஒரு மொழிக்கூறு காணப்படின் அப்போது சாதி அடிப்படையில் மொழிகளை எப்படி கணக்கிடுவது? இந்தந்த சாதிக்கு இந்தந்த தொழில் என்று வகைப்படுத்தி அவரவர்கள் அதைத்தான் செய்ய வேண்டும் என்ற நிலை இருந்த காலததில் வேண்டுமானால் சாதி அடிப்படையில் மொழிவேறுபாடுகளை அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஆனால் இப்போது அப்படிச் செய்ய முடியாது. அதேபோல ஒரு வட்டாரத்தை -பகுதியை எடுத்துக் கொண்டாலும் எல்லோரும் எல்லாமொழி அளவுகளிலும் ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை. ஒரு சில ஒலியனியல் மாறுபாடுகளும் தொடரமுத்த மாறுபாடுகளும் வேண்டுமானால் ஒன்றாக இருக்கலாமே தவிர ஏனையவைகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. பகுதிக்குப் பகுதி ஊருக்கு ஊர் பேச்சு வழக்கு மாறுகின்றது. ஒரே பகுதியில் ஒரே வகையான மக்கள் இருந்தால் மட்டுமே பேச்சு வழக்கு ஒன்றாக இருக்கும் சூழல் அமைய வாய்ப்பு உண்டு. சமுதாயத்தின் அமைப்பு அப்படி இல்லாமையால் பேச்சு வழக்கும் மாறுபடுகிறது. இருந்தபோதிலும் ஒரு சில மொழிக் கூறுகளை இன்னின்ன பகுதியின் சிறப்பு அங்கங்கள் (Distinctive Features) என்று அடையாளம் கண்டு கொள்ளலாம். ஆனால் சாதியின் அடிப்படையில் அப்படி செய்ய முடியாது.

6.5 பார்ப்பனரின் பேச்சு வழக்கு மாறுபடுகிறதா?

சாதி அடிப்படையில் மொழிவேறுபாடுகளைப் பிரிக்க முடியாது என்பதும், ஒரே சாதியினர் பல்வேறு பகுதியில் வாழ்ந்தாலும் ஒன்

றாகப் பேசுவது இல்லை என்பதும் உண்மையானால், பார்ப்பனர்கள் மட்டும் எந்தப்பகுதியில் வாழ்ந்தாலும் ஏன் ஒரே மாதிரியாகப் பேச வேண்டும் என்ற கேள்வி எழலாம். இதுகூட செ. வை. சண்முகம், பொற்கோ, கருணாகரன் [தனிப்பட்ட செய்திபரிமாற்றம் (Personnel communi cations) போன்றோரின் கருத்துப்படி ஒரு ஊகமே தவிர உண்மையாக இருக்க முடியாது. சண்முகம் பிள்ளையின் கருத்துப்படி (1978:88) பார்ப்பனர்கள் கூட பார்ப்பனர் அல்லாதவர்களின் பேச்சு வழக்கை பின்பற்றுகின்றனர். இது இன்றைய இளையதலைமுறையினரிடையே காணப்படும் நிலையாகும். அரசியல். சமுதாய அமைப்புக்காரணங்களால் ஏற்படும் மாற்றங்கள் மொழிகளிலும் பிரதிபலிக்கத்தான் செய்யும். சமுதாய நடப்புகளையும் உண்மை நிலவரங்களையும் மொழி பிரதிபலிக்கிறது என்ற சபீர் அவர்களின் கொள்கையையும் இங்கு நினைவுகூரல் வேண்டும். எனவே அவர்களுடைய பேச்சு வழக்கில் மாற்றங்கள் இருக்கின்றன. குறைந்தபட்சம் வீட்டுச்சூழல் அல்லாத இடங்களில் பார்ப்பனர் அல்லாதோரின் பேச்சு வழக்கிலேயே பேசுகின்றனர். அப்படியே தங்களுக்கு என்றே தனிப்பட்ட பேச்சு வழக்கை வைத்துக் கொண்டாலும் சமுதாயத்தில் தங்களை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளவும், தனித்தன்மைகளை நிலை நிறுத்திக் கொள்ளவும்தான் வேண்டுமென்றே அப்படி பேசுகின்றார்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே. இச்சூழல் எல்லாம் இப்போது மாறிவருகின்றன. எனவே பார்ப்பனர்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் ஒரேவிதமாகப் பேசுகின்றனர் என்ற கூற்றில் வலு இருப்பதாகத் தெரியவில்லை.

7. பழையனவற்றையும் புதியனவற்றையும் இணைக்கும் முயற்சிகள்

ஒரு சிலர் இன்னும் சாதி அடிப்படையிலேயே மொழிக்கூறுகளை விளக்கமுடியும் என்று நம்புகின்றனர். இன்னும் ஒரு சிலர் சமுதாயத்தில் ஏற்பட்டு இருக்கும் மாற்றங்கள், அரசியல் அமைப்புகளின் இயக்கங்கள் போன்றவற்றினால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவால் சாதியை ஒரு காரணமாக எடுக்க முடியாது என்பார்கள். இன்னும் ஒரு சிலர் சாதி என்பதற்குப் பதிலாக தொழில், பொருளாதாரத் தகுதி போன்றவற்றின் மூலம் விளக்கலாம் என்றும் கூறுகின்றனர். வேறு சிலர் இரண்டு நிலைகளையும்

ஒத்துக்கொண்டு, இப்போது சமுதாயச் சூழலில் புதிய மாற்றம் ஏற்பட்டு முழுவதும் சாதி அடிப்படையில் இல்லை; அதே நிலையில் சாதியை விட்டுவிட்டு இன்னும் விடுபடவும் இல்லை என்று கூறி இடைநிலையில் நிற்கின்றனர். இது ஒரு வேளை உண்மையாக இருக்கலாம். ஆரம்பகாலத்தில் சாதியின் அடிப்படையில் பேச்சு வழக்கு இருக்கிறது என்று மேலைநாட்டார் சொன்னதும் ஒத்துக் கொண்ட நாம் பட்டநாயக்கு கொள்கை அளவில் சந்தேகத்தை எழுப்பியவுடன் இன்று ஓரளவிற்கு உண்டு, ஓரளவிற்கு இல்லை என்ற அளவிற்கு வந்து இருக்கிறோம். அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். சண்முகம்பிள்ளையின் கீழ்க்கண்ட கூற்று இதை உறுதி செய்கிறது ''திரைப்படம, செய்தித்தொடாபு, கல்வி பேரன்றவற்றினால் இளைய தலைமுறையினரின் பேச்சு வழக்கில் சாதிகளின் பிரதிபலிப்பே இல்லை'' (1972:70. மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டாலே, அது தற்சமயத்தில் எந்த விளைவை உண்டாக்கி இருக்கிறது என்று பார்ப்பதைவிட அது முடிவில் எந்த விளைவை உண்டாக்கும் என்று கணித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். எனவே இந்த அரசியல், சமுதாய மாற்றங்களினால் ஏற்படும் ஏனைய மாற்றங்களும் ஒன்றாக சேர்ந்தபின்பு, சாதி அடிப்படையில் மொழிக்கூறுகளின் வேறுபாடுகளை விளக்க முயலுவது வெற்றி அடையுமா என்பது சந்தேகமே.

8. மனிதன்-சமுதாயம்-மொழி

மனிதன், சமுதாயம், மொழி இந்த மூன்றும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குவதால் எந்த ஒன்றையும் தனியாகப் பிரித்து, மற்றவைகளை ஒதுக்கிவிட்டு, ஆய்வு செய்யும் முயற்சிகள் ,அத னதன் உள் அமைப்புகளை விளக்க பயன்படுமே தவிர, இன்றி யமையாத பல்துறை கலந்த (Inter-disciplinary Approach) கொள்கை கோட்பாடுகளை நிறுவும் அளவுக்கு போதுமானதாக இருக்க முடியாது. எனவே மொழியைப் பற்றி ஆராயும் போதும் அதில் இருக்கின்ற மொழிக்கூறுகளின் வேறுபாடுகளை அறிந்து அதற்குக் காரணிகளை காணும்போது, அம்மொழியைப் பேசுகின்ற மனிதனையும், அவன்

வாழுகின்ற சமுதாயத்தையும் வைத்துத்தான் ஆராய வேண்டும். அதனால்தான் மொழியைத் தாண்டி அது பயன்படும் சமுதாயத்தில் காரணிகளைத் தேடி, சமுதாயக் காரணிகள் (Social Factors) என்று பெயர் இட்டனர். சமுதாயம் மாறக்கூடியவை, மனிதனும் மாறக்கூடியவன். எனவே மனிதன் மாற மாற சமுதாயமும் மாறும். அப்போது மனிதன் பயன்படுத்துகின்ற மொழியும் மாறும். அதனால் மாற்றத்தை உண்டாக்கும் சமுதாய அமைப்பில் காரணங்களைத் தேடுவதா? அல்லது மாற்றத்திற்கு உட்படும் மொழிக்குள்ளேயே காரணங்களைத் தேடுவதா? சமுதாயக் காரணிகளாகப் பேசப்பட்டு வந்துள்ள வயது, கல்வி, தொழில், பொருளாதாரத் தகுதி, சமுதாயத் தகுதி போன்றவைகள் எல்லாம் பேச்சு வழக்கினை வளர்த்துக் கொள்ளவும், குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் பயன்படுமே தவிர அவைகளே காரணிகளாக அமைவது சற்றுக் கடினம். அவைகள் காரணங்கள் (Causes) மட்டுமே. மேலும் அவைகள் ஒவ்வொன்றும் தனித்தியங்கும் 'தானியங்குமாறிலிகள்' (Independent variables) இல்லை. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவைகள் ஒன்று சேர்ந்து கூட்டாகத்தான் மாற்றத்தை விளைவிக்கமுடியும். எனவே அறிவியல் ஆய்வில் (அது எந்த துறையாக இருந்தாலும்) இன்னின்ன காரணங்களால் இன்னின்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்று கூறி தானியங்கும் மாறிலிகளைத்தான் கண்டுபிடிக்க முயலவேண்டும்.

மொழிக்கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை, மனிதன், எந்த மனிதனிடம் எந்தப் பொருளைக் குறித்து, எந்த தலைப்பில், எந்த சூழலில், எந்த பின்னணியில் பேசுகின்றான் என்பதை வைத்துக் காண முயன்றால் மேலும் பயனுடைய முடிவுகள் கிடைக்கலாம். எனவே சமுதாயக் காரணிகளைத் தேடுவதைவிட மொழி பயன்படும் விதத்தை வைத்து பேசுவோர் – கேட்போர், பேசுவோர்-கேட்போர்-பங்குறவு, தலைப்பு, பொருள், பின்னணிச் சூழல், பேசுவோரின் குணப்பாங்கு ஆகியவைகளைக் கொண்டு மொழிக்கூறுகளின் வேறுபாடுகளை அறிய முயலலாம்.

9. கிளைமொழிகள் ஆய்வில் சிக்கல்கள்

1. கிளை மொழிகள் ஆய்வுக்கு எந்த மாதிரியான மக்களை தகவலாளியாக எடுத்துக்கொள்வது? மொழிச் சிறுபான்மைச்

சமுதாயம், இருமொழியம் நிலவும் பகுதிகள், மொழியின் எல்லைப் பகுதிகள் (Border Areas) போன்றவற்றை கவனத்தில் கொள்வதா? விட்டுவிடுவதா?

2. மொழிச் சிறுபான்மைச் சமுதாயத்தினரை எடுத்துக் கொண்டால் வேண்டுமென்றே தங்கள் தனித் தன்மைகளைக் காட்டும் வண்ணம் மொழி வேறுபாடுகளை உண்டாக்க வாய்ப்பு உண்டு. அப்போது என்ன செய்வது?

3. கிளை மொழிகளை அடையாளம் காணும்போது எல்லா மொழி அளவுகளிலும் வேறுபாடுகளைக் காணமுடியாது. ஒரு கிளை மொழிக்கும் மற்றொரு கிளைமொழிக்கும் ஒலியனியல், உருபனியல். சொல்லியல், தொடரியல், உச்சரிப்புவிதம், தொடரழுத்தம் ஆகிய அனைத்திலும் வேறுபாடுகள் இருப்பின் அவைகளைக் கிளை மொழிகள் என்று ஒத்துக் கொள்வதைவிட தனித்தனி மொழிகள் என்றே சொல்லலாம். ஆகவே ஏதேனும் ஒரு அளவில் தான் காண முடியும். அப்படி சொற்களை அளவில் வேறுபாடுகள் இருந்து கிளைமொழிகளை அடையாளம் கண்டால் அது சொல் கிளைமொழி (Lexical Dialectology) என்று ஆகாதா? சொல்கிளை மொழி என்று ஆகி விட்டால் அதுவே தொழில் அகராதி (Occupational Dictionary) என்றாகி விடாதா? தொழில் அகராதி என்று வந்து விட்டால் தொழில் அடிப்படையில்தான் மொழிக்கூறு வேறுபாடுகளை ஆராயவேண்டும் என்று வந்து விடுகிறது. எனவே எந்த மொழி அளவை எடுத்துக்கொள்வது, எதை விட்டுவிடுவது என்று யோசனை செய்ய வேண்டும்.

4. ஒரு மொழிக்கூறு ஒரு கிளை மொழியில் இருந்தும் இன்னொன்றில் இல்லாமலும் இருந்தால் அந்த மொழிக்கூறை அந்தக் கிளைமொழியோடு சேர்த்து விடலாம். அதேசமயத்தில் ஒரே மொழிக்கூறு இரண்டு கிளை மொழியில் இருந்தால் எவற்றுடன் சேர்ப்பது? எந்தெந்த மொழிக்கூறுகளை கிளைமொழி அளவைக்கு எடுத்துக் கொள்வது? எந்தெந்த மொழிக்கூறுகளை விட்டுவிடுவது?

5. கள ஆய்வில் தகவலாளியைக் கேள்வி கேட்கும்போது தகவலாளி எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையான பதில்களை கொடுப்பாரா? பொருளாதாரம் பற்றிய, ஆண்டுவருமானம் பற்றிய கேள்விகளுக்கு விடை அளிப்பாரா?

6. மொழிக்கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை வைத்துக் கொண்டு சமுதாயத்தில் காணப்படும் வேறுபாடுகளுடன் ஒப்பிட லாமா? அல்லது சமுதாயத்தில் காணப்படும் வேறுபாடுகளை எடுத்துக் கொண்டு பிறகு மொழிகளின் வேறுபாடுகளைத் தேடு வதா? அல்லது இரண்டும் ஒரே சமயத்தில் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதாக எடுத்துக் கொண்டு ஆராய்வதா?

7. அமைப்பியல் மொழியியலாளர்கள் (Structural Linguists) மொழிக் கூறுகளில் கண்ட வேறுபாடுகளை விளக்க முயன்று அவை களை கட்டிலா மாற்றம் (Free Variation) என்று சொன்னார்கள். சமுதாய மொழியியலாளர்கள் கட்டிலா மாற்றம் என்று ஏதும் இல்லை என்றும், ஒவ்வொரு மொழிக்கூறின் மாறுபாட்டுக்கும் அதைக் கட்டுப்படுத்தும் காரணிகள் (Conditioning Factors) உண்டு என்றும் கூறினர். மீண்டும் லெபொவ் போன்ற சமுதாய மொழியியலாளர்கள் கட்டிலா மாற்றம் இருக்கிறது என்று ஏற்றுக் கொண்டு அதைப் பல்வேறு வகையாகப் பிரித்து ஆராயமுயலுவது சமுதாய மொழியியல் அடிப்படைக் கொள்கைக்கே முரண்பாடாகத் தெரியவில்லையா? அப்படி முரண்பாடு இல்லை என்று ஒத்துக் கொண்டால் எந்தெந்த மொழிக்கூறுகளின் மாறுபாடுகளை கட்டிலா மாற்றம் என்றும் எந்தெந்த மொழிக்கூறுகளின் மாறு பாடுகளை கட்டிலா மாற்றம் இல்லையென்றும் எடுத்துக் கொள்வது? எந்த கொள்கை கோட்பாடுமூலம் இவற்றை முடிவு செய்வது? உதாரணமாக எல்லா மொழி அளவிலும் ஒவ்வொரு வேறுபாட்டுக்கும் காரணிகளை கண்டு பிடிக்க முயலும் நாம், கீழ்க்கண்ட சொற்களில் – காணப்படும் வேறுபாடுகளுக்கு காரணி களைக் காண்பது கடினமாக இருக்கிறது. படித்தவர், படிக் காதவர், முதியோர், இளையோர், நகரத்தார், கிராமத்தார் போன்ற எல்லோரும் இப்படியே பேசுகின்றனர்.

வந்துடு	வந்துரு
போயிடு	போயிரு
செஞ்சிடு	செஞ்சிரு

10. கிளைமொழி ஆய்வின் குறைகள்

இதுவரை நடந்துள்ள கிளைமொழிகளின் ஆய்வுகளில் கீழ்க் கண்ட குறைபாடுகளைக் காணலாம்.

1. இதுவரை கிளைமொழிகளை வகைப்படுத்துவதிலும் மொழிக்கூறுகளில் காணும் வேறுபாடுகளை அறிவதிலும் அறிஞர்கள் தாங்கள் அறிந்ததையும், கேட்டதையும், பார்த்ததையும் மையமாகக் கொண்டு யூகத்தின் அடிப்படையிலேதான் சொல்லி இருக்கிறார்கள்.

2. புலனாய்வு முறையிலோ, பரிசோதனை முறையிலோ எந்தக் கொள்கைக் கோட்பாட்டையும் வகுக்கவில்லை.

3. முறையான கிளைமொழி அளவை இதுவரை நடைபெறவில்லை.

4. வட்டார கிளைமொழிகள் என்று யூகித்துக் கொள்ளுகிறார்களே தவிர வட்டாரங்களைப் பிரிக்க சரியான அணுகுமுறைகள் வகுக்கப்படவில்லை.

5. இதுவரை நடந்த கிளைமொழிகளின் ஆய்வுகள் எல்லாம் தனிப்பட்ட ஒருவருடைய பேச்சு வழக்கை விவரித்து அவர் சார்ந்து இருக்கும் பகுதி / வட்டாரப் பெயரிலோ, அல்லது அவருடைய சாதியின் பெயரிலோ, அல்லது இரண்டையும் சேர்ந்தோதான் வந்து இருக்கின்றன. இதை அப்படியே ஏற்றுக் கொள்வது உகந்ததாக இருக்க முடியாது.

6. சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் ஏற்றுக் கொண்டு பழமையையும் விட்டுவிட முடியாமல் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து மொத்தமாக கருதி மொழிக்கூறுகளின் வேறுபாடுகளுக்கு காரணிகளைக் கண்டுபிடிப்பது சற்று இயலாததும், முடியாததும் கூட,

11. பரிந்துரைகள்

1. அமெரிக்க கிளைமொழிச்சங்கம் (American Dialect Society) (1889), ஆங்கில கிளைமொழிச்சங்கம் (1870) போன்றவைகள் நிறுவப்பட்டதைப்போல இந்திய மொழிகளின் கிளைமொழிச்சங்கம் (Dialect Society of Indian Languages) நிறுவ வேண்டும்.

2. விரிவான முறையில் பகுதி பகுதியாக மொழிக்கூறுகளின் எல்லைப்பரப்புகளை கண்டு அறிய வேண்டும்.

3. ஒவ்வொரு தொழிலுக்கும் அகராதி தயார் செய்ய வேண்டும். உதாரணமாக விவசாயத் தொழிலுக்கு சொல் அகராதி தயார் செய்ய முயலும்போது எந்தெந்த சொல் எந்தெந்தப் பகுதியில் வழக்கில் உள்ளது என்று நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும். இதுபோன்ற தொழில் அகராதிகள் கிளை மொழிகளின் வேறுபாடுகளைக் கண்டு அறிய உதவும்.

4. இப்படி எதுவும் அறிவியல் முறைப்படி ஆய்வுகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தாமல் கொள்கை அளவில் பேசிக் கொண்டு இருப்பது பயனுடைய முடிவுகளை கொடுக்காது என்பதை அனைவரும் உணர்வதால் இந்த நடவடிக்கையை உடனடியாக துவக்க வேண்டும்.

5. களஆய்வுமுறைகள் தகவலாளியினுடைய முழுமையான பேச்சு வழக்கு (Total Range of Speech Behaviour) களைப் பெறும்படியாக அமையவேண்டும்.

6. மேலைநாட்டாரின் கொள்கை கோட்பாட்டுக்கு நமது மொழியில் உதாரணங்களைக் கண்டுபிடித்து அவர்கள் கொள்கை களை வலுவடையச் செய்வதைவிட நமது மொழியை வைத்துக் கொண்டு நாமே கொள்கைக் கோட்பாடுகளை உருவாக்க வேண்டும்.

7. ஒருவன் பேசுகின்ற பேச்சுவகையை மட்டும் அறிந்து கொள்வதை நிறுத்திவிட்டு அவனுக்கு எத்தனை வகையான பேச்சு வழக்கு தெரியும் என்பதையும் அறிந்து கொள்ளும்படி கள ஆய்வு முறைகள் இருக்க வேண்டும்.

12. முடிவுரை

மேற்கண்ட குறைபாடுகளையும் சிக்கல்களையும் நீக்கி இருக்கின்ற அணுகுமுறைகளைத் தேவைக்கேற்ப மாற்றி அல்லது புதிய அணுகுமுறைகளை உண்டாக்கி புலனாய்வு முறையிலும், பரி

சோதனை முறையிலும், மொழி சமுதாயத்தில் பயன்படும் விதத்தை மையமாகக் கொண்டு, மொழிக்கூறு வேறுபாடுகளையும் கிளைமொழிகளையும் விவரித்தால் பல புதிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்புக்கள் உண்டாகும்.

துணை நூல்கள்

Annamalai, E.1975 "Comments on D. P. Pattanayak's paper "Caste and Language", *IJDL* 5. 1 : 71-2.

Apte, M.L.1962 "Linguistic Acculturation and its Relation to Urbanization and Socio - Economic Factors", *IL* 23:5-25.

Bright, W.1960 "Linguistic Changes in Some Indian Caste Dialects", *Linguistic Diversity in South Asia*, Ed. by C.A. Ferguson and J.J. Gumperz, Mouton & Co.

———. 1964 "Socio Dialect and Language History", *Language in Culture and Society: A Reader in Linguistics and Anthropology*, Ed. by Dell Hymes, Madras: Allied Publishers Private Ltd.

———. 1968 "Social Dialect and Semantic Structure in South Asia", *Struture and Change in Indian Society*, Ed. by M. Singer and B. Cohern, Newyork: WGFAR.

———. 1975 "Comments on D.P. Pattanayak" s paper "Caste and Language", *IJDL* 5, 1:65-8.

——— and Ramanujam, A.K. 1962, *A Study of Tamil, Dialects* (Mimeo) Chicago: University of Chicago.

Bhat, D.N.S.1973. "Methods and Principles of Dialect Survey", *Seminar on Dialectology*, Ed. by, V.I. Subramaniyam, Trivandrum: University of Kerala.

Gopinathan Nair, B. 1973 "Tools for Dialect Survey", *Seminar on Dialectology*, Ed. by V.I. Subramaniyam, Trivandrum: University of Kerala.

——— 1975 "Comments on D.P. Pattanayak's paper "Caste and Lauguage", *IJDL* 4.2:365-79.

Gumperz, J.J. 1964. "Speech Variation and the Study of Indian Civilization", *Language in Culture and Society: A Reader in Linguistics and Anthropology*, Ed. by Dell Hymes, Madras: Allied Publishers Private Limited.

——— 1968 "Types of Linguistic Communities," *Readings in Sociology of Language*, Ed. by J.A. Fishman, The Hague: Mouton & Co.

Halliday, M.A.K. 1977 *Explorations in the Functions of Language*, London: Edward Arnold.

Hymes, D. 1962 "The Ethnography of speaking," *Readings in Sociology of Language*, Ed. by J. A. Fishman, 99-138, The Hague: Mouton & Co.

Karunakaran, K. 1980 "Study of Social Dialects in Tamil", *Sociolinguistics and Dialectology (Seminar papers)* Ed. by S. Agesthialingom, and K. Karunakaran, Annamalainagar: Annamalai University.

——— and C. Sivashanmugam, 1981 *Study of Social Dialects in Tamil*, Annamalai Nagar:All India Tamil Linguistics Association.

Labov, W. 1976, "The Study of Languages in Social Context", *Advances in the Sociology of Language*, Ed. by J A., Fishman, 152-216, The Hague: Mouton & Co.

McCormack, W. 1960. 'Social Dialect in Dharwar Kannada' *IJAL* 26: 79-91.

——— 1968 "A Casual Analysis of Caste Dialects," *Studies in Indian Linguistics* (*Emeneau Sastiaptapurti volume*), Ed. by Bh. Krishnamurthy, Annamalainagar and Pune: Annamalai University and Deccon college.

Neethivanan, J. 1973 "A Survey of Dialect works done in India", *Seminar on Dialectology* Ed. by V. I. Subra maniyam, Trivandrum: University of Kerala.

——— 1975 "Comments on D.P. Pattanayak's paper 'Caste and Language", *IJDL* 5.1 : 77-8.

Pattanayak, D.P. 1975 'Caste and Language', *IJDL* 4. 1: 94-104.

Petyt, K.M. 1980 *The Study of Dialectology: An Introduction to Dialectology*, London: Adre Deutsch.

Prakasam, V. 1980 "General Remarks on Language Variation," *Sociolinguistics and Dialectology* (*Seminar papers*) Ed. by S. Agesthialingom and K. Karunakaran, Annamalainagar: Annamalai University.

Shanmugam pillai, M. 1972. "Tamil To-day", *IL* 33.1:67-71.

——— 1978 *Collected papers -1* Madurai: Muthu Patip-pakam.

Sivaramamurthy, N. 1977 "Address - A system in a Telugu Village: Class, Caste consciousness", *Seminar on Sociolinguistics*, Hyderabad: Telugu Academy.

——— 1980 "Social mobility and Language Variation", *Sociolinguistics and Dialectlogy* (Seminar papers), Ed. by S. Agesthialingom and K. Karunakaran, Annamalai nagar: Annamalai University.

SomasekaranNair, P. 1975 "Comments on D. P. Pattanayak's paper 'Caste and Language'" *IJDL* 5.1.:68-70.

Subramoniyam, V.I 1971 "History of Tamil", *Souviner*, First All India Conference of Dravidian Linguistics, Ed. by A. P. Balakrishnan, Trivandrum : University of Kerala.

——— (ed) 1973 *Seminar on Dialectology*, Trivandrum University of Kerala.

Swarajya Lakshmi, V. 1977 "Some Sociolinguistic observation on Cuddappa Dialect," *Seminar on Sociolinguistics*, Hyderabad: Telugu Academy.

Trudgill, P. 1974 *The Social Differentiation of English in Norwich*, London: OUP.

Upadhyaya, U. P. 1975 "Comments on D. P. Pattanayak's paper 'Caste and Language'" *IJDL* 5.1 : 79-81.

மைதிலி - ஒரு மொழியியல் வரலாறு

எஸ். பூபதி
மொழி அலுவலகம், கல்கத்தா

1. முன்னுரை

மைதிலி அல்லது திர்ஹூத்தியா என்று அழைக்கப்படும் இந்த மொழி பீஹார் மாநிலத்தில் முஜாபர்பூர், தர்பங்கா, சகாரா என்ற மாவட்டங்களிலும், நேபாளத்திலும் பேசப்படுகின்றது. மைதிலி ஒரு தனிமொழியா அல்லது ஒரு வட்டாரக் கிளைமொழி மட்டுமேயா என்பது மொழியியலாளர் மத்தியில் சர்ச்சைக்குரிய பிரச்சனையாக உள்ளது. மைதிலி பேசப்படும் பகுதி கிழக்கிந்தியாவின் "கலாச்சாரத்தின் உறைவிடமாக" (culture-seat) இருந்ததென்றும், ''இந்திய இசைக் காவியத்தின் அதி உன்னத மலர்கள் பூத்துக் குலுங்கிய'' மொழி மைதிலி என்றும் சட்டர்ஜி (1926 : 103) கூறுகிறார். இலக்கியம், கலை போன்ற துறைகளில் மிகச்சிறப்பாக வளர்ந்திருக்கும் மைதிலி, கால ஓட்டத்தில் தனி மொழித் தகுதியை உருவாக்கிக் கொள்ள இயலவில்லை ஒரு கால கட்டத்தில் மைதிலி இலக்கியத்தை பெங்காளி இலக்கியம் என்றும், கீழ்த்

திசை ஹிந்தியின் (Eastern Hindi) இலக்கியம் என்றும் கூட அறிஞர்கள் கருதினர் (Hoernle, 1880 : XXXV). மைதிலி பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களையும், எதிர்கருத்துக்களையும் நோக்குங்கால், இந்த மொழி பற்றிய ஒருமித்த சிந்தனையை ஏன் இவர்கள் தவற விட்டார்கள் என்பது புலப்படும். மொழியியல் வரலாற்று மதிப்பீட்டில் அறிஞர்கள் கொண்டிருந்த கருத்துக் களைத் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. ஜான் பீம்ஸ் (John Beams)

ஜான் பீம்ஸ் எழுதி வெளியிட்ட இரண்டு நூல்கள் (1867,1872) இந்தோ-ஆரிய மொழிகளைப் பற்றிப் புதிய சிந்தனை யையும், தீவிர கருத்துக்களையும் தூண்டுவனவாய் அமைந்தன. இவர் இந்தோ - ஜெர்மானிக், செமிட்டிக், துரானியன் என்று ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் வழங்கும் மொழிக் குடும்பங்களை வகைப்படுத்துகிறார். ஹிந்தி உட்பட எட்டு பிரிவுகளை இந்தோ-ஜெர்மானிக் மொழிக் குடும்பத்தில் சுட்டிக்காட்டி, ஹிந்தி மொழியின் ஒரு கிளைமொழியே மைதிலி என்கிறார். இவர் காலத்து க்கும் முற்பட்ட கோல்ப்ருக் (Colebrooke, 1801), கேரி (Carey, 1816), பெர்ரி (Perry, 1853) போன்ற அறிஞர்கள் மைதிலியை பெங்காளியின் ஒரு வட்டாரக் கிளைமொழி என்று வகைப் படுத்தினர். மைதிலியை பெங்காளியின் 'பிடி'யிலிருந்து வெளிப் படுத்தி, ஹிந்தியின் கிளைமொழி என்று கூறிய முதல் மொழி யியலாளர் பீம்ஸ் ஆவார். பீம்ஸின் இந்தக் கருத்தை மைதிலியை "ஹிந்தி ஓநாய்க்கு" (Brass, 1974) இரையாக்கிய முதல் மொழியியல் முடிவு என்றும் கூறலாம்.

3. ஹார்ன்ல் (Rudolf Hoernle)

ஹார்ன்ல் (1880) ஹிந்தியின் கிளைமொழியே மைதிலி எனக் கூறுகிறார். ஆனாலும் மைதிலி பெங்காளியின் கிளை மொழியோ என்ற ஐயப்பாடும் இவருக்கு இருந்தது. "கீழ்த்திசை ஹிந்தியின் (Eastern Hindi) கிளைமொழி என்று மைதிலியைக் கூறுவதை விட, பெங்காளியின் கிளைமொழி என்று கூறலாமோ

என நான் ஐயப்படுகிறேன். இறந்த காலங்காட்டும் மைதிலி வினை முற்றுக்கள் பெங்காளி மொழியுடன் மிகவும் ஒத்துப் போவதுடன், கீழ்த்திசை ஹிந்தியினின்றும் பெரிதும் மாறுபடுகின்றன.''

ஹிந்தி வழங்கும் பகுதியை கீழ்த்திசை ஹிந்தி, மேல்த்திசை ஹிந்தி (Western Hindi) என்று இரு வகையாகப்பிரித்து கீழ்த்திசை ஹிந்தியின் நான்கு கிளைமொழிகளுள் ஒன்றாக மைதிலியை இவர் குறிப்பிடுகிறார். ஹிந்தியை கிழக்கு, மேற்காக இவர் பிரித்துக் காட்டுவதற்கான காரணம் எளிதானது. எட்டு பெரும் வட்டாரக் கிளை மொழிகளை உள்ளடக்கிய இந்த நிலப்பரப்பு மேற்கே பஞ்சாபியையும், கிழக்கே மைதிலியையும் வட்டாரக் கிளை மொழிகளாகக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு 'கிளைமொழிகளுக்கும்' இலக்கணக் கூறுகள் பெரிதும் பிளவுபட்டு மொழியியல் கணிப்பில் இரண்டு வேற்று மொழி களாகவே பஞ்சாபியும், மைதிலியும் நமக்கு அறிமுகமானாலும், இவை எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடக் கீழ்த்திசை ஹிந்தி, மேல்த்திசை ஹிந்தி என்ற பெயர்கள் இவருக்கு எளிதாக அமைந்தன. ஹிந்தி மூன்று வகை பேச்சு வழக்குகளைக் கொண்டிருப்பதாக இவர் கூறுகிறார். அவை யாவன: உயர்நிலை ஹிந்தி (High Hindi) அல்லது உருது, மேல் திசை ஹிந்தி, கீழ்த்திசை ஹிந்தி என்பனவாகும். உயர்நிலை ஹிந்தி அல்லது உருது ''எங்குமே தாய்மொழி வழக்கில் இல்லை. இலக்கிய மொழியாகவும், நகர்ப்புற மக்களும, கற்றோரும் பயன் படுத்தும் மொழியாகவும் மட்டுமே அமைந்துள்ளது. இதையே முஸ்லீம் மதத்தினர் பேசும் போது உருது எனவும், ஹிந்து மதத் தினர் பேசும் போது ஹிந்தி எனவும் குறிப்பிடுகின்றனர்'' Hoernle, 1880 : VII).

உயர்நிலை ஹிந்தி எந்தபகுதியிலும் தாய்மொழியாக அமையாமையால் இதைப்பற்றி ஹார்ன்ல் விரிவாகக் கூறவில்லை. தாய்மொழி வழக்கு நிலையில் உள்ள மேல்திசை ஹிந்தி, கீழ்த் திசை ஹிந்தி இரண்டும் கொண்டுள்ள வட்டாரக் கிளைமொழி களை கீழ்க்காணுமாறு இவர் வகை செய்கிறார்.

மே.ஹிந்தி கிளைமொழிகள் :	கீ.ஹிந்தி கிளைமொழிகள்:
1. மேல்த்திசை ராஜ்புதனா (Western Rājpútānā)	1. பைஸ்வாடி (Baiswāṛi)
2. கீழ்த்திசை ராஜ்புதனா (Eastern Rajpútānā)	2. போஜ்பூரி (Bhojpúri)
3. ப்ரஜ் பாஷா (Braj Bhāshā	3. மைதிலி
4. கனௌவ்ஜி Kanauji)	4. மாகத் (Māgadh)

மைதிலியைப் பற்றி ஹார்னலுக்கு முற்பட்ட அறிஞர்களின் கருத்துக்களோடு இவர்தம் கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கீழ்க்காணும் நிலைமை புலப்படும். ஹிந்தியின் கிளைமொழியே மைதிலி என்று கூறும் பீம்ஸின் கருத்தோடு ஹார்ன்ல் ஒத்துப் போகிறார். கீ. ஹிந்தி, மே.ஹிந்தி என்று ஹிந்திப் பகுதியை இரண்டாகப் பிரித்து, மைதிலியை கீ. ஹிந்தியின் கிளைமொழி என்று ஹார்ன்ல் கூறினாலும், பெங்காளிக்கும் மைதிலிக்கும் உள்ள ஒற்றுமை மைதிலி பெங்காளியின் கிளை மொழியோ என்ற ஐயப்பாட்டையும் இவர் ஆய்வில் தூண்டியுள்ளது.

4. கெல்லாக் (S.H. Kellogg)

ஹார்னலின் 'மே.ஹிந்தி, கீ.ஹிந்தி' என்ற பிரிவினை இவரும் ஏற்றுக் கொண்டு ஹிந்தி நிலப்பரப்பில் நான்கு முக்கியமான கிளைமொழிகள் வழங்குவதாகக் குறிப்பிடுகிறார். அவை யாவன : (1) ராஜ்புதன கிளைமொழிகள், (2) ஹிமாலயக் கிளைமொழிகள், (3) தோவாப் கிளைமொழிகள், (4) பூர்பி அல்லது கீழ்த்திசைக் கிளைமொழிகள் (அவதி, ரிவாலி, போஜ்பூரி, மகதி, மைதிலி) என்பனவாகும். மைதிலியைப் பற்றி மிக விரிவாக இவர் கூறாவிடினும் கீ.ஹிந்தியின் ஒரு கிளைமொழியே இது என்பது இவரது திண்மையான கருத்து.

5. கிரியர்சன் (G.A. Grierson)

கிரியர்சன் மைதிலி பற்றி எழுதி வெளியிட்ட இரண்டு நூல்களிலும் (1880, 1883) மைதிலியின் 'மொழித் தன்மை' பற்றி

முரண்பட்ட கருத்துக்களைக் கூறுகிறார். தற்போதைய பெரும் பாலான அறிஞர்களால் இவரது கருத்துக்கள் குறை கூறப்பட் டாலும், இவரது நூல்கள்தாம் மைதிலி பற்றிய ஆதார நூல்கள் என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

மைதிலி, மகதி, போஜ்பூரி ஆகிய கிளைமொழிகளைக் குறிப் பிடப் 'பிஹாரி' என்ற புதுப்பெயரை இவர் அறிமுகப்படுத்துகிறார். இந்த மூன்றையும் 'பிஹாரி மொழி' என்று அழைத்ததற்காகவே, இவருக்குப் பிறகு தோன்றிய அறிஞர்கள் இவர் ஆய்வை மிகவும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். "மைதிலி என்பது 'பிஹாரி' என்று அழைக்கப்படும் ஒரு சிறு மொழிக்கலவை என்ற எண்ணம் நம் அறிஞர்களிடையே நிலவுகிறது. இத்தகைய எண்ணத்துக்கு முக்கியக் காரணம் ஸர்ஜார்ஜ் கிரியர்சன் போன்ற ஆற்றல் மிக்க ஒரு ஆங்கிலேயர் இந்தக் கலைச்சொல்லைக் கண்டு பிடித்து "இந்திய மொழிகளின் ஆய்வு (Linguistic Survey of India) என்ற நூலின் மூலம் பிரபலப்படுத்தியதுதான்" (Misra, 1969).

5.1 'கிழ்த்திசை கார்டியன்' என்றழைக்க கிரியர்சனின் தயக்கம்

இக்கட்டுரையின் முற்பகுதியில் ஹார்ன்ல் மைதிலி போன் றவை கீழ்த்திசை கார்டியன் அல்லது கீழ்த்திசை ஹிந்தியின் கிளைமொழிகள் என்று குறிப்பிட்டதைக் கண்டோம். இரண்டு காரணங்களால் கிரியர்சன் இந்தப் பெயரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார், அவையாவன "(1) வங்காளம் முதல் 'ஔத்'(Audh) வரையுள்ள சிறு நிலப்பரப்பில் மராத்தி முதல் அஸ்ஸாமி வரை யான மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றை எவ்வாறு புது இந்தோ - ஆரிய மொழிகள் என்று அழைக்க இயலும்? (2) இப்படிக் கூறுவதால் துவோப் (Doab) அல்லது பிரஜ் பாஷாவுடன் மைதிலி போன்றவற்றையும் ஒப்புமைப்படுத்தி இவை எல்லாமே நெருங்கிய கிளை மொழிகள் என்று முடிவு செய்ய வேண்டும். ஹிந்தியுடன் மைதிலி போன்றவற்றை வர லாற்றுப் போக்கில் ஒத்துப் பார்க்க இயன்றாலும், மைதிலி வழக் கில் நிலவும் வினைமுற்றுக்கள் மருவி, விரிந்து மிகப்பெரும் வேறு பாடுகளுடன் செயல் படுகின்றன. ஹிந்திக்கும், மைதிலிக்கும்

வேர்ச் சொற்கள் மட்டுமே பொதுவாக அமைந்துள்ளன. மற்ற வகை வேறுபாடுகள் துல்லியமாகப் புலப்படுகின்றன.'' (Grierson, 1883 : 1).

5.2 'பிஹாரி' என்று கூறுவதற்கான காரணங்கள்

'பிஹாரி' என்ற சொல் மைதிலி போன்ற பேச்சு வழக்கு களைக் குறிப்பிட கீழ்க்கண்ட நான்கு முக்கியக் காரணங்களால் தேவையாகிறது என்பது இவரது கருத்து. அவையாவன–

1. '' 'பெங்காலி', 'பஞ்சாபி' போன்றப் பெயர்களைப் போல் இதுவும் ஒரு வட்டாரப் பெயராகும்.

2. இந்தப் பெயரால் மராத்தியை முழுமையாகக் குறிப்பிட இயலாது. ஏனென்னில் 'பேரார்' (Beror) பகுதியில் வழங்கும் 'தக்கிணி' (Dakhani) கிளைமொழிகளையும் கூட மராத்தி என்ற பெயராலேயே குறிப்பிட இயலும்.

3. 'பிஹாரி' என்றழைக்கச் சரித்திரச் சான்றுகள் இருக்கின் றன. பண்டைக் காலத்தில் இப்பகுதியில் மிக அதிகமாக பௌத்த விஹாரங்கள் பரவி இருந்தன. 'பௌத்த விஹார்' என்ற சொல்லிலிருந்தே 'பிஹார்' என்ற சொல் பிறந்துள்ளது. ஜைனர்களாலும், பௌத்தர் களாலும் பேசப்பட்ட மொழியே 'பிஹாரி' ஆகும்.

4. ஹிந்துஸ்தானத்தின் கீழ்ப்பகுதியில் பேசப்படும் கிளை மொழிகளுள் மைதிலி தவிர மற்றவை இலக்கிய வள மற்றவை. இந்நிலையில் 'பிஹாரி' என்றச் சொல் இக்கிளை மொழிகளுக்கு ஒரு உயர்வையே தரும்.''

5.3 பிஹாரி மொழிகளின் தோற்றம்

மாகதி ப்ராகிரத் (Māgadhi prakrit) என்ற மொழியில் இருந்து தோன்றிய பெங்காளி, ஒடியா, அஸ்ஸாமி போன்ற மொழிகளைப் போல் பிஹாரியும் ஒன்று. ஏறத்தாழ 2000 ஆண்டு களுக்கு முன்னர் 'சௌராசேனி' (Sauraseni), 'மாகதி (Māgadhi,)

என்ற இரண்டு பிராகிரத மொழிகள் வழக்கில் இருந்தன. சௌரசேனி ஏறத்தாழ மேல்த்திசை கார்டியன் மொழிகளையும் (Western Gaudian languages), மாகதி கீழ்த்திசை கார்டியன் மொழிகளையும் (Eastern Gaudian languages) குறிப்பனவாய் இருந்தன. சௌராசேனியில் இருந்து ஹிந்தியின் கிளை மொழிகளான பஞ்சாபியும், சிந்தியும், சற்று பிற்பட்ட காலத்தில் குஜராத்தியும் பிரிந்தன. மாகதியில் இருந்து பிஹாரியின் கிளை மொழிகளான ஒடியாவும், பெங்காளியும், சற்று பிற்பட்ட காலத்தில் அஸ்ஸாமியும் பிரிந்தன (Grierson, 1883:7).

5.4 பிஹாரியின் கிளை மொழிகள்

மைதிலி, மாகதி, போஜ்பூரி ஆகியன பிஹாரியின் கிளை மொழிகயாகும். இலக்கணக் கூறுகளின் சான்றுகளால், மைதிலியையும் மாகதியையும் ஒரு பிரிவாகவும், போஜ் பூரியை மற்றொரு பிரிவாகவும் கொள்ளலாம் என்பது இவர் கருத்து. கீழ் உள்ள வரைபடம் பிஹாரி மொழியின் கிளை மொழிகள் தோன்றிய விதத்தை எடுத்துக் காட்டுகிறது (Grierson, 1903:3).



5.5. மைதிலி – தனிமொழியா கிளை மொழியா?

பிஹாரியின் கிளைமொழிகளுள் இலக்கிய வளமுள்ள ஒரே கிளை மொழி மைதிலி என்று கிரியர்சன் கூறுவதை மேலே பார்த்தோம். ''பிஹாரி கிளைமொழிகள் ஒவ்வொன்றையும் தனி

மொழிகளாக ஏற்றுக் கொள்ளலாம்'' என்று வேறு ஓர் இடத்தில் 1883:7) இவர் சுட்டிக் காட்டும்போது, இவரது கருத்துக்களில் தோன்றும் முரண்பாடுகள் விளங்குகின்றன.

மைதிலி தனிமொழியே என்று அழுத்தமாக இவர் கூறுவதை நாம் இப்போது பார்ப்போம்.

''மைதிலி ஒரு கிளை மொழி இல்லை. இது ஒரு தனி மொழியே. பீஹாரின் வட பகுதியில் வாழும் 7 லட்சத்துக்கும் அதிகமான மக்களின் தாய்மொழி இது. இந்த மக்கட்தொகையில் 5 லட்சத்துக்கும் மேலானோர் ஹிந்தி அல்லது உருது மொழியைப் பேசவோ, எளிதாகப் புரிந்து கொள்ளவோ இயலாதவர்கள். இந்த மொழி சொல் அமைப்பு, இலக்கண விதிகள் இரண்டிலுமே ஹிந்தி, பெங்காளி மொழிகளில் இருந்து பெரிதும் வேறுபடுகிறது, மராத்தி, ஒடியா மொழிகள் ஹிந்தி, பெங்காளி போன்றவையினின்றும் வேறுபட்ட தனிமொழிகளாக இருப்பது போன்றே இதுவும் தனிமொழியாகும். பழக்க வழக்கங்கள், இலக்கிய வளர்ச்சி போன்ற பெருமை தரும் எல்லா அமைப்பாலும் இது ஒரு தனிப்பகுதியாகவே விளங்குகிறது'' (1880:II).

இவ்வாறு ஆணித்தரமாக மைதிலியின் தனி மொழித் தன்மை பற்றிக் கூறும் இவர் 'இந்திய மொழிகளின் ஆய்வு' (Linguistic Survey of India) என்ற நூலில் மைதிலியை ஒரு கிளை மொழி நிலைக்கே கொண்டு வந்து விடுகிறார். இதற்கான காரணமும் எளிதானதே. இந்நூலில் பிஹாரி மொழி பற்றி இவர் எழுதும் போது, இவரது ஆர்வம் போஜ்பூரி, மைதிலி, மகதி இவைகளில் காணப்படும் மொழியியல் ஒற்றுமைகளைச் சுற்றியே இருந்தது. இதனாலேயே இவைகளை பிஹாரியின் கிளைமொழிகள் என்று முடிவு செய்கிறார். 'தேசிய உணர்வு' (Nationality), 'இலக்கியத் தொன்மை' ஆகியன மொழியின் தனித் தன்மையை நிர்ணயிக்கும் அளவுகோல்கள் என்று 'இந்திய மொழிகளின் ஆய்வு' முதற் பகுதியில் இவர் கூறுகிறார். ஆனால் மைதிலி பற்றிக் கூறும் போது இந்த அளவுகளைப் புறக்கணித்து மொழியியல் ஒற்றுமைகளை மட்டுமே கவனத்தில் கொள்கிறார். 'தேசிய உணர்வு', இலக்கியத் தொன்மை' போன்ற அளவு கோல்களால் மைதிலியின்

நிலை தீர்மானிக்கப்பட்டு இருக்குமானால், கிரியர்சன் இதை தனிமொழி என்றே கூறி இருப்பார்.

6. சட்டர்ஜி (S.K. Chatterji)

மைதிலியின் தனிமொழித் தன்மையைப் பற்றித் தீர்க்கமாக வரையறுத்துக் கூறும் முதல் மொழியியல் அறிஞர் சட்டர்ஜியே ஆவார். 'பெங்காளி மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' (1926) என்ற இவரது நூலில் மைதிலி பற்றிய விளக்கமான குறிப்புக்கள் கிடைக்கின்றன. கீழ்த்திசை ஹிந்தி என்பது அவதி (Awadhi), பாகேலி (Bagheli), சட்டிஸ்கடி (Chattis - gaṛhī) போன்ற கிளை மொழிகளையே உள்ளடக்கியது என்பது இவரது கருத்து. மேலும் போஜ்பூரி, மைதிலி, மகதி ஆகியவற்றின் இலக்கணக் கூறுகள் இவை மூன்றுமே தனிமொழிகள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மத்திய மாகத் பிரிவில் (Central Magadhan Group) அடங்கும் மைதிலி ஒரு வளர்ந்த தனிமொழி என்பது இவரது தெளிவான கருத்து.

இந்தோ - ஆரிய குடும்பத்தின் ஒரு பிரிவில் தோன்றிய மொழி களே போஜ்பூரி, மகஹி, மைதிலி, ஒடியா, பெங்காளி, அஸ்ஸாமி ஆகியன. இந்த மொழிகள் பிரிவதற்கு முன்பிருந்த நிலையை 'மாகதி' (Magadhi) என்று கூறலாம். குறிப்பிடும்படியான இலக்கணக் கூறுகள் மாகதியில் உருவான காலத்தில் தோன்றிய மொழியே 'மாகதி அபப்ரம்சா' (Māgadhi Apabhrasṁa) ஆகும். மாகதி அபப்ரம்சாவின் அண்மைக்கால மொழிகள் பெங்காளி, அஸ்ஸாமி, ஒடியா, மகதி, மைதிலி என்பன. இவை எல்லா வற்றையும் சட்டர்ஜி கீழ்க்காணும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகிறார்.

1. கீழ்த்திசை மகதன் : பெங்காளி, அஸ்ஸாமி, ஒடியா

2. மத்திய மகதன் : மைதிலி, மகஹி

3. மேல்த்திசை மகதன் : போஜ்பூரியா (நாகபூரியா அல்லது சதானியுடன்)

கீழ் உள்ள வரைபடத்தில் மைதிலி மகத மொழியாகக் காட்டப்படுவதை அறியலாம் (Chatterji 1926 ; 94).



மைதிலி மொழியின் வளர்ச்சியைப் பற்றிக் கூறும் போது, ஒடியா, பங்காளி மொழிகளினின்றும் மைதிலியின் அமைப்பு பெரும் அளவில் மாறுபட்டு இருப்பதும், இம்மூன்று மொழிகளிலும் இத்தகைய மொழியியல் கூறுகளின் வேறுபாடுகள் ஏறத்தாழ கி. பி. 12 நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார் சட்டர்ஜி. இம்மூன்று மொழிகளிலும் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியங்களை ஒத்து நோக்கினால் இம்மொழிகளுக்குள் தற்போது காணப்படும் வேறுபாடுகள் அக்காலத்திலும் இருந்தமை புலப்படும். மாகதியின் கிளைமொழிகள் என்ற நிலையினின்றும் வேறுபட்டு, தனித் தனி

மொழிகளாக கி. பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே இவைகள் வளர்ந்துள்ளன (1926 : 26).

7. சுபத்ர ஜா (*Subhad a Jhā*)

ஜா தன்னுடைய ''மைதிலி மொழியின் வடிவமைப்பு'' (1958) என்ற நூலில் இது ஒரு தனி மொழியே என்று வலியுறுத்துகிறார். மைதிலியும், அவதியும் சொல்லியல் அமைப்பில் பொதுத்தன்மைகளைக் கொண்டிருப்பதோடு, இவை இரண்டும் பெங்காளி, ஒடியா, அஸ்ஸாமி ஆகியவற்றினின்றும் பெரிதும் வேறுபடுகின்றன. பலவகை இலக்கணக் கூறுகள் மைதிலியின் தனித்தன்மையை உணர்த்துகின்றன. வினை முற்று விகுதிகள், வினை முற்றில் சிக்கலான உயர்திணைப் பாகுபாடுகள், உயர்திணைப்பால்



காட்டும் விகுதிகள், எழுவாய், செயப்படுபொருள் இரண்டினையும் சுட்டிக்காட்டும் அமைப்புமுறை என்ற பல்வேறு இலக்கணக் கூறுகளின் சான்றுகளினால் மைதிலி தனிமொழியே என்பது இவரது கருத்து.

முன்பக்கம் உள்ள வரைபடத்தின் மூலம் இந்தோ- ஆரிய மொழிக் குடும்பத்தில் மைதிலியின் இடத்தை ஜா குறித்துக் காட்டுகிறார்.

8. முடிவுரை

மைதிலி மொழியியல் வரலாற்றில் நிலவும் பல்வேறு கருத்துக்களை கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம். பீம்ஸ் மைதிலியை ஹிந்தியின் கிளைமொழி என்று குறிப்பிடுகிறார். ஹார்ன்ல் மைதிலியை கீழ்த்திசை ஹிந்தியின் கிளைமொழி என்று கூறினாலும், பெங்காளின் கிளைமொழியாகவும் இது இருக்கக் கூடும் என்ற ஐயப்பாட்டை வெளியிடுகிறார். மைதிலி ஹிந்தியின் கீழ்த்திசை கிளைமொழி என்பது கெல்லாகின் கருத்தாகும். கிரியர்சன் தன் காலத்துக்கு முற்பட்ட ஆய்வுகளை ஏற்றுக் கொள்ளாததுடன், 'பிஹாரி' என்ற புதுப்பெயரால் மைதிலி, மகஹி, போஜ்பூரி ஆகியவற்றை அழைக்கிறார். மைதிலியைப் பற்றிய அவரது கருத்துக்களில் முரண்பாடுகள் காணப்படுவதை நாம் காண்கிறோம். தனிமொழித் தன்மையைத் தீர்மானிக்க 'தேசிய உணர்வு', 'இலக்கியத் தொன்மை' ஆகியவை அளவுகோல்கள் என்று 'இந்திய மொழிகளின் ஆய்வு' என்ற நூலின் முன்னுரையில் அவர் கூறினாலும், மைதிலியைப் பொறுத்த வரை இந்த அளவுகோல்களை அவர் கையாளவில்லை. சட்டர்ஜி தனக்கு முந்திய எல்லா அறிஞர்களின் கருத்துக்களினின்றும் மாறுபட்டு, மத்திய மகதன் பிரிவைச் சேர்ந்த ஒரு தனிமொழி மைதிலி என்கிறார். மைதிலி மொழியின் பலவேறு இலக்கணக் கூறுகளை ஆராய்ந்து இது தனிமொழியே என ஜா தீர்மானிக்கிறார்.

துணை நூல்கள்

Brass, R.Paul. 1974 *Language Religion and Politics in North India*, (First Indian edition 1975), Vikas Publishing House Pvt. Ltd., Delhi.

Chatterji, Suniti Kumar. 1926 *The origin and development of the Bengali language* Part 1,(First published 1970), George Allen &Unwin, London.

Colebrooke, M.T. 1802 "On the Sanskrit and Prakrit Languages" in *Asiatic Researches*, Vol. VII-7

Grierson, G.A. 1880 *An introduction to the Maithili dialect of the Bihari language as spoken in North Bihar*, Part 1 (Second edition published in 1909) Asiatic Society, Calcutta.

——— 1883. *Seven grammars of the dialects and sub dialects of the Bihari language*, Part 1,Bengal Secretariat Press, Calcutta.

——— 1903 *Linguistic Survey of India*, Vol V, Part II, Bihari & Oriya Languages (Reprinted in 1968), Munshi Ram Motilal Banarsidass, Delhi.

Hoernle, A.F.R. 1880 *A comparative Grammar of the Gaudian Languages with special reference to the Eastern Hindi*, Trubner & Co. London

Jha, Subhadra. 1958 *The Formation of the Maithili Language*, Luzac & Company. London.

Kellogg. S.H. 1875 *A Grammar of the Hindi Language*, Routledge & Kegan Paul Ltd, London.

Misra, Jayakanta. 1969 "The case of Maithili" in *Language and Society*, Indian Institute of Advanced Study, Simla.

மொழியியல் 7.3 & 4 (1984)

விளிமரபில் விரவுத்திணை

செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. விளிமரபின் அமைப்பு

தொல்காப்பியர் விளிமரபையும் திணை அடிப்படையில் உயர் திணை, விரவுத்திணை, அஃறிணை என்ற வரிசையில் வருணிக்கத் துவங்கி உயர்திணைப் பெயர்களை ஈற்று எழுத்து (உயிர், மெய்) அடிப்படையில் ஒவ்வொரு ஈறாக முதல் முப்பத்திரண்டு சூத்திரங் களில் விவரித்துள்ளார். அடுத்து விரவுத்திணைப் பெயர்களை மாட் டேறு (முன்னே சொன்னதைப் போலக் கூறுதல்) முறையில் ஒரு சூத்திரத்திலும் (சூ.33) அஃறிணைப் பெயர்களை உயிரீறு, மெய்யீறு இரண்டும் சேர்த்து ஒரு சூத்திரத்திலும் (34) புறனடையை மூன்று சூத்திரத்திலும் (35-37) வருணித்து விளிமரபை முடித்து விட்டார்.

2. விரவுப்பெயர்கள்

திணை அடிப்படையில் வருணிக்கும் போது பெயரியலில் விரவுத்திணைச் சொற்களாக விவரித்த முறைப் பெயர்களையும்

(ஐகார ஈறு-சூ 9; ளகர ஈறு-சூ 19; னகர ஈறு-சூ 30) தான்(சூ-20) நீயிர் (சூ-26 ஆகிய இரண்டையும் உயர்திணைச் சொற்களை வருணிக்கும்போது அல்லது உயர்திணைப் பெயர்களின் வருணனைக்குள்ளே விவரித்துள்ளார். மேலும் விரவுப் பெயர்ச்சொற்களை அஃறிணை விரவுப் பெயர் (சூ-33) என்ற தொடராலேயே குறிப்பிட்டுள்ளார். எனவே விரவுத்திணை பற்றி இரண்டு கேள்விகள் இங்கு எழுகின்றன. அவையாவன: 1. விரவுப் பெயர்களை அஃறிணை விரவுப் பெயர் (சூ33) என்று குறிப்பிட்டதன் காரணம் என்ன? 2. சில விரவுப் பெயர்களை உயர்திணைப் பெயர்களின் வருணனைக்குள்ளே அடக்கிக் கூறியகாரணம் என்ன? இந்த இரண்டு பிரச்சனைகளையும் உரையாசிரியர்களே நினைத்துப்பார்த்து பதில் சொல்லியுள்ளார்கள்.

அவர்களுடைய விவாதங்கள் விரவுப் பெயர் பற்றிய விளிமரபு சூத்திரத்தை (33) விளக்குவதாக அமைந்து விரவுத்திணை பற்றிய புதிய கருத்தைப் புலப்படுத்துவதாக இருப்பதால் 'விளிமரபில் விரவுத்திணை' என்ற தலைப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது.

3. அஃறிணை விரவுப்பெயர்

அஃறிணைவிரவுப்பெயர் என்று விரவுத்திணையைக் குறிப்பிட்ட காரணத்தைப் பார்க்க வேண்டும். ஏனெனில் அத்தொடர் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர்க்கு விரவுப் பெயரின் மாற்றுப் பெயராக-இலக்கணரீதியில் கூறினால் இனம் சுட்டாத அடையை உடைய பெயராகத்தோன்றச் சேனாவரையர்க்கும், தெய்வச்சிலையார்க்கும் இனம் சுட்டும் அடையாகப் புலப்பட்டு உயர்திணை விரவுப்பெயர் என்ற மற்றொருவகை (அதாவது விரவுப் பெயர்களில் உயர்திணை விரவுப்பெயர், அஃறிணை விரவுப் பெயர் என்ற இரண்டுவகை) இருப்பதாகத் தோன்றியுள்ளது. அதனால்தான் இளம்பூரணர் கட்சியார் முறைப் பெயர்களை உயர்திணைப் பெயர்களோடு சேர்த்துச் சொன்னது ஏன் என்ற வைப்பு முறைப் பிரச்சனை மட்டும் இருப்பதாகக் கருதி விவாதித்துள்ளார்கள். ஆனால் சேனாவரையருக்கு அந்த பிரச்சனையே எழவில்லை. ஆயினும் இந்த விவாதங்களையும் தொல்காப்பியம் முழு

மையும் மனதில் கொண்டு பார்க்கும் போது விரவுத்திணைப் பெயர்களில் சில சிறப்புப் பண்புகளை உள்ளத்துள் கொண்டு அதற்கு இங்கு புதிய விளக்கம் ஒன்று தொல்காப்பியர் கொடுத்திருக்கிறாரோ என்று ஊகிக்கத் தோன்றுகிறது. அதுபற்றி பிற்பகுதியில் விளக்கப்படும்.

3.1. தொல்காப்பியர்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் இரண்டு தடவையும் (தொகை மரபு-13, 15.9) சொல்லதிகாரத்தில் மேலே குறிப்பிட்ட விளிமரபில் ஒரு முறையும் 'அஃறிணை விரவுப்பெயர்' என்பதைக் கையாண்டுள்ளார்.

எழுத்ததிகாரத்தில் இரண்டு இடத்திலும் உயர்திணை விரவுப் பெயர்களைக் கூறிவிட்டே அஃறிணை விரவுப்பெயரைப் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாகத் தொகைமரபில் உயர்திணைப் பெயர்களை இரண்டு சூத்திரத்தில் (11,12) கூறிய பிறகு அஃறிணை விரவுப் பெயர் இயல்புமார் உளவே (13) என்ற சூத்திரம் அமைத்துள்ளார் இதற்கு அடுத்த சூத்திரம் (தொகை மரபு-14) மூன்றாம் வேற்றுமை பற்றியது. ஆயினும் தம்மினாகிய தொழிற்பெயர் என்பதால் செயப்பாட்டு வினைகளைக் [கோட்படு, (கொள்ளப்படு), சாரப்படுமுதலியன] கொடுத்து அஃறிணைச் சொற்களையே (நாய், புலி) எழுவாயாகக் கொடுத்துள்ளார்கள். எனவே இங்கு உயர்திணை, விரவுத்திணை, அஃறிணை என்ற வரிசையில் வருணனை காணப்படுகிறது என்பது தெளிவு. அப்படியே தொகைமரபு பதினைந்தாம் சூத்திரத்திலும் இதே வரிசை (உயர்திணை, விரவுதிணை, அஃறிணை என்பது) காணப்படுகிறது.

> உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
> அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையிலும்
> மெய் பிறிதாகிடத்து இயற்கை ஆதலும் (தொகைமரபு 15.8-10)

என்ற வரிகள் உயர்திணை, விரவுத்திணை, அஃறிணை என்ற முறையிலேயே அமைந்துள்ளன. ஆனால் அந்தச் சூத்திரம்

முழுவதும் திணை அடிப்படையில் அமைந்ததாகக் கூற முடியாது. ஆயினும் பொதுவாக அஃறிணைப் பெயர்கள் செயப்படு பொருளாக வரும்போது -ஐ விகுதி பயன்படுத்த வேண்டியதில்லை என்ற பொது விதிக்கு மாறாகச் சில வினைச்சொற்கள் வரும்போது எப்போதும் -ஐ விகுதியைப் பயன்படுத்துவது உண்டு (கதவைத்திற வாயை மூடு போன்றவை). இங்கு அஃறிணை விரவுப் பெயர் வரும்போது உயர்திணை போலவே எப்பொழுதும் ஐகாரம் சேர்ந்தே வரும் என்று கூறுகிறார். 'உயர்திணையோடு அஃறிணை விரவுப் பெயர்க்கும் அவ்வுருபு அவ்வியல்பிலே நிற்றலும்' என்று அஃறிணை விரவுப் பெயர்க்குப் பொழிப்புரை எழுதி, கொற்றனைக் கொணர்ந் தான் என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உதாரணம் கொடுத்துள்ளார்கள். அதாவது 'கொற்றன்' என்பது இங்கு உயர் திணை ஆண்பாலையும், அஃறிணை ஆண்பாலையும் (ஒன்றன் பால்) குறிக்கலாம். 'மெய் பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும்' என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தரும் உதாரணம் 'மண் கொணர்ந்தான் என்பது அஃறிணைக்கு உரியதே. எனவே எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் அஃறிணை விரவுப் பெயரை விரவுப்பெயரின் மாற்றுச் சொல்லாகவே தொல்காப்பியர் கருதுகிறார் என்பது புலப்படுகிறது.

3.2 இளம்பூரணர்

'அஃறிணை விரவுப்பெயர்' என்று எழுத்ததிகாரத்தில் வரும் தொடருக்கு இளம்பூரணர் 'உயர்திணையோடு அஃறிணை விரவுப் பெயர்' என்றே இரண்டு இடத்திலும் (தொகைமரபு, 13. 15.9) பொருள் எழுதியுள்ளார். சொல்லதிகாரத்தில் 'அஃறிணைக்கண் வரும் விரவுப்பெயர்' என்ற நேர் உரையை எழுதினாலும் சாத்தன், சாத்தி ஆகிய இயற்பெயர்களையும் தந்தை, மகள் ஆகிய முறைப் பெயர்களையும் உதாரணமாகக் கொடுத்துள்ளார். எனவே 'விரவுப் பெயர்' என்பதன் மாற்றுச் சொல்லாகவே அஃறிணை விரவுப் பெயர் என்பதைக் கருதுகிறார் என்று கொள்வதில் தவறு இல்லை.

விளிமரபு முழுமையும் பார்த்தால் இளம்பூரணர் உயர்திணை பற்றிய சூத்திரங்களில் (1-32) விரவுப் பெயர் உதாரணங்களைத் தரவில்லை. அதனால் விளிமரபு 24 ஆம் சூத்திரத்தில் கொடுத்த

'மகாஅர்' என்பது முறைப்பெயர்போலத் தோன்றுகிறது. ஏனைய வெல்லாம் பொதுப் பெயர்களாக அமைந்துள்ளன. ஆனால் தொல் காப்பியரே முறைமை சுட்டா மகனும் மகளும் (பெயர்-9.8) என்று பொதுச்சொற்கள் இருப்பதைக் குறித்துள்ளதை நோக்கினால் 'மகாஅர்' என்பதைப் பொதுப் பெயராகக் கருதவேண்டும். இதற்று ஏற்பப் பதிற்றுப்பத்தில் (71.7) குழந்தைகள் (young ones) என்ற பொருளில் அந்தச் சொல் வந்துள்ளதும் குறிப்பிடத் தகுந்தது. எனவே இளம்பூரணர் உயர்திணைப் பெயர்களில் இயற்பெயரையோ, முறைப் பெயரையோ உதாரணம் கொடுக் காததால் அஃறிணை விரவுப் பெயர் என்பதைச் சொல்லதிகாரத் திலும் பொது வான விரவுப் பெயராகவே கருதுகிறார் என்பது புலனாகிறது.

3.3 நச்சினார்க்கினியர்

நச்சினார்க்கினியர் அஃறிணை விரவுப் பெயருக்குக் கொடுத்த விளக்கம் முன்னரே எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. (சண்முகம், 1984 : 161) எழுத்ததிகாரத்தைப் போலவே சொல்லதிகாரத்திலும் 'உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப் பெயர்' என்று பொழிப்புரை எழுதியதோடு அங்கு இயற்பெயரை மட்டுமே அதுவும் ஏகாரம் ஏற்கும் முறைப் பெயர்களை மட்டுமே உதாரணம் கொடுத்துள்ளார். அப்படியே நச்சினார்க்கினியர் இளம்பூரணரைப் போலவே விளிமரபில் வேறு எங்கும் இயற்பெயர்களையோ சினைமுதற் பெயர்களையோ உதாரணம் கொடுக்க வில்லை. எனவே இவருக்கு அஃறிணை விரவுப்பெயர் என்பதற்கு இளம் பூரணர் கருத்தே உடன்பாடு என்பது தெளிவு.

3.4 கல்லாடர்

சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை எழுதிய கல்லாடர் விளி மரபில் 'உயர்திணையோடு அஃறிணை விரவி வரும் பெயர்கள்' என்று பொழிப்புரை எழுதி இயற்பெயரையும் முறைப்பெயரையும் மட்டுமே உதாரணம் கொடுத்துள்ளார். விளிமரபில் வேறு எங்கும் இயற்பெயர்களையோ சினைமுதற் பெயர்களையோ உதாரணம் கொடுக்கவில்லை. எனவே கல்லாடர் இளம்பூரணர், நச்சினார்க் கினியர் ஆகிய இருவரின் கருத்தை ஆதரிப்பதாகக் கொள்ளலாம்.

அதாவது இந்த மூவரும் அஃறிணை விரவுப் பெயர் என்பதற்குப் பொதுவான விரவுப் பெயர் என்றே பொருள் கொண்டுள்ளார்கள என்று கொள்ளலாம்.

3.5 சேனாவரையர்

சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் அஃறிணை விரவுப் பெயரை உயர்திணை விரவுப் பெயரிலிருந்து மாறுபட்டதாகக் கருதுகிறார்கள்.

> சேனாவரையர் விளிமரபு இரண்டாம் சூத்திரத்திலேயே
> உயர்திணை விரவுப்பெயர் ஈண்டு உயர்திணைப் பெயருள் அடங்குதலும் நுண்ணுணர் வினார்க்கு அல்லது அறியலாகாமையின் ஏனோரும் அறிதற்கு அவைகிளக்கப்படும் என்பார் இவ்வென அறிதற்கு விளி-2.2)
> என்றார்.

என்று விளக்கியுள்ளார். இந்தக் கருத்தைத் தெளிவாகவே

> அஃறிணைப் பெயரின் வேறாக அஃறிணை விரவுப் பெயர் என ஆசிரியர் ஓதுதலின் உயர்திணைப் பெயரின் வேறாக உயர்திணை விரவுப்பெயர் ஒன்று உண்டு என்பது அவர் (சேனாவரையர்) கருத்தாயிற்று

என்று சுந்தரமூர்த்தி (கழகப் பதிப்பு இளம்பூரணர் சொல்லதிகாரம் விளக்கவுரை. பக். 290) குறிப்பிட்டுள்ளார். மேலும் சேனாவரையரே விளிமரபு மூன்றாம் சூத்திரத்தில்

> அஃறிணைப் பெயர் ஆகுபெயராய் உயர்திணைக் கண் வந்துழியும் விரவுப்பெயர் உயர்திணைக் கண்வருங் காலும் அவை விளியேற்கும் இடத்து உயர்திணைப் பெயராம் என்றற்கு உயர்திணை மருங்கின் மெய்ப் பொருள் சுட்டிய (விளி-3,2,3) என்றார்.

என்று விளக்கமும்

> சுடர்தொடீ கேளாய் (கலி.51) எனவும் சாத்தீ எனவும் அவை உயர்திணைப் பெயராய் விளியேற்றவாறு கண்டு கொள்க

என்று உதாரணமும் தந்துள்ளார். மேலும் அஃறிணை விரவுப் பெயர் என்ற தொடர் வரும் 3 ஆம் சூத்திரத்தில்

'உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப்பெயரும் விளி கொள்ளுமாறு உணர்த்தி இனி அஃறிணை விரவுப் பெயர் விளி கொள்ளுமாறு உணர்த்துகிறார்'

என்று எழுதிய முன்னுரையே அவர் கருத்தை விரவுப்பெயர்களில் இரண்டு வகை - அஃறிணை விரவுப் பெயர், உயர்திணை விரவுப் பெயர் என்ற இரண்டு வகை- இருப்பதைத் தெளிவுபடுத்திவிடு கிறது. அப்படியானால் உயர்திணைப் பெயர்களை வருணிக்கும் போது பிற விரவுப் பெயர்களை அதாவது இயற்பெயர். சினை முதற்பெயர் போன்றவைகளை உதாரணம் கொடுத்துள்ளாரா என்று பரிசீலிக்க வேண்டும். தொல்காப்பியர் விரவுப் பெயர்களில் முறைப்பெயரை மட்டுமே விதந்து கூறியுள்ளது மேலே குறிப் பிடப்பட்டது. அதனால் பிற விரவுப்பெயர்களான இயற்பெயர் மட்டும் பற்றி விளிமரபு 3 ஆம் சூத்திரத்தில் சேனாவரையர் குறிப்பிட்டதோடு சரி; விளிமரபில் உயர்திணை பற்றிய சூத்திரங் களில் வேறு எந்தச் சூத்திரத்திலும் இயற்பெயர் பற்றியோ சினை முதற்பெயர் பற்றியோ குறிப்பிடாதது அவர் உரையில் காணப் படும் ஒரு குறை என்றே கூற வேண்டும். 'உயர் திணையும் உயர்திணை விரவுப்பெயரும் விளிகொள்ளுமாறு' விளிமரபில் முதல் முப்பத்திரண்டு சூத்திரங்களில் கூறியதாக முப்பத்துமூன்றாம் சூத்திர முன்னுரையில் சொல்லிவிட்டு தொல்காப்பியர் விதந்து சொன்ன இடங்கள் தவிர ஒரே இடத்தில் மட்டும் (சூ-3) இயற் பெயரை விளக்கியது தன்னுடைய கருத்திற்கு ஏற்றமுறையில், சேனாவரையர் உதாரணம் கொடுக்காது போய்விட்டார் என்ற குறையை ஏற்படுத்தி விடுகிறது. இந்த உண்மை தெய்வச் சிலையார் உரையைப் பார்க்கும் போது தெளிவாகிறது.

3.6 தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையாரும் விளிமரபு மூன்றாம் சூத்திரத்தில்

'உயர்திணை மருங்கினுள்ள பொருள் சுட்டிய

என்றமையால் உயர்திணைப் பெயர் என வகுத்து ஓதப்படு வனவும் விரவுப் பெயருள் உயர்திணை குறித்தனவும் கொள்ளப் படும்'

என்று பொதுவாகக் குறிப்பிட்டதோடு உயர்திணை பற்றிய மூன்று சூத்திரங்களில் விரவுப் பெயரையும் சேர்த்து உதாரணம் காட்டி யுள்ளார்.

சூத்திரம்	பொதுப்பெயர்	விரவுப்பெயர்	வகை
3	நம்பி - நம்பீ	சாத்தி - சாத்தீ	இயற்பெயர்
	நங்கை - நங்காய்	தந்தை - தந்தாய்	முறைப் பெயர்
12	சோழன் - சோழா	சாத்தன் - சாத்தா	இயற் பெயர்
	வெற்பன்–வெற்பா		
13 (அண்மைவிளி)	சோழன் – சோழ வெற்பன்–வெற்ப	சாத்தன்–சாத்த	இயற்

எனவே தெய்வச்சிலையார் பொதுவாக உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப்பெயரை உள்ளடக்கியது என்று கருதுகிறார் என்பது தெளிவாகி விடுகிறது.

'கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்' என்ற 32 ஆம் சூத்திரத்தில் (தெய்வச்சிலையார் உரைப்படி எண்) 'அஃறிணைப் பொருள் உணர வரும் விரவுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்ற முன்னுரையும் அஃறிணை விரவுப் பெயர் என்பதற்கு 'அஃறிணைப் பொருள் மேல் வரும் விரவுப் பெயர்' என்ற பொழிப்புரையும் தெய்வச்சிலையார் எழுதி இயற்பெயர் களையும் (சாத்தன் - சாத்தா; சாத்தி - சாத்தீ) சினைமுதற் பெயர் களையும் (குருடன் - குருடா; குருடி - குருடீ) உதாரணம் காட்டி யுள்ளார். எனவே தெய்வச்சிலையார் அஃறிணை விரவுப் பெயர் அஃறிணைக்கு மட்டும் உரியது என்று கருதியதற்கு ஏற்ப உயர் திணைப் பெயர் உயர்திணை விரவுப் பெயர்களையும் உள்ளடக்கும் என்று கருதுகிறார் என்பது தெளிவாகிறது, அந்தக் கருத்தை

மனதில் கொண்டு உரை எழுதும் போது சமயம் நேரும் பொழுது எல்லாம் உயர்திணை விரவுப் பெயர்களையும் காட்டியது தெய்வச் சிலையாரின் தனிச்சிறப்பு ஆகும்.

4. சேய்மை விளியும் விரவுப் பெயர்களும்

விளிமரபில் முன் சூத்திரங்களில் உரையாசிரியர்கள் கொண்ட சொல்பாகுபாடு (உயர்திணை, விரவுத்திணை, அஃறிணை என்ற இளம்பூரணர் பாகுபாடு; உயர்திணை, உயர்திணை விரவுப்பெயர், அஃறிணை விரவுப்பெயர், அஃறிணைப்பெயர் என்ற சேனாவரையர் கொண்ட பாகுபாடு) ஒரே முறையாகக் கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறதா என்று பரிசீலிக்க சேய்மை விளி பற்றிய சூத்திரமே உதவுகிறது, ஏனெனில் அந்தச் சூத்திரத்தில் 'எல்லாப் பெயரும்' என்று ஒரு தொடர் உள்ளது. அங்கு உரையாசிரியர்கள் எப்படிப்பட்ட பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார்கள் என்று பார்ப்போம்.

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அள பிறந்தனவே விளிக்குங் காலை
சேய்மையின் இசைக்கும் வழககத்தானே

என்பதே அந்தச்சூத்திரம் (விளி - 35).

இச்சூத்திரம் உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் விளி ஏற்பனவாகச் சொல்லப்பட்டன எல்லாப் பெயரும் விளிக்கும் இடத்துத் தத்தம் மாத்திரையின் இறந்து இசைத் தனவாம் சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின்கண்

என்று இளம்பூரணர் பொழிப்புரை எழுதி உயர்திணைப் பொதுப் பெயரும் (நம்பி-நம்பீ) விரவுப் பெயரில் இயற்பெயரும் (சாத்தன்-சாத்தா) மட்டுமே உதாரணமாகக் கொடுத்துள்ளார்.

சேனாவரையருடைய பொழிப்புரையும் உதாரணமும் இளம்பூரணரைத் தழுவியதுதான். ஆனால் விளி ஏற்ற பெயரின் வடிவம் மட்டும் மாறியுள்ளது. நம்பீஇ, சாத்தாஅ என்ற சேனா வரையருடைய உதாரணமே சிறந்ததாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில் அளபு இறந்தன என்ற சூத்திரத்தில் கூறியவாறு அள

பெடைப் பெயரே சேய்மை விளியைக்காட்டும் என்பது பொருந்தும். ஆயினும் இருவரும் எல்லாப் பெயரும் என்பதற்கு உயர்திணைப் பெயரையும் விரவுப் பெயரில் இயற்பெயரை மட்டுமே காட்டியது சிறப்பாகக் கொள்ள முடியாது.

நச்சினார்க்கினியர் 'இது முற்கூறிய மூவகைப் பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது' என்பதை முன்னுரையாகக் குறிப்பிட்டு அவர்கள் கொடுத்த உதாரணத்தோடு இரண்டு உயர்திணைப் பெயர்களை மட்டும் (சேரமான் - சேரமாஅன்; மலையமான்–மலையமாஅன்) கொடுத்து 'அளபிறந்து இசைக்கும் வழி இயல்பு அன்றி ஈற்று அயல் எழுத்து நீண்டனவாம்' என்ற விளக்கமும் கொடுத்துள்ளார். நச்சினார்க்கினியரும் ஏனைய விரவுப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் உதாரணமாகக் காட்டாதது குறையே.

கல்லாடர் நச்சினார்க்கினியர் கருத்தை ஆதரித்து ''மேற்கூறிய மூவகைப் பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று' என்பது அவர் வாசகம்) உதாரணங்களுக்கு சேனாவரையரைப் பின்பற்றி நம்பீஇ, சாத்தாஅ என இரண்டு மட்டும் கொடுத்துள்ளார். அதாவது முன்னோர் உரையிலுள்ள குறையை அவர் போக்கவில்லை.

தெய்வச்சிலையார் பொழிப்புரை இளம்பூரணரை ஒட்டியதே. ஆனால் சேய்மை விளிக்கு உதாரணமாக இயற்பெயரை மட்டுமே கொடுத்துள்ளார். ஆயினும் சேனாவரையரைப் பின்பற்றி உதாரணம் கொடுத்துள்ளார்: சாத்தாஅ, கொற்றாஅ. மேலும் இன்னொருஎழுத்து அளபெடை பெற்ற உதாரணங்களையும் கொடுத்து (சாத்தா அஅ, கொற்றா அஅ.) 'அளபிறந்தன' என்றமையான் மூன்று மாத்திரையின் நீண்டு ஒலித்தன என்று கொள்க' என்று விளக்கமும் கொடுத்துள்ளார்.

எல்லாப் பெயரும் என்பதற்கு இரண்டு திணைப்பெயரும் என்று இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகிய மூவரும் பொருள் கொண்டாலும், முதல் இருவரும் உயர்திணைப் பெயரையும் விரவுப்பெயரையும் உதாரணம் கொடுக்கத் தெய்வச்

சிலையார் விரவுப்பெயரை மட்டும் ஏன் உதாரணமாகக் கொடுத்துள்ளார் என்ற கேள்வி எழுகிறது. நச்சினார்க்கினியரும் கல்லாடரும் கொள்கை அளவில் மூன்று திணைப் பெயர்களையும் குறிப்பதாகக் கொண்டாலும் இவர்களும் இளம்பூரணரைப் போல அஃறிணைக்கு ஏன் உதாரணம் காட்டவில்லை என்ற பிரச்சனை இங்கும் எழத்தான் செய்கிறது. பொதுவாக உரையும் உதாரணமும் பொருந்தாது போய்விட்டன. இந்தக் குறைகள் உரையில் உள்ளவையா? அல்லது உரைக்குரிய ஏடுகள் குறைவுடையனவா என்பது புரியவில்லை. முக்கியமாக முன்பகுதியில் கூறிய பாகுபாடு பின்பகுதியில் பின்பற்றப்படவில்லை என்ற குறையும் உரைகளில் அமைந்து விட்டது.

இங்கு பொதுவாக இரண்டு உண்மைகள் சுட்டிக் காட்டத் தகுந்தன. அவையாவன: 1) விளிமரபில் விரவுப்பெயர் பற்றிக் கூறும் சூத்திரத்தில் வந்த அஃறிணை விரவுப்பெயர் என்ற தொடரை இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கல்லாடரும் பொது விரவுப்பெயர் என்று கொண்டதற்கு ஏற்ப விளிமரபில் விரவுப் பெயர் பற்றிய சூத்திரங்கள் தவிர வேறு எங்கும் விரவுப்பெயர்களை உதாரணமாகக் கொடுக்காததால் முறைப்பெயர்களை உயர்திணையில் சேர்த்துக் கூறியது ஏன் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

2) சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் அஃறிணைக்கே உரிய விரவுப்பெயர் என்று கொண்டதற்கு ஏற்ப சேனாவரையர் விளிமரபில் உயர்திணைப் பெயர்களைக் கூறும் சூத்திரங்களில் கோட்பாட்டு நிலையில் ஒரு இடத்திலும் (சூ.2) மற்றொரு இடத்தில் (சூ.3) இயற்பெயரை மட்டுமாவது உதாரணம் கொடுத்ததும், தெய்வச்சிலையார் கோட்பாட்டு நிலையில் ஒரு இடத்திலும் (சூ.3) வேறு மூன்று இடங்களில் விரவுப்பெயர்களில் இயற்பெயரையும் முறைப் பெயரையும் உதாரணங்களாகக் கொடுத்ததும் காரணமாக முறைப் பெயர்களை உயர்திணைப் பெயர்களோடு சேர்த்துக் கூறியதற்கு சமாதானம் எதுவும் கூற வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது. ஆயினும் சேனாவரையர் தன்னுடைய கருத்தை வலியுறுத்தத் தடைவிடைகளால் உரை எழுதிச் செல்லும் மரபிற்கேற்ப இங்கும் தன்னுடைய

கருத்தைத் மூன்று காரணங்களால் வலியுறுத்தி இளம்பூரணருடைய கருத்தை மறுத்துக் கூறியுள்ளார். எனவே இனி சேனாவரையருடைய தடைவிடைகளையும் மறுப்பையும் பார்க்க வேண்டும்.

5. முறைப் பெயர்களை உயர்திணையோடு கூறியது

'அஃறிணைவிரவுப்பெயர்' என்பதை விரவுப்பெயரின் மாற்று வடிவமாகக் கருதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய மூவருக்கும் முறைப்பெயர்களையும், தான், நீயிர் என்ற இரண்டு சொற்களையும் உயர்திணைப் பெயர்களோடு சேர்த்துக் கூறியதற்குக் காரணம் கூறும் அவசியம் எழுந்து விடுகிறது. ஆனால் மூன்றுபேரும் அவைகளில் சில சிலச் சொற்களுக்கே விளக்கம் கொடுத்துள்ளார்கள்.

5.1 இளம்பூரணர்

இவர் னகரஈற்று முறைப்பெயரில்தான் இந்தப் பிரச்சனையைக் குறிப்பிட்டுள்ளார்:

> மற்று இவை (னகர ஈற்று முறைப் பெயர்) இரு திணைக்கும் உரியவாம். பிறவெனின் உரியவாயினும் முன்னர் விளம்பிய நெறிய விளிக்குங்காலை (விளி-33.2) என்னும் மாட்டேறு செல்லாமையின் னகர ஈற்று ஒற்றுமை பற்றி வைத்து உணர்த்தினார் என்பது.

இதுவே இளம்பூரணர் வாசகம் (சூ. 19). இங்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1) முறைப் பெயர் தவிர ஏனைய னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் ஏகாரம் பெற்று விளி ஏற்காததால் 33ஆம் சூத்திரத்தில் கூறிய பொது மாட்டேறு (அஃறிணை விரவுப் பெயர் மேலே கூறப்பட்ட முறைப்படி விளி ஏற்கும்) பொருந்தாது போய் விடுகிறது. எனவே னகர ஈற்று முறைப்பெயரைத் தனிச் சூத்திரத்தில் கூற வேண்டியதாகி விட்டது. 2) னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும் முறையைக் கூறுவதால் அந்த ஒற்றுமையை ஒட்டி னகர ஈற்று முறைப்பெயரும் கூறுவது பொருத்தமாக (ஒற்றுமை) உடையதாகப் போய்விட்டது. னகார ஈற்று முறைப்பெயரில் (சூ.30) 'முன்னர் (சூ.19) விடுத்தாங்கு விடுக்க'

என்ற மாட்டேற்று மூலம் விளக்கியுள்ளார். எனவே ஐந்து விரவுப் பெயர் பற்றியசூத்திரங்களில் இரண்டுக்கே இவர் சமாதானம் கூறியுள்ளார்.

5.2 நச்சினார்க்கினியர்

இவர் ஐகார ஈற்று முறைப்பெயரில் இந்தக் கேள்வி எழுப்பித் கூறிய சமாதானமும் இளம்பூரணர் கருத்தைத் தழுவியதே.

> இவை (ஐகார ஈற்று முறைப்பெயர்) விரவுப் பெயரேனும் ஈண்டு உயர்திணைப் பெயரிடை வைத்தார். மேல் விரவுப் பெயரை இவற்றொடு மாட்டெறிதலின் அம்மாட் டேற்றுக்கு ஏற்ப விளி ஏற்பன உயர்திணைப் பெயர்களுள் வேறு இன்மையான்

என்பதே நச்சினார்க்கினியர் வாசகம் (சூ.9). இது இளம்பூரண ருடைய விளக்கத்தைவிடத் தெளிவாக இருக்கிறது என்பது குறிப் பிடத்தகுந்தது. ஆயினும் 'மாட்டேறு' என்ற ஒரு காரணம் கூறி எழுத்து ஒப்புமை என்ற மற்றொரு காரணத்தைச் சொல்லா தது அந்தக் கருத்து இந்த இடத்தில் பொருந்தாது என்பதால் தான். மேலும் னகார ஈற்று முறைப்பெயர்க்கும் (சூ.19) 'ஐகார ஈற்று முறைப்பெயர்க்குக் 'கூறிய உரையைக் கண்டு கொள்க' என்று அமைதி கூறிவிட்டார். எனவே இவரும் இரண்டு சூத்திரங்களுக்கே காரணம் கூறி மூன்று சூத்திரங்களுக்கு ஒன்றும் சொல்லாமல போய்விட்டார்.

5.3 கல்லாடர்

இவரும் ஐகார ஈற்று முறைப் பெயரில் (சூ.9) அமைதி கூறிய தால் நச்சினார்க்கினியர் கருத்தை அப்படியே தழுவியுள்ளார்.

> மற்று இவை விரவுப் பெயர்களே. உயர்திணைப் பெயர் களோடு மாட்டேறியும் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப உயர் திணைப் பெயர்களுள் இவ்வாறு விளி ஏற்பன இன்மை யானும் ஆண்டு கூறற்பாலதனை ஈண்டுக் கூறியது எனக் கொள்க

என்பது கல்லாடர் வாசகம். வார்த்தைகள்தான் வேறு. கருத்து ஒன்றே.

மேலும் இவர் னகார ஈற்று முறைப் பெயரில் (சூ. 19)

'இது விரவுப் பெயர் அன்றோவெனின் மேல் ஐகார ஈற்றுள் கூறியவாறு கூறுக'

என்றும், ளகார ஈற்று முறைப் பெயரில் (சூ. 30)

'மற்று இதுவும் விரவுப்பெயர் அன்றோவெனின் மேற் கூறிய வாறு கொள்க'

என்றும் கூறுவதால் ஒரேவித சமாதானம் மூன்று விரவுப்பெயர் சூத்திரங்களை விளக்குகிறது.

தான் என்ற விரவுத்திணை பதிலீட்டுப் பெயர் சூத்திரத்திலும் (20)

'தான் என்பதன்றோ வெனின் விரவுப்பெயர்களை உயர் திணைப்பெயர்களோடு மாட்டெறியும்வழி விலக்கற்பாடு மாட்டெறி தலிற்கு ஒப்பன இன்மையின் ஈண்டே கூறினார்'

என்று விளக்கியுள்ளார். அதாவது அஃறிணை விரவுப்பெயர் கள் உயர்திணைப் பெயர்கள் போல விளி ஏற்கும் (சூ30) என்று கூறுவதால் தான் போன்ற விரவுப்பெயர்கள் விலகி உருபு ஏற்காது என்பதைச் சொல்வதற்காக இங்கே (சூ20) விளக்கினார் என்பதே அவருடைய கருத்து.

கல்லாடரே விரவுத்திணைபற்றிய ஐந்து சூத்திரங்களில் நான்குக்கு ஏதோ ஒருவித விளக்கம் கொடுத்துள்ளார்.

இந்தச் சமாதானங்கள் வருணனை உத்தி என்று பொதுமைப் படுத்தலாம். இது சிறப்பாகப் பொருந்தாது என்பது அவர்கள் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர்) விரவுத்திணை பற்றிய எல்லாச் சூத்திரத்திலும் சமாதானம் கூறாததால் உணர்ந்து கொள்ளலாம்.

6. அஃறிணை விரவுப்பெயரும் அஃறிணைப்பெயரும்

உயர்திணை விரவுப்பெயர், அஃறிணை விரவுப்பெயர் என்ற இரண்டுவகை உண்டு என்றும் உயர்திணை விரவுப்பெயர்கள் பொருள்பற்றி உயர்திணையில் அடங்கும் என்றும் சேனாவரையர் கருத்து உடையவர் என்றும் பார்த்தோம். அப்படியானால் அஃறிணை விரவுப் பெயர்களை அஃறிணையில் அடக்கினால் விரவுத்திணை பற்றிய தனிச் சூத்திரமே (சூ.33) தேவைதானா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது. சேனாவரையர் இந்தக் கேள்வியை எழுப்பிப் பதில் கூறியுள்ளது அவருடைய கருத்தை ஒட்டிப்பிறக்கும் பிரச்சனையை நினைத்துப்பார்க்கும் அவருடைய சிந்தனையின் ஆழத்தையே புலப்படுத்துகிறது.

6.1 சேனாவரையரின் கேள்வி

> உயர்திணை விரவுப் பெயரைப் பொருள் பற்றி உயர்திணைப் பெயர்க்கண் அடக்கினாரால் எனின் முன்னர் 'விளம்பிய நெறிய விளிக்குங்காலை' (விளி-33.2) எனல் வேண்டாவாம் பிறவெனின்

என்பதே சேனாவரையர் கூறும் தடை. அதாவது விரவுப் பெயர் பற்றிய சூத்திரம் வேண்டாம் என்பதே கேள்வியின் உட்கிடை. பூவராகம் பிள்ளையும் இப்படியே விளக்கம் கொடுத்துள்ளார்.

> இவ்வியலில் உயர்திணைப் பெயர் விளியேற்பதற்கு விதிகூறும் பகுதியில் உயர்திணை விரவுப் பெயரையும் அடக்கினார் என்று முன் சூத்திர உரையில் கூறினார். அங்ஙனம் ஆயின் 'கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர் விளம்பிய நெறிய விளிக்குங்காலை (33) என்ற சூத்திரம் வேண்டா என்றதடைக்கு மூன்று காரணங்காட்டி விடை கூறுகிறார்.

என்பது பூவராகம்பிள்ளை வாசகம் (சேனாவரையர் கழகப் பதிப்பு 1970: இணைப்பு, ப. 86). ஆகவே சேனாவரையர் இதற்கு என்ன விடை தருகிறார் என்று பார்ப்போம். உயர்திணையில் உயர்திணை விரவுப்பெயர் அடங்கும் என்ற கருத்துதான் மூன்று காரணங்களால் அதுவும் மாற்றுமுறையால் அமைந்துள்ளது. அதாவது கேள்விக்கு ஏற்ற நேர்விடை இல்லாமல் தன்னுடைய கருத்தை வலியுறுத்தும் முறையிலே சேனாவரையர் பதில் சொல்லியுள்ளார். உயர்திணை விரவுப் பெயர்களை உயர்திணையில் சேர்த்துச் சொல்லிவிட்டாலும் மீதியுள்ள அஃறிணை விரவுப்பெயர்க்கு ஒரு சூத்திரம் வேண்டும். அதுதான் 33-ஆம் சூத்திரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எனவே அது 'கடா இன்மை அறிக' (சரியான கேள்வி இல்லை) என்றே பதில் கூறியிருக்க வேண்டும். அப்படிச் செல்லாமல் 'நன்று சொன்னாய்' என்று கேள்வி கேட்டவனைப் பாராட்டுவது போலவோ கிண்டலாகவோ அவனைப் பற்றி விமர்சித்து மூன்று காரணங்களை மாற்று முறையில் (அதாவது ஒன்று இல்லாவிட்டால் மற்றொன்று) பதில் கூறியுள்ளார். சுருங்கச் சொன்னால் அவருடைய பதில்களில் தன்னுடைய கருத்தையே வலியுறுத்தியுள்ளாரே தவிர கேள்விக்கு ஏற்ற பதிலைக் கூறவில்லை.

6.2 பதில்கள்

6.2.1 முதல் பதில்

> விளம்பிய நெறிய விளிங்காலை (33.2) என்புழி விரவுப் பெயர் என்னாது அஃறிணை விரவுப்பெயர் என அஃறிணைக்கண் வருவனவற்றை விதந்து ஓதுதலான் உயர்திணைக்கண் வருவன உயர்திணைப் பெயருள் அடங்கும் என்பதற்கு அச் சூத்திரமே கரி ஆயிற்று

என்பது சேனாவரையர் வாசகம். அஃறிணை விரவுப்பெயர் என்று அந்தச் சூத்திரத்தில் கூறியிருப்பதால் உயர்திணை விரவுப் பெயர் இருப்பதற்கும் (இதைச் சேனாவரையர் நேரடியாகக் குறிப் பிடவில்லை) அது உயர்திணையில் அடங்குவதற்கும் அந்தச்

சூத்திரம் சாட்சியாக இருக்கிறது என்பது அவருடைய கருத்து. உண்மையில் அஃறிணை விரவுப்பெயர் என்பதனால் பெறப்படுகிறது என்பதே பொருந்தும். அஃறிணை விரவுப்பெயரைப் பொதுப் பெயராகத் தொல்காப்பியர் கையாண்டிருப்பது மேலே எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் உயர்திணைப்பெயர்களை வருணிக்கும் போது பிறவிரவுப் பெயர்களான இயற்பெயர் சினைமுதற்பெயர் முதலியவற்றைத் தொல்காப்பியர் விளிமரபில் பேசவில்லை. ஆகவே அஃறிணை விரவுப்பெயர் என்பதைக் கொண்டு 'சொற்சிலம்பம்' ஆடியுள்ளாரே தவிர தொல்காப்பிய வழக்குகளையோ விளிமரபில் சூத்திரம் அமைக்கப்பட்ட முறையையோ சேனாவரையர் கவனிக்கத் தவறிவிட்டார்.

6.2.3 இரண்டாவது பதில்

> அல்லதூஉம் புள்ளியீற்று உயர்திணைப் பெயர்க்கண் அவ்வீற்று உயர்திணைப் பெயரும் அங்கு விளி கோடல் எய்துதலான் அன்றே; தான் நீயிர் என்பன விளிகொள்ளா என எய்தியது விலக்குவார் ஆயிற்று, அதனானும் அடங்குதல் பெறும் என்பது.

இங்கு மெய்யீற்று உயர்திணைப் பெயர்களை வருணிக்கும்போது சில விரவுப் பெயர்களைச் சேர்த்துச் சொல்லியிருப்பதற்கு உயர்திணைப் பெயர்களுள் விரவுப்பெயரும் அடங்கும் என்று மனதில் கொண்டதுதான் காரணம். அதனால்தான் அவைகளைக் குறிப்பிட்டு அவை விளி ஏற்காது என்று சூத்திரங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனாலும் உயர்திணைப் பெயருள் உயர்திணை விரவுப்பெயரும் அடங்கும் என்ற பழைய கருத்தே வலியுறுத்தப்படுகிறது.

6.2.3 மூன்றாவது பதில்

> அல்லதூஉம் உயர்திணை அதிகாரத்து முறைப்பெயர் விளி ஏற்குமாறு கூறினமையானும் பெறப்படும்

இந்த விடை இரண்டாவதைப் போன்றதே. பொதுவாக கேள்விக்கு (அஃறிணை விரவுப் பெயருக்குத் தனி சூத்திரம்

வேண்டுமா? வேண்டாமா? என்பது) பதிலே கூறாமல் தன்னுடைய கருத்தைத் திருப்பித் திருப்பி வற்புறுத்துவதால் என்ன பயன்? சேனாவரையர் ஏன் ஏற்ற பதிலைக் கூறவில்லை என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். அப்பொழுதுதான் சேனாவரையருடைய கருத்தை மதிப்பிட முடியும்.

அஃறிணை விரவுப்பெயரை அஃறிணையில் அடக்காததற்கான காரணம் மேலே (6.2.1) காட்டப் பட்டது. ஆனால அஃறிணை விரவுப்பெயர்கள் அஃறிணையில் அடங்கிவிடும்; அதனால அஃறிணை விரவுப்பெயர் பற்றிய சூத்திரம் (சூ.33) தேவையற்றது என்று சேனாவரையர் உள்ளூர உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் அவரால் சரியான விடையைக் கண்டுபிடிக்க வில்லை. இதற்கும் விரவுப்பெயரை ஒட்டிய அவருடைய சிந்தனை போக்கு சரியில்லாததுதான் காரணம் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

சேனாவரையரின் இளம்பூரணருடைய கருத்துக்குரிய மறுப்புகளைப் பார்ப்போம்.

6.3 இளம்பூரணருடைய உரைக்கு மறுப்பு

> விரவுப்பெயரை உயர்திணையோடு மாட்டெறிப ஆகலின் மாட்டேற்றான் முறைப்பெயர் ஆகாரமும் ஏகாரமும் பெற்று விளி ஏற்றல் எய்தாமையின் ஈண்டுக் கூறினார் என்றாரால் உரையாசிரியர் எனின்

என்பதே சேனாவரையர் வாசகம். இங்கு இளம்பூரணருடைய கருத்தைச் சேனாவரையர் தன்னுடைய வார்த்தைகளால் சுருக்கிச் சரியாகவே கொடுத்துள்ளார். இன்னும் சொல்லப்போனால் இளம்பூரணர் கருத்தில் இருந்த ஒருகுறையை நீக்கி (ஏனெனில் அவர் ஐகார ஈற்று முறைப்பெயர் ஆகாரம் ஆகும் என்ற சூத்திரத்துக்கு விளக்கம் தரவில்லை; என்றாலும் சேனாவரையர் அதையும் சேர்த்துக்கொண்டுள்ளார்) அவருடைய கருத்தைக் குறிப்பிட்டது பாராட்டத் தகுந்தது.

சேனாவரையருடைய மறுப்பு புதுமுறையாக அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. அதாவது இளம்பூரணருடைய கருத்து உண்மையாக இருக்குமானால் - அல்லது இளம்பூரணர் கருத்துத் தொல்காப்பியருக்கு உடன்பாடாக இருக்குமானால் தொல்காப்பியச் சூத்திரங்கள் வேறுவிதமாக அமைந்திருக்க வேண்டும் என்று சுட்டித் தொல்காப்பியத்தையே மறுவருணனை (restatement) செய்துள்ளார். மறுவருணனை என்பதன் விளக்கத்துக்குச் சண்முகம், 198) : 14-18 பார்க்கவும்) அதாவது சூத்திரங்களைத் திருத்தியும் வைப்புமுறையை மாற்றியும் புதிய சூத்திரம் அமைத்தும் காட்டி இப்படியிருந்தால்தான் இளம்பூரணர் கருத்து உண்மையாக இருக்க முடியும் என்று குறிப்பிட்டு அப்பொழுதுதான் தொல்காப்பியத்தில் குறை (குற்றம்) இல்லை என்று ஆகும் என்று சொல்லி, இந்தக் காரணங்களால் 'உரையாசிரியர்க்கு அது கருத்தன்று என்க' என்று முடித்துள்ளார். இனி அவருடைய கருத்துகளைப் பார்ப்போம்.

1) அக்கருத்தினர் ஆயின் அஃறிணை என்னுஞ்
சொல் ஒழித்து கிளந்த இறுதி விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங்காலை

எனவும் இருக்கவேண்டும். இது தன்னுடைய கருத்துக்குச் சார்பாகக் கொண்ட வாதத்தின் எதிர்வாதமே: அதாவது அஃறிணை விரவுப்பெயரும் உண்டு என்று சேனாவரையர் கொண்டதால் இந்தக் கருத்துக்கு மறுப்பு என்றால் 'அஃறிணை' என்ற சொல் இருக்கக் கூடாது என்று வாதாடுவதில் சிறப்பு ஒன்றும் இல்லை.

2) இதன்பின் 'முறைப்பெயர் மருங்கின் ஐயென்'
இறுதி ஆவோடு வருதற்கு உரியவும் உளவே
என்ற சூத்திரம் இருக்க வேண்டும்.

அதாவது இப்பொழுது 9-ஆம் சூத்திரமாக இருப்பது மேலே குறிப்பிட்ட விரவுப் பெயருக்குப் பின்னால் 34-ஆம் சூத்திரமாக அமைந்திருக்கவேண்டும் என்பதே சேனாவரையருடைய கருத்து.

3) இதன்பின் ணகார ளகார ஈற்று இருவகை
முறைப் பெயரும் அடங்கப் புள்ளியிறுதி
ஏயொடு வருமே எனவும் ஓதுவார்மன் ஆசிரியர்

என்பது மூன்றாவது சமாதானம். அதாவது இப்பொழுதுள்ள 19, 30 ஆகிய இரண்டு சூத்திரங்களையும் ஒன்றாக்கிப் பொது மைப்படுத்தி 34-ஆம் சூத்திரத்துக்குப் பிறகு அமைத்திருக்க வேண்டும். அதாவது இளம்பூரணர் கருத்துத் தொல்காப்பியருக்கு உடன்பாடாக அமைந்திருந்தால் தொல்காப்பியர் இப்படித்தான்

1) 33-ஆம் சூத்திரத்தில் அஃறிணை என்ற சொல் இல்லாமலும்

2) 19-ஆம் சூத்திரத்தை 34-ஆம் சூத்திரமாகவும்

3) 19, 30 ஆகிய சூத்திரங்களை ஒன்றாக்கிப், பொதுமைப் படுத்திச் (சேனாவரையர் அமைத்தது போல), 35-ஆம் சூத்திர மாகவும் சொல்லியிருக்க வேண்டும் என்பது சேனாவரையருடைய கருத்து. அப்பொழுதுதான் 'மயங்கக் கூறல்' என்ற குற்றமும் 'சுருங்கக் கூறாமை' என்ற குற்றமும் இல்லாமல் போயிருக்கும். மேலும் முறைப்பெயரும்தான், நீயிர் என்பனவும் ஈண்டுக் கூறப் பட்டமையாலும் இளம்பூரணருடைய கருத்து தவறு எனச் சேனா வரையர் வாதாடியுள்ளார்.

'மயங்கக் கூறல்' என்னும் குற்றமும் நீங்கிச் சூத்திரமும் சுருங் கும் ஆதலின் அவ்வாறு ஓதாமையானும் முறைப் பெயரே அன்றித் தான், நீயிர் என்பனவும் ஈண்டுக் கூறப்பட்டமையானும் உரையா சிரியர்க்கு அது கருத்து அன்று என்க'.

என்பதே சேனாவரையருடைய இறுதி வாசகம்.

இங்கு அவருடைய வருணனையால் தொல்காப்பியத்தில் சுருங்கச் சொல்லல் என்ற குணம் பெற்று 'மயங்கக்கூறல்' என்ற குற்றமும் நீங்கி விடுகிறது, ஆயினும் இந்த மறுவருணனையும் அதனால் அவர்தரும் சமாதானமும் தன்னுடைய கருத்துக்கு ஆத ரவாகவும் இளம்பூரணர் கருத்துக்கு மறுப்பாகவும் அமைந்துள்ளது தானே தவிர தொல்காப்பியர் அப்படிக் கூறியதற்கு ஏதாவது உட் கிடை இருக்கிறதாஎன்றுயோசித்துப் பார்த்து அவருடையகருத்தை நியாயப்படுத்த வேண்டும் என்ற கருத்தினால் அமையவில்லை.

உண்மையில் இளம்பூரணர் உரையை ஏற்றுக் கொண்டால் தொல் காப்பியர் மேல் குற்றம் ஏற்படும் என்று நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிறாரோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் சேனாவரையர் தொல்காப்பியத்தில் கூறியது கூறல், சுருங்கச் சொல்லாமை ஆகிய குற்றங்கள் இருப்பதை வேறுசில இடங்களில் எடுத்துக் காட்டி அங்கெல்லாம் தன்னுடைய சாமர்த்தியத்தால் சமாதானம் சொல்லியுள்ளார். அவைகளைப் படிக்கும்போது விமர்சக நோக்கு உடைய வாசகர்கள் தொல்காப்பியம் கூறியதற்கு ஏதாவது உட்கிடை இருக்கவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கு வார்கள். அதே சமயத்தில் உரையாசிரியர்களின் சமாதானம் எல்லாம் மூல ஆசிரியரைக் காட்டி நம்மைப் பயமுறுத்துவதற்காக அவர்கள் கூறும் வெறும் சமாதானம்தான் என்பதையும் உணர்ந்து கொண்டு விடுவார்கள், உதாரணமாகச் சேனாவரையரே கிள வியாக்க 2-ஆம் சூத்திரமான

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப்பாற் சொல் உயர்திணையவ்வே

என்பதில் உயர்திணை மூன்று பால்மட்டுமே உள்ளதால் இணைத்து எனச் சினை முதற் கிளவிக்கு இவ்வளவு என்று தெளிவாகத் தெரிந்து கொண்ட சொல்லுக்கு) கொடுக்கும் 'உம்' மைக் கொடுக்க வேண்டும் என்பது தொல்காப்பிய விதிப்படி (கிளவி-33) மேலே உள்ள முப்பாற் சொல் என்பது முப்பாற்சொல்லும் என்று கூறியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாததற்குச் சேனாவரையர் சமாதானமே கூறியுள்ளார்.

உயர்திணைச் சொல் உணர்த்தி அதனது பாகுபாடு கூறுகின்றார் ஆதலின் அம்முப்பாற் சொல் உயர் திணைய என்றார் ஆயினும் உயர்திணைச் சொல் மூன்று பாகுபாடுபடும் என்பது கருத்தாகக் கொள்க. இக்கருத்தான் அன்றே ஆசிரியர் அம்முப்பாற் சொல்லும் என இணைத்து என

> அறிந்த பொருள் தொகுதிக்குக் கொடுக்கும் உம்மை (கிளவி-33) கொடார் ஆயினும் உரையாசிரியரும் உயர்திணை எனப்பட்ட பகுப்பை விரிப்புழி இத் துணை யல்லது விரிபடாது என்பது ஈண்டுக் கூறியது என்று உரைத்ததூஉம் என்க

என்பது சேனாவரையர் வாசகம். இந்த வேறு ஒரு சூத்திரத்தைச் சுட்டிக் காட்டி அதன்படி குறை இருக்கிறது என்று கூறிப் பின்னர் உரையாசிரியர் விளக்கம் பொருத்தமானது என்று சமாதானம் கூறியுள்ளார்.

எனவே தொல்காப்பியச் சூத்திரத்தில் உரையாசிரியர்கள் நோக்குப்படியே குறை இல்லாமல் இல்லை. இருந்தாலும் அதற்கு அவர்கள் ஏதோ ஒரு வகையில் சமாதானம் சொல்லி விடுகிறார்கள். இன்னொரு சூத்திரத்திலும் இந்த முறை காணப்படுகிறது.

> செப்பினும் வினாவினும் சினை முதற்கிளவிக்கு
> அப் பொருள் ஆகும் உறழ் துணைப் பொருளே

என்ற கிளவியாக்கச் சூத்திரத்தில் (16) சேனாவரையர்

> காக்கப்பட்டன செப்பும் வழாநிலையும் வினா வழாநிலையும் என்பார் செப்பினும் வினாவினும் என்றார். வழாஅல் ஓம்பல் (கிளவி-13) என்புழி அடங்கும் ஆயினும் நுண்ணுணர்வு உடையார்க்கு அல்லது அதனால் உணர்தல் ஆகாமையின் விரித்துக் கூறியவாறு

என்று கூறும்போது சூத்திரத்தைச் சுருங்கச் சொல்ல வாய்ப்பு இருப்பினும் சில காரணம் கருதி விரித்து எழுதினார் என சேனாவரையரே ஒப்புக்கொள்ளும்போது தொல்காப்பியத்தில் சுருங்கச் சொல்லாமை காணப்படுகிறது என்பது வெளிப்பட்டு விடுகிறது.

சில சூத்திரங்களில் (உதாரணம் கிளவி–27) தன்னினம் முடித்தலால் கொள்க என்று சில கருத்துக்களையும் ஒன்றென முடித்தலால் கொள்க என்று வேறு சில கருத்துகளையும் விதந்து கூறுவது அந்தச் சூத்திரம் குன்றக் கூறலாய் அமைந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

இடையியலில் 'எல்லே இலக்கணம்' (31) என்ற சூத்திரம் அமைந்ததற்குச் சேனாவரையர்

> எல்லென்பது உரிச்சொல் ஆயினும் ஆசிரியர்
> இடைச் சொல்லாக ஓதினமையான் இடைச்
> சொல் என்று கோடும்

என்று அமைதி கூறும் போது தொல்காப்பியருக்காக சொல்லின் இலக்கண உண்மையைக் கூட மாற்றிக்கொள்ளச் சேனாவரையர் தயாராக இருந்தாலும் வாசகர்க்குத் தொல்காப்பியர் குறை புலப்படாமல்போய்விடவில்லை. வேண்டுமானால் பிற்காலத்தில் நேர்ந்த பிழை என்று தொல்காப்பியர் மேல் குறை கூறாமல் தப்பித்துக் கொள்ளலாம். இன்று நமக்கோ, உரையாசிரியர்க்கோ கிடைத்த தொல்காப்பிய மூலம் சில குறைகளை உடையது என்பதை மறுப்பதற்கு இல்லை.

7. புது நோக்கு

உண்மையில் விளிமரபில் விரவுத்திணைபற்றிய இரண்டு சிக்கல்கள் உள்ளன. ஒன்று: இளம்பூரணர் எடுத்துக்காட்டியது: விரவுப்பெயர்களில் முறைப்பெயரை மட்டும் உயர்திணைச் சொற்களோடு சேர்த்துக் கூறியது ஏன் என்பது இரண்டு: சேனாவரையர் எடுத்துக் காட்டியது: தான் நீயிர் என்ற விரவுத்திணைச் சொற்களையும் உயர்திணைச் சொற்களோடு சேர்த்துச் சொன்னது ஏன் என்பது.

7.1 முறைப்பெயர்

இளம்பூரணர் எழுப்பிய கேள்விக்குப் பதில் காண முயல்வோம். தொல்காப்பியர் திணைபாகுபாட்டு அடிப்படையை விளி

மரபில் ஒழுங்காகப் பின்பற்றவில்லை என்ற குறையை ஒத்துக் கொண்டு இளம்பூரணர் கூறிய வருணனை உத்தி இல்லாமலும் மொழி அமைப்பு இல்லாமலும் வேறு காரணம் இருக்கலாமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

இங்குத் தொல்காப்பியர் திணைப் பால் பாகுபாட்டு வருணனையைப் பர்க்கும்போது மொழி அடிப்படையில் அல்லாமல் உலகியல் உண்மையைச் சிறப்பாக-உயிரியல் அடிப்படையை ஒட்டித் தன்மைப் பெயர்களையும் உயர்திணையில் சேர்த்துக் கூறப் பட்டுள்ளது (சண்முகம், 1984:148) முன்னரே விளக்கப்பட்டது. விளி என்பது பேச்சைக் குறிக்கும். எனவே அது பேசுவானுக்கே உரியது. முறைப்பெயரைச் சொல்லி அழைத்தல் அல்லது விளித்தல் உயர்திணைக்கே உரியது. அஃறிணைக்கு உறவுப் பெயர்களைப் பயன்படுத்தினாலும் அதுவும் குறைந்த அளவில்நாம் குறிப்பிடும் பெயர்கள்தான் வழங்குகின்றன. அவை ஒன்றை யொன்று கூப்பிட்டுக்கொள்வதில்லை. எனவே விளி உயர்திணைக்கு மட்டுமே உரியது என்று தொல்காப்பியர் கருதித்தான் முறைப் பெயரை உயர்திணையோடு சேர்த்துச் சொல்லிவிட்டாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அஃறிணையை இயற்பெயர் இட்டு அழைக்கும்போது உயர்திணைப் பொருளும் அந்த இயற்பெயரைப் பயன்படுத்தி விளியாகக் கையாளலாம். சாத்தன் என்பது மாட்டின் பெயராய் இருந்தால் சாத்தா என்று விளிப்பெயரைப் பயன்படுத்தி நாம் அதை அழைக்கலாம். அதாவது அஃறிணை இயற்பெயரை விளியாகக் கையாளலாம். அதனால்தான் தொல்காப்பியர் முறைப் பெயரை மட்டும் உயர்திணைக்கு உரியதாக்கி இயற்பெயர், சினை முதற்பெயர் ஆகியவற்றை அஃறிணை விரவுப் பெயரில் சேர்த்து விட்டார் போலும். எனவே முறைப் பெயர்களை உயர் திணையோடு சேர்த்துக் கூறியது உலகியல் அல்லது உயிரியல் அடிப்படை என்று கருதலாம்.

இந்த உண்மையை ஓரளவு தொல்காப்பியரே உணர்ந்துள்ளார் என்பது அஃறிணைப் பெயர் விளி ஏற்கும் முறையை வருணிக்கும் போது புலப்படுத்தியுள்ளார் (விளி. 34).

புள்ளியும் உயிரும் இறுதி ஆகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉம் காலந் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் வரலே

என்ற சூத்திரத்தில் மூன்றாவது வரியில் இந்த உண்மை புதைந்துள்ளதாகக் கருதலாம். இதைச் சேனாவரையர் தன்னுடைய உரையில் தெளிவு படுத்தியுள்ளார்.

> 1. அஃறிணைப் பெயருள் விளிகேட்கும் ஒருசார் விலங்கின் பெயரும், 2) விளி கேளாதனவற்றைக் கேட்பனவாகச் சொல்லுவார் கருதியவற்றான் விளி ஏற்பனவும் அல்லது, 3) ஒழிந்த பெயரெல்லாம் விளி ஏலாமையின் விளிநிலை பெறுங்காலந் தோன்றின் என்றார். அதனானே 4 சுட்டுப்பெயர் முதலாயின விளி ஏலாமையும் கொள்க

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு அஃறிணைப் பெயர்களுள் விளி ஏற்பதில் சில கட்டுப்பாடுகளைச் சுட்டிக்காட்டியே மூன்றாவது வரிக்கு விளக்கம் கொடுத்துள்ளார். அதாவது அ) பேசுவோன் தானே விளியைப் பயன்படுத்துதல் (விளித்தல்), ஆ) கேட்போன் விளியை ஏற்றல் விளிக்கப்படுதல் ஆகிய இரண்டில் சேனாவரையர் அஃறிணையில் சில பெயர்களில் சிலவே விளி ஏற்கும் என்று பொதுவாகவும் ('ஆ' வகை மட்டும்) அதற்குள்ளேயே இன்னும் சில கட்டுப்பாடுகள் உண்டு என்று சிறப்பாகவும் கூறியுள்ளதைத் தெளிவாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இனி அந்தக் கட்டுப்பாடுகளைப் பார்ப்போம்.

1) ஒரு சார் விலங்கு விளி ஏற்கும், என்றால் கேட்கும் ஆற்றல் உடையது என்றுபொருள். இந்தக் கருத்தின் வன்மை மென்மை முன்னரே விரிவாக ஆராயப்பட்டுள்ளது (சண்முகம் 1984 152) 2) வேறு சில அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்காவிட்டாலும் பேசுவோன் விளி ஏற்பதாகக் கருதிக் கூறுதல் என்பது. இது பெரும்பாலும் இலக்கியமொழிக்கே பொருந்தும். ஏனெனில் தொல்காப்பியரே செய்யுளியலில் (192)

ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே
கடலே, கானல், விலங்கே, மரனே
புலம்பறு பொழுதே, புள்ளே, நெஞ்சே
அவையல பிறவு நுதலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இது உலக வழக்கிலிருந்து மாறுபட்டது. 3) மீதியுள்ள அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்காது. 4) அஃறிணைச் சுட்டுப் பெயர்கள் விளி ஏற்காது. அதாவது பதிலீட்டுப் பெயர்கள் பொதுவாகவே விளி ஏற்காது. இது பற்றி அடுத்த பிரிவில் ஆராயப்படும்.

இனி நச்சினார்க்கினியருடைய விளக்கத்தைப் பார்ப்போம்.

விளிநிலை பெறூஉம் காலந் தோன்றின் என்றார்.
முன்னிலையாக்கலும் சொல்வழிப்படுத்தலும்
வேண்டுழியே விளியேற்கும் என்றற்கு

என்ற நச்சினார்க்கினியருடைய விளக்கம் மிகவும் பொதுப்படையாகவே உள்ளது.

காலந்தோன்றின் என்றது அஃறிணைப்பெயர்
உயர்திணைபோல விளி ஏற்பன சில என்பதூஉம்
ஏலாதனவும் ஒருகாலம் பற்றி விளிக்கப்படும்
என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க

என்ற தெய்வச்சிலையாரின் வாசகம் சேனாவரையருடைய கருத்தின் சுருக்கமாகவே அமைந்துவிட்டது. 'அவை (அஃறிணைப் பெயர்கள்) விளியேற்றும் நிலைமை சிறுபான்மை என்றது என உணர்க' என்ற கல்லாடர் விளக்கமும் சேனாவரையருடைய கருத்தின் தாக்கமே.

எனவே எல்லா உரையாசிரியர்களும் அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்பதில் கட்டுப்பாடு இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். இங்கு விளித்தலுக்கும் விளிக்கப்படுதலுக்கும் வேறுபாடு செய்யாது விளிக்கப்படுதல் மட்டுமே கொண்டதால் நாம் மேலே கொடுத்த முறையில் உரையாசிரியர்களால் விளக்கம் கொடுக்க முடியாமல் போய்விட்டது.

இங்கு தொல்காப்பியம் பற்றிய ஒரு பொது உண்மை வெளிப்படுவது எடுத்துக்காட்டத்தகுந்தது. அதாவது தொல்காப்பித்தில் கருத்து அளவில் முரண் இருந்தால் அது திபுதிய உண்மையை புதிய நோக்கில் புலப்படுத்தும் தன்மை உடையது என்பதே.

7.2 பதிலீட்டுப் பெயர்

அடுத்து சேனாவரையர் எழுப்பிய தான், நீயிர் ஆகிய இரண்டு விரவுச் சொற்களையும் உயர்திணையில் அடக்கிக் கூறுவானேன் என்ற கேள்விக்கு உரிய விடையைப் பார்ப்போம்.

உண்மையில் 'தான்' பற்றிப் பேசும் சூத்திரம் படர்க்கை சுட்டு ஆண்பாற் பெயர்களையும் (அவன், இவன், உவன்) யான் என்ற தன்மைப் பெயரையும் யாவன் என்ற வினாப் பெயரையும் சேர்த்தே பேசுகிறது (விளி–20). இவையெல்லாம் பதிலீட்டுப் பெயர்கள். நீயிர் என்பதும் பதிலீட்டுப் பெயரே. இதைப் போலவே சூ. 25,31 ஆகிய இரண்டு சூத்திரங்களும் கூடப் பதிலீட்டுப் பெயர்களே. பொதுவாக பதிலீட்டுப் பெயர்கள் விளியேற்காது என்று கூறலாம். மேலே சேனாவரையர் அஃறிணை சுட்டுப்பெயர் மட்டும் விளி ஏற்காது என்று கூறியது குறிப்பிடத்தகுந்தது. உண்மையில் இது எல்லாச் சுட்டுப் பெயர்க்கு மட்டும் அல்லாமல் பிற பதிலீட்டுப் பெயர்களுக்கும் பொருந்தும். அதே காரணத்தினால்தான் பதிலீட்டுப்பெயர் அடியாகப் பிறந்த பெயர்களும் (தமன் - படர்க்கை; நுமன் - முன்னிலை; நமன், எமன் - தன்மை போன்றவையும் விளியேற்கவில்லை (விளி - 37). தொல்காப்பியர் பதிலீட்டுப் பெயர்களைப் பெயர்ச்சொற்களின் தனி உட்பிரிவாகக் கருதாது விட்டு விட்டது, முன்னரே (சண்முகம், 1984:154) விளக்கப் பட்டது. ஏனைய பதிலீட்டுப் பெயர்கள் விளி ஏற்காது என்று கூறும்போது 'தன்னினம் முடித்தல்' என்ற வருணனை உத்தி பற்றி தான், நீயிர் ஆகிய இரண்டையும் சேர்த்துக் கூறியிருக்க வேண்டுமே தவிர விரவுப்பெயர்கள் உயர்திணையில் அடங்கும் என்பதற்காகக் கூறியிருக்க மாட்டார். அதாவது பதிலீட்டுப் பெயரைத் தனி உட்பிரிவாக அமைக்காததால் ஏற்பட்ட குறையே தவிர சேனாவரையர் கூறுவது போல அதற்கு உட்கிடை எதுவும் கிடையாது.

விளிமரபில் விரவுத்திணைப் பெயர்களை உயர்திணையில் சேர்த்துக் கூறியது இரண்டு முக்கிய உண்மைகளைப் புலப்படுத்துகிறது: 1) முறைப்பெயர் விரவுத்திணை ஆயினும் விளிநோக்கில் உயர்திணைக்கு மட்டுமே உரியது; ஏனெனில் முறைப்பெயர்களைப் பயன்படுத்தி விளிப்பது மனிதனால் அதாவது உயர்திணையால் மட்டுமே இயலக் கூடியது; அஃறிணையால் இயலாது 2) தான், நீயிர் என்ற சொற்களை உயர்திணையில் சேர்த்தது பதிலீட்டுப் பெயர் என்ற உட்பிரிவை அமைத்துக் கொள்ளாத காரணத்தினால் நான் ஏனைய பதிலீட்டுப் பெயர்களைக் கூறும்போது எழுத்து ஈறு ஒப்புமை பற்றி 'தான்' என்பதையும் 'நீயிர்' என்பதையும் அந்தந்த ஈறுபற்றி விளக்கும்போது சேர்த்துக் கூறியிருக்க வேண்டுமே தவிர விரவுத்திணையில் இரண்டு வகை இருக்கிறது என்பதைப் புலப்படுத்துவதற்காக இருக்க முடியாது. இந்தச் சமாதானம் கூட ஓரளவு நம்முடைய மொழியியல் அறிவைக் காட்டித் தொல்காப்பியத்தை நியாயப்படுத்துவதுதானே தவிர தொல்காப்பியத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும்; தொல்காப்பியத்தில் கூறிய எல்லாம் இன்றும் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மை என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. எனவே தொல்காப்பியம் மறுவருணனைக்கும் புதிய இலக்கணம் எழுதுவதற்கும் புதிய சிந்தனைக்கும் இடம் கொடுக்கிறது என்ற அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டு இலக்கண ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்.

அடிக்குறிப்பு

1. அஃறிணை விரவுப்பெயர் பற்றிய சூத்திரத்தில் (33) தெய்வச்சிலையார் நீங்கிய பிற உரையாசிரியர்கள் எல்லாம் பூண்டு, கூந்தல் என்ற இரண்டு உதாரணங்களையும் கொடுத்துள்ளார்கள். பூண்டு என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி உள்ளிப்பூண்டு, சிற்றடையாளம் என்ற இரணடுப் பொருளைத் தருகிறது. இவை அஃறிணைப் பெயர்கள். எனவே பூண்டு என்பது எப்படி விரவுப் பெயராகும் என்ற கேள்வி எழுகிறது. கூந்தல் என்பது பெண்களின் மயிரையும் ஆகுபெயராய் பெண்ணையும் குறிக்கிறது என்றால் விரவுப்பெயர் ஆகிறது என்று கருதலாம். ஆனால் தொல்காப்பியர் அஃறிணை பொதுப்பெயர்கள் ஆகுபெய

ராய் உயர்திணைப் பொருளை உணர்த்துவதை விரவுப்பெயர் என்று குறிப்பிடவில்லை; எனவே கூந்தல் என்பதையும் விரவுப்பெய ராகக் கொள்ளலாமா என்ற சந்தேகம் எழுகிறது.

2. கழகப்பதிப்புகளிலும் கணேசய்யர் முதல்பதிப்பிலும் 'தாம்' என்ற பாடமே காணப்படுகிறது. ஆனால் தொல்காப்பியர் மகர ஈறுவிளி ஏற்கும் என்று கூறவில்லை. மேலும் 'தான்' என்பது விளிஏற்காது என்பதை விதந்தே (விளி-20.1) கூறியுள்ளார். சரியானபாடம் 'தான்' என்பதே. இப்படியே அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பிலும் (பதிப்பர்: சுந்தரமூர்த்தி 1981) காணப்படுகிறது. கணேசய்யர் இரண்டு பதிப்பிலும் 1938:180; 1955;183) முதலில் 'தாம்' என்று கூறினாலும் பிற்பகுதியில் (1938:131;1955:183) 'தான்' என்ற சரியான வடிவத்தையே கொடுத்துள்ளார்

3. சேனாவரையரே 'அஃறிணை என்ற சொல் ஒழித்து' என்று கூறியிருப்பதால் அந்தச் சூத்திரத்தை உடனே மேற்கோள்காட்டும் போது 'அஃறிணை' சொல் சேர்த்து இருப்பது தவறு, கழகப்பதிப்பு களிலும் கணேசய்யர் இரண்டாம் பதிப்பிலும் 'அஃறிணைச், சொல் சேர்த்தே மேற்கோளாகக் காட்டியிருப்பது தவறானதாகவே கருத வேண்டும். ஆனால் சேனாவரையர் உரையை முதன் முதலில் அச்சிட்ட கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை (1868)

கிளந்த இறுதி விரவுப் பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங்காலை

என்று சரியாகவே மேற்கோள் காட்டியுள்ளார். இது போலவே கணேசய்யர் முதல் பதிப்பிலும் (1938:180) உள்ளது சுந்தரமூர்த்தி தன்னுடைய இளம்பூரணர் பதிப்பிலும் (கழகப் பதிப்பு, 1963. இளம்பூரணம் விளக்கவுரை, பக். 290 , சேனாவரையர் பதிப்பிலும் (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1981 பக். 295)

கிளந்த இறுதி விரவுப் பெயரே
விளம்பிய நெறிய விளிக்குங்காலை

என்று சூத்திர யாப்பு அமைதிக்காக 'விரவுப் பெயரே' என்று ஏகாரம் சேர்த்துப் பதிப்பித்திருப்பது சிறப்பானதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இப்படி இருந்திருந்தால் இளம்பூரணர் கருத்து சிறக்கும் என்று சேனாவரையர் கூறியதுதானே தவிர சூத்திரயாப்புமுறை பற்றிய பிரச்சனை இங்கு கிடையாது; மேலும் முதலில் அச்சிட்ட கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை பதிப்பிலும் கணேசய்யர் முதல் பதிப்பிலும் ஏகாரம் இல்லாமல் பதிப்பிக்கப் பட்டிருப்பதால் சுந்தரமூர்த்திக்குக் கிடைத்த ஏடுகளில் ஏகாரம் இருந்ததா? அல்லது அவரே யாப்பு அமைதிக்காகச் சேர்த்துக் கொண்டாரா என்ற சந்தேகம் எழுகிறது.

துணை நூல்கள்

1) இராசகோபாலப்பிள்ளை, கோமளபுரம், (பதிப்பர்) 1868. தொல்காப்பியம் சேனாவரையம்

2) கணேசய்யர், சி. (பதிப்பர்) 1938. தொல்காப்பிய மூலமும் சேனாவரையர்உரையும், முதல்பதிப்பு, சுன்னாகம்

3) கணேசய்யர், சி. (பதிப்பர்) 1955. தொல்காப்பிய மூலமும் சேனாவரையர் உரையும், இரண்டாம் பதிப்பு. சுன்னாகம்.

4) சண்முகம், செ. வை. 1980 எழுத்திலக்கணக்கோட்பாடு, அண்ணாமலைநகர்

5) ,, 1983. 'விரவுத்திணை', மொழியியல் 6.4.1-74.

6) ,, 1984. சொல்லிலக்கணக்கோட்பாடு பகுதி I-தொல்காப்பியம், அண்ணாமலை நகர்

7) சுந்தரமூர்த்தி, கு. (பதிப்பர்), 1981. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகப்பதிப்பு, அண்ணாமலைநகர்.

ஏனைய தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்புகளின் விவரத்துக்கு, சண்முகம், 1983:72 பார்க்கவும்.

தமிழ் அகராதியின் தந்தை பெஸ்கி எனும் வீரமாமுனிவர்

(Constantius Joseph Beschi (1680—1747)

சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கான்ஸ்டன்டியஸ் ஜோசப் பெஸ்கி இத்தாலி நாட்டில் வெனிஸ் மாநிலத்தில் காஸ்திகிளியோன் எனுமிடத்தில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் நாள் டால்போ பெஸ்கி, எலிசபெத் அவர்களுக்குப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கான்ஸ்டன்டியஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். பெஸ்கி என்பது அவரது குடும்பப் பெயராகும்.

பெஸ்கி எனும் வீரமா முனிவர் இளமையிலேயே கல்வி கற்பதில் தேர்ச்சி பெற்றார். 1698 ஆம் ஆண்டு அதாவது பதினெட்டாவது வயதிலேயே கிறிஸ்தவ மிஷனரியில் சேர்ந்தார். இளமையில் தாய் மொழியான இத்தாலிய மொழியைப் பயின்றார்.

சமய மொழியாகிய இலத்தீனையும் பயின்றார். துறவறம் மேற்கொண்ட பெஸ்கியார் தத்துவத்தையும் வேத சாத்திரங்களையும் கற்றார். இயேசு சபையில் பயிற்சி பெற்ற பொழுது 1700 ஆம் ஆண்டு ரவின்னாவில் இலக்கணம் கற்பித்தார். இலக்கணத் துறையில் நல்ல தேர்ச்சி ஏற்பட்டது. 1701 ஆம் ஆண்டு பொலோனோ என்னுமிடத்தில் தத்துவ பாடம் பயின்றார். மூன்று ஆண்டுகள் இலக்கணமும் கலைப் பாடங்களும் கற்பித்தார். அப்பொழுது பிரெஞ்சு, கிரேக்கம், ஹீப்ரு, போர்த்துகீஸ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைப் பயின்றார். பெஸ்கியைப் பன்மொழி அறிந்த 'பன்மொழிப் புலவர்' என்றே கூறலாம். 1706 ஆம் ஆண்டு முதல், நான்கு ஆண்டுகள் இறையியல் படித்தார். 1709 ஆம் ஆண்டு பாதிரியானார்.

1710 ஆம் ஆண்டு கிறிஸ்தவ மறையைப் பரப்ப இந்தியாவிற்கு வந்தார். கோவாவில் சில நாட்கள் தங்கிய பெஸ்கி, அம்பலக்காட்டை சென்றடைந்தார். அங்குள்ள திருமறைக் கல்லூரியில் சில பயிற்சிகளைப் பெற்ற பின், காமநாயக்கன்பட்டி சென்று சமயப் பணியைச் செய்தார். வீரமாமுனிவர் நடை, உடை, உணவு பழக்கங்களைத் தமிழர்களைப் போன்றே மாற்றிக் கொண்டார்.

தத்துவ போதக சுவாமியைப் போன்றே இவரும் மதுரையைத் தமது உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். வீரமாமுனிவர் தமிழைப் பேசவும் எழுதவும் பயிற்சி பெற்றார். இந்து சமய நூல்களைக் கற்று இந்து சமய அறிவை வளர்த்துக் கொண்டார். சுப்பிரதீபக் கவிராயரிடம் இவர் தமிழ் கற்றார் என்று கூறுகின்றனர்.

வீரமாமுனிவர் அடிக்கடி இடம் மாறிக் கொண்டேயிருந்தார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குருக்கல்பட்டி, தூத்துக்குடி, மணப்பாடு, காயல், புன்னைக் காயல், வேம்பாறு, கல்பட்டி, கூனம்பட்டி, மலையடிப்பட்டி கூரைப்பட்டி, திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், அய்யம்பேட்டை ஆகிய இடங்களில் சமயப் பணியாற்றினார். 1713 ஆம் ஆண்டு திருநெல்வேலி சென்றார். அங்கு இவர் சிறையில் அடைக்கப்பட்டார். 1716 ஆம் ஆண்டு ஏலாக்குறிச்சிக்குச் சென்றார். திருக்காவலூர் என்று அவ்வூரை

அழைப்பர். அடைக்கலமாதா ஆலயத்தை எழுப்பி, விழா எடுத்தார். கிறிஸ்தவர்களுக்கு முகம்மதியர்களால் பெரும் இன்னல்கள் ஏற்பட்டன. சந்தாசாகிபின் உதவியை நாடி, இன்னல் களை நீக்கினார். சந்தாசாகிப் வீரமாமுனிவருக்கு 'இஸ்மாத்தி சந்நியாசி' என்ற பட்டம் அளித்து ஆண்டுதோறும் பன்னிரண் டாயிரம் ரூபாய் வருமானமுள்ள ஊர்களையும் இனாமாகக்கொடுத்து தந்தப் பல்லக்கையும் அளித்து தமக்குத் திவானாக அமைத்துக் கொண்டார். சந்தாசாகிப் 1742 ஆம் ஆண்டு பதவி இழந்த பின்பு வீரமாமுனிவர் மணபட்டு, வேம்பார் முதலிய இடங்களுக்குச் சென்றார். 1746 ஆம் ஆண்டு அம்பலக்காடு சென்ற அவர், 1747 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் நான்காம் நாள் தமது 66 ஆவது வயதில் காலமானார்.

வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி அளவீடற்கரியது. தமிழகத்தில் பிறந்து தமிழகத்தில் வளர்ந்து தமிழகத்திலேயே மடிந்த யாரும் செய்ய முடியாத பெரும்பணிகளை வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றி யுள்ளார். தமிழே தாமானார், தாமே தமிழானார் என்றால் அது வீரமாமுனிவருக்கே பொருந்தும்.

வீரமாமுனிவர் அடைக்கலமாதா மீது அடைக்கல நாயகி, வெண்கலிப்பா, அடைக்கலமாலை, அன்னை அருங்கல் அந்தாதி திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய நூல்களை எழுதினர். 1726 ஆம் ஆண்டு தமிழ் மணம் கமழும் தேம்பாவணியை வீரமாமுனிவர் இயற்றினார். தேம்பாவணியைக் குறிப்பிடும் டாக்டர் கால்டுவெல் அவர்கள் 'பெருமிதச் சுவையும் மருட்கைச் சுவையும் மிகுந்து விளங்கும் இக்காப்பியம் பக்திப் பனுவலாகக் கர்ட்சியளிக்கிறது. தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நான்கு நூல்களுள் தேம்பா வணியும் ஒன்று' என்கிறார். வீரமாமுனிவர் படைத்த 'பரமார்த்த குருகதை' சிறந்த உரைநடை நூலாக உள்ளது. வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதக மறுத்தல், வாமன் கதை, லூத் தேர் இனத்தியல்பு என்னும் நூல்களையும் எழுதினார்.

இலக்கணம்: இலக்கண நூல்களையும் வீரமாமுனிவர் படைத் தார். தொன்னூல் விளக்கம் என்ற நூலைப் படைத்தார். இதில் 370 நூற்பாக்கள் உண்டு. வீரமாமுனிவர் கட்டளைக் கலிப்பா,

விருத்தம் ஆகியவற்றிற்கு இலக்கணம் தந்தார். தொன்னூல் விளக்கம் 'குட்டித் தொல்காப்பியம்' என்னும் சிறப்பைப் பெற்றது.

மேனாட்டவர் தமிழை எளிதில் கற்கும் பொருட்டு கொடுந் தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் போன்ற நூல்களைப் படைத்தார்.

அகராதி :

வீரமாமுனிவர் படைத்த 'சதுரகராதி' தமிழில் எழுதப்பட்ட முதல் அகராதியாகும். இவ்வகராதியில் பன்னிரண்டாயிரம் சொற்கள் உள்ளன. 'சதுர்' எனின் நான்கு என்று பொருளாகும். இவ்வகராதி பெயரகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் நான்கு பிரிவுகள் உடையதாதலின் 'சதுரகராதி' என்றும் பெயர் பெற்றது. உதாரணமாக

தாரம் — அரும்பண்டம். நாககு, மனைவி, உச்சவிசை பொன், மூக்காற் பாடுமிசை, யாழ். நரம்பி லொன்று, விண்மீன், வெள்ளி, வெண்கலம், வில், ஓசை

ஊர்தி — எருது. குதிரை, சிவிகை, தேர், யானை, பாண்டி முதலிய வாகனங்கள்

வீரமாமுனிவர் சதுரகராதியில் தொடையகராதி என ஒரு தொகுதி அமைத்திருப்பது புதுமையானது. ஆங்கில நாட்டு சாமுவேல் ஜான்சன் 1747 ஆம் ஆண்டு தலைசிறந்த ஆங்கில அகராதி யொன்றினை இயற்றினார். அந்த அகராதி தோன்றுவதற்கு 15 ஆண்டுகட்கு முன்னரே சதுரகராதியை (1732) வீரமாமுனிவர் படைத்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சதுரகராதி மட்டுமின்றி வீரமாமுனிவர் ஆறு அகராதிகளை வெளியிட்டார்.

1. தமிழ் - இலத்தீன் அகராதி
2. இலத்தீன் - தமிழ் அகராதி
3. தமிழ் - பிரெஞ்சு அகராதி
4. தமிழ் - ஆங்கில அகராதி

5. போர்ச்சுக்கீசியம் - இலத்தீன் - தமிழ் அகராதி

6. வட்டார வழக்குத் தமிழ் அகராதி

வீரமாமுனிவர் தமிழில் முதல் அகராதி தந்த அறிஞராகத் திகழ்கின்றார். அதனால் இவரை 'அகராதியின் தந்தை' என அழைக்கின்றோம்.

மொழிபெயர்ப்பு :

திருக்குறளில் அறம், பொருள் இரண்டினையும் 1730 ஆம் ஆண்டு இலத்தீனில் மொழிபெயர்த்தார்.

மருத்துவநூல்கள் :

வீரமாமுனிவர் குணபாடம், நவகாண்டம், நசகாண்டம் சிந்தாமணி என்ற நான்கு மருத்துவ நூல்களை எழுதினார்.

எழுத்துச் சீர்திருத்தம் :

வீரமாமுனிவர் தமிழ் எழுத்தில் எகர ஒகரங்களுக்குச் சில திருத்தத்தை உண்டாக்கினார். எழுத்துச் சீர்திருத்த முன்னோடி என இவரை அழைக்கலாம்.

இவர் எழுதிய நூல்களைத் தொகுத்துக் காண்போம்.

செய்யுள் நூல்கள் :

1. திருக்காவலூர்க் கலம்பகம்
2. அடைக்கலமாலை
3. கலிவெண்பா
4. அன்னை அருங்கல் அந்தாதி
5. கித்தேரியம்மாள் அம்மானை
6. தேம்பாவணி

வசனநூற்கள் :

7. வேதியர் ஒழுக்கம்
8. வேத விளக்கம்
9. பேதக மறுத்தல்
10. ஞானம் உணர்த்தல்

11. திருச்சபைக் கணிதம்
12. வாமன் கதை
13. பரமார்த்தகுரு கதை

மருத்துவம் :

14. குணபாடம்
15. நவகாண்டம்
16. நசகாண்டம்
17. சிந்தாமணி

மொழிபெயர்ப்பு :

18. திருக்குறள் (அறம், பொருள்). -இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

இலக்கணம் :

19. தொன்னூல் விளக்கம்
20. A Grammar of the Common Dialect of the Tamil language called low Tamil composed for the use of the Society's of Jesus (Madras, 1848).
21. A Grammar of High Tamil Latin Text published for the first time by L. Besse, with the English translation by B. G. Babington (Trichi, 1917).

அகராதி :

22. சதுர்கராதி
23. தமிழ்-இலத்தீன் அகராதி
24. இலத்தீன் - தமிழ் அகராதி
25. தமிழ் - பிரெஞ்சு அகராதி
26. தமிழ் - ஆங்கில அகராதி
27. போர்ச்சுகீசியம் - இலத்தீன் -தமிழ் அகராதி
28. வட்டார வழக்குத் தமிழ் அகராதி

'வீரமா முனிவர் ஆக்கிய நூல்களால் தமிழ்த்தாய் அழகு பெற்றாள். தேம்பாவணி என்னும் அணி தமிழன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழ்கின்றது. காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கிறது. தொன்னூல் பொன்னூலாக இலங்குகிறது. சதுரகராதி முத்தாரமாக மிளிர்கிறது. வீரமாமுனிவர் தமிழ் முனிவராக விளங்குகின்றார்' என்று சொல்லின் செல்வர் ரா.பி, சேதுப்பிள்ளை இவரைப் போற்றுகின்றார்.

இவர் இயற்றிய தேம்பாவணியும் சதுரகராதியும் உள்ளவரை இவரது புகழ் நிலைத்து நிற்கும்.

மொழியியல் 7.3 & 4 (1984)

கோபன்ஹேகன் மொழியியல் கோட்பாடு [யெம்ஸ்லெவின் மொழியியல் கொள்கைகள்]

செ. சண்முகன்
மைசூர் பல்கலைக்கழகம்

யெம்ஸ்லெவ் (1899 – 1965), உல்டால் என்பவர்களால் வெளியிடப்பட்டதும், ஜோர்ஜன்ஸன், சீயர்ஸ்டீமா போன்றோர் களால் விவரிக்கப்பட்டதுமான மொழிக் கொள்கைகளும், மொழி ஆராய்ச்சிக் கொள்கைகளும் 'கோபன்ஹேகன் மொழியியல் கோட்பாடு' என பின்னர் அழைக்கப்பட்டது. டென்மார்க்கிலிருந்து, யெம்ஸ்லெவ் இக்கொள்கைகளை வெளியிட்டமையால் இந்தக் கொள்கைகளை 'டேனிஸ் மொழியியல் கொள்கைகள்' எனவும் அழைப்பர் மொழியியலார். சசூரின் பின்னால் மூன்று அமைப்பு மொழியியல் கொள்கைகள் எழுந்தன. அவை முறையே பிராக் மொழியியல் கொள்கைகள், கோபன்ஹேகன் மொழியியல் கொள்கைகள், அமெரிக்க அமைப்பு மொழியியல் கொள்கைகள் (ப்ளும்ஃபீல்டின் கொள்கைகள்) என்பன. ப்ராக் மொழியியலை

'செயல் மொழியியல்' எனவும் அழைக்கலாம் (Functional linguistics). செயல் மொழியியல், மொழியின் மற்றும் மொழிக் கூறுகளின் செயல்களை விளக்க முயலும். கூடவே மொழியின் அமைப்பையும் விளக்கும். கோபன்ஹேகன் மொழியியலை கணித அமைப்பு மொழியியல்' அல்லது 'கணித அமைப்பு விளக்க மொழியியல்' (Glossematics) என அழைக்கலாம். மொழியின் அமைப்பில் படிந்து கிடக்கும் கணித வகையிலான அம்சங்களை விளக்குவதை, கோபன்ஹேகன் மொழியியல் தன் கடமையாகக் கொள்ளும். ப்ளூம்ஃபீல்டின் மொழியியலை, விவரணை மொழியியல் (Descriptive linguistics) என அழைக்கலாம். இம்மொழியியல், மொழிகளில் சில கூறுகளையும் நிலை நிறுத்தும்; மேலும் அக்கூறு களின் தொடர் அமைப்பையும் விளக்க முயலும்.

கோபன்ஹேகன் மொழியியல் மொழியின் அமைப்பை, குறிப்பாக மொழியின் குறித்தளத்தை விளக்க முயலும். டேனிஷ் மொழியின் ஒலியமைப்பை விளக்கும் வகையில் 1935ல் யெம்ஸ்லெவ், உல்டால், பால்லியர் என்பவர்கள் லண்டனில் நடைபெற்ற ஒலிவிஞ்ஞான மாநாட்டில் 'Phonematic,' என்ற ஒரு கருத்தைப் புகுத்தினர். இந்த கருதது ஒலிகளை கணிதரீதியில் விளக்கும் வகைக்காகப் பயன்படுத்தப்பட்து. 'புகுத்தி மாற்றல்' (commutation), கூட்டல் (combination), திரித்தல் (Alternation) உணர்த்தல் (implication), போன்ற கலைச்சொற்கள் ஒலியமைப்பு விவரணைக்காக பயன்படுத்தப்பட்டன. மேலும் மொழியின் முக்கிய ஒலிகளை (ஒலியன், Phoneme) முற்றிலும் அமைப்பின் அடிப் படையில் விளக்க முயன்றனர் யெம்ஸ்லெவ், உல்டால், லீயர் என்பவர்கள். அதே நேரத்தில் பிராக் மொழியியலார் ஒலியனை முக்கியமான 'மனதில் பதிந்தஒலி' என விளக்கினர்.

1935 - 36ல் யெம்ஸ்லெவும், உல்டாலும் இணைந்து மொழியின் ஒலியமைப்பு மற்றும் இலக்கண அமைப்புகளை கணிதரீதியில் விளக்கமுடியும் என்று கொண்டனர். இதற் காக உல்டால் 'Glossematics' என்ற கலைச் சொல்லை உருவாக்கினார். மொழியின் அமைப்பை, கணிதரீதியில் விளக்கும் (algebra) தன்மையை உணர்த்தும் வகையில்தான்

இந்த கலைச் சொல் உருவாக்கப்பட்டது (Glossa = மொழி, = matics = கணித வகை இயல். ? Glosseme - மொழி அடிப்படைக் கூறு) மொழியை ஒரு வகையான 'அல்ஜீப்ரா' என்று கொண்டதால் கோபன்ஹேகன் மொழியியலை 'அல்ஜீப்ரா மொழியியல்' எனவும் அழைப்பர் பின்னால். 'An outline Glossematics' (கணித அமைப்பு மொழியியல் - ஒரு சுருக்க விவரணை என்ற கட்டுரையை 1936ல் யெம்ஸ்லெவும், உல்டாலும் இணைந்து எழுதினர். பின்னர் இருவரும் தங்கள் அலுவல் காரண மாகப் பிரிந்தனர். இந்தக் கட்டுரைதான் 'கணித அமைப்பு மொழி யியலை' உலகுக்கு உணர்த்தியது. இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து யெம்ஸ்லெவ் டேனிஷ் மொழியியல் 'மொழிக் கோட்பாட்டிற்கு ஒரு முன்னுரை' (Prolegomena to a theory of Language) என்ற புத்தகத்தை 1943-ல் வெளியிட்டார். அதுவே கோபன் ஹேகன் மொழியியல் கோட்பாட்டை விவரிக்கும் வகை யிலும், பறைசாற்றும் வகையிலும் அமைந்தது. இந்தப் புத்த கத்தை 1953-ல் F. விட்ஃபீல்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து பிறநாட்டு மொழியியலாரும் டேனிஷ் மொழியியல் கோட்பாட்டை உணர வழிசெய்தார். ஜோர்ஜென்சன், கார்வின், கீயர்ஸ்டீமா, போன்றவர்கள் இந்த வெளியீட்டைக் குறித்து கட்டுரைகள் (மதிப்புரைக் கட்டுரைகள்) எழுதியுள்ளனர்.

உல்டால் என்பார், பின்னர் யெம்ஸ்லெப் கொள்கையினின்றும் சிறிது வேறுபட்ட ஆனால் முழுவதும் கணித அம்சங்களைத் தழுவிய ஒருவகை 'Glossematics' கொள்கையைக் கொண்டிருந் தார் என்பது அவரது பின்னைய வெளியீடுகளால் புலப்படுகிறது (Uldall, 1957). இங்கே நாம் விவரணைக்காக யெம்ஸ்லெவின் கொள்கைகளை எடுத்துக் கொள்வோம்.

1935முதல் 1943 வரையிலான காலக்கட்டத்தை கோபன் ஹேகன் மொழியியலின் 'முக்கிய காலக்கட்டம்' என அழைக்க லாம். கோபன் ஹேகன் மொழியியலின் வளர்ச்சிக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. 1. பிராக் மொழியியலார் தீவிர மாக மொழிகளின் ஒலியமைப்பை ஆராய்ந்த நிலை (1930-31). 2. யெம்ஸ்லெவும், உல்டாலும் இணைந்த நிலை (1935-36).

இவையல்லாமல் கணித ரீதியிலான மொழி இயலை யெம்ஸ்லெவ், உல்டால் என்பவர்கள் வளர்க்க சில சூழ்நிலைகள் காரணமாக அமைந்தன. 1. H.G. வீவல் என்ற டென்மார்க் அறிஞர் வெளிப்படையான அமைப்பைக் கொண்ட இலக்கணக் கூறுகளை விளக்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிய கூற்று. 2. பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து மொழியியல் கொள்கைகளில் 'பொது இலக்கணத்திற்கு' முக்கியத்துவம் கொடுத்த நிலை. 3. மொழியின் சிறப்பு அதன் அமைப்புகளில் pattern) படிந்திருக்கிறதேயன்றி அதன் ஒலியிலோ, பொருளிலோ அல்ல என்ற சபீரின் கூற்று. 4. ரஷ்ய அறிஞர்கள் மொழியை விளக்குவதற்காக எடுத்துக் கொண்ட 'கணிதரீதியிலான கொள்கைகள்' (Formalism).

மேற்கூறியவைகளைப் பின்னணியாகவைத்து யெம்ஸ்லெவ் எல்லா மொழிகளின் அமைப்பையும் பொதுவாக, கணித ரீதியில் விளக்கமுடியும் என்று கொண்டார். சில அமைப்புக் கருத்துக்களை கைக்கொண்டு எல்லா மொழியையும் 'பிரித்தறி ஆராய்ச்சிக்கு' (deduction) உட்படுத்த முடியும் என விளக்கினார். மொழி ஆராய்ச்சிக்காக அவர் எடுத்துக் கொண்ட சில கருத்துக்களை 'பொதுவான கருத்துகள்' (premises) என்பார். மொழியை விவரிப்பதில் இக்கருத்துக்களைக் கைக்கொள்ள வேண்டும். இவைகளை மொழிகளில் கண்டு கொள்ள வேண்டும். இக்கருத்துக்களை ஒரு குறிப்பிட்ட மொழியின் அம்சங்களை வைத்து புறக்கணிக்க முடியாது. அந்த வகையிலான 'முதற்கருத்துகளை' அவர் தேர்ந்தெடுத்தார். இதனால் தான், கணிதரீதியிலான மொழியின் அமைப்பை விவரிப்பதன் முன்னர் மொழியின் அமைப்பை ஒருவர் நன்றாக உணர்ந்திருக்க வேண்டும்' என்பர் சிலர்.

யெம்ஸ்லெவின் வளர்ச்சிப் பாதையில் 3 நிலைகளைக் காணலாம் 1. 1928 முதல் 1935 வரையிலான காலக்கட்டம் 2 1935-43 வரையிலான காலக்கட்டம். 3 1943 முதல் 1960 வரையிலான காலக்கட்டம். முதல் காலக்கட்டத்தில் யெம்ஸ்லெவ், பொது இலக்கணங்களின் கூறுகளை விளக்குவதையும், வரலாற்று

மொழியியல் சம்பந்தமான சில கருத்துகளை விளக்குவதையும், ராஸ்க் என்ற மொழியியலாரின் படைப்புகளை தொகுத்து, மதிப்புரை கொடுப்பதையும் தமது குறியாகக் கொண்டார். இரண்டாம் நிலையில்தான் (Glossematics) கொள்கைகள் எழுந்தன. இந்தக் கொள்கையில்தான் மொழியை, மொழியின் அமைப்பை சில தொடர்புகளின் மூலம் விளக்கமுடியும் என்றும், மொழி ஆராய்ச்சியில் சில அடிப்படை கருத்துக்களைக் கைக்கொள்ள வேண்டும் எனவும் விளக்கினார். மொழி இயலுக்கென்று தனிக் கோட்பாடு உண்டெனவும் விளக்கினார். மூன்றாம் காலக்கட்டத்தில் மொழியைப் பற்றிய பொதுவான செய்திகளை வெளியிட்டார். முககியமாக மொழியில் நாலு விதமான 'படிநிலைகள்' (Strata) காணப்படும் என்றார். இதைத்தழுவித்தான் 'அமெரிக்க மொழியியலறிஞரான லேம்ப் என்பார் பின்னர்' படிநிலை அமைப்பு இலக்கணம்' (Stratificational Grammar) என்ற தன் இலக்கணத்தை பிரபலப்படுத்தினார். யெம்ஸ்லெவ் மேற்கொண்ட வேறு சில பணிகளில் முக்கியமானது 1939ல் 'ஆக்டா லிங்குஸ்டிகா' என்ற மொழியியல் பத்திரிகையைத் துவங்கியது.

இங்கே நாம், யெம்ஸ்லெவும், உல்டாலும் இணைந்திருந்த காலத்தில் அவர்கள் கொண்டிருந்த மற்றும் வளர்த்த மொழிக் கொள்கைகளையும், மொழி ஆராய்ச்சிக் கொள்கைகளையும் விளக்க முயல்வோம். இவைகளையே நாம் 'கோபன் ஹேகன் மொழியியல் கோட்பாடு' என்ற பெயரில் அழைக்கின்றோம்.

மொழி:

மனிதன் தன் எண்ணங்களை, உணர்ச்சிகளை, மனநிலைகளை வெளிப்படுத்தவும், சமுதாய மக்களை சில செயல்களை செய்யத்தூண்டவும் (சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்தவும்) தனிமையைப் போக்குவதற்காகவும் மொழியைப் பயன்படுத்துகிறான். மனிதன் தனிமையைப் போக்கும் வகையில் மொழியைப் பயன்படுத்தும் போதுதான் வெட்டிப் பேச்சுகளும் இலக்கியங்களும் உருவாகின்றன. மொழியை அதன் பயன், அது ஏற்படுத்தும் விளைவு, அது நிலைபெறும் சூழ்நிலை, அதைப் பேசுபவர்களின் தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் விவரிக்க முடியும். மொழி

யானது குறிகளைக்கொண்ட ஒரு அமைப்பு. இந்த விவரணை மொழியின் அமைப்பின் அடிப்படையில் எழுதுவது. மொழிக்குறிகள் என்பவை ஒலிகள் மட்டும் எழுத்துக்களால் ஆனவை அம்மா-mother). மொழிக்குறியின் பொருள் வெளிப்படையானதல்ல. அதை குறிப்பாகத்தான் உணர வேண்டும். மொழிக் குறிகளின் மூலம்தான் 'கருத்துப்பரிமாற்றம்' communication) நடைபெறுகிறது. தான் நினைத்தவற்றை ஒருவர் பிறருக்கு உணர்த்துவது மொழிக்குறிகளின் மூலம்தான். பிறர் நினைப்பவற்றை ஒருவர் புரிந்து கொள்ளுவதும் பிறர் பயன்படுத்தும் 'மொழிக்குறிகளை' (sign) உணர்வதன் மூலம்தான். மொழியை குறிகளால் ஆன அமைப்பு' என்று ஏற்றுக்கொள்வர் கோபன்ஹேகன் மொழி இயலார்.

மொழியை தனி அந்தஸ்து கொண்ட ஒரு அமைப்பு என விளக்கியவர் பலர். மொழி இயல் வரலாற்றை நோக்கும் போது சில மொழியியலாரும், சில மொழியியல் கொள்கைகளும் மொழிக்கும், மொழியியலுக்கும் தனி நிலைமையைக் கொடுக்காதிருந்த தன்மையைக் காணமுடியும். எடுத்துக்காட்டாக, 19ம் நூற்றாண்டு மொழியியலாரைக் குறிப்பிடலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியலார் 'மொழி மாறுபடும் விதத்தை' விளக்க முயன்றனர். அதற்காக பௌதீகக் கொள்கைகளையும், (பொருள்களின் மாறுபாடு 'சக்தி' (force) போக்கு (motion) என்பனவைகளைச்சார்ந்த விதிகளின் மூலம் நிர்ணயிக்கப்படும் என்ற கொள்கை) உயிரியல் கொள்கைகளையும் (பொருள்களின் வளர்ச்சி, மாறுபாடு ஆகியன 'இயற்கை தேர்ந்தெடுப்பு' (Natural Selection) போன்றவைகளால் நிர்ணயிக்கப்படும் என்ற கொள்கை) பயன்படுத்தினர். இதனால் மொழியை ஒருவகை பௌதீகப்பொருள் என்றோ, உயிரியல் பொருள் என்றோ கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சிலர் மொழியை 'ஒருவகைச்செயல்' (உடற்செயல் அல்லது மனச்செயல்) என்பர் மொழியை ஒருவகை உடற்செயல் என்று கூறும்போது அதை விவரிக்க 'செயல் விவரணை' முறைகளைக் கையாள வேண்டும். மொழியை ஒருவகை மனச்செயல் என்று

கூறினால், அதை விளக்க 'உளவியல் விவரணை' முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். சிலர் மொழியை 'சமுதாயத்தின் ஒரு அங்கம்' என்று கொண்டு மொழி விவரணைக்கு சமுதாய இயல் விவரணை முறைகளைக் கையாள்வர். மொழி என்பது சமுதாயம், மனம், உடல் முதலியனவற்றோடு தொடர்பு கொண்டதுதான். இருந்தாலும் அதற்கென்று ஒரு தனி நிலை உண்டு. ஆகவே மொழியை விவரிக்கும்போது அதன் தனித் தன்மை துலங்கும் வகையில் விவரிக்க வேண்டும். பிற துறைகளில் நிலவும் விவரணைக்கருத்துக்களைக் கைக்கொள்ளாமல் மொழியைத்தனியாக விளக்கமுடியும், விளக்க வேண்டும் எனச்சுட்டிக் காட்டியவர்கள் கோபன்ஹேகன் மொழி இயலார். மொழி தன்னிறைவு பெற்ற முழுமையான பொருள்: அதனை விளக்கும் இயலும் தனிநிலை கொண்ட இயல் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர் யெம்ஸ்லெவும் அவரைச் சார்ந்தவர்களும்.

மொழியமைப்பு, மொழியம்சங்கள் பற்றிய சில கோபன் ஹேகன் கருத்துகள் பின்வருமாறு.

1. மொழியானது 'மொழிக்குறிகளை'க் (signs) கொண்ட ஒரு அமைப்பு. மொழிக்குறியின் ஒரு பக்கத்தில் ஒலி அல்லது எழுத்தால் ஆன அமைப்பையும (expression Eg. அம்மா) இன்னொரு பக்கத்தில் பொருளையும் (content Eg. mother) காணலாம். மொழிக்குறிகள் பொருள் கொண்ட கூறுகள். ஒவ்வொரு மொழிக் குறியிலும் குறிநுண் கூறுகளைக் (Figure) காணலாம். 'குறிநுண் கூறுகள்' இரண்டு வகையானவை. 'குறிகளின் புற அமைப்பான 'ஒலியமைப்பு' அல்லது 'வரியமைப்பை' உருவாக்கும் 'புற நுண்கூறு' expression figurae - அ+ம்+ம்+ஆ) 2. குறிகளின் அக அமைப்பான 'பொருளமைப்பை' உருவாக்கும் 'அக நுண் கூறு' (content Figurae- [Female + parent], மொழியைபொது வாக 'குறிகளைக்கொண்ட அமைப்பு' எனலாம். மிக நுண்மை யாக, மொழியை 'குறி நுண் கூறுகளைக் கொண்ட அமைப்பு' எனலாம்.

2. மொழியில் இரண்டு 'தளங்களை'க் (planes) காணலாம் அவையாவன 1. 'புறத்தளம்' (expression plane) 2. 'அகத்

தளம்' (content plane) புறத்தளத்தை 'வெளியீட்டுத்தளம்' என்றும் குறித்தளம் என்றும் அழைக்கலாம் (எ.கா. மகன்) 'அகத் தளத்தை' 'பொருளடக்கத்தளம்' அல்லது 'குறிப்புத்தளம்' என அழைக்கலாம். (எ.கா. 'Son) 'குறிப்புத்தளம்' எண்ணங்களை உள்ளடக்கும். 'குறித்தளம்' எண்ணங்களைக் காட்டுகின்ற ஒலி அல்லது வரியமைப்பைக் கொண்டதாயிருக்கும். மொழியில் குறித் தளம், குறிப்புத்தளம் இருப்பதைப் போன்று ஒவ்வொரு மொழிக் குறியிலும் குறித்தளமும், குறிப்புத்தளமும் காணப்படும்.

3. மொழி மற்றும் மொழிக்குறிகளில் காணப்படும் 'குறி' மற்றும் 'குறிப்பு' தளங்களில் இரண்டு அங்கங்களைக் காணலாம். அவையான 1. 'அமைப்பு' Form) 2. 'கருப்பொருள்' (substance) குறித்தளத்தில் அதற்கென அமைந்த 'அமைப்பையும்' (குறி யமைப்பு (expression form) 'கருப்பொருளையும்' (குறி கருப் பொருள் - (expression substance) காணலாம். குறிப்புத்தளத் திலும் அதற்கென அமைந்த 'அமைப்பையும்' (குறிப்பமைப்பு – ex content form) 'கருப் பொருளையும்' (குறிப்பு கருப்பொருள்-con tent substance) காணலாம். இதன்மூலம் ஒரு மொழியின் குறிக் கூறில் நான்கு வகையான அம்சங்கள் இருப்பதை உணரலாம். அவையாவன 1. குறியமைப்பு 2. குறிகருப்பொருள் 3. குறிப்பு அமைப்பு 4. குறிப்பு கருப்பொருள்.

4. மொழியில் நிலையமைப்பு' (system) 'போக்கு அமைப்பு' process) என்ற இரு அம்சங்களையும் காணலாம். மொழியில் காணப்படும் 'மொழிக்குறிகளும்' குறி நுண் கூறுகளும் தொகுக்கப்பட்டு அதனால் உருவாகும் 'தொகுப்பு'களால் நிலை பெறுவது 'நிலையமைப்பு'. மொழியின் 'நிலையமைப்பில்' பல வகை 'மொழிக்கூறு தொகுப்புகள்' காணப்படும். அத்தகைய தொகுப்புகளில் பங்கேற்கும் நபர்கள் 'பெயற்சிநிலைத் தொடர் பில்' (substitution) நிற்கும். மொழியின் மொழிக்குறிகளும், குறி நுண் கூறுகளும் 'தொடர் நிலை நிறுத்தப்பட்டு அதனால் உருவாகும் 'தொடர்' (sequence) களால் நிலை பெறுவது 'போக்கு அமைப்பு' மொழியின் 'போக்கு அமைப்பில்' பல வகையான 'மொழிக்கூறு தொடர்கள்' காணப்படும். அத்தகைய தொடர்

களில் பங்கெடுக்கும் நபர்கள் 'தொடர்ச்சி நிலைத் தொடர்பில்' (sequential relation) நிற்கும்.

மொழிக்கூறுகள் (மொழிக்குறிகள் மற்றும் குறிநுண்கூறுகள்) 'பெயுற்சி' மற்றும் 'தொடர்ச்சி' தொடர்புகளை யல்லாது இன்னும் மூன்று வகையான 'தொடர்புகளை'க் காட்டி நிற்கும். அத்தகைய தொடர்புகள் பின்வருமாறு 1. 'இருமுனைத்தொடர்பு' (interdependence) 2. ஒரு முனைத்தொடர்பு (determination) 3. முனையற்ற தொடர்பு (constellation). இந்த தொடர்புகள் மொழியின் நிலையமைப்பிலும் போக்கு அமைப்பிலும் வெளிப் படும். அதாவது நிலையமைப்பில் பங்கு பெறும் மொழிக் கூறு களும், போக்கு அமைப்பில் பங்கு பெறும் மொழிக்கூறுகளும் மேற் கூறிய மூன்று தொடர்புகளையும் காட்டி நிற்கும்.

5. மொழியில் இரண்டு வகையான கூறுகள் உண்டு. 1. மொழிக்குறி அல்லது குறிக்கூறு (Sign). குறிநுண் கூறுகள் (figurae). குறிக்கூறில், குறித்தளத்தையும் (expression) குறிப் புத்தளத்தையும் (content) காணலாம். குறிக்கூறுகள் ஒரு 'பொருண்ள' (எண்ணம்-குறிப்பு) ஒரு 'கருவியால்' (ஒலி, வரி வடிவம்-குறி) உணர்த்தும். மொழிக்குறி அல்லது குறிக்கூறின் 'குறித்தளத்தில்' குறியமைப்பு (expression form) மற்றும் குறி கருப்பொருள்களைக் (expression Substance) காணலாம். மொழிக் குறியின் 'குறிப்பு தளத்தில்' 'குறிப்பு அமைப்பு' (content form) மற்றும் 'குறிப்பு கருப்பொருள்'களைக் (content Substance) காணலாம்.

குறிநுண்கூறுகள் குறிக்கூறின் குறியமைப்பு மற்றும் குறிப்பு அமைப்புகளை உருவாக்கும் தன்மை கொண்டவை. இவற்றை 'மொழியடிப்படைக்கூறு' (Gosseme) எனவும் அழைக்கலாம். 'மொழி அடிப்படைக் கூறு' என்ற கூறு சரியாக விவரிக்கப்படாத ஒரு கூறு. சிலர் இதை 'குறிநுண் கூறு' எனவும் கொள்வர்.

6. மொழியை ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதன் மூலம் இரண்டு வகையான கூறுகளைப் பெறமுடியும். அவையான 1. நிலைக் கூறுகள் அல்லது மாறாக்கூறுகள் (invarients) 2. 'திரிபுக்கூறுகள்'

அல்லது 'மாறும்கூறுகள்' (varients). ஒரு நிலைக்கூறின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட திரிபுக்கூறுகள் காணப்படலாம். நிலைக் கூறுகளை 'பெயற்சி சோதனை மூலம் கண்டு பிடிக்கலாம். நிலைக் கூறுகளையும், திரிபுக்கூறுகளையும் மொழியின் குறித்தளத்திலும், குறிப்புத்தளத்திலும் காணமுடியும்.

7. மொழிக்கூறுகளுக்கு 'பொதுவடிவம்' (Schema) இருக்கும். பொதுவடிவம் கருப்பொருளற்ற வடிவம். பொதுவடிவம் 'தொடர்பு களின்' மூலம் விளக்கப்படும். தொடர்புகளில் பங்கு கொள்ளும் அங்கத்தினர்கள் (A—ஒருமுனை —B) கருப் பொருளைப் பெறும் போது (A = பெண் B = கள் ADB. பெண்-கள்) மொழியின் பொது வடிவம், 'வழக்கமான மொழிவடிவம்' (usage) ஆகிறது. மொழியின் பொது வடிவத்திலிருந்து, அப்பொதுவடிவக் கூறுகளுக்கு கருப் பொருளைக் கொடுக்கும் போது உருவாகும் வடிவம், 'வழக்கமான மொழிவடிவம்' (usage). எனவே மொழியில் வழக்கமான, அன்றாட மொழி பயன்படு சூழலில் உபயோகிக்கப்படும் 'வழக்கமான வடிவ மும்', வழக்கமான வடிவங்களின் பின்னணியில் உறைந்து கிடக் கும் 'பொதுவடிவமும்' காணப்படும். பின்வரும் கணித எடுத்துக் காட்டு இந்த இரண்டு வடிவங்களையும் விளக்கும்.

$a + b = C$ (schema)
$5 + 3 = 8$ (usage)
$4 + 4 = 8$

8. எண்ணங்களையும். பொருள்களையும், செய்திகளையும் பலவகைகளில் ஒருவர் பிறருக்கு உணர்த்த முடியும். அத்தகைய உணர்த்து முறைகளை 'யுக்திகள்' எனலாம். மனித மொழி அத்தகைய யுக்திகளில் ஒன்று. மனிதமொழி ஒலி, சொல் முதலியவற்றால் ஆனது. செய்திகளைக் குறிக்க நாம் நிறங்களை (சிவப்பு ஆபத்து, நில்., பச்சை - போ, கறுப்பு - இறப்பு, துக்கம்., வெள்ளை - தூய்மை) கொடிகளையும் (தேசக் கொடிகள், ரயில் நிலையத்தினரின் கொடி வகைகள்) சைகைகளையும் (சைகை மொழி; நடனமுத்திரைகள் ஃபார்முலாக்களையும், (H_2O — நீர், Nacl — உப்பு) பயன்படுத்துகிறோம். மொழியானது செய்தியை உணர்த்த பயன்படுத்தப்படும் யுக்திகளில் (உபகரணைகளில்) மிக

முக்கியமானது. ஏனென்றால் மொழியில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினுள் அடங்கும் 'அடிப்படை நுண்கூறுகள்' அல்லது 'குறிநுண்கூறுகள்' காணப்படும். இந்த குறிநுண் கூறுகளிலிருந்து நாம் பெரியதும் சிரியதுமான 'மொழிக்கூறு'களை உருவாக்க முடியும். பெருமொழிக்கூறுகளை உருவாக்கும் வகையில், மொழியில் சில 'அமைப்பு உருவாக்க விதிகளும் காணப்படும். நுண்கூறுக்ளையும், அமைப்பு உருவாக்க விதிகளையும் பயன்படுத்தி பெரியதும் சிறியதுமான மொழிக்கூறுகளை உருவாக்க முடியும். உருவாக்கி அக்கூறுகளை செய்தி பரிமாற்ற உபகரணையாக மாற்றமுடியும். ஆகவேதான் மனித மொழி மிக முக்கியமானது. மனிதனால் உபயோகிக்கப்படும் சைகை மொழி, ஏனைய மொழிகளில் குறிநுண் கூறுகளையோ. அமைப்பு உருவாக்க விதிகளையோ காணமுடியாது. விலங்குகளின் மொழியிலும் மேற்கூறிய அம்சங்கள் காணப்படுவதில்லை. குறிநுண்கூறுகளைப் பெறாத மொழியமைப்புகளை 'அறிகுறி அமைப்பு' அல்லது 'அடையாள அமைப்பு' (symbolic form) எனலாம். மனித மொழி 'குறிகளைக் கொண்ட அமைப்பு'.

9. மொழிக்குறிகளின் 'குறிப்பு அமைப்பை' (content) அடிப்படையாகக்கொண்டு மொழிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. வெளிப்படை குறிமொழி (denotative semiotic) 2. மறை குறிமொழி (connotative semiotic) 3. ஈட்டு குறி மொழி (meta semiotic). வெளிப்படைக் குறி மொழியின் குறிக்கூறுகள் வெளியுலகப் பொருள்களையோ, எண்ணங்களையே நேரடியாகக் குறிக்கும். அதாவது மொழிக்குறிகளின் குறிப்புத்தளம் (content plane) சில எண்ணங்களாலோ, பொருள்களாலோ தன் அமைப்பைப் பெறும் (ஆண்- 'male' பெண்- 'female' go- 'போ') மறை குறிமொழியின் குறிக்கூறுகள் சில எண்ணங்கள் மற்றும் வெளியுலகப்பொருள்களைக் குறிப்பதோடல்லாமல் இதர பல மொழி பயன்படு 'சூழ்நிலை அம்சங்களான' (contextual factors) பேசுவோர், கேட்போர், அவர்களின் நிலை, பேச்சு சூழல், சமுதாய சூழல் ஆகியனவற்றையும் பிரதிபலீக்கும். குறிக்கூறுகளால் சுட்டப்படும் எண்ணங்களையும், பொருள்களையும் 'குறிப்பு' (denotation) என்றும், மொழிக்குறியால் பிரதிபலிக்கப்படும் 'சூழ்நிலை அம்சங்களை' விசேச குறிப்பு (connotation) என்றும் அழைக்கலாம்.

மரி — 'die' (குறிப்பு கிருஸ்தவர் பேச்சு (விசேச குறிப்பு

பயம் — 'fruit' (குறிப்பு) சென்னை கீழ்வகுப்பு பேச்சு (விசேச குறிப்பு)

ஈட்டுக்குறி மொழியின் மொழிக்குறிகள் இன்னொரு மொழியின் குறிக்கூறுகளைத்தன் குறிப்பமைப்பாகக் கொள்ளும். இலக்கண விளக்கத்தில் நாம் பயன்படுத்தும் குறிக்கூறுகளான 'பெயர்' 'வினை' என்ற சொற்கள் சாதாரண மொழிச்சொற்களை 'குறிப்பாக'க் கொண்டிருக்கும். ஆகவே இலக்கணச் சொற்களை (வினை. பெயர், இடை, உரி, தொடர்) ஈட்டுக்குறி மொழியின் குறிக்கூறுகள எனலாம் (எ.கா. பெயர்—ஆண், பெண், மகன், மனைவி, அவன், அவள் ...).

மேற்கூறிய மொழியைப் பற்றிய, கோபன் ஹேகன் மொழியியலார் கொண்டிருந்த கருத்துகளை இங்கே விரிவாகக்கூறுவோம்.

நிலையமைப்பு (system): போக்கு அமைப்பு (process)

சசூர் என்பார் மொழியில் 'மனமொழி' (langue), 'பேச்சு மொழி' (parole) என இரண்டு முக்கிய வகைகள் உண்டு என குறிப்பிடுவார். கோபன்ஹேகன் மொழி இயலாகும் இக்கருத்தை ஏற்றுக் கொள்வர். இதைத்தழுவி மொழியில் 'நிலையமைப்பு' (system), 'போக்கு அமைப்பு' (process) என்ற இரு அமைப்புகள் உண்டென வலியுறுத்துவர். மொழியில் முக்கியமாக இரண்டு வகையான கூறுகள் உண்டு, 1. குறிக்கூறுகள் (signs) 2. குறிநுண் கூறுகள் (Figurae). மொழியின் கூறுகள் 'தொடர்ச்சி நிலையில் நின்று (both-and relationship) பெரியதும், சிறியதுமான 'கூறுத்தொடர்களை' (sequence) உருவாக்கும் [ஆண் + குழந்தை]. இத்தகைய கூறுகளும், கூறுத்தொடர்களும் மொழியின் 'போக்கு அமைப்பை' பிரதிலிக்கும். மொழியின் போக்கமைப்பு என்பது குறிக் கூறுகளின் தொடர்நிலைத் தொடர்பால் உருவான பெரியதும், சிறியதுமான 'தொடர்களால்' ஆன பொது அமைப்பு. மொழியில் காணப்படும் குறிக்கூறுகள்

'பெயற்சி நிலைத் தொடர்பிலும் (either-or relationship நிற்கும் (ஆண் or பெண்). பெயற்சி நிலைத் தொடர்பில் நிற்கும் கூறுகள் தங்கள் அமைப்பு அடிப்படையில் சில பொதுத்தன்மைகளைக் கொண்டிருக்கும். இத்தகைய கூறுகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு 'தொகுப்பு' ஆக்கமுடியும். இத்தகைய மொழிக்கூறுகளும், மொழிக்கூறுத் தொகுப்புகளும் 'நிலை யமைப்பை' பிரதிபலிக்கும். மொழியின் நிலை அமைப்பு என்பது குறிக்கூறுகளின் பெயற்சி நிலைத் தொடர்பின் அடிப்படையில் எழும் பெரியதும், சிறியதுமான 'தொகுப்புகளால்' (group) ஆன பொது அமைப்பு.

நிலையமைப்பில் பங்கு பெறும் கூறுகள் 'ஆதாரக் கூறுகள்' (elements). நிலையமைப்பு கூறுகளினிடையே காணப்படும் தொடர்பு 'பெயற்சி நிலைத்தொடர்பு' (either-or relationship அல்லது 'பரஸ்பர நிலைத்தொடர்பு' (correlation). நிலையமைப்பு கூறுகளின் தொகுப்பை 'தொகுதி' 'paradigm) எனலாம். நிலையமைப்பை (system) பல வகைப்பட்ட 'தொகுதிகளால் ஆன படிநிலை அமைப்பு' (correlational hierarchy) எனலாம். நிலையமைப்பு என்பது போக்கு அமைப்பின் பின்னணியில் படிந்து கிடப்பது. போக்கு அமைப்பை விவரணைக்கு உட்படுத்துவதன் மூலம் நாம் நிலையமைப்பை அறிய முடியும். ஆகவே நிலையமைப்பு வெளிப்படையானதல்ல.

போக்கு அமைப்பில் பங்கு பெறும் கூறுகள் 'பிரிவுக்கூகள்' அல்லது பகுதிக் கூறுகள்' (category). போக்கு அமைப்பு கூறுகளினிடையே தோன்றும் தொடர்பு 'தொடர்ச்சி நிலைத் தொடர்பு' அல்லது 'பக்கத் தொடர்பு' (relation). போக்கு அமைப்புக் கூறுகளின் கூட்டமைப்பை 'கூறுத்தொடர்' (Sequence) எனலாம். போக்கு அமைப்பை, பலதரப்பட்ட (சிறியதும் பெரியதுமான) 'கூறுத் தொடர்களின் படிநிலை அமைப்பு' (relational hierarchy) எனலாம். போக்கு அமைப்பு வெளிப்படையானது. மொழியின் விவரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் மொழிக்கூறுகளான வாக்கியம், பெருமொழிக்கூறுகள் முதலியன மொழியின் போக்கமைப்பைப் பிரதிபலிக்கும். பெருமொழிக் கூறுகளில், சிறு மொழிக்

கூறுகளையும், அவைகளின் தொடர்ச்சி நிலையையும் வெளிப் படையாகக் காணலாம். மொழியின் போக்கு அமைப்பில் சில மாற்றங்களைப் புகுத்த முடியும். போக்கு அமைப்பை விவரணைக்கு உட்படுத்துவதன் மூலம் மொழியின் நிலையமைப்பைக் கண்டு கொள்ளலாம். போக்கு அமைப்பு நிலையமைப்பை சார்ந்து நிற்பது.

மொழியின் நிலையமைப்பிலும் பங்கெடுக்கும் தொடர்புகள் முறையே 'பெயற்சி தொடர்பு', 'தொடர்ச்சி தொடர்பு' என்றோம். இவையல்லாமல் மொழிக்கூறுகள் ஒன்றை ஒன்று தாக்கும் தன்மையின் அடிப்படையில் மூன்று விதமான தொடர்புகளைக் காண்பிக்கும். அவை முறையே 'இருமுனைத் தொடர்பு (inter pendance), ஒருமுனைத்தொடர்பு (determination), முனையற்ற தொடர்பு (constellation) என்பன. தொடர்பாக நிற்கும் இரண்டு கூறுகளில் (A,B) ஒரு கூறின் தோற்றம் இரண்டாம் =றின் தோற்றத்தையும், இரண்டாம் கூறின் தோற்றம் முதற்கூறின் தோற்றத்தையும் பரஸ்பரமான முறையில் 'நிர்ணயிக்கும் நிலையில் நின்றால், அவ்விருகூறுகளுக்கும் இடையே 'இருமுனைத் தொடர்பு' தோன்றும் (A⇄B). தொடர்பில்தோன்றும் இரண்டு கூறுகளில் (A,B) ஒன்றின்தோற்றம் இரண்டாம் கூறின் தோற்றத்தை நிர்ணயிக்கும் வகையிலும், (A→B), இரண்டாம் கூறின் தோற்றம் முதற்கூறின் தோற்றத்தை நிர்ணயிக்கா வகையிலும் (A←B) நின் றால் அவ்விரு கூறுகளுக்கும் இடையே 'ஒரு முனைத்தொடர்பு' தோன்றும் (A⇄B (எ.கா. Lat. preposition→obj, sine→ablative) தொடர்பில் நிற்கும் இரண்டு கூறுகள் எந்த வகையிலும் ஒன்றின் தோற்றத்தை இன்னொன்று நிர்ணயிக்காத வகையில் நிற்கும் போது அவ்விரு கூறுகளினிடையே 'முனையற்ற தொடர்பு' காணப்படும். (A⇄B) (Latin. ab⇄ ablative).

மேற்கூறிய மூன்று தொடர்புகளும் நிலையமைப்பு கூறுக ளாலும், நிலையமைபபு கூறுத்தொகுதிகளாலும், போக்கு அமைப்பு கூறுகளாலும், போக்கு அமைப்பு கூறுத் தொடர்களாலும் வெளிப்படுத்தப்படும். நிலையமைப்பில் பங்கெடுக்கும் 'பெயற்சி தொடர்போடும்' போக்கு அமைப்பில் பங்கெடுக்கும்' தொடர்ச்சி

தொடர்போடும்' மேற்கூறிய மூன்று தொடர்புகளை இணைக்க முடியும். இதன் மூலம் ஆறு வகையான தொர்டர்புகள் உருவாகும். இந்த ஆறுவகைத் தொடர்புகளும் மொழியில் காணப்படும். இந்த ஆறுதொடர்புகளும் பின் வருமாறு. 1 தொடர்ச்சி இரு முனைத்தொடர்பு (Solidarity). 2. தொடர்ச்சி ஒரு முனைத் தொடர்பு (Selection) 3. தொடர்ச்சி முனையற்ற தொடர்பு (Combination) 4. பெயற்சி இருமுனைத் (தொடர்பு Complementarity) 5. பெயற்சி ஒருமுனைத்தொடர்பு (Specification) 6. பெயற்சி முனையற்ற தொடர்பு, (autonomics). மொழியின் நிலைக்கூறுகளும் போக்குக்கூறுகளும் இந்த ஆறு வகையான தொடர்புகளை வெளிப்படுத்தி நிற்கும்.

மொழியில் 'குறித்தளம்', குறிப்புத்தளம்' என இருவகைத் தளங்கள் உண்டு. குறித்தளம் மொழிக்கூறுகளின் வெளிப்படையான, புற அமைப்பை கொண்டதளம். குறிப்புத்தளம் மொழிக் கூறுகளுக்கும் வெளிப்படையல்லாத அக அமைப்பை, (அர்த்தத்தை) கொண்ட தளம். மொழிக்கூறுகளுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. 1. குறிப்பக்கம். 2. குறிப்புப்பக்கம். குறிப்பக்கம் ஒலித்தொடராலோ, எழுத்துத் தொடராலோ ஆனது (மகன் = ம்+அ+க்+அ+ன்) குறிப்பு பக்கம் (content side) அர்த்தங்களால் ஆனது (மகன் = 'son'). மொழிக்கூறின் குறி அமைப்பும், குறிப்பு அமைப்பும் சில நுண் கூறுகளால் ஆனதாயிருக்கும். முன்னர் கூறிய நிலை மற்றும் போக்கு அமைப்புகள் மொழியின் குறி மற்றும் குறிப்புத்தளங்களில் காணப்படும். இதன்படி மொழியின் குறித்தளத்தில் 'குறிநிலையமைப்பு' (expression system), குறிபோக்கமைப்பு (expression process) என்பவற்றையும், மொழியின் குறிப்புத்தளத்தில் 'குறிப்பு நிலையமைப்பு' (content system), 'குறிப்பு போக்கமைப்பு' (content process) என்பவற்றையும் காணமுடியும்.

pin (expression) — 'குண்டூசி' (content)

p+i+n (குறிபோக்கமைப்பு) 'needle + with head' (குறிப்பு போக்கமைப்பு)

$\begin{Bmatrix} p \\ t \\ s \end{Bmatrix}$ (குறி நிலையமைப்பு)

குறிப்பக்க கூறுகளையும், நுண் கூறுகளையும் பெயற்சி செய்வதன் மூலமாகவும், கூறுகளை பல விதங்களில் தொடர்ச்சியாக நிறுத்துவதன் மூலமாகவும் குறிப்புப் பக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்

1. p + i + n 'Meaning$_1$' pin → pen 'குண்டூசி → பேனா'
   ↑ pin → tin 'குண்டூசி → டப்பா'
   t + i + n 'Meaning$_2$' (பெயற்சி மாற்றம்)

2. ten → net 'பத்து' → வலை (தொடர்ச்சி மாற்றம்)

3. John loves Jane → Jane loves John 'Meaning$_1$ Meaning$_2$.
   1 2 3 3 2 1

'குறிப்புப்பக்க' கூறுகளை பெயற்சி செய்வதன் மூலமும், பல விதங்களில் தொடர்ச்சியாக நிறுத்துவதன் மூலமும் 'குறிப்பக்கத்தில்' மாற்றம் ஏற்படுத்த முடியும்.

பெற்றவர் + வயதினர் + ஆண் → பெற்றவர் + வயதினர் +
1 2 3 1 2
பெண் 'அப்பா → அம்மா'
4

பன்றி + முள் → முள் + பன்றி 'pig spine → porcupine'
1 2 2 1

குறித்தள கூறுகளின் தொடர்ச்சி தொடர்பில் மாற்றம் ஏற்படுத்தினால் அந்த மாற்றங்கள் குறிப்புத் தளத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். இத்தகைய 'குறிப்பக்க தொடர்ச்சி மாற்றத்தை' 'தொடர்ச்சி மாற்றம்' அல்லது 'போக்கமைப்பு மாற்றம்' (permutation) எனலாம் (முள் + பன்றி → பன்றிமுள்). குறித்தளக் கூறுகளை 'பெயற்சி' செய்வதன் மூலம் 'குறிப்புத்தளத்தில்' மாற்றம் ஏற்படுத்தலாம். இத்தகைய குறிப்பக்க பெயர்ச்சி

மாற்றத்தை 'பெயற்சி மாற்றம்' அல்லது 'நிலையமைள் மாற்றம்' (commutation) எனலாம்.

(முள் + பண்ணி → வெள்ளை + பண்ணி).
1 2 3 2

பெயற்சி மாற்றத்தில் ஒரு மொழிக்கூறுத் தொகுப்பின் நபர்கள் மாற்றப்படும் (செவ்-, நீல-, கரு-, வெள்ளி- + வானம்) தொடர்ச்சி மாற்றத்தில் ஒருமொழிக் கூறுத் தொடரின் அங்கங்களின் இடம் மாற்றப்படும் (பச்சை + கிளி → கிளி + பச்சை, கை + எலும்பு → எலும்பு + கை)

மொழி 'பிரித்தறி ஆராய்ச்சிக்கு' (analysis) உட்படுத்தப்படும் போது 'பிரிவுகள்' (class) அங்கங்கள்' (components), 'பிரிவு-அங்க படிநிலை அமைப்பு' (hierarchy) என்பன கிடைக்கும். இந்த மூன்று மொழியம்சங்களை மொழியின் போக்கு அமைப்பிலும், நிலையமைப்பிலும் காணமுடியும். போக்கு அமைப்பில் காணப்படும் 'பிரிவுகளை' 'தொடர்கள்' (chains) என்றும், 'அங்கங்களை' 'பகுதிகள் அல்லது பாகங்கள்' (parts) என்றும் 'பிரிவு-அங்கப் படிநிலை' (process hierarchy) என்றும் அழைக்கலாம். போக்கு அமைப்பின் பெருங்கூறுகளை' பிரித்தறிதலை' (analysis) 'பிரிவினை முறை' (partition) எனலாம்.

	1 அம்மா உணவு பரிமாறினாள் (பிரிவு)	
பிரிவு-அங்க படி நிலை	2 அம்மா + உணவு பரிமாறினாள் (2 அங்கம், 2 பிரிவு)	பிரி வினை முறை
	3 உணவு + பரிமாறினாள் (அங்கம் 2, 2 பிரிவு)	
	4 உண் + அவு பரிமாறு + இன்—ஆள்	
↓	5 அ + ம் + ம் + ஆ - உ + ண் - அ + வ் + உ - ப + ர் + இ + ம் + ஆ + ற் + இ + ன் - ஆ + ள்	↓

மொழியின் நிலையமைப்பில் (system) காணப்படும் 'பிரிவுகளை' (class) 'தொகுதிகள்' (paradigms) என்றும், 'அங்கங்களை' 'நபர்கள்' (members) என்றும், நிலையமைப்பில் காணப்படும் பிரிவு - அங்க படிநிலையை 'நிலையமைப்பு படிநிலை' (system hierarchy) என்றும் அழைக்கலாம். நிலையமைப்பின் பெருந் தொகுப்புகளை 'பிரித்தறிதலை' 'இணைப்பு முறை' (articulation) எனலாம்.

எ.டு. 1) தொகுதி - (நான், நாம், நாங்கள், நீ, நீங்கள், நீர், அவன், அவள், அது, அவர், அவர்கள், அவை)

நபர்கள் - அவன், நான் ... முதலியன

படிநிலை - ஈட்டுப்பெயர்.



2) தொடர்கள் - (அந்த அழகிய முகம்)
பகுதிகள் - அந்த, அழகிய.
படிநிலை - அந்த அழகிய முகம்



குறித்தளம் (expression plane); குறிப்புத்தளம் (content plane)

மொழியில் 'குறித்தளம்', குறிப்புத்தளம் என்ற இரண்டு தளங்களைக் காணலாம். நாம், எண்ணங்களையும், உணர்ச்சி களையும், பொருள்களையும் பிறருக்கு தெரிவிக்கும் வண்ணம் மொழியையும், மொழிக்கூறுகளையும் பயன்படுத்துகிறோம், எண்ணங்கள், உணர்ச்சிகள், பொருள்கள் முதலியன மொழிக்கூறு களால் வெளிப்படுத்தப்படும் 'அக அமைப்புகள்'. இவைகளை 'அர்த்தங்கள்' எனலாம். அர்த்தங்கள் தோன்றும் தளம்' குறிப்புத் தளம்'. எண்ணங்களை நாம் எதன் மூலம் பிறருக்கு வெளிப்படுத்து

கிறோமோ அவைகளைக் 'குறிகள்' எனலாம். அத்தகைய குறிகள் ஒலித்தொடராலோ, வரித்தொடராலோ ஆனவையாயிருக்கும். சைகைகள், நிறங்கள் முதலியனவும் குறிகளாயிருக்க முடியும். குறிகள் தோன்றும் தளம் 'குறித்தளம்'. 'குறி' என்ற சொல்லை, பொருள் கொண்ட கூறுகளை'ச் சுட்டுவதற்காக நாம் உபயோகிப்பதுண்டு. இங்கு நாம் 'குறி' என்ற சொல்லை பொருள் கொண்ட மொழிக்கூறுகளின் ஒரு பக்கத்தைக் குறிக்க பயன்படுத்துகிறோம். ஆகவே பொருள் கொண்ட கூறுகளை 'குறிக்கூறு' என அழைக்க முயல்வோம் இங்கு. குறிக்கூறுகளில் குறிப்பக்கம், குறிப்புப்பக்கம் என இரண்டு பக்கங்கள் காணப்படும்.

குறி, குறிப்பு என்ற கோபன்ஹேகன் கருத்துக்களில் சசூரின் கருத்துக்களின் தாக்கத்தைக் காணமுடியும். சசூர் மொழிக்குறிகளில் (குறிக்கூறுகளில்) இரண்டு பக்கங்கள் உண்டெனக் கூறுவர். அவை முறையே 'நினைவொலித்தொடர்' (signifient), 'நினைவுப் பொருள்கள்' (எண்ணங்கள் – signifie) என்பன. சசூர் காட்டிச் சென்ற 'நினைவொலித்தொடர்' மற்றும் 'நினைவுப் பொருள்கள்' முறையே கோபன்ஹேகன் மொழியியலில் 'குறி' மற்றும் குறிப்பு' பக்கங்களாக உருவெடுத்தன. மேலும் கோபன்ஹேகன் மொழி இயலார் இவைகளை மொழியின் தளங்களாகக் கொண்டு அத்தளங்களில் அவைகளுக்கான 'அமைப்பு' (Form), 'கருப் பொருள்' (substance) என்பன காணப்படும் எனவும் கூறுவர். இக்கூற்று கோபன்ஹேகன் ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

மொழியில் காணப்படும் குறித்தளத்துக்கும் குறிப்புத் தளத்துக்கும் இடையே 'இணங்குத்தொடர்பு' (conformal relation) இருப்பதில்லை. ஒரு மொழிக்கூறின் 'குறிப்பக்க நுண்கூறுகளுக்கும்' (expression figurae) 'குறிப்புப் பக்க நுண்கூறுகளுக்கும்' (content figurae) இடையே 'இணக்கம்' conformity) இருப்பதில்லை. ஒரு குறிக் கூன்றி 'பொருள்' (குறிப்பு) அக்குறிக் கூறின் 'குறி'யோடு (குறிப் பக்கம்) மரபு வழியில்தான் இணைக்கப் படும். ஆகவே குறி – குறிப்பு இணைப்பு மரபுவழி இணைப்பு. இத்தகைய காரணத்தால்தான் குறிநுண்கூறுகளுக்கும், குறிப்பு நுண் கூறுகளுக்கும் இடையே 'இணக்கத்தொடர்பை' எதிர் பார்க்க முடியாது.

பசு (குறி) : cow (குறிப்பு)

ப்+ அ + ச்+ உ (குறிநுண்கூறுகள்): பிராணி + மாடு + முதிய + பெண் (குறிப்பு நுண் கூறுகள்)

'பசு' என்ற குறியில் காணப்படும் குறிநுண்கூறுகள் 'பசு' என்ற சொல்காட்டும் பொருளின் நுண் கூறுகளுடன் எந்த விதமான தொடர்பையும் காட்டவில்லை. மொழியின் பெரும்பாலான குறிக்கூறுகள் இணக்க நிலையை வெளிப்படுத்தாமல் நிற்பவைகளே மொழியில் சில குறிக்கூறுகளின் குறி - குறிப்பு அமைப்புகளினி. டையே இணக்க நிலை இருப்பதை நிலை நாட்டுபவரும் உண்டு. இதற்கு சான்றாக அவர்கள் இயற்கை குறிக்கூறுகளை' (Natural signs - onomatopoeic units) எடுத்துக் கொள்வர். விக்கு, விம்மு, கோழி, குயில், முதலியன இயற்கை குறிக்கூறுகள். மொழிக்கூறின் குறி - குறிப்பு பக்கங்களினிடையே 'இயற்கையான தொடர்பு' (Natural relationship) நிலவுகிறதா இல்லை 'செயற்கையான மரபு வழித்தொடர்பு' (conventional relationship) நிலவுகிறதா என்ற கேள்வி கிரேக்கர்கள் காலத்திலிருந்தே கேட்கப்பட்டு வரும் கேள்வி மொழியின் எடுத்துக்காட்டுகள் இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமைந்திருப்பதையும் நாம் காணலாம்.

மொழியின் குறித்தளத்தையும், குறிப்புத்தளத்தையும் ஒரே வகையான வழிமுறைகளைக் கையாண்டு ஆராய முடியும் என்றனர் கோபன்ஹேகன் மொழியியலார். குறித்தள மற்றும் குறிப்புத்தள கூறுகள் பெயற்சி மற்றும் தொடர்ச்சி தொடர்புகளில் நிற்கும். மேலும் அவைகள் இருமுனை, ஒருமுனை, முனையற்ற தொடர்புகளையும் காட்டி நிற்கும். இத்தகைய தொடர்புகளை அடிப்படையாக வைத்து குறி மற்றும் குறிப்புத்தள கூறுகளைப் பிரித்து, தொகுத்து வகைப்படுத்த முடியும். இத்தகைய வகைப் படுத்து முறை குறித்தள விவரணைக்கும், குறிப்புத்தள விவரணைக்கும் பொதுவானது.

குறித்தளத்திலும், குறிப்புத்தளத்திலும் அவைகளுக்கென அமைந்த 'அமைப்பும்' (Form) கருப்பொருளும் (Substance) காணப்படும். மொழிக்கூறின் குறிப்பக்கத்தில் 'குறி அமைப்பு' 'குறிகருப்பொருள்' என்பனவும், மொழிக்கூறின் 'குறிப்பு பக்கத்

தில்', குறிப்பு அமைப்பு, 'குறிப்பு கருப்பொருள்' என்பனவும் காணப்படும்.

1. அண்ணன் — குறிக்கூறு

2. i அ + ண் + ண் + அ + ன் — குறி அமைப்பு

ii அ, ண், ன் — குறி நுண்கூறுகள்

iii அ (உயிர் + கீழ்மட்டம் + இடைநிலை + குவிப் பின்மை) — குறிநுண் கூற்று கருப்பொருள்
ண் (மெய் + அண்ணம் + சுழிப்பு + மூக்கொலி)

3. i மூத்த + உடன்பிறத்த + ஆண் — குறிப்பு அமைப்பு

ii (மூத்த ×), (உடன்பிறந்த ×), (ஆண் ×) — குறிப்பு நுண் கூறுகள்

iii மூத்த, உடன்பிறந்த — குறிப்பு கருப்பொருள். (எண்ணங்கள்)

மொழி விவரணையில் 'மொழி அமைப்பு' தான் முக்கியத் துவம் பெறும். மொழிக்கூறுகளை விவரிக்கும் போதும் அவை களின் 'குறியமைப்பும்' 'குறிப்பமைப்பும்' தான் முக்கியத்துவம் பெறும். கருப்பொருள்கள் மொழி விவரணையில் முக்கியமான வையாக ஏற்கப்படாது. கோபன்ஹேகன் மொழியியலார் 'அமைப்பு மொழியியல் கொள்கையை' கைக் கொண்ட காரணத்தால் மொழி அமைப்பு விவரணைக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். மொழிகள அமைப்பில்தான் வேறுபடுகின்றன. உலகமொழிகளிலுள்ள 'மொழிக் கருப்பொருள்கள் ஒரே 'மூலப் பொருளிலிருந்துதான்' (purport) உண்டாகின்றன. அத்தகைய 'மூலப்பொருளுக்கு அமைப்பை கொடுக்கும் விதத்தில்தான் உலகமொழிகளின் அமைப் பும், கருப்பொருள்களும் (Substance) வித்தியாசமாகத் தோன்று கின்றன. ஆகவே மொழியைப் பற்றி பேசும்போது 'மொழி அமைப்பு', 'மொழிக்கருப் பொருள்கள்' 'மொழி மூலப்பொருள்' என்ற மூன்றையும் குறிப்பிடுவர் கோபன்ஹேகன் மொழியியலார்.

மூலப்பொருள் என்பதனை வெளியுலகில் நிலை பெறும், பௌதீகத் தன்மையுடைய பொருள்கள் என்றும், மனித மனதில் உருக்குலையாது படிந்து கிடக்கும் வெளியுலகப் பொருள்களின் பிம்பங்கள் என்றும் கொள்ளலாம். மூலப்பொருள் 'கூறாக்கப் படாத படர்வடிவம்' இந்தபடர்வடிவம் எல்லா மொழியினருக்கும் பொதுவானது. இம்மூலப்பொருளை வெவ்வேறான வகையில் கூறுபடுத்துவதன் மூலம் வெவ்வேறு மொழிகள் வெவ்வேறு கருப் பொருள்களைக் கொண்டவை போல் தோன்றுகின்றன. ஒரு மொழியின் அமைப்பு, மூலப்பொருளை ஒரு குறிப்பிட்ட வகையில் கூறுபோட்டு கருப்பொருள்களை உருவாக்குகிறது. இதனை ஒரு உவமையால் விளக்குவார். யெம்ஸ்லெவ். மூலப்பொருள் ஒரு மைதானம், மைதானத்தின் மேலே சிறிது உயரத்தில் பரந்து தொங்கிக் கொண்டிருக்கும் வலையை 'மொழி அமைப்பு' எனலாம். வலையின் நிழல் (மொழி அமைப்பு) மைதானத்தில் (purport) விழும்போது, மைதானமும் வலையின் அமைப்பைபோல் பல பிரிவுகளுடன் (வலைபோல்) தோன்றும். மைதானத்தை மூலப்பொருள் என்று கொள்ளும்போது மைதானத்தின் வலை போன்ற பிளவுத் தோற்றங்களை 'கருப்பொருள்கள்' என்று கொள்ளலாம்.

மைதானம் – மூலப்பொருள்

வலை - மொழியமைப்பு

மைதானப் பிளவுகள் - கருப்பொருள்கள்

மூலப்பொருள்களில் எந்த விதமான வகையும் இல்லை. மொழிகளை அடிப்படையாகக் கொள்ளும்போது எல்லா மொழி களும் மூலப்பொருள்களை முதலில் இரண்டு வகையாக பிரிக்கும். அவை 1. குறிமூலப் பொருள் 2. குறிப்பு மூலப்பொருள். 'குறிமூலப் பொருள்' களிலிருந்து 'குறிகருப்பொருள்கள்' உருவாகும். குறிப்பு மூலப்பொருள்களிலிருந்து 'குறிப்பு கருப்பொருள்கள்' உருவாகும். மூலப்பொருளை மொழியின் அமைப்புதான் கருப்பொருளாக மாற்றுகிறது.

'குறிமூலப்பொருள்' (expression purport) எல்லா மொழி களுக்கும் பொதுவான சொத்து. மனிதனின் உச்சரிப்பு சக்தி,

உச்சரிப்பு பரப்பு இவைகளை 'குறிமூலப்பொருள்' எனலாம். அவை எல்லா மனிதருக்கும், மொழிகளுக்கும் பொதுவானவை. ஒருமொழி 30 உச்சரிப்பு அம்சங்களையும் இன்னொரு மொழி 40 உச்சரிப்பு அம்சங்களையும் மொழியமைப்பில் கையாள்கிறது என வைத்துக் கொள்வோம். இதிலிருந்து 'உச்சரிப்பு பரப்பு' (articulatory domain) எனப்படும் குறி மூலப்பொருளை ஒரு மொழி 30 பாகங்களாகவும், இன்னொரு மொழி 40 பாகங்களாகவும் பிரிக்கிறது என்று கூறலாம். ஆகவே முதல் மொழியில் 30 குறிகருப்பொருளும் இரண்டாம் மொழியில் 40 குறிகருப்பொருளும் உருவாகிறது எனவும் கொள்ளலாம். கருப்பொருள்களின் வேற்றுமை மொழியின் அமைப்பு அடிப்படையில் எழுவது.

தமிழ் - மூச்சுத்தள்ளல் - உச்சரிப்பு அம்சமல்ல ஃ குறிகருப்பொருள் அல்ல

கன்னடம் - ,, - உச்சரிப்பு அம்சம் ஃ குறிகருப்பொருள்.

ஒருவர் வேற்று மொழியை பேசும் தோரணை தாய் மொழியைப் பேசுவது போல் தோன்றும். வேற்று மொழி குறிகருப்பொருள் களை தாய்மொழி குறிகருப்பொருள்களைப் போல கருதி உச்சரிப்பதும் இதற்கு ஒரு காரணமாக அமையும். தாய் மொழியில் சில ஒலியம்சங்கள் இல்லாதிருப்பதனாலோ, மாறுபட்டிருப்பதனாலோ வேற்று மொழிக் கூறின் உச்சரிப்பில் வித்தியாசம் காணப்படும்.

ஆங்.	teacher	→ தமிழ்.	டீச்சர்	(ṭ:ccar)
	zoo	→		(su:)
	road	→	ரோடு	(ro:ḍu)
	harm	→ கன்னடம்.		(ha:ram)

குறிப்பு மூலப்பொருள் (content purport) எல்லா மொழிகளுக்கும் பொதுவானது. வர்ணங்களின் பரப்பு எல்லா மனிதருக்கும், மொழிக்கும் பொதுவானது. எல்லா வர்ணங்களையும் கண்டு, வேறுபடுத்தும் தன்மை எல்லா மொழி பேசுவோருக்கும் உண்டு. ஆனால் வர்ணப் பரப்பை வெவ்வேறு வகையில் மொழிகள் பிரித்து அப்பிரிவுகளுக்கு பெயரிடுகின்றன. நிறப் பரப்பை பிரிக்கும் வகையில் மொழிகளின் வித்தியாசமான நிறக்

கருப்பொருள்கள் உருவாகின்றன. நிறத்தைக் குறிக்கும் சொற்கள் எவ்விதம் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன என்பதை பல மொழி இயலார் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். (Nida 1949) எவ்விதம் வெவ்வேறு மொழிகள் வெவ்வேறு வகையில் குறிப்பு மூலப்பொருளை குறிப்பு கருப்பொருளாக மாற்றுகின்றன என்பதை வெவ்வேறு மொழிகளின் 'பொருள் களங்களை' (Semantic Field) ஒப்பிடும் போது உணரலாம். வேற்று மொழியை பயன் படுத்தும் போது வேற்றுமொழிக் கூறுகளின் பொருளை வழுவாக குறிப்பிட நேரும் சந்தர்ப்பங்கள் எழுவதுண்டு. வேற்றுமொழி குறிப்பு கருப்பொருள்களை தாய்மொழி குறிப்பு கருப்பொருள்கள் போல் கருதுவதுதான் இதன் ஒரு காரணம். பெஞ்சமின் ஹோர்ப் என்ற அமெரிக்க மொழி இயலார் மொழி அமைப்பு, கலாச்சாரம், மனித செயல் இவைகளுக்கிடையே ஒருவகை தாக்கத் தொடர்பு காணப்படும் என்பார். மொழியின் அமைப்பு மொழிபேசுவோரின் வேறுபட்ட செயல்களை நிர்ணயிக்கும் தன்மை கொண்டது. மொழியின் அமைப்பு கருப்பொருள்களை உருவாக்குவதில் பங் கெடுக்கும். ஹோர்ஃபம் மொழியின் மூலப்பொருள் எவ்விதம் கருப் பொருளாக உருவெடுக்கிறது என்பதை அடிப்படையாக வைத்து தன் 'தாக்க விதியை' (Linguistic relativity view) ஏற்படுத்தினார். குறி, குறிப்பு என்பன மொழியின் நிலை மற்றும் போக்கு அமைப் பில் காணப்படும். இதன் அடிப்படையில் மொழியில் 8 வகையான அம்சங்களைக் காணலாம். அவையாவன பின்வருமாறு. 1. நிலை குறியமைப்பு. 2. நிலை குறிப்பமைப்பு, 3. போக்கு குறியமைப்பு 4. போக்கு குறிப்பமைப்பு 5. நிலை குறிபொருள் 6. நிலை குறிப்பு பொருள் 7. போக்கு குறிபொருள் 8. போக்கு குறிப்பு பொருள்.

நிலை குறியமைப்பில் நிலை ஒலிகளும், நிலை ஒலித்தொடர் களும் காணப்படும். (தாகம் t+a:+k+a+m) போக்கு குறியமைப்பில் மாற்றொலிகளும், மாற்றொலித் தொடர்களும் காணப்படும் (t+ a:+x+a+m, da: ɣ am, ta: x̃). நிலை குறி பொருளில் நிலை யான 'ஒலியம்சங்கள்' காணப்படும் (உயிர், மெய் உச்சரிப்புகள்). போக்கு குறிபொருளில் மாற்றொலி அம்சங்கள் காணப்படும் ('voice in Tamil). நிலை குறிப்பு அமைப்பில் மொழிக்கென

அமைந்த எண்ணக்கூறுகள் காணப்படும் (ஆண், பெண்,) போக்கு குறிப்பு அமைப்பில் எண்ணக் கூறுகளின் தொடர்ச்சியையும், எண்ணக் கூறுகளின் மாறுபட்ட உருவங்களையும் காணலாம் (அவன் நடந்தான் 'He walked' கிளாஸ் நடந்தது, 'class functioned') BL - walk, function). நிலை குறிப்பு பொருளில் மொழியில் பயன் படுத்தப்படும் நிலையான எண்ண நுண்கூறுகள் காணப்படும். (ஆண்மை, பெண்மை, முதுமை, இளமை). போக்கு குறிப்பு பொருளில் சூழ்நிலையால் மாறுபடும் எண்ண நுண் கூறுகளும் அவைகளின் தொடர்ச்சியரன தன்மையும் காணப்படும்.

நிலைக்குறியமைப்பு மொழிக்கு மொழி வேறுபடும். ஒரு மொழியின் நிலைக்குறியமைப்பில் 3 உயிரொலிகள் பங்கெடுக்கலாம் (i,a,u). இன்னொரு மொழியில் 5 உயிரொலிகள் பங்கெடுக்கலாம் (i,e,a,o,u). இவ்விரு மொழிகளிலும் நிலைக் குறியமைப்பு ஒலிகளும் (அமைப்பு) நிலைக்குறியமைப்பு ஒலிக்கருப் பொருள்களும் வெவ்வேறானவை. போக்கு குறியமைப்பும் மொழிக்கு மொழி வேறுபடும். இரண்டு ஒலிகளின் தொடரை ஒரு மொழி 'தனி ஒலி' என்றும் (monophthong) இன்னொரு மொழி 'தொடர் ஒலிகள்' diphthong) எனவும் கருதலாம். தமிழிலேயே 'ஐயப்பன்' என்ற பெயரை 'அய்யப்பன் என்று எழுதுவாரும் உண்டு.

நிலைக்குறிப்பமைப்பு மொழிக்கு மொழி வேறுபடும். மொழிகளின் இணையான சொற்களை ஒப்பிடும்போது இதை உணரலாம்.

1.	Dutch	trae	skov	
	German	Baum	hol$_2$	wald

2.



போக்கு குறிப்பமைப்பும் மொழிக்கு மொழி வேறுபடும். பின்வரும் எடுத்துக்காட்டு ஒரே 'போக்கு பொருளமைப்மை எவ்விதம் மொழிகள் வெவ்வேறாகக் குறிக்கின்றன என்பதை விளக்கும்.

Eng.	I don't know	Eski.	naluvara
Fr.	Je ne sais pas	Ta.	enakku teriya:tu
Dani.	jes ne det ikke	Ka.	nanage gottilla:
Fin.	en fieda		

மொழியின் சிறப்பைக் கூறும் போது 'மூலப் பொருள்கள்' 'மூலப்பொருள்களிலிருந்து பெறப்படும் 'கருப்பொருள்கள்', 'மொழிஅமைப்பு' ஆகியனவற்றை விளக்க வேண்டும். மொழியை விவரிக்கும்போது (அதாவது மொழி விவரணையில் மொழியின் அமைப்பை சிலவகை 'தொடர்புகளின்' அடிப்படையில் விளக்க வேண்டும். மொழி விவரணையில் 'கருப்பொருள்கள்' இடம் பெறாது. தொடர்புகளான தொடர்ச்சி தொடர்பு, பெயற்சி தொடர்பு, இருமுனைத் தொடர்பு, ஒரு முனைத்தொடர்பு, முனை யற்ற தொடர்பு ஆகியன, மொழியில் காணப்படும் அமைப்புகள் தான் வெளிப்படுத்தும். கருப்பொருள்கள் தொடர்புகளை வெளிப் படுத்தாது. மொழியை விவரிக்கும் போது குறி மற்றும் குறிப்பு அமைப்புகளை விவரிக்க வேண்டும். அத்தகைய அமைப்புகள் வெளிப்படுத்தும் தொடர்புகளை விவரிக்க வேண்டும். மேற் கூறியவைகளின் பின்னணியில், யெம்ஸ்லெவ் மொழியில் நான்கு வகை 'படலங்கள்', (அடுக்குகள் strata) காணப்படும் என்பார். அவையாவன 1. நிலையமைப்பு குறி 2. படலம் நிலையமைப்பு குறிப்புபடலம் 3. போக்கு அமைப்பு குறிபடலம் 4. போக்கு அமைப்பு குறிப்பு படலம் என்பன.

மொழிக்கூறுகள்:

மொழியில் 'குறிக்கூறுகளையும்' (signs) 'குறிநுண்கூறுகளையும்' (Figurae) காணலாம். மொழியை 'குறிகளைக் கொண்ட அமைப்பு' என்றும் குறிநுண் கூறுகளைக் கொண்ட அமைப்பு என்றும் கூறலாம். குறிக்கூறுகளில் குறித்தளம் (expression plane 'குறிப்புத்தளம்' (content (plane) என்ற இரண்டு தளங்கள் உண்டு. குறி மற்றும் குறிப்பு அம்சங்களினிடையே தோன்றும் தொடர்பு 'குறிக்கூறு உட்தொடர்' (sign function). குறி மற்றும் குறிப்பு இவைகளினிடையே தோன்றும் தொடர்பை 'இருமுனைத்தொடர்பு' (solidarity) என அழைக்கலாம். சாதாரணமாக மொழியில் காணப்படும் பொருள் கொண்ட கூறுகளான வாக்கியம், சொற்றொடர்கள், சொற்கள், உருபன்கள் ஆகியனவற்றை குறிக் கூறுகள் எனலாம்.

குறிநுண் கூறுகள் குறிக்கூறின் அமைப்பில் பங்கெடுக்கும் சிறு கூறுகள். குறிக்கூறின் குறி அமைப்பில் பங்கெடுக்கும் நுண் கூறுகளை 'குறித்தள நுண்கூறு' (expression figurae) என்றும், குறிக்கூறின் 'குறிப்பமைப்பில்' பங்கெடுக்கும் நுண் கூறுகளை 'குறிப்புத்தள நுண்கூறு' Content figurae) என்றும் அழைக்கலாம். குறிக்கூறின் குறியமைப்பில் பல வகை உண்டு. அவையாவன சொல்லமைப்பு, உருபனமைப்பு, சொற்றொடரமைப்பு, வாக்கிய அமைப்பு என்பன. குறியமைப்பு இறுதியில் குறியமைப்பு நுண் கூறுகளாலும், குறிப்பமைப்பு இறுதியில் குறிப்பமைப்பு நுண் கூறுகளாலும் ஆனவையாயிருக்கும்.

Latin. us — m.
(u + s) (குறிநுண் கூறு) (mom + Sg + masculi.) (குறிப்புநுண்கூறு)

T. மகன் — 'Son' Steer — 'young ox'
(ம் + அ + க் + அ + ன்)
(child of × + male) (s + t + I: + ə) (young + ox

குறித்தளநுண் கூறுகள் பொருளற்றவை. ஆனால் அவைகளுக்கு 'அமைப்பு' உண்டு. குறிப்பு நுண் கூறுகள் பொருள்

கொண்டவையா அல்லது பொருளற்றவையா என்பதை கணிப் பதில் இடையூறு உண்டாவதுண்டு. சிலர் 'உருபனை' உண்மை யான குறிக்கூறு என்றும் 'ஒலியனை' குறிநுண்கூறு எனவும் கொள்வர். இவை இரண்டும் குறித்தளத்தில் முக்கிய பங்கை ஏற்பவை. ஒருமொழிக்கூறின் குறித்தளநுண்கூறுகளை பெயற்சி செய்தவன் மூலம், அக்குறிக்கூறின் குறியமைப்பில் மாற்றம் ஏற்படும் (Si : → Se :, மகன் → மகள்). இந்த மாற்றம் இணை

யாக குறிப்பமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம் (E Si→Se: :: 'பார்' → 'சொல்' /மாமா → மாமி:: 'அம்மாவின் சகோதரர்' → அம்மாவின் சகோதரர் மனைவி'). ஒருமொழிக்கூறின் குறிப்புத்தள நுண் கூறுகளை பெயற்சி செய்வதன் மூலம் அக்கூறின் குறிப்புத்தளத்தில் மாற்றம் ஏற்படும். இம்மாற்றம் இணையான குறியமைப்பு மாற்றங்களை உருவாக்கலாம். ('he + sheep'→ 'she + sheep' :: ram → ewe/ 'ஆண் + குழந்தை' → 'பெண் + குழந்தை' :: சிறுவன் → சிறுமி). பொதுவாக ஒரு குறிக்கூறின் குறியமைப்பு நுண்கூறுகளையோ, குறிப்பமைப்பு நுண்கூறு களையோ மாற்றுவதன் மூலம் (பெயற்சி மாற்றம் அல்லது தொடர்ச்சி மாற்றம்) இணையாக குறிப்பு மற்றும் குறி அமைப்பு களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மொழியை 'பிரித்துணர் ஆராய்ச்சிக்கு' (analysis) உட்படுத்து வதற்காக நாம் உபயோகிக்கும் 'மொழிப்பகுதியை' 'மாதிரி மொழிப்பகுதி' (Text) எனலாம். 'மாதிரி மொழிப்பகுதியை ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் போது பெரியதும், சிறியதுமான மொழிக்கூறுகள் கிடைக்கும். இத்தகைய கூறுகள் அவை காட்டும் தொடர்புகளின் அடிப்படையில் (பெயற்சி. தொடர்புகள்; இரு முனை, ஒருமுனை, முனையற்ற தொடர்புகள்) மாதிரிப்பகுதி களிலிருந்து பிரித்தெடுக்கப்படும். இத்தகைய கூறுகள் மொழியின் போக்கு அம்சத்திலும், நிலை அம்சத்திலும் காணப்படும். இதனடிப் படையில் கூறுகளை 'போக்கு அம்சக்கூறுகள், 'நிலையம்சக் கூறுகள்,' என வகைப்படுத்தலாம். மொழியின் மாதிரிப்பகுதிகள் மேல்மட்டக்கூறுகள். அவைகளை பிரிப்பு ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் போது பல வகையான கூறுகள் கிடைக்கும். இவைகளை 'மொழி இடைக்கூறுகள்' (Taxemes) எனலாம். பிரிப்பில் (analysis)

கிடைக்கும் எல்லா நிலையம்ச, போக்கு அம்ச கூறுகளையும் மொழியிடைக்கூறு' என அழைக்க முடியுமா என்பது தெளிவாக் கப்படாத கேள்வி. மொழி இடைக் கூறுகளில் பல மிக அடி மட்டத்தில் நிற்கும்; இவைகளை 'பிரிப்புமுறை'க்கு உட்படுத்த இயலாத நிலையும் ஏற்படும். இத்தகைய பிரிக்க இயலாத கூறுகளை (பிரித்தாலும் 'அமைப்பு' என்பதை பெறாதகூறுகளை) 'மொழி அடிக்கூறு' (Glosseme) என அழைக்கலாம். மொழியடிக் கூறு மொழியின் அடிப்படையான, முக்கிய கூறு. Glosseme என்ற பெயர் கிரேக்க மொழிச் சொல்லான Glossa 'மொழி' என்ற சொல்லி லிருந்து உருவாக்கப்பட்ட சொல். (Gloss-eme). மொழியடிப்படைக் கூறுகளான 'மொழி அடிக்கூறு' மற்ற கூறுகளைப் போல் (மொழி இடைக்கூறு, மாதிரி மொழிப்பகுதி அல்லது மொழி மேல்மட்டக் கூறு) மேலே கூறப்பட்ட ஐந்து வகைத் தொடர்புகளையும் காட்டாது. ஆகவே அவைகளை மேலே பிரிக்க முடியாது.

மொழியடிக் கூறுகளை 'அமைப்பு' கொண்டவை என்பார் யெம்ஸ்லெவ். ஆகவே அவைகளுக்கென்று 'கருப்பொருளும்' காணப் படும். தற்கால மொழியியல் விவரணைகளில் நாம் மொழியின் ஒலிகள் எல்லாம் (a, k) சில 'ஒலியடி அம்சங்களால்' (Distinctive Features of Sounds) ஆனவை என்கிறோம். குறிக்கூறின் 'பொருள்' (meaning) என்பது 'பொருளடி அம்சங்களால்' (Semantic Feaures) ஆனது என்றும் கூறுகிறோம். இத்தகைய ஒலியம்சங் களையும், இலக்கண அம்ச்ங்களையும் 'மொழியடிக்கூறு'கள் எனக் கொள்ளமுடியாது. ஏனென்றால் 'அம்சங்கள்' கருப்பொருள்களை உண்டு பண்ணுபவை. மொழியின் 'அமைப்பில்' அவை பங்கு பெறாதவை. யெம்ஸ்லெவ் காட்டிய மொழியடிக்கூறு அமைப்பில் பங்கு பெறும்கூறு (Garvin 1954.)

முன்னர் நாம் மொழியில் குறித்தளநுண் கூறு, குறிப்புத்தள நுண்கூறு என இரண்டு நுண்கூறுகளைப் பற்றிக் கூறினோம். இந்த கூறுகளை 'மொழியடிக்கூறுகள்' என அழைக்க முடியுமா என்பது சர்ச்சைக்குரிய கேள்வி. மேலும் இந்த நுண்கூறுகளுக்கும் 'மொழி இடைக் கூறுகளுக்கும், என்ன சம்மந்தம் இருக்கிறது என்ற கேள்வியும் பிரச்சினைக்குரிய கேள்வி.

மேற்கூறியவைகளிலிருந்து மொழிக்கூறுகளை பிரிப்பு முறை விவரணைக்கு உட்படுத்த முடியும் எனவும், அத்தகைய விவரணையின் அடிப்படையில் மொழியின் கூறுகளை மூன்று வகைகளாக பிரிக்க முடியும் எனவும் அறிகிறோம். பிரிப்பு முறையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் கூறுகள் பின்வருமாறு: 1. மொழிமுதகூற்று (மாதிரி மொழிப்பகுதி) 2. மொழி இடைக் கூறுகள் (குறித்தள, குறிப்புத்தள இடைக்கூறுகள்) 3. மொழியடிக்கூறுகள் (குறித்தள குறிப்புத்தள அடிக்கூறுகள்).

மொழியின் குறி, குறிப்பு நுண்கூறுகள் தர்க்கரீதியில் ஒரே வகையானவை என்பார் யெம்ஸ்லெவ். ஆனால் அவைகள் ஒரே வகையானவை அல்ல என்பார் கார்வின் (1954). குறிநுண் கூறுகள் ஒலியன்கள். குறிநுண் கூறுகளுக்கு பொருள் இல்லை. ஆனால் குறிப்பு நுண்கூறுகள் 'குறிஅமைப்பை'க் கொண்டவை.

தந்தை — மகவை பெற்ற ஆண்

(த + ந் + த் + அ + ய்) (பெற்றவர் + ஆண்) —
(பெ + ற் + ற + வ + ர்) (ஆ + ண்)

[குறிப்பு அற்றவை] [குறி கொண்டவை]

குறித்தள நுண்கூறுகளை தொடர்ச்சியாக நிறுத்த முடியும். அதன் மூலம் 'குறித்தள அமைப்பை' பெறமுடியும் (p + i + n). ஆனால் குறிப்பு நுண்கூறுகளை தொடர்ச்சியாக நிறுத்த முடியாது. அதாவது அவை தொடர்ச்சியாக நிற்க வேண்டிய தேவை இல்லை. அவை தொகுப்பாக காணப்படும் (குண்டு, ஊசி) (ram — (male, sheep). (கார்வின் என்பாருடைய கருத்துக்கள் குறித்தள நுண்) கூறுகளை 'ஒலியன்' என்று கொள்ளும் கருத்து. இதன் அடிப்படையில் அவர் குறித்தள நுண்கூறுகளுக்கும், குறிப்புத்தள நுண் கூறுகளுக்கும் இடையே சில வேற்றுமைகள் காணப்படுகின்றன என வலியுறுத்துவார்.

வடிவக்கூறுகள்:

மொழியில் இரண்டு 'வடிவக்கூறுகளை'க் காணலாம். அவையாவன 1. நிலைவடிவக் கூறுகள் (invariants) 2. மாற்று

வடிவக்கூறுகள் (variants). நிலைவடிவக்கூறுகள் எண்ணிக்கையில் குறைவானவை. மாற்று வடிவக்கூறுகள் எண்ணிக்கையில் அதிக மானவை. ஒரு நிலை வடிவக்கூறு சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் பிற வடிவங்களைபபெற்று நிற்கும் போது அங்கு மாற்று வடிவக்கூறுகள் உருவாகின்றன. ஒரு நிலை வடிவக்கூறின் கீழ் பல மாற்று வடிவக்கூறுகளும் காணப்படலாம்.

E. k — ‘k, k’ cool, keep

T. k — k, g, r k̲aṭal, tamgam ta̲ram

T. நான் — நான், என்-

நீ — நீ, உன்-

மாற்று வடிவக் கூறுகளையும், நிலை வடிவக் கூறுகளையும் மொழியை ஆராய்வதன் மூலம் பெறமுடியும். மொழியில் ‘நிலை வடிவக்கூறுகள்’ முக்கியமானவை. அவைகளை ‘பெயற்சி சோதனை’ என்ற சோதனை மூலம் கண்டுபிடிக்கலாம். ஒரு குறிப்பிட்ட கூறின் ‘குறியமைப்பின்’ சில பகுதிகளை மாற்றி வேறு பகுதிகளை இடும்போது இணையாக பொருளமைப்பில் மாற்றம் ஏற்பட்டு வேறு ‘குறிப்பமைப்பு’ தோன்றினால் மாற்றப்பட்ட குறித்தள பகுதிகளை (குறியமைப்பு பகுதி நிலை வடிவக்கூறுகள் எனக்கொள்ள முடியும்.

E 1. s a t — உட்கார் (இறந்த காலம்)

⇅

s e t — சரிசெய் ∴ a, e நிலை வடிவக் கூறுகள்

T மகன் — Son

⇅

மகள் — daughter ∴ ள், ன் நிலைவடிவ குறித்தள கூறு

செய் + த் + அ — (that) which is done

⇅

செய் + த் + ஆ — if one does ∴ அ, ஆ நிலை வடிவக்குறியமைப்பு கூறு

குறிப்பமைப்பின் பகுதிகளை பெயற்சி செய்து வேறு குறிப்ப மைப்பு பகுதிகளை இடும்போது இணையாக ‘குறியமைப்பு’ மாற்றம் தோன்றினால், பெயற்சி செய்யப்பட்ட மற்றும் பெயற்சி செய்யும் குறியமைப்பு பகுதிகளை ‘குறிப்பமைப்பு நிலை வடிவக் கூறு’ என அழைக்கலாம்.

1. உடன்பிறந்தவர் + ஆண் + முந்தியவர் — அண்ணன்

⇅ ⇅

பிந்தியவர் — தம்பி ஃ ஆண்,

பெண் — அக்கா பெண்,

முந்தியவர், பிந்தியவர் ஆகியன குறிப்பு நிலைக் கூறுகள்.

2. plant + alive — tree
dead — wood
(English)

2' plant + alive — baum
⇅ ⇅
plant + dead — ,,
(Danish)

ஆங்கிலத்தில் 'alive', 'dead' என்ற குறிப்புக் கூறுகள் பெயற்சி சோதனையின் அடிப்படையில் நிலைக் கூறுகள் என நிரூபிக்கப்படும். ஆனால் டேனிஷ் மொழியில் alive, dead என்ற குறிப்புக் கூறுக நிலை வடிவக் கூறுகள் அல்ல. அவை பெயர்வதன் மூலம் 'குறியமைப்பில்' மாற்றம் ஏற்படுத்தவில்லை மேற்கூறிய எடுத்துக் காட்டில். ஒரு குறிப்பிட்ட மொழியில் கூட சில இடங்களில் சில குறிப்பு நுண் கூறுகள் நிலைவடிவக்கூறுகள் போன்றும் வேறு சில இடங்களில் 'மாற்றுவடிவக் கூறுகள்' போன்றும் தோன்றும்.

தமிழ். 1. பிராணி × + நாய் + ஆண் — நாய்

⇅

பெண் — ,,

2. பிராணி + மாடு + ஆண் — காளை

⇅

பெண் — பசு

ஆனால் ஒரு மொழியின் இரண்டு குறிப்பு நுண் கூறுகள் நிலை வடிவக் கூறுகளாக பெயற்சி சோதனை மூலம் நிருபிக்கப்பட்டால் அந்த மொழியில் அவை நிலை வடிவக்கூறுகளாகவே ஏற்றுக் கொள்ளப்படும்.

மொழியில் குறிக்கூறு, குறிநுண்கூறு என்ற இரண்டு கூறுகள் காணப்படும் என்றோம். இக்கூறுகளில் நிலை, மாற்று வடிவக் கூறுகளைக் காணலாம். அதாவது மொழியில் நிலைக் குறிக்கூறு, மாற்றுத் குறிக்கூறு, நிலை குறிநுண்கூறு, மாற்று குறிநுண்கூறு

ஆகியனவைகளைக் காணலாம். உருபன், சொல், வாக்கியம், சொற்றொடர் ஆகியனவற்றை குறிக்கூறுகள் எனக்கொள்ளலாம். சூழ்நிலையால் தம்குறி அமைப்பில் மாறுபட்டுத் தோன்றும் ஆனால் குறிப்பமைப்பில் வேறுபடாத உருபன், சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியனவற்றை 'மாற்று வடிவக் குறிக்கூறு' என அழைக்கலாம்.

1. நான் — நான், என்-
மரம் — மரம், மரத்-
ஒன்று — ஒன்று, ஓர் - ஒற்-

2. நளினம் துளிர்த்தது ~ துளிர்த்தது நளினம்

நான் பார்த்தேன் ராமனை ~ நான் ராமனை பார்த்தேன்

சூழ்நிலையால் வேறுபட்டுத் தோன்றும் மொழி ஒலிகளையும், மொழி எழுத்துக்களையும் (குறித்தள நுண்கூறுகள்) குறிநுண் கூறுகளின் மாற்று வடிவக்கூறுகள் எனலாம்.

எ.கா. k — k ~ g ~ r   kaṭal, tamgam, tāram
ஐ — அய் ~ ஐ
னை — னை ~ னை

நிலைவடிவக் கூறுகளையும், மாற்றுவடிவக் கூறுகளையும் மொழியின் குறி, குறிப்பு தளங்களில் காணமுடியும். இதனடிப்படையில் நான்கு வகையான வடிவக்கூறுகளை மொழியில் காணலாம். அவையாவன 'குறித்தள நிலைக்கூறு', 'குறித்தள மாற்றுக்கூறு', 'குறிப்புத்தள நிலைக்கூறு', 'குறிப்புத்தள மாற்றுக் கூறு' என்பன.

		நிலைக்கூறு	மாற்றுக்கூறு
குறித்தளம்	1.	k	k ~ g ~ r
		n	ṅ ~ n ~ ṉ
	2.	நான்	நான் ~ என்-
		மரம் —	மரம் ~ மரத்-

3. நான் ராமனை — நான் ராமனை நான் பார்த்தேன்
பார்த்தேன் பார்த்தேன் ~ ராமனை.

குறிப்புத் தளம். 1. -ஆர் — Hon. sg ~ Epi. pl.

2. மரம் — tree ~ wood ~ a levelling device
கண் — மயிற்பீலிக் கண் ~ தேங்காய் கண் ~ அழைப்புச்சொல்

3. கூத்தடிக் காதே — Don't act much ~ don't shout more ~ Don't speak more ~ Dont' show more ~.

நிலை மற்றும் மாற்று வடிவக்கூறுகளை மொழியின் தளங்களோடும், மொழியின் கூறுகளுடனும் இணைப்பதைப் போன்று மொழியின் இரண்டு அமைப்புகளுடனும் (நிலை அமைப்பு, போக்கு அமைப்பு) இணைக்க முடியும். இதன் அடிப்படையில் 'நிலையமைப்பு நிலை மற்றும் மாற்றுக்கூறுகள், போக்கு அமைப்பு நிலை மற்றும் மாற்றுக்கூறுகள்' என்ற கூறுகள் இருப்பதை உணரமுடியும்.

NP — N ~ proN ~ NP (நிலை அமைப்பு மாற்று கூறு)

Child+pl — čild+ren (čild போக்கமைப்பு மாற்று கூறு)

மொழியின் தளங்கள், மொழியின் கூறுகள், மொழியின் அமைப்புகள் ஆகியனவற்றோடு நிலை, மாற்றுக்கூறுகளை தொடர்பு படுத்தும் போது தர்க்கரீதியில் பின்வரும் வடிவக்கூறுகள் கிடைக்கும்.

நிலை -	குறித்தள	குறிக்கூறு -	நிலைவடிவக்கூறு	1.
,,	,,	,,	போக்கு வடிவக்கூறு	2.
,,	,,	நுண்கூறு -	நிலைக்கூறு	3.
			போக்குக்கூறு	4.

நிலை - குறிப்புத்தள - குறிக்கூறு - நிலைக்கூறு 5.
,, ,, ,, போக்குக்கூறு 6.
,, ,, நுண்கூறு - நிலைக்கூறு 7.
,, ,, ,, போக்குக்கூறு 8.
போக்கு அமைப்பு - குறித்தள - குறிக்கூறு - நிலை வடிவக்கூறு 9.
போக்குவடிவக்கூறு 10.
,, ,, குறிநுண்கூறு - நிலைக்கூறு 11.
,, ,, ,, - போக்குக்கூறு 12.
,, குறிப்புத்தள - குறிக்கூறு - நிலைக்கூறு 13.
,, ,, ,, - போக்குக்கூறு 14.
,, ,, குறிநுண்கூறு - நிலைக்கூறு 15.
,, ,, ,, - போக்குக்கூறு 16.

மொழியில் 'நிலை வடிவக் கூறுகளை' பெயற்சி செய்வதன் மூலமும், தொடர்ச்சி தொடர்பில் நிறுத்துவதன் மூலமும் மொழிக் கூறுகளில் மாற்றம் ஏற்படுத்த முடியும். மாற்றுக் கூறுகளை மாற்றுவதன் மூலம் (பெயற்சி மாற்றம்) மொழிக் கூறுகளில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுவதில்லை. நிலைக் கூறுகள் பெயற்சி தொடர்பில் சாதாரணமாக நிற்கும். அவைகளின் பெயற்சியால் குறித்தளத்திலும், குறிப்புத்தளத்திலும் மாற்றம் ஏற்படும்.

1. pit — குழி
⥮
pin — குண்டூசி
⥮
pan — வாணலி

2. human + young + male — சிறுவன்
,, ⥮
adult — மனிதன்
,, ⥮
female — சிறுமி.

மாற்று வடிவக்கூறுகள் ஒன்றை ஒன்று ஈடு செய்யும் வகையில் சம்பந்தம் கொண்டிருக்கும். ஒரு கூறின் கீழ்வரும் மாற்றுக் கூறுகள் எல்லாம் ஒரே குடும்ப நபர்கள் என்று கருதப்படும். அவைகளிடையே கருப்பொருள், அமைப்பு வித்தியாசங்கள் தென்

படலாம். அவைகள் அவைகளுக்கென்றே அமைந்த சூழ்நிலையில் வரலாம். அவைகளில் ஒன்று நிற்கும் இடத்தில் இன்னொன்றைப் போட்டால் அந்த மாற்றம் குறி, குறிப்புத்தளங்களில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது.

pa:lam (E_1') C_1' உயிருடைய + மரம்
↑ > brideg (c_1) ↑ > மரம் (ϕE_1)
ba:lam (E_2\`) C_2' பட்ட + மரம்

பெயற்சி, பெயர்தல் (commutation) என்பதை தொகுதி மாற்றம் எனலாம். தொடர்களில் காணப்படும் மாற்றம் 'தொடர் மாற்றம்' (Permutation). தொகுதியில் காணப்படும் அங்கங்கள் பெயற்சியின் மூலம் வேறு மாற்றங்களைக் காண்பிக்காமல் இருந்தால் அந்த அங்கங்களை மாற்றுவடிவக்கூறுகள் எனலாம். அவைகளிடையே தோன்றும் தொடர்பு 'ஈட்டுத்தொடர்பு' (Substitution) எனப்படும்.

இரண்டு நிலை வடிவக்கூறுகள் அல்லது பெயர்ச்சித் தன்மையைக்காட்டுவன என நிரூபிக்கப்பட்ட இரண்டு கூறுகள் தங்கள் வேற்றுமையைக் காண்பிக்காமல் மயங்கி நிற்கக்கூடும். இந்த நிலையை 'வேற்றுமை நீக்க நிலை' அல்லது 'மயக்க நிலை' (suspension) எனலாம். பிராக் மொழியியலார் குறிப்பிட்ட 'மயக்கத்தன்மை' (neutralisation) என்பதை 'வேற்றுமை நீக்க நிலை' யுடன் ஒப்பிடலாம். தொடரில் பங்கெடுக்கும் இரண்டு வடிவக் கூறுகளோ, தொகுதியில் பங்கெடுக்கும் இரண்டு வடிவக் கூறுகளோ மயக்க நிலையில் நிற்கக்கூடும். இவற்றை முறையே தொடர் மயக்க மற்றும் தொகுதி மயக்க கூறுகள் எனலாம். இம்மயக்கநிலையை' தொடர்கூறு மயக்கம்' (sequential overlapping) 'தொகுதிக்கூறு மயக்கம்' (non sequential overlapping) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இரண்டு கூறுகள் மயங்கும் இடத்தில் தோன்றும் கூறை 'மயக்கநிலைக்கூறு (syncretised entity) என்றழைக்கலாம். p, b என்ற நிலைவடிவ நுண்கூறுகள் டேனிஸ் மொழியில், அசையின் இறுதியில் மயங்கி நிற்கும். லத்தீன் மொழியில் 'templum' என்ற சொல் முதல் வேற்றுமை, ஒருமை என்ற குறிப்புக் கூறுகளின் மயக்கத்தைக்

காட்டும் கூறு) ஆங்கிலத்தில் portmanteau என்றழைக்கப்படும் கூறுகள் தொடர் மயக்கக் கூறுகள்.

மயக்கநிலையில் இரண்டு வகை கூறுகள் தோன்றும் 1. மயங்கிய கூறுகள் அல்லது மயக்கத்தில் பங்கெடுக்கும் கூறுகள் 2. மயக்க சூழ்நிலையில் (இடத்தில்) புதிதாக தோன்றும் கூறுகள் அல்லது 'மயக்கநிலைக்கூறு'. 'மயங்கு கூறு' களுக்கும் 'மயக்க நிலைக்கூறு ,களுக்கும் இடையே தோன்றும் தொடர்பை (ஒரு முனைத்தொடர்பு?) 'ஆதிக்கத்தொடர்பு' எனலாம். 'ஆதிக்கம்' இருவகைப்படும்: 1. முக்கிய ஆதிக்கம் (obligatory dominance) 2. முக்கியமற்ற ஆதிக்கம் (optional dominance). முக்கிய ஆதிக்கத்தில் பங்கெடுக்கும் 'மயங்குகூறுகளும்', 'மயக்கநிலைக் கூறுகளும்' வெவ்வேறானவை; மேலும் 'மயக்க நிலைக்கூறு' புதிதானதாயிருக்கும். முக்கியமற்ற ஆதிக்க நிலையில் பங்கெடுக்கும் 'மயங்குகூறு'களும், 'மயக்கநிலை' ளுறுகளும் வெவ்வேறாக இருக்காது; 'மயங்கு கூறில்' ஒன்று மயக்க நிலைக் கூறாக உருவெடுக்கும்.

ஆதிக்கநிலைகளில் இன்னும் பல வகைகள் காணப்படும். அவை பின்வருமாறு:

1. எல்லா 'மயங்கு கூறுகளும்' 'மயக்கநிலைக்கூறு ஆகக்கூடிய அல்லது எந்த 'மயங்கு கூறும் 'மயக்கநிலைக் கூறு ஆகாத தன்மை பெற்ற ஆதிக்க நிலை. $\begin{matrix}A\\B\end{matrix} \rightarrow AB/\phi$

2. சில மயங்குக் கூறுகள் மயக்க நிலைக் கூறாக உருவெடுக்கும் தன்மை கொண்ட ஆதிக்க நிலை. $\begin{matrix}A\\B\end{matrix} \rightarrow A/B$

3. மயக்க நிலைக் கூறுகளிலிருந்து மயங்குக் கூறுகளை பெறக் கூடிய வகையிலான ஆதிக்க நிலை. $\begin{matrix}A\\B\end{matrix} \leftarrow C$

4. மயக்க நிலைக்கூறுகளிலிருந்து மயங்குக் கூறுகளை பெறக் கூடாத வகையிலான ஆதிக்க நிலை $\begin{matrix}A\\B\end{matrix} \leftarrow C$

5. i மயக்க நிலைக்கூறு புதுக்கூறாகவும், மயங்குக் கூறுகளில் ஒன்று சூன்யக் கூறாகவும் இருக்கும் வகையிலமைந்த ஆதிக்க நிலை. $\begin{matrix}A\\\phi\end{matrix} \rightarrow C$

ii மயக்க நிலைக்கூறு ஒரு மயங்குக் கூறாகவும்

மயங்குக் கூறுகளில் ஒன்று சூன்யக் கூறாகவும் இருக்கும் வகையிலமைந்த ஆதிக்க நிலை. $\begin{matrix} A \\ \phi \end{matrix} \rightarrow A$

'கிடக்கை மொழியும்' (Linguistic Schema) 'துலங்கு மொழியும் (Linguistic usage)

ஒவ்வொரு மொழியிலும் ஒரு 'கிடக்கை அமைப்பும்' (schema), அக்கிடக்கை அமைப்பைத் தழுவியதாகிய, மற்றும் எல்லோருக்கும் புலப்படும் வகையில் அமைந்ததாகிய 'துலங்கு' அமைப்பு (usage காணப்படும். 'கிடக்கை அமைப்பை' பெறும் தொடர்புகள் மூலம் விளக்கமுடியும். ஒரு மொழிக்கென அமைந்த உண்மையான கூறு களை (ஒலி அமைப்பு, எழுத்தமைப்பு கொண்ட கூறுகளை எடுத்துக் கொள்ளாமல், தத்துவ ரீதியில் சில 'சங்கேதக் கூறுகளையும்' (symbols) தொடர்புகளையும் எடுத்துக் கொண்டு மொழியின் அமைப்பை விளக்க முடியும். இத்தகைய தர்க்க ரீதியிலான (logical) மொழியமைப்பை 'கிடக்கை அமைப்பு' எனலாம்.

A + B → C	கிடக்கை அமைப்பு		S + P + O
5 + 6 = 11			John | Saw | Mary
4 + 7 = 11	துலங்கு		
8 + 3 = 11	அமைப்பு		Jane | purchased | books
			The old man | ran | the shop
			S P O

மொழியில், கணிதத்தில் காணப்படுவதைப் போன்ற 'கிடக்கை' 'துலங்கு' அமைப்புகள் காணப்படும் என்பதை யெம்ஸ்லெவ் ஏற்றுக்கொள்வார். Glossematics மொழியின் அமைப்பை தொடர்புகள், தொடர்புகளில் தோன்றும் கூறுகள் என்பனவற்றின் உதவியால் விளக்க முற்படுகிறது. ஆகவே எல்லா மொழிகளுக்கும் தனித்தனியான கிடக்கை அமைப்புகள் காணப்படும் என்பதை

கோபன்ஹேகன் மொழி இயலார் ஏற்றுக் கொள்வர். சில கிடக்கை அமைப்பு அம்சங்கள் எல்லா மொழிகளுக்கும் பொதுவான தாயும் இருக்கக்கூடும்.

கிடக்கை அமைப்பு என்பது 'மொழி அமைப்பின்படி நிலை வடிவம்' (linguistic hierarcty). கிடக்கை அமைப்பு விவரணையில் மொழியின் அமைப்புதான் விவரிக்கப்படும். மொழியின் கருப்பொருள் இவ்விவரணையில் பங்கேற்காது. மொழியின் அமைப்புகளான குறியமைப்பு, குறிப்பமைப்பு என்பனவற்றை முன்னால் கூறப்பட்ட ஐந்து வகைத் தொடர்புகளின் அடிப்படையில் விளக்கும் போது உருவாகும் பொதுமொழி அமைப்பே 'கிடக்கை அமைப்பு'. கிடக்கை அமைப்பை, சசூரால் குறிப்பிடப்பட்ட 'மனமொழி' (langue) என்பதனோடு ஒப்பிடுவர் சிலர். மனமொழியின் அமைப்பும் தொடர்களால்தான் விவரிக்கப்படும். மனமொழி என்பது மனதில் பதிந்து கிடக்கும் மொழி. அது உண்மையான மொழிக்கூறுகளைக் கொண்டிருக்கும் அமைப்பு. ஒலிவடிவாலும், பொருளாலும், ஒலி மற்றும் பொருளாலும் தொடர்புபடுத்தப்படும் கூறுகள் மனித மனதில் தொகுக்கப்பட்டு காணப்படும். இத்தகைய தொகுப்புகளால் ஆனது 'மனமொழி'. யெம்ஸ்லெவ் குறிப்பிடும் 'கிடக்கை மொழி' ஒரு வகையான கணித வடிவம் கொண்டது. 'கிடக்கை மொழி' உண்மையான மொழிக்கூறுகளை ஏந்தி நிற்கும் வடிவம் அல்ல. கிடக்கை மொழியில் (மொழியின் கிடக்கை அமைப்பில்) காணப்படும் 'அடையாளக் கூறுகளை' உண்மையான மொழிக் கூறுகளால் நிரப்பும்போது 'துலங்கு மொழி' கிடைக்கும். யெம்ஸ்லெவ் மொழியில் இரண்டு வகையான படிநிலைகளை குறிப்பிடுவார். 1. கிடக்கை படிநிலை (schema hierarchy) 2. துலங்குப் படிநிலை (usage hierarchy) அடையாளக் கூறுகளையும், தொடர்புகளையும் வைத்து கிடக்கை மொழியை விவரிக்க முடியும். மொழியின் கணிதவகை அமைப்பு ஒரு வகைப் படிநிலை போன்று காணப்படும். இது 'கிடக்கைப்படிநிலை'. இதற்கு இணையாக மொழியில் உண்மையான கூறுகளைக் கொண்ட ஒரு வகைப்படிநிலை அமைப்பு காணப்படும். இது 'துலங்குப் படிநிலை' துலங்கு அமைப்பை, சசூர் காட்டிய பேச்சு மொழி'யோடு ஒப்பிடுவர் சிலர். இத்தகைய ஒப்பிடுதலின் மூலம்,

நாம் கிடக்கை அமைப்பு என்பதை சீரான, பொது அமைப்பு எனவும், துலங்கு அமைப்பை வேற்றுமைகளைத் தாங்கும் அமைப்பு எனவும் கொள்ள வாய்ப்புண்டு.

வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு கிடக்கை மற்றும் துலங்கு அமைப்புகள் காணப்படும். தனி ஒருவரின் மொழியிலும் ஒருகுறிப்பிட்ட கிடக்கை அமைப்பு இருக்கக்கூடும். கிடக்கை அமைப்பில் (கிடக்கை மொழி) மாற்றுருக்கள் (variants) காணப் படும். மாற்றுருக்களை 'பிணைப்பற்ற அல்லது சுயேச்சை மாற்றுரு' (free variant) 'பிணைப்புற்ற மாற்றுரு' (bound variant) என இரண்டு வகையாக்கலாம். சுயேச்சை உருக்களை தொகுதிகளில் காணலாம். பிணைப்புற்ற உருக்களை தொடரில் காணலாம். பிணைந்த மற்றும் பிணையாத உருக்களை குறி மற்றும் குறிப்புத் தளங்களிலும் காணமுடியும்.

கல்யாணம், திருமணம் — குறியின் சுயேச்சை மாற்றுரு (?)
நான், ~ என் - — குறியின் பிணைப்புற்ற மாற்றுரு (?)
ஆடு (dance, sheep) — குறிப்பின் சுயேச்சை மாற்றுரு (?)
அடை (shut, close) — குறிப்பின் பிணைப்புற்ற மாற்றுரு (?)

தனி மற்றும் பிணை மாற்றுருக்களை கூறுகளின் உருக்களோடு இணைக்கமுடியும். அமைப்பின் உருக்களோடும் இணைக்கமுடியும். இவ்விரண்டு கருத்துகளும் பிரச்சினையை எழுப்பும் கருத்துக்கள்

Sentence — affirmative,negative, Question (மாற்றுருக்கள்?)
affirmative — achive, passive (சுயேச்சை மாற்றுருக்கள்?)
Achive — Intransitive, transitive, cansative
Transitive — Subject + predicate + object + (Adjunct)
தொடர் மாற்றுருக்கள்?

Subject — Noun, Pronoun, Noun phrase
Pronoun — I person, II person, III person

மொழிவகைகள்:

மொழி என்பது குறிகளால் ஆன 'சீரான அமைப்பு' (system). மனித மொழி ஒரு இயற்கையான மொழி. மனித மொழி சிறப்பு பெற்றது. ஏனென்றால் அது புதுப்புதுக்குறிகளை உருவாக்கும் தன்மை கொண்டது. மேலும் குறிகளை பலவகைகளில் இணைக்கும் வகையிலமைந்த அமைப்பு முறைகளைக் கொண்டது. இயற்கையான, மனித மொழியை 'குறி மொழி' எனலாம். குறிநுண் கூறுகளைக் கொண்ட எல்லா ,மொழிகளையும் 'குறி மொழி' (denotational language) எனலாம். வெளியுலகப் பொருள்கள், எண்ணங்கள் முதலியனவற்றை நேரடியாக குறிப்பதற்காக உபயோகிக்கப்படும் மொழி 'குறி மொழி'. ஆகவே அதன் குறிப்புத் தளம் வெளியுலகப் பொருள்களைச் சார்ந்த எண்ணங்களால் ஆனதாயிருக்கும். வேறு மொழிகளையும் மனித குறிமொழி உதவியால் மொழிபெயர்க்கமுடியும் நேர்த்தியான முறையில். குறிநுண்கூறுகளைக் கொண்ட மொழிகள் (குறிமொழிகள்) எளிதில் குறிகளை உருவாக்கும்; மேலும் குறிகளை வெவ்வேறு வகையாக தொடர்நிலையில் நிறுத்துவதற்காக அமைந்த அமைப்பு முறைகளையும் தன்னுள் கொண்டதாயிருக்கும். குறிநுண் கூறுகளைக் கொண்டிராத மொழிகளை 'சங்கேதக் குறி மொழிகள் (அடையாளக் குறிமொழிகள் 'Symbolic languages') என அழைக்கலாம். இம் மொழிகளில் ஒருகுறைந்த எண்ணிக்கையில் அடங்கும் 'அடையாளக் குறிகள்' (Symbols) காணப்படும். ஒவ்வொரு அடையாளக்குறியும் ஒரே ஒரு குறிப்பிட்ட 'பொருளை' நிரந்தரமாக காட்டிநிற்கும். மனித குறிமொழியின் குறிக்கூறுகளில், பெரும்பாலானவை ஒன்றிற்கும் மேற்பட்ட பொருளைச்சுட்டுவனவாகவே இருக்கும். அடையாளக்குறி மொழிகளின் 'குறிகள்' எண்ணிக்கையில் குறைந்தவை. புதுக்குறிகளை உருவாக்கும் வகையில் இந்தமொழிதன் அமைப்பை, அமைப்பு முறைகளைக் கொண்டிருக்காது.

இயற்கையான, மனித மொழிகளை அவைகளின் சிறப்புத் தன்மையின் அடிப்படையில் மூன்று பெரும்பிரிவுகளாக பகுக்கலாம். அவை 1. வெளிப்படை (பொருள்) குறி மொழி (denotative semiotic) 2. மறை (பொருள்) குறி மொழி (connotative semiotic) 3. ஈட்டுக்குறி மொழி (meta semiotic) என்பன.

இயற்கையான மனித மொழியை 'வெளிப்படை குறிமொழி' எனலாம். அம்மொழியில் குறி மற்றும் குறிப்புத்தளங்கள் காணப் படும். குறியமைப்பு ஒலிகளால் ஆனது. குறிப்பமைப்பு எண்ணக் கூறுகளால் ஆனது.

சில சமயங்களில் ஒருமொழியின் குறியமைப்பு ஒரு குறிப்பமைப் பைக் காட்டுவதோடல்லாமல் மொழிநிலவும் சூழ்நிலை அம்சங் களான பேசுவோர், கேட்போர், அவர்களின் சிறப்புத்தன்மைகள், அவர்கள் வளர்ந்த, வாழ்கின்ற சூழ்நிலை, பேச்சுசூழல், பொழுது, இடம் ஆகியனவற்றையும் பிரதிபலிக்கும் தன்மையதாயிருக்கும். அத்தகைய சூழ்நிலை அம்சங்களை பிரதிபலிக்கும் குறியமைப்பு களைக் (குறிக்கூறுகளை) கொண்ட மொழியை 'மறை (பொருள்) குறிமொழி' எனலாம். மறை குறிமொழியின் குறிக் கூறுகள் பிரதிபலிக்கும் சூழ்நிலை அம்சங்களை 'மறை பொருள்' எனலாம். மறை பொருள்களை 'அணிப்பொருள்' (Stylistic meaning), எனவும் அழைக்கலாம். மொழிக்கூறுகளின் மறை பொரு ளிலிருந்து உணரப்படும் சூழ்நிலை அம்சங்களை Connotators என அழைப்பார் யெம்ஸ்லெப். அத்தகைய அம்சங்கள் பின் வருமாறு: 1 மொழிநடை அமைப்புகளான வசன நடை அமைப்பு, செய்யுள் நடை அமைப்பு என்பன 2. நடைவகைகளான கற்பனை (சிருஷ்டி) நடை, அனுகரண அல்லது காப்பிநடை என்பன 3. மதிப்பை வெளிப்படுத்தும் வகையிலமைந்த உயர்மதிப்பு, நடு மதிப்பு, கீழ்மதிப்பு மொழிநடைகள் 4. மொழி வெளிப்பட உதவி யாயிருக்கும் வழிகளான பேச்சு, எழுத்து, சைகை, கொடி வகைகள் 5. மொழிவெளிப்படுத்தும் பாவங்களான கோபம், சாந்தம், சந் தோஷம் முதலியன 6. மொழிவழங்கும் சூழ்நிலைகளான ஊர், நாடு முதலியன 8. மொழி பேசுவோரின் மன, உடல் நிலைகள் மற்றும் பேச்சுறுப்புகளின் தன்மை முதலியன.

ஒருவர் பயன்படுத்தும் மொழியிலிருந்து, அம்மொழி எந்த நடையைப் பிரதிபலிக்கிறது, எந்த கிளைமொழியை சுட்டுகிறது, அம்மொழியைப் பேசுவோரின் ஊர், கல்வி நிலை, பொருளாதார நிலை, சமுதாயநிலை ஆகியனவற்றை புரிந்து கொள்ள முடியும். ஆகவே மொழி சாதாரணமாக வெளியுலகப் பொருள்களையும்,

எண்ணங்களையும் சுட்டுவதற்காக பயன்படுவதுடன், பேச்சு சூழ்நிலை அங்கங்களையும் குறிப்பாக உணர்த்தவும் செய்கிறது. பேச்சுச் சூழல்களைப் பிரதிபலிக்கும் தன்மையில் இருக்கும் மொழியை 'மறைகுறி மொழி' என்கிறோம். ஒரு மொழியின் குறியமைப்பு ஒரு குறிமொழியைச்சுட்டும் வகையில் இருந்தால் அம் மொழியை 'மறைகுறி மொழி' என அழைக்கலாம்.

ஒரு மொழியின் 'குறிப்புத்தளம்' இன்னொரு குறிமொழியைத் தன்னுள் கொண்டிருக்கலாம். இத்தகைய குறிமொழி 'ஈட்டுக் குறி மொழி' (meta language) எனப்படும். இலக்கணத்தை வெளிப் படுத்த நாம் பயன்படுத்தும் 'கலைச் சொற்கள்' (technical terminologies) அனைத்தும் ஈட்டுக் குறி மொழியின் அங்கங்களே. இலக்கண சொற்களான 'பெயர், வினை' என்ற கலைச் சொற் களின் குறிப்பமைப்பு இயற்கையான மொழிகளில் காணப்படும் சில சொற்களை '(ராமன், மனிதன், ஆடு – பெயர்; வா, போ, இரு – வினை) குறிக்கும். இந்த இயற்கை மொழிச் சொற் களுக்கும் குறி–குறிப்பு அமைப்புகள் காணப்படுகின்றன. ஆகவே இலக்கண மொழிக் கூறுகளின் குறிப்பமைப்பு இயற்கையான மொழிகளின் குறிக்கூறுகளால் ஆனதாயிருக்கும். ஆகவே இலக்கண விவரணைக்காக அதாவது ஒரு மொழியின் இலக் கணத்தை விவரிப்பதற்காக நாம் எடுத்துக் கொள்ளும் மொழியை ஈட்டுக் குறிமொழி எனலாம். ஈட்டுக் குறிமொழிகள் இலக்கண விவரணைக்கு உட்படுத்தப்படும் மொழியல்ல. கணிதத்தில் வரு கின்ற பொதுவான குறிகளை (A, B) ஈட்டுக் குறிமொழியின் குறிகள் என அழைக்கலாம். எந்த ஒரு இயற்கையான மொழியும் வேறு இயற்கையான மொழிகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் போது முதல் மொழி ஈட்டுக் குறிமொழியாகி விடும்.

S = subject + verb + object — ஈட்டுமொழிக்கூறுகள் (ஆங் கில (இயற்கை) மொழி)

ராமன் பார்த்தான் சீதையை — இயற்கை மொழிக் கூறுகள்

மறைபொருள் மொழியானது மொழியின் நடை, மொழியின் கிளைமொழிகள், மொழியின் மிக நுண்ணிய வகையான 'தனி நபர்

மொழி' (idiolect) ஆகியனவற்றை வேறுபடுத்திக் காட்டும் தன்மை கொண்டது. மறைபொருள் மொழி, மொழிக்கு அப்பால் மறைந்து காணப்படும் கலாச்சார நாகரீக அம்சங்களை வெளிப்படுத்தி நிற்பதால் (காட்டுவதால்) அம்மொழியை ஆராய்வதன் மூலம் மேற்கூறிய அம்சங்களை உணர்ந்து கொள்ள முடியும். ஈட்டுக்குறி மொழியை உபயோகித்து 'வெளிப்படை குறிமொழி' மற்றும் 'மறைகுறி மொழி' ஆகியனவற்றின் அமைப்பை விளக்கமுடியும். இயற்கை குறிமொழிகளோடு ஈட்டுக்குறி மொழிகளை ஒப்பிடும் போது ஈட்டுக்குறி மொழிகள் தெளிவான, எளிய அமைப்பைக் கொண்டவை என்பதை உணரமுடியும்.

குறிமொழிகளில் மேலும் இரண்டு வகைகளைக் காணலாம். அவைகள் முறையே விஞ்ஞான ரீதியிலான குறிமொழி, சாதாரண குறிமொழி என்பன. (scientific semioties : non scientific semiotics). விஞ்ஞானக் குறிமொழிகள் சில வகை 'செயல்முறை'களை அவற்றின் அமைப்பாகப்பெறும். அவைகளை சாதாரணக் குறி மொழிகளால் மொழிபெயர்க்க முடியும். சாதாரணக்குறி மொழி என்பது இயற்கையான மொழி. விஞ்ஞானக் குறிமொழிகளை விவரணைக்கு உட்படுத்தி அவைகளின் அமைப்பை விவரிக்கும் வகைக்காக நாம் பயன்படுத்தும் மொழியை 'விஞ்ஞான ஈட்டுக்குறிமொழி' (meta scientific semiotics) என அழைக்கலாம். கணிதத்தை (கணித செயல் முறைகளை மற்றும் கணித ஃபார்முலாக்களை) விளக்குவதற்காக நாம் உபயோகிக்கும் மொழியை ஒருவகை விஞ்ஞான ஈட்டுக்குறிமொழி எனலாம். சாதாரண மொழிகளை விளக்குவதற்காக நாம் உபயோகிக்கும் மொழியை 'சாதாரண ஈட்டுக்குறிமொழி' (meta non scentific semiotics) எனலாம். சாதாரண மொழிகளை விவரிக்கும் முறையை 'semiology' என்ற துறையின் கீழ் அடக்குவார்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் மொழியின் வகைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. ஈட்டுக்குறிமொழி — ஈட்டு சாதாரணக்குறிமொழி
   ஈட்டு விஞ்ஞானக் குறிமொழி
2. விஞ்ஞானமொழி

3. சாதாரணமொழி — வெளிப்படைக்குறிமொழி
மறைகுறிமொழி

சமுதாயத்தைத் தழுவிய இயல்கள் எல்லாம் சமுதாய அம்சங்களை விளக்க முயல்வதால் அவை ஒருவகை ஈட்டுமறை குறிமொழியைப் பயன் படுத்துவனவாயிருக்கும். சாதாரண மற்றும் விஞ்ஞான மொழிகளை பொதுவாக மொழிகள் என்று கொண்டால், ஈட்டுமொழிகளை 'இயல்மொழிகள்' என அழைக்கமுடியும். 'இயல்மொழிகளில்' பல வகைகள் காணப்படும். விஞ்ஞான இயல் மொழிகள், கணித இயல்மொழிகள், மொழியியல் மொழிகள், மானிடவியல்மொழிகள், சமுதாயவியல் மொழிகள் என்பன அத்தகைய வகைகள். 'இயல்மொழிகள்' சாதாரண குறிப்பு அம்சங்களையும், மறைந்த குறிப்பு அம்சங்களையும் விளக்கம் தன்மை கொண்டவை.

இதுகாறும் கூறியவற்றால் கோபன்ஹேகன் மொழியியலார் கொண்டிருந்த 'மொழியைப்பற்றிய கருத்துகள்' தெளிவாகின்றன. இங்கே நாம் கோபன்ஹேகன் மொழியியலார் கொண்டிருந்த 'மொழியியல்' பற்றிய கருத்துக்களை விளக்க முயல்வோம்.

மொழியியல் கோட்பாடு:

மொழியையும், மொழியின் சிறப்புத்தன்மைகளையும் 'மொழிக் கோட்பாடு' விளக்கும். மொழியை ஆராயும் விதம், மொழியை விவரிக்கும் விதம் ஆகியனவற்றை 'மொழி இயல் கோட்பாடு' விளக்கும். கோபன்ஹேகன் மொழியியலார் கொண்டிருந்த மொழி பற்றிய கருத்துக்களை முன்னர்க் கூறினோம். மொழி, தனி நிலை கொண்ட பொருள். மொழியில் பல கூறுகள் காணப்படும். கூறுகளில் குறித்தளம், குறிப்புத்தளம் என்பவை காணப்படும். மொழியில் அமைப்பும், கருப்பொருளும் காணப்படும். மொழியில் துலங்கு துலக்கு வகைகள் காணப்படும். மொழியை சாதாரண குறிமொழி, ஈட்டுக்குறிமொழி என வகைப்படுத்தலாம். மேற்கூறிய சில கருத்துகள் மொழிபற்றிய கருத்துகள். இங்கு நாம் கோபன்ஹேகன் மொழியியலார் கொண்டிருந்த மொழியியல் கொள்கைகளை விளக்குவோம்.

மொழியியல், மொழியை ஒருதனிநிலை கொண்ட, தன்னிறைபு பெற்ற பொருளாக கருதவேண்டும். மொழியானது பல வகை வெளியுலக அம்சங்களின் சங்கமம் அல்ல. ஒருகோட்பாட்டின் கீழ் பலவித கொள்கைகள் காணப்படும். அத்தகைய கொள்கைகள், அந்தக் கோட்பாடு எந்தத்துறையை சார்ந்து நிற்கிறதோ அந்த துறையின் கருப்பொருளை மையமாக வைத்து எழுவனவா யிருக்கும், கருப்பொருள் ஒன்றாயிருந்தாலும், அதை விவரிக்க பயன் படுத்தப்படும் கொள்கைகள் ஆராய்ச்சியாளரைப் பொறுத்து வேறு படலாம்.கொள்கைகள் காலத்திற்கு காலம், இடத்துக்கு இடம் வேறு படலாம். ஆனால் எல்லா மாறுபட்ட கொள்கைகளும் ஒரு கோட் பாட்டின் கீழ்தான் கொண்டுவரப்படும். ஒரு குறிப்பிட்ட மொழி யியலாரால் சில கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அம்மொழி யியலாரால் அவரது கொள்கைகள் ஒரு கோட்பாட்டின் நிலைக்கும் உயர்த்தபடலாம்.

மொழியியல் கோட்பாட்டின் கீழ் பல மொழியியல் கொள் கைகள் காணப்படலாம். அக்கொள்கைகள் மொழியைப்பற்றிய தாகவோ (மொழிக் கொள்கைகள்), மொழி ஆராய்ச்சியைப்பற்றிய தாகவோ (மொழி ஆராய்ச்சிக் கொள்கைகள்), மொழி விவரணை யைப்பற்றியதாகவோ (மொழி விவரணைக்கொள்கைகள்) இருக்கும். இந்த கொள்கைகள் எழ ஏதுவாக இருக்கும் கருப்பொருள் மொழி கோபன்ஹேகன் மொழியியலாரின் கொள்கைகளை தொகுத்து கோபன்ஹேகன் மொழியியல் கோட்பாடு, என்ற நிலைக்கு உயர்த் திய பெருமை யெம்ஸ்லெவுக்கு உண்டு.

கோட்பாடு:

மொழியியல் கோட்பாடு (linguistic theory) 'எல்லைக்குட் பட்டதா'யிருக்க வேண்டும்; (inherant) எல்லை கடந்ததாயிருக்கக் கூடாது (not trancendant). மொழியியல் கோட்பாடு மொழியின் 'நிலைத்தன்மை'யை (constancy) கண்டுபிடிக்க உதவவேண்டும். மொழியின் நிலைபேற்றில் பங்கெடுக்கும் 'வெளியுலகப் பொருள் களை' மொழியியல் கோட்பாடு விவரணைக்கு எடுக்க வேண்டிய தில்லை. வேற்றுமைகளை தன்னகத்தே கொண்டு நிற்கும் அல்லது வேற்றுமைகளை வெளிப்படுத்தி நிற்கும் மொழியின் அடித்

தளத்தில் காணப்படும் 'நிலைத்தன்மை'யையும், மொழியின் போக்கமைப்பின் அடித்தளத்தில் படிந்திருக்கும் 'நிலையமைப்பை' யும் வெளிக்கொணர வேண்டும் தன்மை கொண்டதாயிருப்பதே 'மொழியியல் கோட்பாடு'. மொழியியல் கோட்பாடு மொழியின் அமைப்பை ஆராய்வதிலும், விவரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மொழியியல் கோட்பாடு எல்லைக்கு உட்பட்டது. சில சாத்திர நியமங்களை (empirical principles) கைக் கொள்வதன் மூலம் கோட்பாடு வரையறைக்கு உட்பட்டு நிற்கும். சாத்திர நியமங்கள் மூன்று தன்மைகளைக் கொண்டவை. 1.உள்முரண்பாடற்ற தன்மை (selfconsistancy) 2. நிறைத்தன்மை அல்லது நிறைவு (exhaustiveness) 3. எளிமைத்தன்மை அல்லது எளிமை (simplicity). மொழியை ஆராயவும், விவரிக்கவும் உபயோகிக்கப்படும் கருத்துகள் தமக்குள்முரண்பாடு அற்ற வகையில் இருக்கவேண்டும். மொழியை ஆராய, விவரிக்க பயன்ப்படுத்தபடும் கருத்துகள் மொழியை முழுமையாக ஆராய்வதற்கு, விவரிப்பதற்கு உதவவேண்டும் மேலும் கருத்துகள் எளியதாயிருக்க வேண்டும். 'எளிமை' என்பதை விளக்குவதில் இடையூறு ஏற்படும். குறைந்த எண்ணிக்கையில் மொழியில் கூறுகளை நிலை நிறுத்த முயலும் கொள்கை எளிமையானது என்று கூறமுடியும். குறைவான, எளிய, சிறிய அமைப்புகளை மொழியில் நிலை நிறுத்தும் கொள்கையையும் எளிய கொள்கை என அழைக்கமுடியும்.

மொழியியல் கோட்பாடு 'தன்னிச்சைத்தன்மை' (arbitrariness) கொண்டது; மற்றும் பொருந்தும் தன்மையையும் கொண்டது (appropriateness). மொழி ஆராய்ச்சி விவரணைகளுக்கு சில 'ஆதராக்கருத்துகள்' (premises) பயன்படுத்தப்படும். ஆதாரக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு நடத்தப்படும் மொழி ஆராய்ச்சி, விவரணை முதலியன சில மொழிபற்றிய 'முடிவான கருத்துக்களை' (corollaries) இறுதியில் அடையும். அத்தகைய 'முடிவான கருத்துகள்' ஆதாரக்கருத்தை சார்ந்ததாகவே இருக்கும். மொழியியல் கோட்பாட்டின் கொள்கைகள் சில ஆதாரக்கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மொழி ஆராய்ச்சி,

விவரணைகளை நடத்த முயல்வதால் மொழிஇயல் கோட்பாடு 'தன்னிச்சை தன்மை' கொண்டது எனப்படும். மொழியியல் கோட்பாட்டை அனுபவ அறிவால் நிரந்தரமானதாகவோ, நிரந்தர மற்றதாகவோ ஆக்கமுடியாது. ஏனென்றால் கோட்பாடு பலவித ஆதாரக் கருத்துக்களை மூலமாகக் கொண்டிருக்கும். அனுபவ ரீதியில் சில புதியக்கருத்துகள் கண்டுபிடிக்கப்பட்டால் அது சில கருத்துக்களை மாற்றுமேயொழிய கோட்பாடை மாற்றாது. ஒரு கோட்பாடின் கீழ் எல்லாவிதமான கொள்கைகளும் வரக்கூடும். எல்லாவிதமான கொள்கைகளும் சில ஆதாரக்கருத்துகளின் அடிப் படையில் எழுந்ததாயிருக்கும்.

மொழியியல் கோட்பாடு 'பொருந்து தன்மை' (appropriate ness) கொண்டது. மொழி ஆராய்ச்சி மற்றும் விவரணைக்காக ஏற்றுக் கொள்ளப்படும் அடிப்படைக் கருத்துகள் எல்லாவிதமான மொழிகளையும், மொழியின் அம்சங்களையும் விவரிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் அடிப்படைக் கருத்துகள் எல்லா மொழிக்கும் பொருந்தும் வகையில் அமைய வேண்டும். இத்தகைய கருத்துகளைக் கொள்வதால் கோட்பாடு 'பொருந்து தன்மை. பெற்றதாகிறது. ஆதாரக் கருத்துகள் மொழி அனுப வத்தின் அடிப்படையில் பெறப்பட்டவையாயிருக்கும். அவ்வாறிருந் தால்தான் மொழியின் உண்மையான அம்சங்களுக்கும், ஒரு கொள்கையின் உதவியால் நாம் விவரிக்கும் மொழி பற்றிய கருத்துகளுக்கும் இடையே பொருத்தம் காணப்படும்.

மொழியியல் கோட்பாடு, மொழியை ஆராய்ச்சி செய்யும் போது 'பிரித்தல் முறையை' (deduction) கைக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். பிரித்தல் முறை என்பது பெருங் கூறுகளிலிருந்து சிறு கூறுகளை பிரிப்பதையும், நுண்கூறுகளை ஏற்படுத்துதலையும், பிரிக்கப்பட்ட கூறுகளுக்கு நுண்ணிய விவ ரணை கொடுப்பதையும் தனது குறியாகக் கொள்ளும். மொழி ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பெருமொழிக் கூறுகளை 'பெரு மொழித்திரட்டு' (Text) எனலாம். பெருமொழிதிரட்டுகளை உடைத்து அவைகளில் காணப்படும் பகுதிளைப் பிரித்து வகைப் படுத்தலை 'பிரிப்பு முறை ஆராய்ச்சி' எனலாம் (Deduction). யெம்ஸ்லெவ் deduction என்பதை 'தொடர்ச்சியான பிரிப்புமுறை'

(continued analysis) என்பார். ஒரு மொழித்திரட்டை பகுதிகளாக்கி அப்பகுதிகளை மேலும் மேலும் சிறுசிறு பகுதிகளாக்கும் வகையில் தொடர்ச்சியாக நடத்தப்படும் பிரிப்பு முறையே deduction எனப் படும். இத்தகைய பிரிப்பு செயலில் ஒருகட்டத்தில் மொழிக்கூறு களை பிரிக்க முடியாத நிலை ஏற்படும். இந்த நிலையில் காணப் படும் மொழிக்கூறுகளை 'குறி நுண்கூறு' எனலாம்.

'பிரிப்பு முறை'க்கு எதிரானது 'இணைப்பு முறை' (induction). இணைப்பு முறை சிறுகூறுகளை இணைத்து பெருங்கூறுகளை உருவாக்குவதை விளக்கும். தர்க்கரீதியிலான 'பொது வாக்கு முறை' (induction) மொழிக் கோட்பாட்டின் ஆதாரக் கருத்து களைத் தொகுக்கும் வகையில் பயன்படுத்தப்படுகிறது.

மொழியியல் கோட்பாடு ஒரு கணித ரீதியிலான அமைப்பு விவரணையை மொழிக்கு கொடுக்க வகை செய்ய வேண்டும். மொழியை அமைப்பு என்று கொண்டு மொழியை விளக்க வேண்டும். மொழி கருப் பொருள்களின் சங்கமம் அல்ல. கோட்பாடு மொழியின் 'நிலைத்தன்மையை' விளக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். கோட்பாடு சில அடிப்படை கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். மொழி அத்தகைய மூலக் கருத்துக்களை பிரதிபலிக்கிறதா என்பதையும், எவ்விதம் பிரதி பலிக்கிறது என்பதையும், விளக்க வேண்டும். இத்தகைய அம்சங்களைக் கொண்ட கோட்பாடு கணிதரீதியிலான விவரணைக் கோட்பாடு என விளக்குவர் யெம்ஸ்லெவ்.

கோபன்ஹேகன் மொழியியலார் ஒருவகையான கணிதரீதியி லான மொழியியல் கொள்கையைக் கொண்டிருந்தனர். அத்தகைய மொழியியல் கொள்கை பின்வரும் அம்சங்களை அடக்கும் தன்மை கொண்டது: தர்க்க ரீதியிலான விவரணை முறை, பிரிப்பு ஆராய்ச்சி முறை, தன்னிச்சை தன்மை, பொருந்து தன்மை, எல்லைக்குட் பட்ட தன்மை முதலியன.

மொழி ஆராய்ச்சி கொள்கை:

மொழி ஆராய்ச்சியில் யெம்ஸ்லெவ் கொண்ட முக்கியகருத்துக் கள் பின்வருமாறு, 1. மொழி ஆராய்ச்சியில் ஒரு குறிப்பிட்ட

'ஆராய்ச்சி கருப்பொருளை' எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாராய்ச்சிக் கருப் பொருளை 'மொழித்திரட்டு' எனலாம். மொழித்திரட்டுகள் முழுமையற்றவையாயிருந்தால் 'புகுத்தல் முறையை' (catalysis) அனுசரித்து அவைகளை முழுமையானதாக ஆக்கலாம். இத்தகைய முழுமையான மொழித்திரட்டுகளை (வடிவில் பெரியவை) கிரமமாக 'பிரித்தறி ஆராய்ச்சிக்கு' (analysis) உட்படுத்தி அவைகளில் காணப்படும் பெரியதும் சிறியது மான மொழிக் கூறுகளை பிரித்தெடுக்க வேண்டும். மொழிக் கூறின் தொடர்கள், தொகுதிகள், குறிக்கூறுகள், குறிநுண்கூறுகள் ஆகியன அவைகளிடையே தோன்றும் தொடர்பின் அடிப்படையில் தான் பிரிக்கப்படும். அதாவது கோட்பாட்டால் ஏற்றுக் கொள்ளப் படும் ஒரு வகைக் கருத்தான, (அடிப்படைக் கருத்து) 'தொடர்பு கருத்து', (தர்க்க ரீதியில்) மொழியில் ஐந்து வகையான தொடர்புகள் இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளும். தொடர்ச்சி தொடர்பு, தொகுப்பு தொடர்பு, ஒருமுனைத் தொடர்பு, இருமுனைத்தொடர்பு, முனையற்ற தொடர்பு என்பன அத்தகைய தொடர்புகள். மொழித் திரட்டுகளில் இத்தகைய தொடர்புகளைக் காண்பிக்கும் வகையில் நிற்கும் கூறுகள் எல்லாம் பிரிக்கப்படும். தொடர்பில் பங்கெடுப் பவைகளே தொடர், தொகுதி, குறிக்கூறு, குறிநுண்கூறு என்பன. ஆகவே அவைகளைப் பிரித்தெடுக்க வேண்டுமென்றால் அவைகள் ஒரு வகைத்தொடர்பில் நிற்கின்றன என்பதை முதலில் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும். குறிப்பாக கூறினால், பிரித்தறி ஆராய்ச்சியில் முதலில் தொடர்புகளைக் கண்டு கொண்டு பின் தொடர்பில் பங்கெடுக்கும் கூறுகளைப் பிரிக்க வேண்டும். (கூறு களை முதலிலேயே கண்டு கொண்டு அவைகள் சில தொடர்புகளில் நிற்கின்றன என்பதை வலியுறுத்தும் கருத்துகளை நாம் வேறு சில மொழியியல் கொள்கைகளில் காணலாம்).

2. மொழி ஆராய்ச்சியில் பெயற்சி சோதனை என்ற சோதனை யைக் கைக் கொண்டு மொழியில் தோன்றும் 'முக்கிய குறிக்கூறுக ளையும், குறிநுண்கூறுகளையும்' (invariants) அவைகளின் கீழ் அடங்கி வரும் 'திரிபுக்கூறுகள் அல்லதுமாற்றுக் கூறுகளையும்' (variants) கண்டு கொள்ள முடியும். பெயற்சி சோதனை மொழி யின் அடிப்படையான 'அமைப்புக் கூறுகளை' வரையறுக்கவும் (குறைக்கவும்?) பயன்படுகிறது.

மொழித்திரட்டு (Text):

மொழி ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் மொழிப்பகுதிகளை 'மொழித்திரட்டு' (text) எனலாம். மொழித்திரட்டு 'ஆராய்ச்சிக்கான பொருள்' (Data). மொழித்திரட்டு பேச்சு வடிவத்திலோ, எழுத்து வடிவிலோ இருக்கலாம். மொழியில் 'மறைகுறிப் பொருள்கள், (connotators) காணப்படுவதால் மொழித்திரட்டுகள் பல தரப்பட்டவைகளாயிருக்கும். மொழி நடையம்சங்கள், மொழி மதிப்பு அம்சங்கள், பேசுவோரின் பாவனை அம்சங்கள், பேச்சு சூழ்நிலையம்சங்கள், பேசுவோர் மனநிலை ஆகியனவற்றை குறிப்பாக, மறைமுகமாக மொழியின் கூறுகள் வெளிப்படுத்துவதால் அவைகளை 'மறைகுறிபொருள்கள்' (connotations) எனலாம். மொழித்திரட்டுகள் பெரியனவாகவோ சிறியனவாகவோ இருக்கலாம். ஒரு எழுத்தாளனின் எல்லா படைப்புகளையோ, குறிப்பிட்ட படைப்புகளையோ, குறிப்பிட்ட படைப்பின் பாகங்களையோ மொழித்திரட்டாக கருதமுடியும்.

புகுத்தல் முறை (catalysis) :

மொழித்திரட்டுகள் முழுமையற்றவையாயிருக்கலாம். இடைச் செருகல் அல்லது புகுத்தல் முறையை அனுசரித்து முழுமையற்ற மொழித்திரட்டுகளை முழுமையானதாக ஆக்க முடியும். ஒரு தொடர்பில் (function) தர்க்கரீதியில் நிற்கும் தன்மை கொண்ட, ஆனால் வெளிப்படையாகத் தோன்றாத கூறுகளை, அத்தொடர்பில் நிலை நிறுத்தலை 'கூறு புகுத்தல்' (catalysis) என அழைக்கலாம். 'புகுத்தல்' இரண்டு வகைப்படும். 1. தொடரில் தொக்கி நிற்கும் கூறைப் புகுத்தல் 2. தொகுதியில் மறைந்து நின்ற கூறைப் புகுத்தல்.

இரண்டு தொடர்புக்கூறுகள் (functives) ஒரு முனைத் தொடர்பில் (determination) நிற்கும் தன்மையதாக இருந்தால்தான் கூறு புகுத்தல் முறையை எளிதாக அனுசரிக்க முடியும். ஒரு முனைத் தொடர்பில் நிற்கும் இரண்டு கூறுகளில் ஒன்றின் நிலை இன்னொன்றின் நிலையை நிர்ணயிக்கும் தன்மையில் இருக்கும். நிர்ணயிக்கப்பட்ட கூறு மொழித்திரட்டில் ஒரு இடத்தில் தோன்று

கிறது என வைத்துக் கொள்வோம். இதன் அடிப்படையில் நிர்ணயிக்கும் கூறை அந்த சூழ்நிலையில் எளிதாக நாம் நிறுத்த முடியும். லத்தீன் மொழியில் Sine என்ற அடைச்சொல் எப்போதும் ablative என்ற வேற்றுமையை ஏற்ற பெயர்ச்சொல்லுடன்தான் வரும். லத்தீன் மொழித்திரட்டு ஒன்றில் ஓரிடத்தில் Sine என்ற சொல் மட்டும்தான் தோன்றுகிறது என வைத்துக் கொள்வோம். நாம் அந்தச் சூழ்நிலையில் ஒரு ablative வேற்றுமையை ஏற்ற பெயர்ச் சொல்லும் அந்த Sine என்ற சொல்லுடன் வரவேண்டும் என அத்தகைய பெயர்ச்சொல்லை அங்கு நிறுத்த முடியும். இங்கே Sine என்பது நிர்ணயிக்கும் கூறு. ablative வேற்றுமையை ஏற்ற பெயர்ச்சொல் (Nabl) திர்ணயிக்கப்படும் கூறு.

'புகுத்தல்கள் அல்லது செருகல்கள்' மொழித்திரட்டுகளை முழுமையாக்குவதிலும் (Textual completeness) (Textual construction), சுருக்க அமைப்புகளை (abbreviations) நீட்டுவதற்கும், நிறைவற்ற கூறுகளை நிறைவாக்குவதிலும் முக்கிய பங்கை வகுக்கின்றன. மொழியின் முழு அமைப்பை, மொழி மாதிரிப் பகுதியிலிருந்து கண்டு கொள்ளவும் புகுத்தல் பயன்படுகிறது. 'கூறு புகுத்தல்' என்ற செயல் மொழியின் அமைப்பு அம்சங்களை யூகிக்கும் வகையில் உதவி புரிகிறது. யூகத்தின் அடிப்படையில் வளர்வதுதான் விஞ்ஞானக் கொள்கை. ஆகவே 'புகுத்தல் முறை' விஞ்ஞான நெறிமுறைக்கு உட்பட்டது. இந்த புகுத்தல் முறையை யெம்ஸ்லெவ் மொழி ஆராய்ச்சியில் கைக்கொள்வதால் யெம்ஸ் லெவின் மொழியியல் கொள்கை விஞ்ஞான நெறிமுறைக் குட்பட்ட கொள்கை. புகுத்தல் முறைக்கு எதிரான முறையான 'எதிர்ச்செருகல் முறை'யை (reverse catalysis) பின்பற்றி நாம் ஒரு மொழியில் விரைவில் அழியும் தருவாயில் இருக்கும் மொழிக்கூறுகளைக் கண்டுபிடிக்க முடியும். விரைவில் அழியும் தறுவாயில் இருக்கும் கூறுகளிடையே காணப்படும் பிணைப்பு (தொடர்பு) கட்டியானதாயிருக்காது.

தொடர்புப் பயன்படுத்தல் (use of relationships):

மொழி ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மொழித் திரட்டை குறித்தளம், குறிப்புத்தளம் என முதன்முதலாக பிரிக்க

வேண்டும். பின்னர் ஒவ்வொரு தளத்திலும் காணப்படும் திரட்டுப் பகுதிகளினிடையே தோன்றும் தொடர்புகளை வெளிப்படுத்த வேண்டும். மொழித்திரட்டாகிய பெரும்பகுதியை பின்னர் தொடர்ச்சியாக சிறுபகுதிகளாக்க வேண்டும். பகுதிகள் தொடர்பின் அடிப்படையில் பிரிக்கப்படும். இப்பகுதிகளை பின்னர் மிக நுண்ணிய பகுதிகளாகப் பிரிக்க வேண்டும்.

பகுதிகளை பிரித்தெடுப்பதற்கு ஐந்து வகையான தொடர்புகளைகளக்கொள்ள வேண்டும். எந்த தொடர்பில் எந்தப்பகுதிகள் பங்கெடுக்கின்றன என்பதையும் விளக்க வேண்டும். பிரிப்புமுறைக்காக பயன்படுத்தப்படும் தொடர்புகள் முறையே கூட்டல் தொடர்பு, பெயர்ச்சி தொடர்பு, இருமுனைத்தொடர்பு, ஒருமுனைத் தொடர்பு, முனையற்ற தொடர்பு என்பனவாம். இரண்டு கூறுகள் தொடர்ச்சியாக நிற்கும் போது அங்கே தொடர்ச்சி அல்லது கூட்டல் தொடர்பு ஏற்படும், (A + B). இரண்டு கூறுகள் ஒன்றை ஒன்று பெயற்சி செய்யும் வகையில் நிற்கும்போது அங்கே 'பெயற்சி தொடர்பு, தோன்றும் $\left(\begin{Bmatrix} A \\ B \end{Bmatrix} + \ldots\right)$. ஒரு கூறின் தோற்றம்இன் னொரு கூறின் தோற்றத்தை நிர்ணயிக்கும் வகையில் இருக்கலாம். இத்தகைய நிர்ணயிப்புத்தன்மையைக் கொண்ட இரண்டு கூறுகள் ஒன்றை ஒன்று பரஸ்பரமாக நிர்ணயித்து நின்றால் அங்கே இருமுனைத் தொடர்பு காணப்படும் (A⇌B). இரண்டு கூறுகளில் ஒன்று (A) இன்னொன்றை நிர்ணயிக்கும் வகையிலும் (A→B), இரண்டாம் கூறு (B) முதல்கூறை (A) நிர்ணயிக்கா வகையிலும் நிற்கும்போது (A⇌B) அவ்விரண்டு கூறுகளுக்கும் இடையே ஒருமுனைதொடர்பு தோன்றும் (A⇌B). தொடர்பில் நிற்கும் இரண்டு கூறுகள் ஒன்றை ஒன்று நிர்ணயிக்கா வகையில் நின்றால் அவைகளினிடையே முனையற்ற தொடர்பு காணப்படும் (A⇌B).

பிரித்தறி ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும் 'மொழிக்கூறு சார்புத்தன்மை'யை 'தொடர்பு' எனலாம். தொடர்பில் நிற்கும் கூறுகள் 'தொடர்புக் கூறுகள்'. தொடர்புக் கூறுகளில் இரண்டு

வகை உண்டு. அவை முறையே நிலைக்கூறு, மாற்றுக்கூறு என்பன. தொடர்புக்கூறுகளில் ஒன்றின் தோற்றம் இன்னொன்றின் தோற்றத்தை நிர்ணயிக்கும் வகையில் நிற்கக்கூடும். நிர்ணயிக்கும் கூறை 'நிலைக்கூறு' என அழைக்கலாம். தொடர்பில் நிற்கும் கூறுகளில் ஒன்றின் தோற்றம் இன்னொன்றின் தோற்றத்தை நிர்ணயிக்காத வகையில் நிற்கலாம். நிர்ணயிக்கப்படாத கூறுகள் 'மாற்றுக் கூறுகள் என அழைக்கலாம்.

மொழி ஆராய்ச்சி என்பது மொழிப்பகுதிகளை தேர்ந் தெடுத்தல், மொழிப்பகுதிகளை குறி, குறிப்பு என்ற பகுதிகளாகப் பிரித்தல், அவ்விதம் பிரித்த பகுதிகளை சிறுபகுதிகளாகப் பிரித்தல் ஆகியனவற்றை உள்ளடக்கும். தொடர்பில் நிற்கின்ற பகுதிகள்தான் பிரிக்கப்படும். மொழிப்பகுதிகளை பிரிப்புமுறைக்கு உட்படுத்தும் போது குறித்தொடர்களான வாக்கியம், சொற்கள், சொற்றொடர் முதலியனவும், தனிக் கூறுகளான உருபன்களும், சில குறிநுண் கூறுகளும் கிடைக்கும். கோபன்ஹேகன் மொழி ஆராய்ச்சி பெரும்பகுதிகளை சிறுபகுதிகளாக பிரிக்கும் வகையில் அமைந்தது. மொழி ஆராய்ச்சி சில தொடர்புகளையும், அத்தொடர்புகளை பிரிதிபலிக்கும் கூறுகளையும் கண்டறிய உதவி புரியும்.

பெயற்சி சோதனை: பிரித்தறி ஆராய்ச்சியின் அடிப்படையில் பிரிக்கப்படும் கூறுகள் பல. அவைகளில் அடிப்படை குறிக்கூறு, குறிநுண்கூறு என இரு வகை உண்டு. அடிப்படைக் குறிக்கூறுகள் எண்ணிக்கையில் அதிகமானவை. குறிநுண்கூறுகள் எண்ணிக் கையில் குறைவானவை. பிரிக்கப்பட்ட கூறுகளை எல்லாம் கூறுகள் என்று அழைத்த போதிலும், சில கூறுகள் வேறு கூறுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாயிருக்காது. ஆகவே கூறுகளை வகைப் படுத்த 'பெயற்சி சோதனை' என்பதை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மொழியில் காணப்படும் முக்கிய குறிக்கூறு மற்றும் குறிநுண்கூறுகளை கண்டு கொள்வதல்லாமல், முக்கியமற்றகூறுகள் எவ்விதம் ஒரு முக்கியக்கூறின் கீழ் அடங்குகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

பெயற்சி சோதனையின் மூலம் நிலைநாட்டப்படும் முக்கிய

கூறுகள் வேறுகூறுகளிலிருந்து முற்றிலும் வேறானவை. முக்கிய கூறின் கீழ் வரும் கூறுகளை (பெரும் வேறுபாட்டைக் காண்பிக்கும் கூறுகள்) திரிபுக்கூறுகள் அல்லது மாற்றுக் கூறுகள் என அழைக்கலாம். பெயற்சி சோதனை மொழி ஆராய்ச்சியில் உபயோகப் படுத்தப்படும் ஒரு வகை சோதனை அம்சம். இதன் மூலம் பிரித்தறிதலில் கிடைத்த மொழிக்கூறுகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். ஆகவே பெயற்சி சோதனை ஒருவகையான, மொழிக் கூறின் எண்ணிக்கையைக் குறைக்க உதவும் உபகரணை.

மேற்கூறிய அம்சங்கள் எல்லாம் கோபன்ஹேகன் மொழியியலாரால் எடுத்துரைக்கப்பட்ட, மொழியாராய்ச்சியோடு சம்மந்தப் பட்ட அம்சங்கள். யெம்ஸ்லெவும், அவரைச்சார்ந்தவர்களும் மொழி விவரணையைப்பற்றி தனிப்பட்ட முறையில் அதிகமாகக் கூற வில்லை. மேலும் தற்கால மொழியியல் கோட்பாட்டுவாதிகளைப் போல் தனியான 'அடையாளக்குறி' (notations) களை மொழிவிவரணைக்காக உருவாக்கவும் இல்லை.

துணை நூல்கள்

1. Bazell, C.E, 1949. Review of L. Hjelmslev's; omkring sprogteoriens grundlaeggelse' (OSG) : Archivum Linguisticum. 1.

2 Dinnen. F; 1969. An Introduction to General Linguistics: Holt Rhinehart and Winston. Inc, New Jersey.

3. Garvin. P; 1954. Review of L. 'Hjelmslev's Prolegomena to a Theory of Language: 30. 1. 69 — 96.

4. Haugen, E; 1954. Review of L. Hjelmslev's 'Prolegomena International Journal of applied Linguistics. 20. 3.

5. Hjelmslev, L; 1943/61: Prolegomena to a theory of Language (PTL): (Trans. F,J. Whitfield). University of Wisconsin Press, Madison.

6. " ; 1963/70 : Language, an in troduction; University of Wisconsin press, Madison.

7. Jϕrgensen, Eli;F : 1965: Lois Hjelmslev : Acta linguistica Hafniensia. IX. 3-12.

8. " ; 1967 : Review of L. Hjelmslev's OSG: miscellanea Phonetica. II. (also in Jϕrgensen 1979)

9. " ; 1967 : Introduction to the IInd Edition of Uldall. 1957.

10. " ; 1979 : 25 years of Phonological com ments; Wilhelm Fük Verlag münchen.

11. Lamb, S ; 1966 : Epilegomena to a theory of Lang uage : Romance Philology. 19. 531-73

12. Nida, E. A; 1949 : Morphology : AnnArbor. Michi can.

13. Sampson, G.; 1980 ; Schools of Linguistics : Hutchinsan.

14. Sierstema, B: 1955 : A study of Glossematics: Mar tinus Nijhoff. The Hague.

15. Spang Hanssen, H; 1961 : Glossematics : in Mohr man, Somenerfelt, Whatmough ed. "Trends in Euro pean and American Linguistics, 1930—60".

16. Uldall, H. J; 1957 : Outline of Glossematics I; Nordisk Sprog-og kulturforlag, Copen haugen.

மொழியியல் 7.3 & 4 (1984)

மாரைக் கிளவி

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைநகர்

பலர்பால் விகுதிகள் பற்றிப் பேசும் தொல்காப்பியர் ''மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை'' என்று கூறி மார் விகுதியும் பலர் பால் காட்டும் விகுதிகளுள் ஒன்று எனக் கூறிச் செல்லுவார்.

வந்தனர் வருவார்

போன்ற சொற்களில் காணப்படும் ரஃகான் ஒற்று மட்டுமன்றி

உண்ப உருவ

போன்றவற்றில் காணப்படும் பகர இறுதியும்

கொன்மார் வந்தார்

போன்றவற்றில் காணப்படும் மாரைக் கிளவியும் பலர்பால் காட்டும் விகுதி என்பது தொல்காப்பியரின் எண்ணமாகும்.

''ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே''

என்பது கிளவியாக்கத்தில் காணப்படும் சூத்திரம். ரகர ஒற்று மட்டுமன்றி ப, மார் ஆகிய விகுதிகளும் பலர்பாலைச் சுட்டும் என்பதே இச்சூத்திரத்தின் கருத்து. இதே நிலையைத்தான் வினையியலில் காணப்படும்,

''அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே''

''மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப''

என்ற சூத்திரங்களும் காட்டுகின்றன.

இவ்வீறுகளில் - மார் ஈற்றினை ஆர் ஈறாக கொள்ளுதல் கூடாதா? என்ற வினா இலக்கண அறிஞர்களிடையே அன்று முதல் இன்று வரை இருந்துவரக் காண்கிறோம். முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் இந்த வினாவை எழுப்பாமலேயே - மார் ஈற்றுக்கு உரிய உதாரணங்களைத் தந்து செல்வார். மார் ஈறு தனி ஒரு ஈறு என்பதில் அவருக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆனால் சேனாவரையரோ

''மார் எதிர்காலம் பற்றி வந்த ஆரேயாம். ரஃகான் ஒற்றென அடங்குமெனின்; அற்றன்று, ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம் பற்றி வந்ததோர் எழுத்தாகல் வேண்டும்; உண்பார் வருவார் எனக் காலம் பற்றி வரும் எழுத்து முதனிலைக் கேற்ற வாற்றான் வேறுபட்டு வருமன்றே, அவ்வாறன்றி உண்மார், வருமார் என எல்லா முதலிலை மேலும் மகரத்தொடு கூடி வருதாகலும், வினைகொண்டு முடிதற்கேற்பதொரு பொருள் வேறுபாடுடைமையினும் ஆர் ஈறு அன்று வேறெனவே படும் என்பது'' எனக் கூறுவார்.

சேனாவரையர் இரு காரணங்களைக் காட்டி இது ஆர் ஈற்றில் அடங்காது என வாதாடுகிறார். மார் ஈற்றை ஆர் ஈறாகக் கொண்டால் மீதியுள்ளது மகர ஒற்று. இம் மகர ஒற்றைக் காலம் காட்டும் இடை நிலையாகக் கொள்ள வேண்டும். கொண்மார் என்னும் சொல் கொள்ளுவார் என பொருள் படுதலின் இதனை

இறப்பில் கால இடைநிலையாகக் (non-past) கொள்ளுதல் வேண்டும். இந்நிலையில் மகர ஒற்றினை இறப்பில் காலம் காட்டும் ஒரு இடைநிலையாகக் கொள்ள நேரிடும். தமிழ் மொழியில் இறப்பில் கால இடைநிலைகளகாப் பொதுவாகப் பகரமும் வகரமும் காணப்படுகின்றன. இவை இரண்டும் வரும் இடங்களை ஆராய்ந்தால் உண்மை ஒன்று வெளிப்படும். பகரம் வருகிற இடங்களில் வகரம் வருவதில்லை அதே போன்று வகரம் வருகிற இடங்களில். பகரம் வருவதில்லை. எடுத்துக் காட்டாகக் கொடு, எடு, உண் போன்ற வினைகளுடன் பகர ஒற்றே வரும்.

கொடுப்பான் உண்பான்

எடுப்பான் தின்பான்

போன்ற சொற்கள் இப்பண்பினைக் காட்டும். இவ்வாறு பகர ஒற்றினைக் கால இடைநிலையாக ஏற்று வருகின்ற எடு, கொடு போன்ற வினைகளை வல்வினை (strang verbs) என்றும் உண் போன்றவைகளை இடைவினையென்றும் (middleverb) என்றும் குறிப்பிடுவர் மொழியியல் அறிஞர்கள்.

வகர ஒற்று வா, தா, செல், செய் போன்ற வினைகளில்தான் கால இடைநிலையாக வரும்.

வருவான் செல்வான்

தருவான் செய்வான்

போன்ற சொற்கள் இப்பண்பினைக் காட்டும். இத்தகைய வினைகளை மொழியியலாளர்கள் மெல்வினை (weak verbs) என அழைப்பர். எனவே பகர ஒற்று வல்வினை இடைவினைகளோடும், வகர ஒற்று மெல்வினைகளோடும் வருதல் காணலாம். மகரத்தைக் காலங்காட்டும் இடைநிலையாகக் கொண்டால் அது இம்மாதிரியான லையில் அன்றி எல்லா வினைகளோடும் வருதலைக் காணலாம்.

உண்மார் செய்மார்

தின்மார் கொடுமார்

கொண்மார்

போன்ற எல்லா வினைகளோடும் வருதலைக் காணமுடியும். இந்நிலையில் மகரத்தைக் கால ஒற்றாகக் கருதமுடியாது. எனவே இதனை மார் ஈறாக கொள்ளுதல் பொருத்தம் என்பதே அவர் முதல் வாதம்.

இரண்டாவது வாதம் மார் ஈற்றுச்சொல் கொண்டு முடியும் சொல்லைப் பற்றியது. பிற ஈற்றுச் சொற்களெல்லாம் பெயரைக் கொண்டு முடிய மார் ஈற்றுச் சொற்கள் வினையைக் கொண்டு முடிகின்றன எனக் கூறி இதனை ஆர் ஈறாக கொண்டால் ஆர் ஈற்றின் பண்பாகிய பெயர் கொண்டு முடிதல் இதற்கு இல்லையே என எண்ணுவது இரண்டாவது வாதமாகும். இந்நிலையில்தான் மார் ஈற்றை ஆர் ஈற்றில் அடக்கக்கூடாது என முடிவு கட்டுகிறார் சேனாவரையர்.

இவரைப் பின்பற்றித்தான் நச்சினார்க்கினியரும் இவ்விரண்டு ஈறும் வெவ்வேறு எனக் கூறுகிறார்.

> ''மார் ஈறு, ஆர் ஈறு என அடங்கும்', எனின் மகர ஒற்று காலங்காட்டும் எழுத்தாய் முதல் நிலைக்கு ஏற்ற வாற்றான் 'உண்பார் வருவார்' என்றாற் போல வேறுபட்டு வரல் வேண்டும்; அங்ஙனம் வேறுபடாமை யானும், வினைகொண்டு முடிதலானும், மார் ஈறு ஆர் ஈற்றின் அடங்காதாயிற்று''

என்பது நச்சினார்க்கினியம். சேனாவரையர் கூறுகின்ற இரு காரணங்களைத்தான் நச்சினார்க்கினியரும் கூறிச் செல்லுகிறார் என்பது இங்கு உணரத்தக்கது.

தெய்வச்சிலையாரும் ஆர் ஈற்றில் மார் ஈறு அடங்காது என்றே கருதுகிறார். எனினும் அவர் வேறு இரு காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

> ''மார் என்பது ரகரத்துள் அடங்காதோவெனின், வினைக்கண் ஏனைய போல முற்றிநில்லாது எச்சம் போல வருதலானும், பெயர்க்கண் ஆர் ஈறாகி வருமிடத்துப் பன்மையுணர்த்தாத சொற்கள் மார் ஈறாகி வர வேண்டுதலானும் வேறுபடுத்தோதப் பட்டதென்க''

என்பது தெய்வச்சிலையார்.

ஆ கொண்மார் வந்தார்

போன்றவற்றில் கொண்மார் என்பது வினையெச்சம் போல (கொள்ளுவதற்காக வந்தார்) வருகின்ற நிலையில் மார் ஈற்றை ஆர் ஈறாகக் கொள்ளக்கூடாது என்பது அவர் வாதம். இவ்வாதம் சேனாவரையரின் வாதத்திலிருந்து மாறுபட்டது போலத் தோன்றி னாலும் அவருடைய வாதத்திலிருந்து கிளைத்ததே இது எனக் கருதலாம். அவர் வினைகொண்டு முடிதலினால் எனக் கூறியதைச் சிறிது திரித்து 'வினையெச்சம் போல் வருதலானும்' எனக் குறிப் பிடுவார்.

இவ்விகுதிகளெல்லாம் பெயரிலும் வினையிலும் வருவன என தெய்வச்சிலையார் கொள்வது இங்கு உணரத்தக்கது. (பிற உரையாசிரியர்கள் இடையில் வினையில் மட்டுமே வரும் எனக் கருதுவர்; ''வினையிற்றோன்றும் பாலறி கிளவி'' என்ற கட்டுரை காண்க.) இந்நிலையில்

தாயார்

தந்தையார்

எனக் குறிப்பின் அது உயர்வு ஒருமையைக் காட்டுமேயன்றிப் பன்மையைக் காட்டாது.

தாய்மார்

தந்தைமார்

எனக் குறிப்பிடுவது பன்மையைக் காட்டும் நிலையில் இவ்விரண் டையும் ஒன்றாகக் கொள்ளக்கூடாது என்பது அவரின் இரண் டாவது வாதமாகும். ஆர் உயர்வு ஒருமையைக்காட்ட மார் என்பதே பன்மையைக் காட்டுகிறது இந்நிலையில் மாரை ஆர் ஈற்றில் அடக்கமுடியாது.

மற்றொரு உரையாசிரிரான கல்லாடனாரும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.

ஆனால் வேறுபல இலக்கண அறிஞர்கள் மார் ஈறு எனக் கொள்வதை விட இதனை ம் + ஆர் எனப் பிரித்து மகரம் காலம்

காட்டும் இடைநிலை யென்றும் ஆர் பன்மை காட்டும் விகுதி என்றும் குறிப்பிடுவர். கால்டுவெல் 1856 (216-41) L.V இராம சாமி ஐயர் (1938), வரதராசன் (1954), இளையபெருமாள் (1958), (1964), இஸ்ரயேல் (1973) போன்றவர்கள் இதனை ஆர் ஈறாகவே கொள்ளுவர்.

மகர ஒற்று மார் ஈற்றுச் சொற்களில் மட்டுமன்றி வேறுபல இடங்களிலும் காலங்காட்டுவதைக் காணலாம். இதனைப் பின்னர்க் காண்போம்.

முற்றா? எச்சமா?

முதலில் மார் ஈற்றுச் சொற்களாகச் சங்க இலக்கியங்களில் வருவன முற்றா அல்லது எச்சமா என பார்ப்பதுநன்மை பயக்கும் (தெய்வச் சிலையாரும் இது எச்சம் போல வருதலானும் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது). சங்க இலக்கியங்களில் மார் ஈறு நூற்றுமூன்று இடங்களில் வந்துள்ளது. அவற்றுள் எட்டு இடங்கள் பெயரோடு (ஐமார்) வருபவை. மீதி உள்ள இடங்கள் வினையோடு வருபவை. அற்றிலும் பெருவாரியான இடங்களில் வினையோடு முடிபவை. இதனால்தான் இதுபற்றி பேசிய தொல்காப்பியர் வினையோடு முடியும் என்ற பொருளில்

''காலக்கிளவியொடு முடியும் என்ப''

எனக் கூறிச்சென்றார் எனக் கருதலாம். பொதுவாக ஒருவினை முற்று அதேபால்காட்டும் மற்றொரு வினைமுற்றொடு முடியுமாயின் அதனை முற்றெச்சம் என இலக்கண அறிஞர்கள் குறிப்பிடுவர். முற்று அமைப்பினைக் கொண்டு, ஆனால் எச்சப்பொருளைத் தருமானால்தான் முற்றெச்சம் எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.

''ஆடினிர் பாடினிர் செலினே'' புறம் 109
''உய்த்தனர் விடா அர்'' குறு 350

போன்றவற்றை முற்றெச்சம் எனக் கருதலாம். இவற்றுக்கு உரை யெழுதும் உரையாசிரியர்களும் முறையே 'ஆடிப்பாடிச் சென்றால்'' என்றும் ''செலுத்திவிடார்'' என்றும் பொருள் எழுதுதல் காணலாம். இந்நிலையில் இவற்றை முற்றெச்சமாகக் கருதலாம்.

இவை செய்து என்னும் வாய்பாட்டு எச்சமாகவே கருதப்படுகின்றன என்பதும் இங்கு உணரத்தக்கது.

மார் ஈற்றுச் சொற்களும் பல இடங்களில் வினைகொண்டு முடிகின்றன எனக் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு வினைகொண்டு முடியும் இடங்களிலெல்லாம் ''பொருட்டு'' என்னும் பொருளில் வரும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் போன்று பயன் படுதல் காணத்தக்கது.

''நல்விருந் தயர்மார் ஏமுற'' அகம் 205

''அருங்கட னிறுமார் வயவ ரெறிய'' புறம் 262

எனவரும் இடங்களுக்குப் பொருள் எழுதப்போந்த உரையாசிரியர் கள் முறையே

''நல்ல விருந்தயற்தற்கு இன்பமுற''

''அருங்கடன் முடித்தற்கு எறிய''

எனப் பொருள் எழுதல் காணலாம். எனவே முற்றுப் பொருளைத் தராமல் எச்சமாகப் பயன்படுதல் காணத்தக்கது. எனினும் இது பிற முற்றெச்சங்களைப் போலன்றிச் செயவென் வாய்பாட்டு எச்சம் போல வருதல் இதற்கும் முற்றெச்சத்திற்கும் உள்ள வேறுபாடாகும். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. இதன்கண் இறந்தகாலம் காட்டும் இடைநிலை இல்லை. எவ்வாறு செய வென் எச்சத்தில் கால இடைநிலை இல்லை என்று கருதுகிறோ மோ அதே போன்றுதான் இங்கும் எச்சப்பொருளில் இது வரும் போதும் கால இடைநிலை இல்லை என்றே கருதுதல் வேண்டும். செயவென் எச்சத்தைப் போலவே இதனையும் ஒரு எச்சமாகக் கருதுதல் வேண்டும்.

''பொருட்டு'' என்னும் எச்சப்பொருளில் பெரும்பாலான இடங்களில் இது வரினும், மார் ஈற்றைக் கொண்டிருக்கின்ற நிலையில் இதனை எச்சமாகக் கொள்ளுதற்குத் தயங்கினர் பலர் எனக் கருதலாம். முற்றுபோல விகுதியைக் கொண்டிருத்தல், இத்தயக்கத்திற்குக் காரணம். இதனால்தான் தெய்வச்சிலையார் குறிப்பிடுவது போன்று

''இதனையும் செய்கு என்பதனையும் வினையெச்சம் என்றதனாற் குற்றம் என்னை எனின், வினை எச்சம் பால் தோன்றாது; இவை பால் தோன்றலின், முற்று எனல் வேண்டும்''

என்றார்

''அருங்கட னிறுமார் வயவரெறிய''

போன்ற இடங்களில் எழுவாய் பலர்பாலாக உள்ளன. இவ்விடங்களில் வரும் மார் ஈற்றுச் சொல்லைப் பலர்பால் சொல்லாகக் கொள்ளுவதில் தவறில்லை. எழுவாய் பலர்பாலாக இருந்து கொண்டு முடியும் சொல்லும் பலர் பாலாகவோ அல்லது பால் காட்டாத வினைகளாகவோ இருந்தால் நிச்சயமாக இவற்றைப் பலர் பாலாகக் கருதலாம். இதேநிலையைத்தான் தன்மை ஒருமையில் வரும் 'செய்கு' என்னும் வினைமுற்றிலும் காண்கிறோம். இம்முற்று சங்க இலக்கியங்கள் அனைத்திலும் தன்மை ஒருமை வினைசொல்லையே கொண்டு முடிதல் இங்கு குறிப்பிடத்தக்கது. வேறு எந்த பால் சொல்லையும் எழுவாயாகக் கொண்டு வருவதில்லை.

என்பன எடுத்துக்காட்டுகள். இதனால்தான் தொல்காப்பியர் மிகத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும்

''செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்''

எனக் கூறிப்போந்தார்.

ஆனால் இந்நிலை மார் ஈற்றுச்சொற்களுக்கு இல்லை. பல இடங்களில் இது பலர்பால் ஒழிந்த ஏனைய எழுவாய்களையும் கொண்டு வருதல் காணலாம்.

நான் கொண்மார் வந்தேன்
அது கொண்மார் வரும்
அவன் கொண்மார் வந்தான்

போன்று பிற எழுவாய்களைக் கொண்டு வருதல் இங்கு நோக்கத் தக்கது. சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள்

எள்ளுமார் வந்தார்

கொண்மார் வந்தார்

போன்ற படர்க்கைப் பலர்பால் உதாரணங்களைத் தந்த போதிலும் சங்க இலக்கியங்களில் இது பிறபால் சொற்களுடன் வருதல் கவனிக்கத்தக்கது. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் போன்ற படர்க்கைச் சொற்களோடு மட்டுமன்றித் தன்மை ஒருமையிலும் வருதல் குறிப்பிடத்தக்கது.

"................ கானவன்
கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து" நற் 65

"................ இளம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப்பாழி நூறி ....." அகம் 375

"என்னகத்திடும்பை களைமார் நின்னொடு
....
துணையீ ரோதியென் தோழியும் வருமே" அகம் 107

"நனிவிருந் தயர்மார் தேர் வரும்" குறு 155

"ஈங்கேகுமா ருளெனே" குறு 173

போன்றவை இப்பண்பைக் காட்டும். இவற்றில் எல்லாம் கானவன், இளம்பெருஞ் சென்னி தோழி, தேர் போன்ற சொற்கள் எழுவாயாக வருதல் கவனிக்கத் தக்கது. இந்நிலையில் இம்மார் ஈற்றுச் சொற்களை வினையெச்சமாகவே கொள்ளுதல் வேண்டும். இல்லையானால் தொடர் இயைபு (concord) இல்லாமல் போகும். இது தமிழ் மொழி அமைப்புக்குப் பொருந்தாது. இவ்விடங்களிலெல்லாம் இது "பொருட்டு" பொருளை தந்து நிற்பதும் இது வினையெச்சம் என்பதை நன்குக்காட்டும்.

அவன் உண்பான் வந்தான்

போன்றவற்றில் பால் தோன்றி நின்றாலும் தொடர் இயைபு இருந்தாலும் இதனை யாரும் வினைமுற்றாகக் கொள்வதில்லை. இதற்குக் காரணம்

அவள் உண்பான் வந்தாள்
அவர் உண்பான் வந்தார்

போன்று பிற எழுவாய்களை ஏற்று வருதலேயாகும். இந்நிலை மார் ஈற்றுக்கும் பொருந்தும். எனவே தொடர் இயைபு உள்ள இடங்களிலும் எச்சப் பொருளில் மாரீற்றை வினைமுற்றாகக் கொள்ளக்கூடாது. எனவே இவற்றை மார் ஈற்று எச்சமாகக் கொள்ளுதல் வேண்டும். 'உண்பான்' என்பதில் காணப்படும் ஈற்றை 'பான்' ஈறு என இலக்கண அறிஞர்கள் கொள்வதற்குக் காரணம் இதனை 'ஆன்' ஈறாக கொள்ளக்கூடாது என்பதுதான். எவ்வாறு 'பான்' ஈறு வினையெச்ச ஈறாகக் கருதப்படுகிறதோ அதேபோன்று மார் ஈறும் கருதப்பட வேண்டும். மார் ஈறு செய வெண் வாய்ப்பாட்டு வினையெச்சப் பொருளில் (பொருட்டுப் பொருளில்) வருவதும், பலர்பால் எழுவாய்களோடு மட்டுமன்றிப் பிறப்பால் எழுவாய்களோடு வருவதும், இதனை ஒரு எச்சமாகக் கொள்ள வேண்டும் என்பதற்கு அரண் செய்து நிற்கின்றன. இதனால் தான் 'செய்கு' என்பதற்குக் கூறியது போல

> ''அவற்றுள்
> செய்கென் கிளவி வினையொடு முடியினும்
> அவ்வியல் திரியா தென்மனார் புலவர்''

எனச் செய்கென் கிளவி முற்று எனத் திட்டவட்டமாகக் கூறியது போல மார் ஈற்றுச் சொல்லிற்குத் தொல்காப்பியர் கூறாதது இங்கு நினைவு கூறத்தக்கது. தொல்காப்பியர் இது பற்றிக் கூறும் போது

> ''மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
> காலக் கிளவியொடு முடியுமென்ப''

எனக் கூறப்போந்தார். ''மரைக் கிளவியும் பலர்பால் காட்டும் ஈறு; மட்டுமன்றி அது காலக்கிளவியொடு, அதாவது வினை கொண்டு முடியும். அதாவது வினையெச்சமாகவும் வரும்'' எனப் பொருள் கொண்டால் இந்நிலையில் ஒரு தெளிவு ஏற்படும்.

மார் ஈற்றுச் சொல் சங்க இலக்கியங்களில் வினையாலணையும் பெயராகவும், முற்றாகவும், வினையெச்சமாகவும் வருதல் காண லாம். புறநானூற்றில் (46) 'புலனுழு துண்மார்' எனவரும் தொட ருக்கு ''உழுதுண்ணும் கற்றோரது'' என பொருள் எழுதுவது இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மார் என்பதற்குக் கற்றோர் எனப்

பொருள் எழுதப் படுகின்றது. இத்தகைய நிலையைச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணலாம் (அகத்தியலிங்கம் எழுதிய சங்கத்தமிழ் III (1984 : 99) என்ற நூலில் விளக்கம் காண்க).

மேலும் இது வினைமுற்றாகலும் வருதல் காணத்தக்கது. முற்றாக இது அதிகமாக எதிர்மறையில் தான் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

'பாடன்மார் எமரே'

போன்ற இடங்கள் இப்பண்பினைக் காட்டும் 'எள்ளுமார் வந்தாரே ஈங்கு' போன்ற நச்சினார்க்கினியர் தரும் உதாரணங்கள் வினையெச்சங்களாக இங்குக் கொள்ளப்படுகின்றன). இதனை மார் ஈறாகவே கொள்ள வேண்டும். ஆர் ஈறாகக் கொண்டால் எதிர்மறை காட்டும் அல்லீற்றுக்குப் பின்னர்க் காலங் காட்டும் மகர இடைநிலை (பாடு + அல் + ம் + ஆர்) வந்ததாகக் கொள்ள வேண்டும். எதிர்மறைக்குப் பின்னர்க் கால இடைநிலை வருதல் தமிழ் மொழி வினைச்சொல் அமைப்பிற்குப் பொருந்தாத ஒன்றாகும். எனவே இதனை மார் ஈறாகவே கொள்ள வேண்டும்.

உடன்பாட்டில் பத்துப்பாட்டில் இது வினைமுற்றாக ஒரே ஒரு இடத்தில் வந்துள்ளது. இந்நிலையில் இது பிற வினைமுற்றுக்களைப் போலவே காணப்படுகிறது. இது 'மார்' ஈறா அல்லது 'ஆர்' ஈறா என்று ஆராய்தல் அவசியமாகும். இதனை 'ஆர்' ஈறாகக் கொண்டால் மகரத்தை கால இடைநிலையாகக் கொள்ளுதல் வேண்டும். கால இடைநிலையாகக் கொண்டால் உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றபடி வினையடிகளுக்கு ஏற்பப் பகரமோ வகரமோ வருதல் வேண்டுமன்றி மகரம் வருதல் கூடாது. இது பற்றி ஆராய்தல் நலம்.

மகரம் கால இடைநிலையாக வராதா என்ற எண்ணமும் எழுவது இயற்கை. சங்க இலக்கியங்களிலேயே 'உண்மார்' (பதிற்றுப் பத்து 2418) என்பர் (கூறு 3956, போன்ற பல இடங்களில் (அகத்தியலிங்கம் 1979 : 178) மகரம் கால இடைநிலையாக வந்திருப்பதைக் காணலாம். இந்நிலையில் மார் ஈறு உடன் பாட்டு வினைமுற்றாக வரும் இடங்களிலும் இதனை 'ஆர்' ஈறாகக் கொள்ளு

தலே பொருத்தம். மகர ஒற்றைக் கால இடைநிலையாகக் கொள்ளலாம்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் மூன்று நிலைகளைக் காண முடியும் என்பது விளங்கும்.

(1) ''கொண்மார் வந்தார்
நனிவிருந் தயர்மார் தேர்வரும்''

போன்ற இடங்களில் மார் ஈறு வினையெச்சமாகவும்

(2) ''புலனு முதுண்மார்''
''நோன்மார் அல்லர்
.... செல்வர்
.... காண்மார்''

போன்ற இடங்களில் (உடன்பாட்டு வினையாலணையும் பெய ராகவும் வினைமுற்றாகவும் வரும் இடங்கள்) ஆர் ஈறாக வந்து வினைமுற்றாகவும், வினையாலணையும் பெயராகவும்

(3) ''காணண்மார் எமரே''

போன்ற இடங்களில் மார் ஈறாக வந்து வினைமுற்றாகவும் வரும் எனக் கருதலாம். தொல்காப்பியர் மார் ஈறு என ஒரு ஈறை படைத்திருப்பது இறுதியாக உள்ளதை மனதில் இருத்தியே எனக் கருதலாம் நச்சினார்க்கினியர் தரும் எடுத்துக்காட்டுகளில் பெரும்பாலானவை எதிர்மறை என்பதும் இங்கு உணரத்தக்கது. வினையொடும் வருமே எனக் கூறியது மாரீற்று வினையெச்சத்தை மனத்திலிருத்தியே எனவும் எண்ணலாம்.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1984 சங்கத்தமிழ் III அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

இளையபெருமாள், மா. 1964 தமிழ்மொழிச் சிந்தனைகள், தமிழ் ஆராய்ச்சித்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

வரதராசன், மு. 1956 மொழியியற் கட்டுரைகள், பாரி நிலையம், சென்னை (முதல் பதிப்பு 1954).

Agesthialingom, S. 1979 *A Grammar of Old Tamil with special reference to patirruppattu*, Annamalai University, Anna malainagar.

Caldwell, Robert. 1856 *A comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages* (Reprinted in 1956), Madras University, Madras.

Elayaperumal, M. 1958 "The ma:r suffix in Early Tamil Literature", *Indian Linguistics*, Vol. 19, Deccan College, Poona.

Israel, M. 1973 *The Treatment of Morphology in Tolkappiyam*, Madurai University, Madurai.

Ramaswami Aier, L.V. 1938 "The Morphology of Old Tamil Verbs" *Anthrops*. Vol. 33, Wien.

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல்-வாழ்வும் வரலாறும் (History of Linguistics) 1977

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் க. புஷ்பவல்லி

பக்கம் 458) (விலை ரூ. 16/-

2. கிளைமொழியியல் (Dialectology) 1977

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 226) (விலை ரூ. 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning) 1977

டாக்டர் கி. கருணாகரன்

பக்கம் 165) (விலை ரூ. 7/-

4. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-1 1977

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 250) (விலை ரூ. 12/-

5. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-2 1978

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 265) (விலை ரூ. 15/-

6. நரிக்குறவப் பழங்குடிமக்கள் 1978

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 96) (விலை ரூ. 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform) 1978

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 240) (விலை ரூ. 12.50

8. ஒலியியல் (Phonetics) 1980

டாக்டர் சு. இராசாராம்

பக்கம் 180) (விலை ரூ. 15/-

9. எழுத்திலக்கணக் கோட்பாடு 1980

(Phonological Theories in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 306) (விலை ரூ. 20/-

10. சொல்லியல் - 1 (Morphology) - பெயரியல் (Noun) 1979

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 280) (விலை -

11. Linguistic Convergence 0

Dr. K. Karunakaran

pp. 188) (Price /-

12. இருமொழியம் (Bilingualism) 0

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 152) (விலை /-

3. Study of Social Dialects in Tamil 1

Dr. K. Karunakaran

Dr. G. Sivashanmugam

pp. 141) Price /-

14. சொல்லியல் (Morphology) - வினையியல் -1 (Ver 2

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 212) (விலை ரூ. 16/-

15. சங்கத் தமிழ் - I 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (விலை ரூ. 24/-

16. பாடல் பயிற்றுமுறை 1983

டாக்டர் மா. சு. திருமலை

17. **Studies in Applied Tamil Sociolinguistics** 1982

Dr. K. M. Irulappan (Price Rs. 10/-

18. **Aspects of Language Use**

Dr. M. S. Thirumalai

pp. 140) (Price Rs. 18/-

19. **Aspects of Language Development** 1983

Dr. S. V. Shanmugam

pp. 112) (Price Rs. 14/-

20. **Sociolinguistic Patterns of Language Use** 1983

Dr. I. Karunakaran (Price Rs. 18/-

21. நீலகிரி மொழிகள்

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன்

22. சங்கத்தமிழ் - II 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (பக்கம் 256) (விலை ரூ. 24/-

23. சங்கத்தமிழ் - III 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (பக்கம் 244) (விலை ரூ. 24/-

24. சொல்லிலக்கணக் கோட்பாடு 1984

டாக்டர் செ.வை. சண்முகம் (பக்கம் 240) விலை ரூ. 24/-

Editor: S. Agesthialingom. Printed at Sivakami Press, Annamalainagar 608002 and published by S. Agesthialingom on behalf of The All India Tamil Linguistics Association, Annamalainagar 608002.

மொழியியல்

தொகுதி 7 1984 எண் 3&4

ஜனவரி-ஜூன்

உள்ளுறை

பக்கம்

இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள் (complex sentences)
முத்துச்சண்முகன் & தாமஸ் லேமன் 1-26

நேமிநாதம் - ஓர் ஒப்பாய்வு (எழுத்து)
பி. பெ. சுயம்பு 27-39

தமிழில் துணைவினைகள்
வீ. ரேணுகாதேவி 41-58

சமுதாய வட்டார தமிழ்க் கிளைமொழிகள்
- ஆய்வின் அணுகுமுறைகளும் பிரச்சனைகளும்
க. மகாலிங்கம் 59-81

மைதிலி - ஒரு மொழியியல் வரலாறு
எஸ். பூபதி 82-94

விளிமரபில் விரவுத்திணை
செ. வை. சண்முகம் 95-124

தமிழ் அகராதியின் தந்தை பெஸ்கி எனும் வீரமாமுனிவர்
சு. சக்திவேல் 125-131

கோபன்ஹேகன் மொழியியல் கோட்பாடு
- (யெம்ஸ்லெவின் மொழியியல் கொள்கைகள்)
செ. சண்முகன் 132-187

மாரைக் கிளவி
ச. அகத்தியலிங்கம் 188-200